கேரளப் பல்கலைக் கழகக்

# கீழ்த்திசைச் சுவடிகள் விளக்க அட்டவணை

(முதல் தொகுதி)

ப.கி
740

பதிப்பாசிரியர்

முனைவர் ஆ. நிர்மலா தேவி

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

சென்னை-115.

கேரளப் பல்கலைக் கழகக்

# கீழ்த்திசைச் சுவடிகள் விளக்க அட்டவணை

(முதல் தொகுதி)

PRESENTED FREE OF COST
WITH COMPLIMENTS FROM
THE CENTRAL INSTITUTE OF INDIAN LANGUAGES
GOVERNMENT OF INDIA, MYSORE-570006.

பதிப்பாசிரியர்
முனைவர். சூ. நிர்மலா தேவி

DR. T. P. M. LIBRARY,
MADURAI KAMARAJ UNIVERSITY.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
டி.டி.டி.ஐ.தரமணி
சென்னை-600 113.

# BIBLIOGRAPHICAL DATA


| | | |
|---|---|---|
| Title of the Book | : | Kerala Palkalai Kaḻaka Kīḻticai Cuvaṭikaḷ Viḷakka Aṭṭavanai |
| Author | : | **Dr.S.Nirmala Devi**.M.A.Ph.D; Diploma in Epigraphy and Archaeology; Diploma in Manuscriptology, Research Assistant, I.I.T.S. |
| Publisher | : | **International Institute of Tamil Studies,** Madras-113. |
| Publication Number | : | 237 |
| Language | : | Tamil |
| Edition | : | First |
| Date of Publication | : | December 1995 |
| Paper Used | : | 16kg Creamwove |
| Size of the Book | : | 14X21cms |
| Printing types used | : | 10 point |
| Number of copies printed | : | 1200 |
| Number of Pages | : | 376 + 24 |
| Price | : | **Rs. 85/-** |
| Binding | : | Paper Pack |
| Artist | : | Jegan |
| Subject | : | Descriptive Catalogue of Tamil Manuscripts in Oriental Manuscripts Library, Trivandrum. |



232570
17118


**வெள்ளி விழா வெளியீடு**

DR. T. P. M. LIBRARY,
MADURAI KAMARAJ UNIVERSITY.

முனைவர் ச.சு.இராமர் இளங்கோ,
இயக்குநர்,
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,
சென்னை-113.

## அணிந்துரை

டாக்டர் உ.வே.சாமிநாதையருக்குப் பின், தமிழ்ச் சுவடிகளைப் படிப்பதிலும், பதிப்பிப்பதிலும் ஒரு தேக்கம் ஏற்பட்டது. இத்தேக்கத்தைப் போக்கும் முயற்சியில் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் தொடர் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

ஓராண்டுப் பட்டய சுவடிப் பயிற்சி வகுப்பு நடத்துதல், சுவடிப் பயிலரங்குகள், சுவடிக் கருத்தரங்குகளை ஏற்பாடு செய்தல், வெளிவராத தமிழ்ச்சுவடிகளைப் பதிப்பித்து நூலாக வெளியிடுதல், தமிழகத்திலும், பிற மாநிலங்களிலும், உலகளாவிய நிலையிலும் உள்ள தமிழ்ச் சுவடிகளுக்குச் சுருக்க, விளக்க அட்டவணைகள் தயாரித்து வெளியிடுதல் என்ற நிலைகளில் இதன் பணி விரிவடைந்து வருகின்றது.

இந்நிலையில், தமிழகத்தின் அண்டை மாநிலமான கேரளத்தில் பல தமிழ்ச் சுவடிகள் இருப்பதை அறிந்து, முதல் நிலையாகத் திருவனந்தபுரம் கேரளப் பல்கலைக் கழகக் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத்துக்கு இந் நிறுவனம், முனைவர். சூ. நிர்மலா தேவி அவர்களை அனுப்பியது.

இவர் அங்குள்ள 3500-க்கு மேற்பட்ட தமிழ்ச் சுவடிகளைப் பார்வையிட்டு, 1091 தமிழ்ச்சுவடிகளுக்குச் சுருக்க அட்டவணை ஒன்று தயாரித்தளித்தார். சுவடித் தலைப்பு, சுவடி எண், இதழ் எண்ணிக்கை, அளவு, நிலை, செய்யுள் எண்ணிக்கை, பொருள் என்ற குறிப்புகளை உள்ளடக்கிய இச்சுருக்க அட்டவணையை, இந்நிறுவனம், ''தமிழ்ச் சுவடிகள் (அட்டவணை)'' என்ற பெயரில் செப்டம்பர். 1980-இல் நூலாக வெளியிட்டது.

இதன்பின் அங்குள்ள தமிழ்ச்சுவடிகளுக்கு ஒரு சுருக்க அட்டவணையை (சுவடித் தலைப்பு, பொருள், சுவடி எண்- உள்ளடக்கியதாக) ''தமிழ்ச் சுவடிப் பெயர்கள்'' என்ற நூலாகக்

(பதிப்பாசிரியர்.டாக்டர்.டி.பாஸ்கரன்) கேரளப் பல்கலைக் கழகக் கீழ்த்திசைச் சுவடி நூலகம் வெளியிட்டது.

தற்பொழுது முன்னர் வெளியிட்ட ''தமிழ்ச் சுவடிகள் (அட்டவணை)'' என்ற நூலில் அடங்கியுள்ள 1091 தமிழ்ச் சுவடிகள் நீங்கலாக உள்ள பிற 480 சுவடிகளுக்கான விளக்க அட்டவணை நூலாக வெளிவருகின்றது.

1980 முதல் 1984-வரை முனைவர் சூ.நிர்மலா தேவி அவர்களால் தயாரிக்கப்பட்ட இவ்விளக்க அட்டவணை, பல்வேறு காரணங்களால் தடைப்பட்டு, தற்பொழுது நூலாக வெளிவருவதில் இந்நிறுவனம் பெருமகிழ்வு அடைகின்றது.

சுவடித் தலைப்பு, பொருள், அளவு, நிலை, இதழ் எண்ணிக்கை, செய்யுள் எண்ணிக்கை, குறிப்பு, தொடக்கம், முடிவு என்ற நிலைகளில் விளக்கமுற அமைந்துள்ள இவ்வட்டவணை தமிழுலகுக்குப் பல புதிய செய்திகளைத் தரும் என நம்புகிறேன்.

குழுவாக அமைந்துள்ளோர்களால் பல சுவடி விளக்க அட்டவணைகள் வெளி வந்துள்ளன. தனியொருவராக இருந்து தமிழ்ச் சுவடி விளக்க அட்டவணை தயாரித்த முனைவர். சூ.நிர்மலாதேவி அவர்கள் பாராட்டுதற்குரியவர். தமிழ்ச் சுவடிகளில் முழு ஈடுபாடு கொண்டுள்ள இவர், கதைப்பாடற் சுவடித் தொடர்பாக ஆய்வு மேற்கொண்டு முனைவர் பட்டம் பெற்றவர். சுவடிப்பதிப்புகளிலும் ஈடுபட்டு ''பணவிடு தூது'', ''கருவூரார் பல திரட்டு'', 'The wandering Voice'', 'The Dateless Muse",""The unsung Melodies'', ''முத்தாரம்மன் கதை'' என்ற நூல்களையும் வெளியிட்டுள்ளார். தமிழ்ச் சுவடிகளில் இத்தகு ஈடுபாடு கொண்டுள்ள இவர் பணி மென்மேலும் சிறக்க வாழ்த்துகிறேன்.

வெளிவரும் இம் முதற் தொகுதியைத் தொடர்ந்து, கேரளப் பல்கலைக் கழகக் கீழ்த்திசைச் சுவடி நூலகத் தமிழ்ச் சுவடிகள் அனைத்துக்கும் விளக்க அட்டவணைகள் விரைவில் வெளிவரும் என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

சுவடித் துறையில் முத்திரை பொறித்த இவ்விளக்க அட்டவணைப் பதிப்பாசிரியர் நிர்மலா தேவி அவர்கள் ஆன்ற, அகன்ற, ஆழமான புலமை கொண்டவர். இது போன்ற பல

நூல்களை இவர் வெளியிட்டு, தமிழுக்கும், நிறுவனத்துக்கும் பெருமை சேர்க்க வேண்டுமென வாழ்த்துகிறேன்.

நிறுவனப் பணிகள் அனைத்திற்கும் ஆக்கமும், ஊக்கமும் அளிக்கின்ற மாண்பு மிகு கல்வி அமைச்சர் அவர்களுக்கும், தமிழ் வளர்ச்சித் துறைச் செயலர் அவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூலைத் திறம்பட, நன்முறையில் அச்சிட்டுத் தந்த பாவை அச்சகத்தாருக்கு எங்கள் நன்றி.

இந்நூல் எமது நிறுவன வெள்ளி விழா வெளியீடாக வருவதில் பெருமகிழ்வடைகிறேன்.

*ச.சு.இராமர் இளங்கோ*
இயக்குநர்

# நன்றியுரை

இச்சுவடி விளக்க அட்டவணை தயாரிப்பதற்குக் கால்கோள் அமைத்துக் கொடுத்து, பல்கலைக் கழக வளாக விடுதியில் தங்குவதற்கான அனுமதியையும் பெற்றுத் தந்து, பல்வேறுபட்ட தமிழ்ச் சுவடிகளையும் பார்வையிடும் பெரும் பேற்றுக்கு வழி அமைத்துக் கொடுத்த, எனது முனைவர் பட்ட நெறியாளரும், நிறுவன முன்னாள் இயக்குநருமான தமிழ்ச் செம்மல் முனைவர். ச.வே. சுப்பிரமணியன் அவர்களின் பொற்பாதங்களில் என் முதல் நன்றியைக் காணிக்கையாக்குகிறேன்.

பாரதிதாசனுக்கோர் சாரதிதாசனாய், தமிழ், தமிழினப் பற்றாளராய், தமிழ்ச் சுவடிகள் பால் தனிப்பட்ட ஆர்வமும், அக்கறையும் கொண்டவராய், அகத்தியரின் அச்சுப் பிரதியாய் அமைந்துள்ள எமது நிறுவன இயக்குநர் முனைவர். ச.சு.இராமர் இளங்கோ அவர்கள் இவ்விளக்க அட்டவணை வெளி வர மூல காரணமாய் அமைந்தவர். மறைந்ததையும், மறந்ததையும், மறுத்ததையும் அது தமிழ் என்ற காரணத்துக்காகத் தழுவிக் கொள்ள விழைபவர். இவ்விழைவின் வெளிப்பாடாய் இந்நூலை வெளியிட்டுள்ள அன்னாருக்கு என் இதயங்கனிந்த நன்றி!

இவ்விளக்க அட்டவணைத் தயாரிப்பிற்கு அனுமதி அளித்த கேரளப் பல்கலைக் கழகக் கீழ்த்திசைச் சுவடி நூலக முன்னாள் இயக்குநர்கள் டாக்டர்.இராகவன் பிள்ளை, டாக்டர்.டி.பாஸ்கரன் அவர்களுக்கு என் மனமார்ந்த நன்றி.

சுவடிகளை எடுத்துக் கொடுப்பதில் பேருதவி புரிந்த திரு.பி.எல்.ஷாஜி., திரு.பி.சதாசிவம் போற்றி அவர்களுக்கும், மற்றும் ஏலியாம்மா, தேவகி என்பாருக்கும் என் இனிய நன்றி!

இச் சுவடி விளக்க அட்டவணைத் திருத்தங்களுக்கு உதவிய சுவடியியல் துறை ஆசானாகத் திகழ்ந்த பாலகவி. மு.கோ.இராமன் அவர்களுக்கு நன்றி!

*சூ.நிர்மலா தேவி*

# முன்னுரை

திருவனந்தபுரம் கேரளப் பல்கலைக் கழகக் கீழ்த்திசைச் சுவடி நூலகம் இந்தியாவிலுள்ள சுவடி நூலகங்களில் குறிப்பிடத்தக்க ஒன்றாகத் திகழ்கின்றது. 60000-க்கு மேற்பட்ட சுவடிகளைக் கொண்டுள்ள இந்நூலகத்தில் சமஸ்கிருத, மலையாளச் சுவடிகள் எண்ணிக்கையில் முதலிடம் வகிக்கின்றன. தமிழ், தெலுங்கு , கன்னடம் , மராட்டி, உருது, இந்தோனேஷியன், பர்மியன் போன்ற மொழிகளில், இவ்வெழுத்துகளிலும், மேலும்தேவ நாகரி, கோலெழுத்து, வட்டெழுத்து, கிரந்தம், ஆங்கிலம் முதலிய எழுத்துகளிலும் ஏடுகள் எழுதப்பட்டுள்ளன. தோல், துணி, பூர்ஜ மரப்பட்டை, செப்பேடுகள், நாணயங்கள் என்பனவற்றில் எழுதப் பட்டவைகளும் காணப்படுகின்றன.

இந்நூலகத்திலுள்ள தமிழ்ச் சுவடிகள் 1091-க்குச் சுருக்க அட்டவணை ஒன்று உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தால்' செப்டம்பர் 1983-ல் இரா. நிர்மலாதேவி அவர்களால் பதிப்பிக்கப் பட்டு ''தமிழ்ச் சுவடிகள் அட்டவணை'' என்ற பெயரில் நூலாக வெளியிடப்பெற்றது. தற்போது 480 சுவடிகளுக்கு விவர அட்டவணை இவரால் எழுதப்பட்டு, முதல் தொகுதியாக வெளி வருகின்றது. மொத்தம் 3280க்கு மேற்பட்ட தமிழ்ச்சுவடிகள் இங்குள்ளதாகத் தெரிகின்றது. அனைத்துச் சுவடிகளுக்கும் விவர அட்டவணை அடுத்தடுத்த தொகுதிகளாக வெளிவர உலகத் தமிழராய்ச்சி நிறுவனம் முயற்சி மேற்கொண்டுள்ளது.

## அட்டவணை அமைப்பு முறை

இந்த விவர அட்டவணை முதற்கண் நூல் வரிசை எண்ணையும், அடுத்து சுவடி எண்ணையும், அதனை அடுத்து சுவடித் தலைப்பையும் கொண்டு அமைந்துள்ளது. இதன் கீழே சுவடியின் பொருள், அளவு, நிலை, இதழ் அல்லது ஏடுகளின் எண்ணிக்கை, செய்யுள் எண்ணிக்கை என்ற முறையில் இரண்டாம் நிலை விளக்கம் அமைந்துள்ளது. இவற்றினை அடுத்து குறிப்பு என்ற பகுதியில் சுவடியைப் பற்றிய செய்திகள் சுருக்கிக் கூறப் பட்டுள்ளன. இதனைத் தொடர்ந்து சுவடியின் தொடக்கமும். முடிவும் தரப்பட்டுள்ளன,

அளவு சென்டி மீட்டரில் குறிக்கப்பட்டுள்ளது. இதழ் எண்ணிக்கையில், இடையில் ஏடுகள் இல்லாதிருப்பின் , உள்ள

ஏடுகளின் மொத்த எண்ணிக்கை மட்டுமே கொடுக்கப்பட்டுள்ளது. இல்லாத ஏடுகளின் எண்களும், எண்ணிக்கை விபரங்களும் குறிப்பு என்ற தலைப்பினுள் தரப்பட்டுள்ளன. மேலும், குறிப்பு என்ற பகுதியில் நூல், நூலாசிரியர், அச்சானதா போன்ற விவரங்களும் அடக்கப்பட்டுள்ளன. தொடக்கம் என்பதில் சுவடி எந்த வரிகளினின்று தொடங்குகின்றதோ அதில் 4 முதல் 8 வரிகளுக்கு மேல் தரப்பட்டுள்ளது. முடிவில் சுவடி முடிவிலுள்ள சில வரிகள் கொடுக்கப்பட்டுள்ளன. சுவடி இறுதியில் சுவடி எழுதப்பட்ட காலம், ஆசிரியர் பெயர், போன்றன இருப்பின் தொடர்ந்து அமைக்கப்பட்டுள்ளன.

**எழுது, எழுத்துமுறை மாற்றம்**

தொடக்கம், முடிவில் வரும் சுவடியிலுள்ள பாடல்கள் சீர்பிரித்து அமைக்கப்பட்டுள்ளன. நீண்ட நெடும் வரிகளாகச் சுவடிகளில் இவை எழுதப்பட்டிருக்கும். உரைநடை வடிவிலுள்ள சுவடிகளில் பேச்சு வழக்குகள் உள்ளவாறே தரப்பட்டுள்ளன. சுவடியிலுள்ள எழுத்துக்கள் எழுத்துச் சீர்திருத்த முறையைப் பின்பற்றி மாற்றி அமைக்கப்பட்டுள்ளன. கிரந்த எழுத்துகளில் தமிழ் மொழியில் எழுதப்பட்ட சுவடிகளும் அட்டவணையில் அடங்கியுள்ளன.

**குறியீடுகள்**

சுவடிகளினின்று பெயர்த்தெழுதிய பகுதிகளில் தேவையான இடங்களில் காற்புள்ளி, முற்றுப்புள்ளிகள் இடப்பட்டுள்ளன. சிதைந்த இடங்களைக் குறிக்க ....என்ற குறியீடும், சுவடியிலுள்ள விளங்காத கூட்டெழுத்துக்கள் போன்றன விளங்குதல் பொருட்டு இட்டஎழுத்துக்கள்()என்ற அடைப்புக்குறிக்குள் அமைக்கப் பட்டுள்ளன. கொல்லம் ஆண்டுகளுக்கு நேரான கி.பி.ஆண்டு கண்டறியப்பட்டு அடைப்புக்குள் வருமாறு அமைக்கப் பட்டுள்ளது.

சுவடிகள் அச்சாகியிருப்பின் அவை அச்சுப் பிரதி பார்த்துத் திருத்தம் செய்யப்படவில்லை. பாடபேதங்களாயிருக்கலாம் எனக் கருதி, சுவடியில் உள்ளவை உள்ளவாறே வெளியிடப்பெறுகின்றன.

**பொருள் வகை விவரம்**

சமயம், மருத்துவம், துதி, கதை, கதைப்பா டல், புராணம், வேதாந் தம், சோதிடம், நீதி, சாஸ்திரம், வரலாறு, தலவரலாறு, கா

வியம், இலக்கணம், நிகண்டு, சிற்றிலக்கியம், நாட்டுப்புறப்பாடல், நாடகம், மந்திரம், இரசவாதம் ,கணிதம், இதிகாசம் ,ஞானம், ஜாலதந்திரம், யோகம், தத்துவம் என்ற பல்வேறு பொருளமைதி கொண்டவைகளாகச் சுவடிகள் உள்ளன. சுவடிகளின் பொருள டைவுஅகராதி பின்னிணைப்பில் தரப்பட்டுள்ளது. பொருளடிப் படையில் நோக்கும் பொழுது மருத்துவச் சுவடிகள் எண்ணிக்கை யில் முதலிடம் வகிக்கின்றன. சமயம் தொடர்பான சுவடிகள் அடுத்த இடத்தில் உள்ளன.

**காலக்குறிப்புகள்**

பெரும்பாலான சுவடிகளில் அச்சுவடி எழுதப்பட்ட காலம் குறிப்பிடப்படவில்லை. சிற்சில சுவடிகளில் காலக்குறிப்பு காணப்படுகின்றது. பெரும்பாலாகக் கொல்லம் ஆண்டும், சில சுவடிகளில் தமிழ் ஆண்டும், இன்னும் சில சுவடிகளில் கொல்லம், தமிழ் என்ற இரண்டு ஆண்டுகளும், குறிப்பிடப் பெற்றுள்ளன. பெருவாரியான சுவடிகளில் கொல்லம் ஆண்டு குறிப்பிடப்பெறுவதற்கு, திருவிதாங்கூர் சமஸ்தானம் என அழைக்கப்பெற்ற பகுதிகளில் இந்த ஆண்டே வழக்கிலிருந்தமை காரணமாகும். கொல்லம் ,கொல்லம் +தமிழ், தமிழ் ஆண்டுகள் குறிக்கப்பெற்றுள்ள சுவடிகள் அனைத்தி லும் தமிழ் மாதம், தேதி உள்ளது. இதனுடன் நன்னேரம், நல்யோகம், நல்நட்சத்திரமும் குறிக்கப்பெற்றுள்ள சுவடிகளும் உள்ளன. அரிதாக ஒரு சுவடியில் ஆங்கில மாதம், தேதி சுட்டப்பட்டுள்ளது (351) சுவடிகளில் ஆண்டு, மாதம், தேதி அனைத்தும் தமிழ் எண்களில் எழுதப் பட்டுள்ளது.

இத்தொகுதியில் கொல்லம் ஆண்டு குறிப்பிடப்பட்டுள்ள சுவடிகளாக முப்பத்தைந்து சுவடிகள்[1] காணப்படுகின்றன. கொல்லம் + தமிழ் என்ற இரண்டு ஆண்டுகளும் உள்ள சுவடிகள் ஐந்து[2] உள்ளன. தமிழ் ஆண்டு

***1: நூல் வரிசை எண்:- 120, 146, 154, 174, 181, 196, 220, 221 , 245, 263, 264, 267, 263, 273, 294, 311, 312, 327, 329, 351, 370, 388, 389 , 393, 399, 408, 413, 414, 431, 440, 444, 445, 457, 459, 480.***

***2. 82, 124, 151, 353, 425***

குறிக்கப்பெற்றுள்ள சுவடிகள் ஏழு[3] உள்ளன.

கொல்லம் ஆண்டு அமைந்துள்ள முறைகளுக்குச் சான்றுகளாக.

ஆஉயரு விருச்சிக மீ ஆறெ முகிந்தது. முற்றும்(146)[4]

மாசி புதன்கிழமை உத்திராட நட்செத்திரத்தில் முற்றிறும்(181)

அள து ௬ மாசிமாத 14ந்தேதி மங்கள வாரமும் புனர்பூச நட்சத்திரமும் ஏகாதசியும் கன்னியா லெக்கினத்திலே எழுதி முகிப்பித்தேன்(32)

சுபானு ௵ தை ௨ உயரெ (161)

காரி ௵ கார்த்திகை யஅ உ வியாழக்கிழமையில் முகிந்தது முற்றும்(315)

என்பதைத் தமிழ் ஆண்டு சுட்டப்பெற்ற சுவடிகளுக்குச் சான்றுகளாகவும், கொல்லம்+தமிழ் என்ற இரண்டு ஆண்டுகளும் சுட்டப் பெற்றுள்ள சுவடிகளுக்குச் சான்றுகளாக,

ஆரு ப உ ௵ பிங்கல௵சித்திரை ௨ உய ரெ குருவாரம் பூச நட்சத்திரங்கூடின சுபதினம்(82)

ஆளஎயஅ௵ ரவுத்திரி௵தைய் ௨ உயள ரெ சுக்கிர வாரமும் விசாக நட்சத்திரமுங் கூடின சுபதினத்தில்... எழுதி முகிந்தது(353)

என்பனவற்றைச் சுட்டலாம்.

ஆ அளருய௵நவம்பர் மீ மூணாந் தேதி மே, ஜீனில் எழுதினது(351)

என்பதே ஆங்கில மாதம், தேதி சுட்டப்பெற்றுள்ள சுவடியாக அமைந்துள்ளது.

கொல்லம் ஆண்டு, தமிழ் ஆண்டு, கொல்லம்+தமிழ் ஆண்டு உள்ள சுவடிகளில் தமிழ் மாதம், நாள் குறித்தலே பெரும் பான்மையாக உள்ளது.

சில சுவடிகளில் விருச்சிக மாதம்(146)துலா மாதம்(124)என மலையாள மாதங்களும் சுட்டப் பெற்றுள்ளன.

---

***3. 1,25,34,161,315,316,409.***

***4. இம்முன்னுரையில் சுட்டப்பெறும் சுவடி எண்கள் அனைத்தும் நூல் வரிசை எண்களையே குறிக்கும்.***

சுவடிகளில் காணப்பெறும் காலக் குறிப்புகள் தமிழர்கள் காலத்தைத் திட்டமிட்டுக் காரியமாற்றும் இயல்பைப் பறை சாற்றுவனவாக உள்ளன.

அரிதாகச் சில சுவடிகளில் சுவடி எழுதத் தொடங்கிய போதிருந்த காலம் குறிப்பிடப்பட்டிருப்பினும் (125) பெரும் பாலான சுவடிகளில் சுவடி எழுதி முடித்தபோது உள்ள காலக் குறிப்பே காணப்படுகின்றது.

**சுவடிகள் கிடைத்த ஊர்ப்பெயர்கள்**

எல்லாச் சுவடிகளிலும் அவை எந்த ஊரைச் சேர்ந்தவை என்பதற் கான சான்றுகள் கிடைப்பதில்லை. ஆயின் சில சுவடிகளில்

எந்த ஊரைச் சேர்ந்தவர் சுவடியை எழுதினார்
எந்த ஊரைச் சேர்ந்தவருக்குச் சுவடி எழுதப்பட்டது
எந்த ஊரைச் சேர்ந்தவர் சுவடிக்குச் சொந்தக்காரர்

என்ற இந்த முறைகளிலெல்லாம் சுவடிகள், எந்தெந்த ஊர்களி லிருந்தெல்லாம் கிடைத்தன என்பதற்கான அகச்சான்றுகள் சுவடிகளிலிருந்தே கிடைக்கின்றன. இத்தொகுதியிலுள்ள ஊர்ப்பெயர் குறிப்பிடப்பட்டுள்ள பெரும்பாலான சுவடிகளும் நெல்லை கட்டபொம்மன், சிதம்பரனார் மாவட்டத்தைச் சேர்ந்த வை என்பது தெரிகிறது. ஒரு சுவடி(440)இராமநாதபுரத்தைச் சேர்ந்த சுவடியாக உள்ளது.

சேரமாதேவி, இடையங்குளம்(18), தேனீர்குளம் (22 ,265 , 368 ,410) பெருமருதூர்(34)கீழப்பாவூர்(36)ஸ்ரீவைகுண்டம்(84)குலைய நல்லூர்(15)கொல்லங்கிடாரம்(125)சகவீரபாண்டியபுரம்(157) ராமயன்பட்டி (22,174) சுண்டப்பாளையம் (196) குற்றாலம் (198)திடியூர் மனகாவல்(22)காசாக்குடி பிடாகை(293)கேறி மல்லன் பட்டி கணக்கு புதுப்பட்டி(317)செல்வமருதூர்(329)சங்கரநயினார் கோவில்(337)தீர்த்தாரப்பபுரம்(353) மேலப்பாளையம்(376) விசைய புரம் (400)புளியங்குடி (413)கஞ்சற் குளம், செகவீர பாண்டிய புரம்(425)ஓட்டப்பிடாரத் தாலுகா கொல்லங் கிராமம்(480)

என்றிவ்வாறாக மொத்தம் இருபத்தைந்து ஊர்களைச் சேர்ந்த சுவடிகள் உள்ளன என்பதற்கு அகச்சான்று கிட்டியுள்ளது.

''தேனீர்குளத்திலிருக்கும் வாத்தியார் மா.பெ.புலமாடக் கோனுக்கு இந்த வைகுண்டம்மானை யெழுதி முடிந்தது. இந்த ஏடு

எழுதினேன். ராமயன் பட்டியிலிருக்கும் முத்துத்தேவர் குமாரன் சுப்புத்தேவர் எழுதின வைகுண்டம்மானை''(22)என்றும்,

''வைகுண்டம்மானை எழுதினது பெருமருதூரிலிருக்கும் கணக்குச் சுப்பான் கை நெட்டெழுத்து''(34)என்றும்

''கீழப்பாவூரிலே வாசம் பண்ணுகிற சொரிமுத்துக் கோன் குமாரனாகிய சொக்கலிங்க வாத்தியார் வாசித்து எழுதி வருகிற வைகுண்ட அம்மானை''(36)என்றும்,

இவ்வாறான முறைகளில் ஊர்ப்பெயர்கள் சுட்டப் பெறுகின்றன.

சில சுவடிகளில் ஊர்ப்பெயருடன் அவ்வூரின் எத்தெரு விலுள்ளவர் எழுதினார் என்பது போன்ற விளக்கங்களும் அமைந்துள்ளன.

''தேனீர்குளம் நவநீத கிருஷ்ணசுவாமி கோவில் தெருவிலிருக்கும்'' (265)எனவும்

''இந்த ஏடு எழுதினது கா.பெருமாள்கோன் மாசானக்கோன் குமாரர் தேனீர்குளம் நவநீத கிருஷ்ணசாமி கோயில் தெரு தச்சநல்லூர்''(410)எனவும் எழுதப்பட்டுள்ளன.

''ஓட்டப்பிடாரத் தாலுகா கொல்லங் கிராமத்திலிருக்கும் சாதி கம்மாளர் கி.மு.தம்பி சூரப்ப சாமி நாடார் சிறுத்தொண்டன் கும்மிப்பாட்டு''(480)என ஒரு சுவடியில் தாலுகாப் பெயரும் சுட்டப்பெற்றுள்ளது.

**ஆசிரியர் பெயர்கள்**

சுவடிகள் காலம்,காலமாகப் படி எடுக்கப்பட்டு வருபவை. இதனால் குறிப்பிட்ட சுவடியின் மூலத்தை எழுதிய ஆசிரியர் யார் என்பது தெளிவாகத் தெரிவதில்லை. சில சுவடிகளில் மூல ஆசிரியர் பெயர் சுவடித் தலைப்பிலேயே அமைந்துவிடும்.

அகத்தியர் பூரண சூத்திரம் இருநூற்றுப் பதினாறு (475)
அகஸ்தியர் வைத்தியம் ஆயிரத்தைந்நூறு (463)
கருவூர்ச் சித்தர் பாடல் சூத்திரம் (324)
உரோமரிஷி ஞ்ான சூத்திரம் ஐம்பது (270)
போகர் நாயன் சூத்திரம் முப்பூ (178)
கொங்கணர் சரக்கு வைப்பு நூறு (287)
சட்டைமுனி நிகண்டு (342)

என சித்தர் இயற்றிய நூல்களாக அமையும் இத்தகு சுவடிகளில் அன்னாரது பெயரும் சுவடித் தலைப்பில் இடம்பெற்று இத்தகு சுவடிகள் படிகளாக இன்று கிடைத்திருப்பினும், மூல ஆசிரியர் இவர்களே என்பதை வலியுறுத்துகின்றன. ஆயின்,

*அகத்தியர் திரட்டு (263)*

*அகஸ்தியர் திரட்டு (260)*

என்றுள்ள சுவடிகளில் அகத்தியர் பெயர் அமைக்கப்பட்டிருப்பினும், இவரது புகழ் கருதியே இவர் பெயர் பயன்படுத்தப்பட்டிருக்கிறதே தவிர, உண்மையான மூல ஆசிரியர் இவரல்ல என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டியுள்ளது. ஏனெனில் இவை தேவாரப் பாடல்களின் திரட்டுகளாய் உள்ளன. இத்தகு நிலைகளும் அகத்தியர் பலராக இருக்கலாமோ என்ற எண்ணத்துக்கு வழி கோலுகின்றன.

சுவடிகளின் முதலிலும், பெரும்பான்மையும் இறுதியிலும் ஆசிரியர் பெயர் இடப்பெற்றுள்ளது. பெரும்பாலான சுவடிகளில் சுவடியை எழுதிய ஆசிரியர் பெயர் காணப்படுவதில்லை என்றாலும் சில சுவடிகளில் இக்குறிப்புகள் எழுதப்பட்டுள்ளன.

I. குறிப்பிட்ட சுவடியை எழுதியவர்

II. சுவடிக்குச் சொந்தக்காரர்

III. இன்னார் இன்னாருக்காக எழுதியது

IV. இன்னார் படித்து வருவது

V. இது இன்னாரது கையெழுத்து

VI. ஏடு பாடியவர்

என்ற இந்த நிலைகளில் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

### 1. சுவடியை எழுதியவர்

குறிப்பிட்ட சுவடியை எழுதியவர் இவர் எனும் குறிப்புகளில் இவர் மூல ஆசிரியராகவும், பிற பிரதி பார்த்து எழுதிய படி ஆசிரியராகவும் உள்ள இரு நிலைகளில் குறிப்புகள் அமைகின்றன. இன்னார் குமாரர் என்று தந்தை பெயரும் குறிப்பிட்டுப் பெயர் கூறும் முறை சுவடிகளில் ஆளப்பட்டுள்ளது. சுருக்கமான முறையில் ஊர்ப்பெயர், தகப்பனார் பெயர், தன் பெயர் என அமைந்

துள்ளது. சில சுவடிகளில் விரிவான முறையில் தாலுகா, ஊர், தெரு, தந்தை ,தன் பெயர் என அமைந்தும் உள்ளது.

இத்தொகுதியில் சுவடி எழுதியவர் பெயர்களாக அமைந்துள் ளவை:-

1. சொரிமுத்துக்கோன் குமாரனாகிய சொக்கலிங்க வாத்தியார் வாசித்து எழுதி வருகிற வைகுண்ட அம்மானை(36)
2. வண்ணான் பிச்சாண்டி மூப்பன் அருமை சுதர்சாண கருப்பண்ணன் எழுதியது(15)
3. இடகால் கறுப்பன் கைப்பட எழுதி முகிந்தது(28)
4. குமார சுவாமி எழுதியது(124)
5. நாட்டாண்மை குருவப்பநாடார் எழுதி முடித்தது(125)
6. சொரிமுத்துக்கோனார் குமாரன் சொக்கலிங்கக் கோனார் எழுதினது(172)
7. நல்லாப்பிள்ளை மகன் அருணாசலம் எழுதின சுவடி(173)
8. முசுப்புத் தேவர் எழுதி முகித்தது(174)
9. ராம சுவாமியால் எழுதி முகிந்தது(196)
10. எழுதினேன் சங்கர நாயகம்(198)
11. இந்த சாஸ்திரம் நமசிவாயம் பிள்ளை தம்பி சிதம்பரம் பிள்ளை எழுதினது. இது லோகத்திலுள்ள பேர்கள் அறியவும்(230)
12. இந்த ஏடு எழுதினது....மாசானக்கோன் குமாரர் பெருமாள் கோன்(265)
13. சங்கரலிங்கம் எழுதினது(316)
14. சங்கரலிங்கம் பிள்ளை மகன் பாட, கலிங்கமம் பிள்ளை அருமைக் குமாரன் சுப்பிரமணியன் எழுதின கலியாண வாழ்த்து(317)
15. கூர்ம புராணம் எழுதி முகித்தேன் செல்வமருதூரிலிருக்கும் நல்லசிவன் வாத்தியார் மகன் செண்ணுப்பிள்ளை(329)
16. சுப்பானாயக்கன் எழுதின பொஷ்தகம்(351)

17. ராமலிங்கஞ் செட்டியார் குமாரர்....முத்துசுவாமி வாத்தியார் ராமர் நாடகம் எழுதி முகிந்தது(353)
18. இந்த ஏடு எழுதினவன் ராமய்யன்(381)
19. இந்த ஏடு எழுதினது கா.பெருமாள் கோன்(410)
20. கஞ்சற்குளம் ராமசுவாமியாபிள்ளை மகன்....வாத்திமைச் சுடலைமுத்து எழுதியது(425)
21. மாடக்கோனார் குமாரன் சுடலை மாடக்கோன் என்று பேர் விளங்கிய குருவக் கோனார் மகன் கறுப்பக்கோன் எழுதினேன்(447)
22. வயித்தியர் முத்துச் சுவாமியா பிள்ளை எழுதினது(475)
23. வாத்தியார் முத்துச் சுவாமியா பிள்ளை ஆதிமூல சுவாமி அறுனூறு எழுதி முகிந்தது(476)

என இவ்வாறு இத்தொகுதியில் 23 சுவடிகளில் சுவடி எழுதியவர் பெயர் குறிப்பிடப்பெற்றுள்ளது.

II. **சுவடி உரிமையாளர்**

குறிப்பிட்ட சுவடிக்குச் சொந்தக்காரர் இவர் என்ற முறையிலும் சுவடியில் பெயர் குறிக்கப் பெற்றுள்ளது. சுவடி உரிமையாளர் எனக் குறிக்கப்பெறும் இவர்கள்,தாமே எழுதியும் சுவடியைச் சொந்தமாக வைத்திருக்கலாம்; அல்லது பிறர் இவர்களுக்கு எழுதியும் கொடுத்திருக்கலாம்.

1. அழகப்பன் சுவடி நன்றாக(38)
2. தன்வந்திரி பகவான் கலைக்ஞான முற்றுப் பெற்றது. வாத்தியார் முத்துச் சுவாமியா பிள்ளைக்கு(77)
3. அணைஞ்ச பெருமாள் பிள்ளை வைகுண்ட அம்மானை(29)
4. ஆசாரி மகன் துளகிரி சாமி சுவடி(151)
5. லெ.மாடசுவாமி நாடான் ஏடு(222)
6. கிருஷ்ண சங்கரய்யர் உலகநீதி(278)
7. ராமநாதன் குருக்கள் மகன் சிவதாணுக் குருக்களய்யளேடு(293)
8. இஃது சாமு உபாத்தியாருக்குச் சொந்தமானது(355)
9. தெட்சணாமூர்த்தி குருக்களய்யர் அவர்கள் குமாரன் கணபதி குருக்களய்யர் அவர்கள் ஏடு(376)

*10.* சாதி கம்மாளர் தம்பி சூரப்பசாமி சிறுத்தொண்டன் கும்மிப்பாட்டு*(388)*

*11.* தெய்வ ராய சுவாமியள் குமாரன் துரைசாமி பிள்ளை சாஸ்திரம்*(400)*

*12.* உடையனா பிள்ளை குமாரன் முத்துக் கறுப்பணன் சாஸ்திரம்*(454)*

*13.* ஆறுமுக நாடான் ஏட்டை வாசித்துப் போட்டுக் குடுத்து விடவும்*(459)*

*14.* சாதி கம்மாளர் கி.மு.தம்பி சூரப்ப சாமி நாடார் சிறுத்தொண்டன் கும்மிப்பாட்டு*(480)*

என்றிவ்வாறாக பதினான்கு இடங்களில் ஏடு வைத்திருந்தோர் பெயர்கள் குறிப்பிடப்படுகின்றன. பெயர்களுக்குப் பின்னால் அமைந்துள்ள சாதிப் பெயர்களை நோக்கும் பொழுது பல்வேறு சாதியைச்சேர்ந்தவர்களும் சுவடியை எழுதவும்,படிக்கவும் தெரிந்த கல்வியாளர்களாகத் திகழ்ந்திருக்கின்றனர் என்பது தெளிவாகின்றது.

### iii இன்னார் இன்னாருக்காக எழுதியது

இன்ன பெயர் கொண்டவர் இன்னாருக்காக எழுதியது என்ற நிலையில் சுவடியை எழுதிய ஆசிரியர் பெயர்கள் குறிக்கப் பெற்றுள்ளன. இவ்வகையில் அமைந்துள்ள ஆசிரியர் பெயர்களைக் கீழே காணலாம். இவற்றுள் சுவடியை எழுதிய மூல ஆசிரியர் களும்,பிற சுவடி பார்த்து படி எழுதிய படி ஆசிரியரும் அடங்குவர்.

*1.* வாத்தியார் மா.பெ.புலமாடக்கோனுக்கு இந்த வைகுண் டம்மானை எழுதி முடிந்தது இந்த ஏடு எழுதினேன்........ சுப்புத் தேவன்*(22)*

*2.* சென்னையைச் சேர்ந்த சின்னய்யா முதலியாருக்காகத் தஞ்சை நகர் ரெங்கசுவாமி எழுதியது*(219)*

*3.* பெருமாள் ஒதுவார் மூர்த்தியவர்கள் குமாரன் பலவேச ஒதுவார்க்கு சங்கர மூர்த்தியா பிள்ளை எழுதிக் கொடுத்தது*(220)*

*4.* கூர்மபுராணம் எழுதி முகித்தேன் சங்கர நயினார் கோவிலிலிருக்கும் அரசப்பப் பிள்ளை குமாரன் கொட்டா

குளத்திலிருக்கும் தெய்வங்கள் பெருமாள் பிள்ளையவர்கள் குமாரன் பிச்சப்பிள்ளையவர்களுக்கு(337)

5. எழுதி முகித்தேன் நயினார் செட்டியார் புளியங்குடி சுடலைமுத்து நாடான் மகன் ஆறுமுக நாடானுக்கு இந்த சுவடி நீடுழி காலம் வாழ்க வேணும்(413)

என்றிவ்வாறாகப் பிறருக்காக எழுதிய ஆசிரியர் பெயர்கள் குறிக்கப்பெற்றுள்ளன.

## IV. இன்னார் படித்து வருவது

இச்சுவடி இன்னார் வாசித்துவரும் சுவடி என்ற நிலையிலும் சுவடியில் ஆசிரியர் பெயர் குறிக்கப்பெற்றுள்ளது. சுவடியைப் படித்து வரும் இவரே சுவடியை எழுதியும் இருக்கலாம். அல்லது பிறரைக் கொண்டு எழுதச்செய்தும் இருக்கலாம் என்ற இருநிலைகள் இதில் அடங்குகின்றன.

1. மா.பெருமாள் கோன் வாசித்து வருகின்ற ஆண்டாள் திருப்பாவை(80)
2. குருவப்பன் குமாரர் வீரப்பன் படித்து வருகிற திருப்பரங் குன்ற மாலை(109)
3. சொரிமுத்துக் கோன் மகன் சொக்கலிங்கம் வாசித்து வருகிற நளன் கதை(140)
4. அனந்த சிவன் படித்துவந்த மூதுரை(245)
5. அனந்த சிவன் படித்து வருகிற உலகந்தி(273)
6. தெச்சணாமூர்த்தி அய்யர் அவர்கள் குமாரன் திருமலை சங்கு படித்து வருகிற சின்னப்போற்றி மாலை(389)

என்றிவ்வாறாக ஆறு இடங்களில் குறிப்பிட்ட சுவடியைப் படித்து வருகிறவர் என்ற முறையில் பெயர் சுட்டப்பட்டுள்ளது.

## V. இது இன்னாரது கையெழுத்து

இது இன்ன பெயருடையவரது கையெழுத்தால் இயன்ற சுவடி என்ற பொருளில் சுவடியிலுள்ள கையெழுத்துக்குரியாரது பெயரைக் குறிப்பிடும் முறையிலும் ஆசிரியர் பெயர்கள் அமைந்துள்ளன. இத்தகு ஆசிரியர் பெயர்கள்,

1. தன்னுடைய சொந்தத் தேவைக்கென எழுதுபவர்கள்

2. ஊருக்கென எழுதிக் கொடுத்தவர்கள்
3. மூலத்தைப் பார்த்துப் படி எடுத்தவர்கள்
4. தாமே மூலத்தை எழுதியவர்கள்

என்ற நான்கு வகைப்பட்ட நிலைகளிலும் அமைதலுண்டு.

இது இன்னார் கையெழுத்து அல்லது எழுத்து என்ற முறையில் இத்தொகுதியில் அமைந்த தொடர்கள் கீழே தொகுத்துத் தரப்பட்டுள்ளன.

1. சிங்கிகுளம் வடமலையப்ப வாத்தியார் குமாரன் நல்லசிவ வாத்தியார் கையெழுத்து(32)
2. திருமலை தாஸன் லிகிதம்(67)
3. ஸ்ரீகுரு கல்யாண சுவாமியுடைய அன்பன் சென்னய்யன் எழுத்து(161)
4. இந்தப் படிக்கி அ.மாசானம் கை எழுத்து(221)
5. காசாக்குடி பிடாகை கணக்கு வயிரவன் நாகேந்திர னெழுத்து(293)
6. சொன்னா(சொர்ண)சுப்பிரமணிய பிள்ளை எழுதின எழுத்து(294)
7. ஈசுவர மூர்த்தி ஒதுவான் கையெழுத்து(370)

என்று இவ்வாறு ஏழு இடங்களில் அமைந்துள்ளது.

## VI. ஏடு பாடியவர்

குறிப்பிட்ட ஏட்டினை இயற்றிய மூல ஆசிரியர் என்று வெளிப்படுத்தக்கூடிய பெயர்களும் சுவடிகளில் உள்ளன. ஆறு சுவடிகளில் மூல ஆசிரியர் என்று கொள்ளத்தக்க பெயர்கள் காணப்படுகின்றன.

1. ஊற்றுமலைத் துரையவர்களாகிய பூசைத் துரையவர்கள், பேரில் மதன வித்தார மாலை. கடிகை முத்துப் புலவர் பாடிய்து(242)
2. முத்துக் கறைக் கண்டர் மொழிந்த வசனமிது(279)
3. உரைத்தேன் ராமசாமி நான்(297)

4. கெவுளி நூல் பாடியவர் பால் வீரரிருராசன் என்ற மன்னன் எனக் குறிப்புள்ளது. *(334)*

5. இவை வினை தீத்தா பிள்ளையினுடைய இரணிய நாடகச் சுவடி.....இஃதுசாமுஉபாத்தியாயருக்குச் சொந்தமானது*(355)*

6. ஆமையரசன் அம்மானை இராமநாதபுரத்து ஆறுமுகம் என்பார் பாடியது*(440)*

என்றிவ்வாறாக அமைந்துள்ளன.

ஆக இவ்வாறான ஆறு பெருநிலைகளில் மொத்தம் 59 இடங்களில் ஆசிரியர் பெயர்கள் சுட்டப்பெற்றுள்ளன.

**பிற செய்திகள்**

சுவடிகளில் உள்ள குறிப்பிட்ட பிற செய்திகளாக இத்தொகுப்பில் உள்ளவற்றைத் தொகுத்துக் காணலாம். அவை:

1. எச்சரிக்கை மொழிகள்
2. அவையடக்கம் போன்ற குறிப்புகள்
3. மந்திரப் படங்கள்,எந்திரங்கள் போன்றன
4. அட்டவணைகள்
5. சிறப்புச் செய்திகள்

என்றுள்ளவை எனலாம்.

**1. எச்சரிக்கை மொழிகள்**

சுவடி பாதுகாப்பாக இருக்கவேண்டும் என்ற உயரிய எண்ணத்தில் சுவடியை எடுத்துப் படிப்பாருக்கு எச்சரிக்கையாக உள்ள மொழிகளைச் சுவடிகளிலேயே அகச்சான்றாகக் காண முடிகின்றது. தீங்கு செய்தால் என்ன கிட்டும் என்றும், பாதுகாத்தால் என்ன பலன் உண்டாகும் என்ற நிலையிலும் இத்தகு குறிப்புகள் அமைந்துள்ளன.

1. எடுத்த பேர்கள் கொடுத்த விட வேண்டியதென்று விண்ணப்பம்*(151)*

2. இந்தச் சூத்திரத்தைக் களவாண்டவன் தலை தெறித்துக் குறை நோவு முண்டாய் நரகத்துக்குப் போவான்*(287)*

3.இந்த சாஸ்திரத்தை ஆராகிலும் துஷ்டபுத்தியினாலேஎடுத்துக் கொண்டு போனால் அவர்கள் கண்கெட்டுக் குட்டங் கொண்டு ரவிகோடி நரகமெய்துவார்கள்.அப்படி வாராதே படிக்கி சகல சோடச யுபசாரத்தோடே வாங்கித் தெரிசினை பண்ணவும். பண்ணினால் கர்மங்கள் தீந்து சித்தனாவார்களென்றவாறு(310)

4. இந்த ஏட்டை நன்றாய்க் கும்மி படித்துக்கொண்டு எழுத்துப் பிழை திருத்தி என்னுடைய வீட்டுலே என்னுடைய அசையிலே வைத்துவிட்டுப் போகவும்(388)

5. இந்தச் சுவடி எடுத்துப் பார்த்த பேர்கள் கட்டி வைத்துப் போட்டுப் போவீர்களாகவும்(447)

6. ஆறுமுக நாடான் ஏட்டை வாசித்துப் போட்டுக் குடுத்து விடவும். இல்லாவிட்டால் அவசத்துக்கு இடம் வரும்(459)

7. தாமிந்த சூஸ்திரத்தை கேணீ யீந்தால்தலைதெறித்துப் போகுமடா சத்தியஞ்சொன்னேன்நாமிந்தப் படிசொன்ன யோகிக் கீவாய்(475)

8. உண்டுவே கர்ம நூல்களில் போதும் நூல்களொருத் தருக்கும் விடாதே கண்டா யறுநூறு வெளிவிடாதே கட்சி எழுதி முகிந்ததுவே(476)

என்றிவ்வாறான மொழிகள் அமைந்துள்ளன.

இத்தகு மொழிகள் மூலம்,இன்றைய நூலகங்கள் போன்று சிலரது வீடுகள் செயல்பட்டன என்பதும்,இத்தகு வீடுகளில் பலர் வந்து சுவடி படித்துச் செல்வது வழக்கம் என்பதும் தெரிகிறது. இத்தகைய மொழிகள் பெரும்பான்மையும் மருத்துவச் சுவடிகளில் உள்ளமை கவனிக்கத்தக்கதாக உள்ளது. மருத்துவ முறை, இரசவாத முறை போன்றவற்றைத் தவறானவர்கள் தவறான நோக்குடன் பயன்படுத்தி விடலாகாது என்ற எண்ணத்தில் இம்மொழிகள் இவ்வகை நூல்களில் எழுதப்பட்டுள்ளன எனலாம்.சுவடித் திருட்டைத் தடுக்கவும்,சுவடியை ஒழுங்குறக் கட்டிவைத்துக் காக்கவும் இம்மொழிகள் பயன்பட்டன.

## 2. அவையடக்கம் போன்ற குறிப்புகள்

சுவடியைப் படி எடுக்கும் சுவடி எழுத்தர்கள் போன்றவர்கள், தம் புலமைக் குறைபாட்டால் பிழைகள் ஏதும் இருந்தால், அவற் றைத் திருத்திக் கொள்ள வேண்டும்,பொறுத்துக் கொள்ள வேண் டும் என்று அமைகின்ற மொழிகள் சுவடிகளில் காணப்படுகின்றன.

1.இந்த ஏடு நல்ல குற்றாலக் கவிராயரவர்கள் வகை ஏடு பார்த்தெழுதினது. பிழை பார்க்கவேணும்(195)

2.இந்த ஏட்டில் பிசகு இருந்த போதிலும் வாசிக்கப்பட்ட புண்ணியவான்கள் என் பேரில் தயவுசெய்து பிழை திருத்தி வாசிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்(265)

3.இந்த ஏட்டில் ஏதாவது எழுத்தில் பிசகு இருந்த போதிலும் வாசிக்கப்பட்ட புண்ணிவான்கள் என்பேரில் தயவுசெய்து மேற்படி பிசகைத் திருத்தி வாசிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

இப்படிக்கு

பெருமாள்கோன்(410)

என்றிவ்வாறாக அமைந்துள்ளன.

### 3. மந்திரப் படங்கள்,எந்திரங்கள்

மந்திரம் பற்றிய சுவடிகளில் எந்திரம்,சக்கரம்,கட்டம்,சூலம் போன்ற ஒவியங்கள் வரையப்பட்டுள்ளன. ஓலையில் எழுத மட்டுமல்ல;ஒவியமும் வரையலாம் என்பதற்கு இவை சான்று களாக உள்ளன.

சக்கரங்கள் (135)

எந்திரங்கள் (153,314,351)

கட்டங்கள்,சூலங்கள்,படங்கள் போன்றன புள்ளிகளால் வரையப்பட்டுள்ளன (328)

படங்கள் (400)

என இத்தொகுப்பில் ஆறு சுவடிகளில் பட அமைப்புகள் காணப்படுகின்றன.

### 4. அட்டவணைகள்

அகத்தியர் சூத்திரம் பதினாறு(284)என்ற சுவடியின் இறுதி யில் ஒரு அட்டவணை உள்ளது. இதில் இக்குறிப்பிட்ட சுவடி யிலுள்ள நூல்கள் பற்றியும்,பாடல்கள் பற்றிய விவரமும் உள்ளன. இதிலிருந்து இந்தச் சுவடியில் விடுபட்ட நூல்களை அறிய முடிகின்றது.

கணக்கதிகாரம்(321) என்ற சுவடியில் எந்தெந்த வகையான கணக்குகள் என்ற அட்டவணை முன்புறம் தரப்பட்டுள்ளது.

## 5. சிறப்புச் செய்திகள்

சிறப்புச் செய்திகள் தரும் சுவடிகள் என்ற நிலையில் சில சுவடிகள் அமைந்துள்ளன. அவை:

1. மாதர்கள் ஒன்று சேர்ந்து நேமியோனிடம் தங்கள் குறை வேண்டி நிற்க, திருமால் அதனைச் சீனர்கள் உங்களுக்கு விளக்குவர்எனக் கூற, சீனர்கள் மலடுக்குரிய காரணங்களைக் கூறலாக 28 பாடல்கள் உள்ளன(285)
2. குத்தாலிங்கர் கொடிப்பாட்டு(286) என்ற சுவடியில், ''மங்கம்மாள் சாலை பாதை கூடி'' என்ற வரியால் மதுரை ராணிமங்கம்மாள் காலத்திய நிகழ்ச்சிகள் இச்சுவடியில் பேசப்படுகின்றன எனத் தெரிகின்றது.
3. கட்டபொம்மன்பாட்டு(318) முத்தனைந்த முதலியார் கும்மிப்பாட்டு(238) போன்ற சுவடிகள் ஆங்கிலஆட்சிக்கால வரலாற்றுக்குத் துணை புரிவன ஆகும்.
4. கணக்கதிகாரம்(322) என்ற சுவடி பழைய கணக்களவு முறைகளையறிய உதவியாக இருக்கும்.
5. சூரபத்மன் கதை(350) என்ற உரைநடை வடிவிலான சுவடி உரைநடை வளர்ச்சி பற்றிய ஆய்வுக்குத் துணைபுரியும்.
6. பரத நடன விதி (442) பரதம்(193) என்ற சுவடிகள் பரத நாட்டியக்கலை பற்றி ஆராய்வோருக்கு உதவும்.

இன்னும் இச்சுவடித் தொகுப்பை ஆழ்ந்து நோக்க, இலக்கிய, சமூக, சமய வரலாறு, கலை, பண்பாட்டுநிலைகளை வெளிப் படுத்துவனவாக இது அமையும் என்பது உறுதி.

சு.நிர்மலா தேவி

★★★

## 1.8855 - சகுந்தலை மாலை (சகுந்தலை விலாசம்)

பொருள் : நாடகம் | இதழ்கள்: 64
அளவு: 40.5 x 3.4 | செய்யுள் எண்ணிக்கை:- சுமார் 2000 வரிகள்
நிலை: சிறுசிதைவு, முழுமை.

குறிப்பு:

பக்கத்துக்கு இரு பகுதியாக 15 முதல் 18 வரிகள் . 1,11,49 ஆம் இதழ்கள் முறிவுபட்டுள்ளன. பூச்சி அரிப்புகளின் பாதிப்புள்ளது. காளிதாசரின் சகுந்தலை துஷ்யந்தன் கதை இசை நாடக வடிவில் பாடப்பட்டுள்ளது. அச்சான விபரம் தெரியவில்லை.

தொடக்கம்:

வெண்பா. ர்ாகம் -சங்கராபரணம்
சீரா மயிலைவளர் சின்னப்பத்தேவன் மனித
தாரன் புலவனிக தானப்பன் - பேரால்
விருந்தும் சகுந்தலை விலாசம் பாடற்குக்
கருத்துநாக சண்முகனார் காப்பு.

DR. T. P. M. LIBRARY.
MADURAI KAMARAJ UNIVERSITY.

முடிவு:

தேவர்கள் வாழிவாழி திகழஸ்தினா புரந்தரன்
மூவர்கள் வாழி வாழி முடிதுஷ்யந்தன் வாழி
காவலர் வாழி வாழி கனசகுந்தலை வாழி வாழி
பாவலர் வாழி வாழி பரதனும் வாழி வாழி

பரிதாபி சூ ஆண்டு மாதம் உ ரீ௳ உ- ஞாயித்துகிழமை கோவிந்த நாயக்கன் சகுந்தலை மாலை எழுதி முடித்தது.

முற்றும்.

## 2.8836 - j - யூகமுனிநாடி

பொருள்: மருத்துவம் | இதழ்கள்: 6
அளவு: 40.7 x 3.2 | செய்யுள் எண்ணிக்கை:- 42
நிலை: நன்று, குறை.

குறிப்பு:

நாடி விபரங்கள் சிறப்பாக விளக்கப்பட்டுள்ளன. இதன்பின் 4 பக்கங்கள் ரத்தினச் சுருக்கம், சுயமக்கினி நாமப் பாட்டு வெள்ளிச் செடி முளைக்க, கெண்டைக்கு மருந்து, பேதி மாத்திரை முறை, தாது புஷ்டிக்கு சித்தண்ட லேகியம் ஆகிய செய்திகள் உரைக்கப் பட்டுள்ளன.

தொடக்கம்:

நயந்துநீ நாடிதான் பார்க்கும் போது
நலமான புருவ முசசி கண்டம் நெஞ்சு
சயந்துகையில் காலடியில் முழங்கை தன்னில்
கணைக்காலில் முழங்காலிற் கைக்குழியி லாகும்
தயந்து தானங்க' ரில் தாபரிக்கும் நாடி
சகலநரம் பெழுத்தீ ராயிரமுஞ் சார்ந்து
தியந்துநிறக் குமிழ்விடத்தில் நாடி பார்த்துத்
திரேகத்தின் பரிச்சையெல்லா மியம்பி டாயே.

முடிவு:

தொட்டேறி நரம்பெல்லாங் கலந்து வீசி
சிறப்பான நயன மிரண்டினிலே நிற்கும்
மட்டேறி யலம்புருடன் வயிர வன்றான்
மாசத்த இடிமூலந் தன்னைப் பத்தி
கட்டேறி ரெண்டுகண்ணு தனிலே நிற்கும்
கனிவான சிங்கினியுங் குகுதன் றானும்
நட்டேறி நாபித் தானத்தில் தோண்டி
நலமான குதமளவும் நாடிப் பாரேன்.

ரு! உ

## 3. 851 / - b- வயிராக்கிய சதகம்

பொருள்: வேதாந்தம்
அளவு: 11.2 x 3.6
நிலை: சிறு சிதைவு, குறை.
இதழ்கள்: 95
செய்யுள் எண்ணிக்கை:- 50
உரை விரவியது

குறிப்பு: பாடலும் உரையுமாக உள்ளது. தொடக்கப் பாடல் எழுத இயலாத அளவுக்குச் சிதைந்துள்ளது.

தொடக்கம்:

..... களுக்கு மோர்ந்துணை யென்றுள .. தே

குழு மெம்பவந்துடைத்தல் செய்யாயிதென் றோமுதான் றுனைத்தானே

எ.து

பஞ்ச பூதமாகிய வுடம்பினையும், ஞானேந்திரியங் கன் மேந்திரியங் களையு நியதிகளைந்த பின்னரந்தக் கானங்களை நியதிகளைத்துடங்கும் போதவை கடதப் பிரதனமான மனத்தையே திரியிட்டு நோக்கி நிற்குந் தோறும் மனமாந்த விவேகத்திற்கு மிகவு மொத்துமையாக நீங்காது முன்னைப் பழக்கம் போல்.....

முடிவு:

சுத்தம் துக்கம் அனித்தியங்களை மனத்திற்கறிவித்துதனை நிறுத்தலு நிறுத்துவது தடை மீறிய காலத்துச் சிவத்தை நோக்கிய தனை நிற்கத் திருவுளம் வைக்க வேண்டுமென்று வேண்டு கோடலும் வேண்டுமாகலின் னிங்ஙனங் கூறப்பட்டது ருக - சதக முற்றும்.

திருவாதவூரார்க்குச் செப்பரிய முத்தியொரு வாசகத்தா லுணர்த்திக் குருவா்குந் தேவர் மறையுஞ் சுவாகமும் மற்றுமுள்ள மூவாறு மோதிய தென்முன்.

## 4.8878 - C - வசியேந்திரம்

பொருள்: மந்திரம் இதழ்கள்:12

அளவு: 22.8 x 3.7 செய்யுள்எண்ணிக்கை:- உரைநடை

நிலை: நன்று,குறை.

குறிப்பு: மந்திர எழுத்துக்கள் படங்கள் மிகுதி. அச்சானதாகத் தெரியவில்லை.நூல் இவ்வளவு மட்டுமா இன்னும் உளதா என அறிய முடியவில்லை.

தொடக்கம்:

வசியத்துருவம்: ப்பா-தித்-தீகி-வவா-பிவி-தகா-கதா-வி-பீ

மோகனத்துருபம்:பீலி-தாக-காதி-வீபி-வாப-கீதி-தீகி-பாவ

தம்பனத்துருபம்:க்கா-பீலி-கதா-கதீ-வபா-பவா திகீ-பீகி
உச்சாடனத்துருபம்:கீத்தி-வாப-வாவ-தீகி-தாக-பீவி-வீபி-தாத
ஆகிருஷ்ணத்துருபம்: கதா-வீபீ-பிவீ-தகா-தீகி-
பவா-வபா-கிதீ.

முடிவு:



## 5. 88'78 - a - ருது சாஸ்திரம்

பொருள்: சோதிடம் இதழ்கள்: 27
அளவு: 22.8x3.7 செய்யுள்எண்ணிக்கை:- உரை நடை
நிலை: நன்று, குறை.

குறிப்பு:

இன்னமாதம், இன்ன கிழமைகளில் ருதுவானால் இன்னின்ன பலன் கிட்டும் எனக் கூறுகிறது. இறுதி இதழ் இரண்டாக உடைந்துள்ளது. இதன் மறுபுறம் பிள்ளைப்பேற்றுக்கு எண்ணை கூறப்பட்டுள்ளது.

தொடக்கம்:

சித்திரை மீ திரண்டால் புருஷனுக்காகாது. வையாசி மீ சுகமே யிருப்பாள். ஆனி மீ போகியாயிருப்பாள். ஆடி மீ பலபேரையு மிச்சிப்பாள். ஆவணி மீ புத்திர ருண்டாயிருப்பாள். புரட்டாசி மீ புத்தியுள்ளவளாயிருப்பாள். அற்பசி மீ விதவையாவாள். கார்த்திகை மீ பலரையும் தூஷணித்துக் கொண்டிருப்பாள். மார்கழி மீ நல்ல பிள்ளைகளையும் பெறுவாள். தை மீ புண்ணியவதி யாயிருப்பாள். மாசி மீ மதன முண்டாயிருப்பாள். பங்குனி மீ அதிகம் பிள்ளைகளைப் பெறுவாளென்றறியவும்.

முடிவு:

சனியில் ருதுவானால் வயிறு வலிக்கும். மயக்கங் காணும். சுரம் வாந்தியுங் காணும். இது தீர மணிமந்திர மரு(ந்)தோடும் ஆசரி தேவதைக்கும் செய்து ஒரு பிராமண ஸ்திரீக்கும் வஸ்திரமும் புஷ்பமும் குடுத்து சகல தோழமும் தீரும், புத்திர பாக்யம் உண்டு. வீரன் பூசை செய்யவும், வாலை பூசை செய்து தகடு கட்டவும்.

குருவே துணை.

## 6. 8882- உ- ருதுநாள் பலன்

பொருள்: சோதிடம் இதழ்கள்: 7

அளவு: 12 x 3 செய்யுள்எண்ணிக்கை :- உரைநடை

நிலை: நன்று, முழுமை.

குறிப்பு:

வாரத்தில் ஏழு நாட்களுக்கும் ருதுவான பலன் என்னென்ன என விவரிக்கப்பட்டுள்ளது. இதன்பின் பிள்ளை பெற மாட்டா தாருக்கு எண்ணை, பெரும்பாட்டுக்கு மருந்து, மந்திரம், சூரிய தியானம், பாசாணக் கட்டு, செயநீர், வீரம், துருசு, பகவதி பூசை, வசியம் ஆகிய செய்திகள் 13 இதழ்களில் இடம்பெற்றுள்ளன.

தொடக்கம்:

நாயத்துக் கிழமை ருதுவானால் ராஷ்சத குணமென்கிற தேவதை அணுகும். அதின் பலன் தலை நோகும். வயிறு எரியும். மாதவிடை தருகி வரும். புருஷன் மேல் தயவு பண்ணும். பிள்ளை மத்திபம். இப்படி செய்யும் இந்தத் தேவதைக்கு புதன் கிழமையில் சுடுகாட்டிலே மது மாங்கிசம் வைத்துக் கழிக்க அவளை விட்டுப் போம். ஆணும் பெண்ணும் கலந்து பெறுவாள்.

முடிவு:

சனிக்கிழமை ருதுவானால் வயத்தில் வீடு தூரனாள் வலிகாணும். மயக்கம் சுரம், வாந்தி காணும். இதுக்கு பிரிதிக் காரம் மணிமந்திரம் மருந்து விட்டில் ஆசரிக்கிரத் தெய்வத்துக்கும் செய்து பிராமணத்திக்கு வஸ்திரம் புஷ்பம் கொடுத்து விட சகலத் தோசம் தீரும். புத்திர பாகம் உண்டு. வீரன் பூசை செய்யவும். வால பூசை செய்து தகடு கட்டவும்.

## 7.8895 - d- ருது சாந்தி சாத்திரம்

பொருள்: சோதிடம் இதழ்கள்: 1
அளவு: 18.5x3.1 செய்யுள் எண்ணிக்கை:- உரைநடை
நிலை: சிறுசிதைவு, குறை.

குறிப்பு: இன்ன கிழமையில் ருதுவானல் இன்ன பலன் என்பதும், தீப்பலனுக்குச் செய்ய வேண்டிய சாந்தியும் கூறப்பட்டுள்ளன.

உள்ள செய்திகள்:

நாயறுக்கு ருதுவானல் ராஷத குணமென்...
தெய்மனுக்...அதன் பலன்:

தலை நோகும். வயி(று)யெரிவு காணும், மாதவிடை தருகித் தருகி வரும். புருஷன் மேல் தயவு பண்ணும். பிள்ளை மத்திப(ம்). அந்த தேவதைக்கு புதன் கிழமைக்கு மசானத்... மது மாங்கி சத்துடனே பொங்கி பொரித்து கறிக்கவும். அவளை விட்டுப் போகும். ிப்படிச் செய்யாதே போ(னா)ல் பிள்ளைப் பாக்கியங் குறைந்து போம். அதுவறிந்து சாந்தி செய்யவும்.

## 8.8895- c- வாலைப்பாட்டு

பொருள்: வேதாந்தம் இதழ்கள்: 13
அளவு: 18.5x3.1 செய்யுள் எண்ணிக்கை:- 21
நிலை: நன்று. குறை.

குறிப்பு:

சக்தியின் வடிவாய பத்து வயதுப் பிராயமாய வாலையை முன்னிறுத்திய சித்தர் பாடல் போன்றதே, முன் ஒரு ஓலை இல்லை. பின் பகுதியும் இல்லை.

தொடக்கம்:

காணப்பா யிவளுடைய ...மோ...
கண்டவர்க்கு பெண்டாட்டி நான் என்பாள்
ஊணப்பா அமுர்தமிவ ளூட்டி வைத்து
உள்வீட்டுக் குள்ளிருத்தி மேலே யேறப்
பூணப்பா மனமுறைத்துவாவா வென்பாள்
.............................................

வேணப்பா வேணதெல்லாந் தருவே னென்பாள்
வேதாந்த சூஷ்மெல்லாம் விளங்குந்தானே.
-உ

முடிவு:

முத்திதரு மென்று மனம் புத்தியற்று
மோசமது போகாதே வாங்கு கையில்
சித்தமதில் சந்திரனை நிறுத்திக் கொண்டு
செந்தீயு லுந்தீதனை நடுவில் வாங்கி
துத்தியமுடன் ஆதியந்தம் மனதில் வைத்து
சொல்லாத மந்திரத்தின் தீயை மூட்டி
நித்திய மலரர்ச்சனை செய் பாதம் போற்றி
நிர்மதியி லதியமதி லதிய மாமே.
.உக
மதிவளருங் கெதிபெருகும் வாதம் வாதம்.

## *9. 3242 - விஷ வைத்திய மந்திர யந்திரங்கள்*

பொருள்: *மருத்துவமும் மந்திரமும்*
இதழ்கள்: *52*
அளவு: *14.7x3.4*
செய்யுள் எண்ணிக்கை :- விரவியது
நிலை: *சிதைவு, குறை.*

குறிப்பு:

*பாம்பு விஷ முறிவுக்கு மருந்துகளும், மந்திரங்களும் கூறப் பட்டுள்ளன. சுவடியின் முற்பாதி வலப்புறமும், பிற்பாதி இடப் புறமும் கால் பகுதிக்கு மேல் சிதைந்துவிட்டன. இதனை அடுத்து 6 இதழ்களில் சிதைவுபட்டுள்ளன. அதனால் செய்திகள் இன்னதென அறிய இயலவில்லை.*

தொடக்கம்:

*(முதல் இதழில் -*  *என ஐந்துக்கு ஐந்து கட்டமிட்டு பேய் பிசாசு ஓட, தெய்வ மந்திரம் இடப்பட்டுள்ளது. மறுஓலையில்)*
இலவண விலாசன் பாம்புக்கு
இலவனத்தை நிலத்திட ஏத்துதற் கொன்றில்லை
இதுவே தம்பனமாகு மெல்லாருங் கேள்மின்

குலக்கருதி யிலவனத்தைக் கரத்திலிடச்...
லுங்கொத்த வந்தன கடுங்கோபம் நீ...

முடிவு:

....சத்து யிசங்கிலைபறித்து வாயிற் சுவைத்து..எழுதிக் கடி வாயிலுந் தடவ நிற்கும்...திருக்கண் செவியை பாலிலரைத்து... முகத்தில் பிழிய கண் கொள்ளும்.

## 10.8492- b- விஷ வைத்தியம்

பொருள்: மருத்துவம்
இதழ்கள்: 9
அளவு: 37.3x2.8
செய்யுள்எண்ணிக்கை:- உரைநடை
நிலை: நன்று, குறை.

குறிப்பு:

தரமான நடையில் பாம்பின் வரலாறு, தன்மைகள், மந்திரங் களினால் விஷ நீக்கு முறைகள் விளக்கப்பட்டுள்ளன. முதல் இதழ் இல்லை.

தொடக்கம்:

முள்ளமணி மந்திரத்தால் கருடத்தியானத்தால் மருந்தி னாற்றீர்க்குஞ் செயலும் குருமலரடி வணங்க வகையாகக் கூறுகிறேனிந்தக் குவலயத்தில் பாம்பின் பிறப்பு மரைமலர்ப் பொருட்டுறைவோன் பயந்தருள் மகவென வந்துதித்த மாதவத்தி னோன் காசிபன் மனைவியரில் மிக்கானகத்துரு வயிற்றுத்த கட் செவிகளில் பேசிடு பேயரனந்தன் வாசுகிபெலத் தக்ஷன் கார்கோடன் பத்மன் மாபத்மன் சங்க பாலன் குளிகன் மானாமிவை யெட்டுந் தானாமிவற்றுள் பிறிவிபு தீபக் கண்ணன் மதனுடன் குளிகனும் செகத்தில் வேதியரென வகுத்தனரே.

முடிவு:

பாற்கடல் நடுவினிற் பள்ளி கொள்ளு நாரணர்க்குக் கொடிய மூர்த்தியுமானோன் முன்னாளில் கோடியரக்கர்களைத் தேடி நுகர்ந்தோன் கதியிற் சூர்யகதியும் மனகதி காற்றின் கதியு மிகப் போற்றி செய்பவன் திதி தரும் சுரர்களும் அதிதிதன் சிறுவரு

பாற்கடலுரை யமிர்தம் கடைந்திட மந்திரத்தை வேரோடும் பிடுங்கி மத்தாக நட்ட பெருமையினான் மடந்தை கத்துரு வினிடத்தாய் தொண்டு மாற்றிட வேணுமென்று பணந்துணிந்துபறந்து விண்ணுலகிற் சென்று இந்திரன் பதியினிற் கருவூர் மதிற்கதவைத்.......

## 11.6354- e- ரோமரிஷி வைத்தியம்

## பத்தொன்பது

பொருள்: இரசவாதம் இதழ்கள்: 3

அளவு: 8.2x2.8 செய்யுள் எண்ணிக்கை: - 19

நிலை: நன்று, முழுமை.

குறிப்பு:

வைத்தியம் எனினும் இரசவாத முறைகள் சிறப்பாகப் பேசப் பட்டுள்ளன. அச்சான விபரம் தெரியவில்லை.

தொடக்கம்:

நீதமுடன் ரோம ரிஷி பூதலத்தில்
நெறிகெட்ட மானிடர்க்கு மருந்து சொல்வேன்
காதலுடன் கணபதியைத் தியானஞ் செய்து
கார்மேக நிறமுடைய தயிலப் போக்கு
ஆதரவாய் மருந்துவகை சொல்லக் கேளு
அப்பனே நிலவாகை சிவனார் வேம்பு
போதமுடன் விராலியுட மூலந் தானும்
புகழ் பெறவே கொண்டுவந்தே யுலத்திக் கொள்ளே.

முடிவு:

சேரப்பா முன்சொன்ன அஞ்சுங் கூட்டித்
திறமாகப் பொடிசெய்து சீலையில் பரப்பி
வாரப்பா திரியாக்கி தயிலந் தோய்த்து
வளம் பெறவே திரிகொளுத்திப் பூத்தயிலம்வாங்கி
காரப்பா சிவகாமி பூசை செய்து
கழஞ்சி வெள்ளை உருக்கையிலே தயிலத்தாக்கு
பாரப்பா யேழரை மாத்துக் காணும்
பரமன்மே லாணையிட்டோம் பசும்பொன் னாமே.

-ய

ரோமரிஷி பாடல் முற்றும். குருவே துணை.

## 12.8853-c-வேதாந்தப் பாடல்கள்.

பொருள்: வேதாந்தம் இதழ்கள்: 8
அளவு: 41.9x2.8 செய்யுள்எண்ணிக்கை:- தொடர் பாடல்
நிலை: நன்று, குறை.

தொடக்கம்:

ஆடிய பாதா நீடிய கரனே ஆனை முகத்தோனே
தேடிய போதே ராயச முடனே சீக்கிரம் நீவருவாய்
பாடிய நாவலர் சூடிய தமிழும் பகரும் பெருமானே
நாடிய செறியோர் நாவி லமந்தருள் நாதவி நாயகனே.

முடிவு:

மகபதி வாழுமுன் காத்திகிரு பாலா
புகழடி யாரங்க ளன்பாய்ப் பணிசீலர்
மிகுமொலி நூபுரம் சூடிய பாலா
சுகமிவள் மேவு குன்றைக்குடி வேலா
அதிகசரச நயசரச உல்லாசமின் வந்தாள் உந்தனைத் தேடி
அதிகசரச நயசரச உல்லாசமின் வந்தாள்.

## 13. 11112-வசந்தராயர் பத்திரிகை,

பொருள்: வரலாறு இதழ்கள்: 86
அளவு: 27x2.8 செய்யுள் எண்ணிக்கை:- உரைநடை
நிலை: சிறு சிதைவு, முழுமை.

குறிப்பு:

' பக்கத்துக்கு 6 வரிகள். 5656, 3984-வீரபோக வசந்தராயர் பத்திரிகை என்பவற்றை ஒத்ததே. 31, 33, 35, 41, 72 -ஆம் பாடல்கள் இதழ்களைக் காணவில்லை. 10, 11, 12-ஆம் பத்திரிகைகள் சிதைவுக்காளாகி யுள்ளன. ஒவ்வொரு பத்திரிகையும், எவ்வாண்டு, எம்மாதம், எந் நாளில் தோன்றியது என்ற குறிப்புக்களுள்ளன.

## 14.9100-a- வாசுதேவ நல்லூர்த் தலபுராணம்

பொருள்: தலபுராணம் இதழ்கள்: 134
அளவு: 24.8x3.3 செய்யுள் எண்ணிக்கை:-
நிலை: நன்று, குறை. சுமார் 1800 வரிகள்

குறிப்பு:

பக்கத்துக்கு 6 முதல் 8 வரிகள், நெல்லை மாவட்ட வாசுதேவ நல்லூர்ச் சிந்தாமணி நாதன் மீது பாடப்பட்டுள்ளது. அச்சான தாகத் தெரியவில்லை.

தொடக்கம்:

தேர்கொண்ட நெடுவீதித் தேவை வளர்சோதி நடஞ்செய்யு மாதி
நீர் கொண்ட செம்பவளக் காடன் சடாமகுட நிமல மூர்த்தி
ஏர்கொண்ட மால்வணங்கி யேத்துசிந்தாமணி நாதனெம்
மான்காஞ்சத்
தார்பொன் மலர்ப் பதத்தைத் தலைக்கொண்டு பிறவிவினை
தவிர்த்துவா

முடிவு:

அன்னவ னெடுநா ளிந்த வவனியாண் டாள் வதத்தின்
மன்னி வாழ்ந்திருந் தா னென்று வழுத்தினான் புராண மெல்லாஞ்
சொன்னசீர் முனிவனாகுஞ் சூதனங் கதனைக் கேட்டு
முன்னவன் றாளை யெண்ணி முனிவரர் மகிழ்ச்சி பூத்தார்.

## 15.9005 - வீரகுமாரன் கதை

பொருள்: கதை. இதழ்கள்: 75

அளவு: 28.2x2.8 செய்யுள் எண்ணிக்கை:- உரைநடை

நிலை: சிறுசிதைவு, குறை.

குறிப்பு:

பக்கத்துக்கு 7 வரிகள். 1-7, 10, 13, 14, 16, 17, 31, 36, 37, 39, 41, 42, 45, 49, 51, 53, 54, 56, 63, 64, 68, 81, 84, 89, 90, 94, 103, -ஆம் இதழ்களைக் காண வில்லை. 20, 44, 58, 108, ஆம் இதழ்கள் முறிவுபட்டுள்ளன. அச்சான தாகத் தெரியவில்லை.

தொடக்கம்:

....யிடத்திலே வந்து கறி சமைத்துச் சாப்பிட்டு வந்தேனென்று சொன்ன மாத்திரத்திலே சித்திரை புத்திரரைப் பார்த்து நீர் யோக சாதகத்தின் படியே முகந்து தில்லையே அவன் காரியம் தெரிந்து போச்சு தென்று சுவாமி திருவுளம் பத்தினா ரப்போது சித்திரபுத்திர விண்ணப்பஞ் செய்கிற உத்திரம் சுவாமி சாதகம் பொய்யாது. அவனுக்கு அழிவில்லை.

முடிவு:

அந்தத்தலத்திலே கோவிலுங் கட்டிவிச்சு தேருந் திருவிழாவும், நடத்திவிச்சு பூசை புனர்க்காரங் கட்டளையிட்டு அந்தத் தலத்திலே காஞ்சிபுரப் பட்டணமென்று ஒரு பட்டணமுங் குடியேத்தி வேண்டிய கிராமங்களும் விட்டு விசாரிப்புக்கு மனுடரையுங் கட்டளையிட்டார். இப்படி எல்லாம் பிரவலமான கதையைக் கேட்டவர்கள் ஆல்போல் தழைத்து அருகு போல் வேரூன்றி மூங்கில் போலன்ன சுத்த முசியாமல் வாழ்ந்திருப்பார். பரமே சுவரன் அவர்கள் பங்கிலிருந்து ஆச்சரியமாக நின்று விளை யாடுவார். சூ௲யக ௲(கி.பி.1866)ஆவணி(மாதம்) ஆதித்த வாரமும் புருவ பச்ச துந்திமியும் கூடின சுபயோக சுபதினத்தில் குலைய நல்லூர் வண்ணான் பிச்சாண்டி மூப்பன் அருமை சுதர்சாண கருப்பண்ணன் எழுதியது.

## *16.5656- வீரபோக வசந்தராயர் பத்திரிகை*

பொருள்: வரலாறு இதழ்கள்: 50

அளவு: 12.4 x 2.9 செய்யுள் எண்ணிக்கை: - உரைநடை

நிலை: நன்று,முழுமை.

குறிப்பு:

பக்கத்துக்கு 7 வரிகள் .காஷ்மீர் தேசத்து ஜெய்சிங், திலகாம்பாள் என்ப்வர்களுக்கு மகனாகத் தோன்றியு வீரபோக வசந்தராயர் ஏன்பவரதுவரலாறும், ஸ்ரீவிஷ்ணுவேவீரபோக வசந்தராயராகவும், ருத்திரன் சிதம்பர தீட்சிதராகவும், பிரம்மா இராம யோகியாகவும் தோன்றிதாகப் புகழப்படுகின்றது.12 பத்திரிகைகள் அடங்கி யுள்ளன. ஐரோப்பியர் ஆட்சிக் காலத்துப் புரட்சிப் பத்திரிகை. வரலாற்றுக்குப்பயன்படும்.அச்சானதாகத் தெரியவில்லை.

தொடக்கம்:

சீர்பெற்ற உலகெலா மிருளற்று ஒளிபெற ஸ்ரீவிஷ்ணு
அவதாரமாய்
ஜெகதலமீ புகழ காசிமீர் தேசத்தினில் திலகம்வாழ்
கொர்ப்பமதனில்
பேர்பெற்று வாழ்கவே பிள்ளையாய்ச் சென்மித்துப் பூமிதனி
லேபிறந்து

பெரியோர்கள் ஆதரவில் சர்ப்பனன் பாசைகள் பிரபல்லிய
மாய்ப்படித்து
பார்பெற்ற இந்திர தி(ரி)பரு பதத்தடியினில் பட்டணம் அமைத்த
பின்பு

முடிவு:

கிரமமாய்த் தான தர்மஞ் செய்த பேர்களுக்கு தெட்சிணை கொடுத்துச் சாம்பசிவ மூர்த்தி கிருபையினாலேயும் கயிலாச பதவி வைகுண்ட பதவி பெற்றிருப்பார்களிதுவே பன்னிரண்டாவது பத்திரிகை.

## 17.3984 - வீரபோக வசந்தராயர் மகத்வ பத்திரிகை

பொருள்: வரலாறு
இதழ்கள்: 13
அளவு: 20.8x3.6
செய்யுள் எண்ணிக்கை :- உரைநடை
நிலை: சிறுசிதைவு. குறை.

குறிப்பு:

பக்கத்துக்கு 11 வரிகள், முதல் பத்திரிகை முழுமையும், இரண்டாம் பத்திரிகை முற்றுப் பெறாதும் உள்ளன. 5656-வீரபோக வசந்தராயர் பத்திரிகை என்பதனை ஒத்ததே.

## 18.10302 - வைகுண்ட அம்மானை

பொருள்: நாட்டுப்புறக்கதைப் பாடல்
இதழ்கள்: 11
அளவு: 36.6x3.4
செய்யுள் எண்ணிக்கை :-
நிலை: சிறு சிதைவு, குறை.
சுமார் 2000 வரிகள்

குறிப்பு:

பாண்டவர் வைகுண்டம் சேர்ந்த கதை அம்மானையாகப் பாடப்பட்டுள்ளது. பக்கத்துக்கு 16 வரிகள். அச்சானது. புகழேந்தி பாடினாரென்ற செவி வழிச் செய்தி உண்டு.

தொடக்கம்:

சுயநுக ஸ்ரீ(கி.பி.1856 ஆனி௴ மாதம் 9-ந் தேதி) வைகுண்டம்மானை எழுதி முகித்து வாசித்து வருகிற சேரமா தேவி.. ..புரத்திலிருந்து வாசி பண்ணியிருந்த யிருளப்பகுமார வயித்தியலிங்கம் பிள்ளை

*ய.....சகோத....யம் சங்கரலிங்கம் பிள்ளைகளுக்கு எழுதிக் குடுத் தேன்.இடையங்குளம் சங்கர லிங்கம் பிள்ளை கையெழுத்து.*

கந்தனே செந்தமிழ்சேர் கணபதியே காப்பா(மே)
எந்தன் குருபரனே யீசுரனே முன்னடவாய்
தந்தி முகத்தோனே சரசோதி வாக்கருள்வா(ய்)
அந்தி மதிசூடு மரனார் திருமக(னே)
வந்து புவிமீதில் மகாபாரதக் கதையை
இப்புவியி லுள்ளோர்க ளெழுதிப் படிப்பதற்கு
செப்புகிறேன் லட்சுமியார் சீதேவி நின்றிலங்க.

**முடிவு:**

தன்மரையும் நால்வரையும் தான்கண்ட போதெனக்கு
சென்ம விமோசனமாய்த் தெய்வசபை நான்சேரப்
போறே னெனப் பாப்பான் போயினன்கா ணம்மானை
நீறே தரித்தருளும் நிமலர் தமைநினைந்து
மாக்கமுட னந்த மலைகடந்து அப்பாலும்.

## *19.8893 - C- வாலை ரசம்*

**பொருள்**: *இரசவாதம்* **இதழ்கள்**: *9*

**அளவு**: *24x3* **செய்யுள் எண்ணிக்கை**: *- 6*

**நிலை**: *நன்று, முழுமை.*

**குறிப்பு:**

*ஆசிரியர், அச்சான விபரம் தெரியவில்லை. நூலிறுதியில் 5க்கு 5 கட்டமிட்டு, நமசிவாய நாம எழுத்துகள் எழுதப்பட்டுள்ளன.*

**தொடக்கம்:**

காணா காட்சியெல்லா மிந்த நூலில்
    கருதினோம் இன்னமொரு கருவைக் கேளு
தோணாத வாலைரசம் வைக்கு மார்க்கமு
    சொந்தமுடன் சொல்லுகிறேன் சூட்ச மாக
வேணதொரு சாதிலிங்கந் தன்னை நீயும்
    விதமாகத் தான்பொடித்துத் தோண்டிக் கேத்தி
நாணாத நன்னாரி வேர்தான் கொஞ்சம்
    நன்மையுடன் பொடிசெய்து கூடப் போடே

**முடிவு:**

வெளிவி...லுலகத்தில் லுஷ்ட ருண்டு
வேடிக்கை போலே அவர் செய்து பார்ப்பார்
விழிகெட்ட குருடரைப்போல் தெய்வ மெல்லாம்
வீடுவிட்டுக் காடுறையும் விதியோ வென்று
பழிவிட்டுப் போகாது உன்னைச் சுத்தும்
பதனமா யின்னூலைப் பதனம் பண்ணு
வெளிதொட்டு யொளி(ர்)கின்ற ஞானி யானால்
விஸ்தார மாகயிதைச் செய்வார் பாரே.
*-சா.*

*உ.சிவமயம் உ.*

## *20.6/56-வாலைப்பாட்டு*

**பொருள்**: வேதாந்தம் **இதழ்கள்**: 7
**அளவு**: *25.5x2.6* **செய்யுள் எண்ணிக்கை**:- *108 அடிகள்*
**நிலை**: *சிறுசிதைவு.குறை.*

**குறிப்பு:**

*வாலைப் பெண்ணைப் பார்த்துப் பாடுவதாகக் கும்மி வடிவில் அமைந்துள்ளது. ஆசிரியரும், அச்சான பிறவிபரங்களும் தெரிய வில்லை.*

**தொடக்கம்:**

சத்தி சடாதரி வாலைப்பாதப் பெண்ணா மாதி
வாலைப் பெண்மேல் கு(ம்)மிப் பாட்டுரைக்க
வித்தைக் குகந்திடும்...க்குகந்திடும்
மால்முரு கேசனுங் காப்பாமே
சித்தர்கள் போற்றிய பாண்டிப் பெண்ணாம்
வாலை அம்பிகைமேல் கு(ம்)மிப் பாட்டுரைக்கீ
தத்த திமி திமி தோமே...
வைகுண்ட ஆண்டவன் பாதந் துணையாமே.

**முடிவு:**

காக்கா யிருக்கிது கொம்பி லேதான்
காலைச் சேவ லிருக்கிது தெம்பிலேதான்
பாக்கவும் தூரமும் இல்லையடி ஞானம்
பாத்தால் தெரியுமே ஞானப் பெண்ணே

தொண்டையூர் முக்கோணக் கோட்டைக் குள்ளே
தொத்திக் கொடிமரம் நாட்டையிலே
சண்டை செய்தோன் விந்து ஓடிப்போனான்
தேகம் வெந்து தணலாட்சு ஞானப் பெண்ணே.

## 21.7931- b- ரோமரிஷி சூத்திரம் பதினெட்டு.

பொருள்: மருத்துவம்
அளவு: 25 x 2.8 செய்யுள் எண்ணிக்கை:- 21
நிலை: நன்று, முழுமை.

குறிப்பு:

மருந்து செய்முறைகள் அடங்கியுள்ளன. அச்சான விவரம் தெரியவில்லை.

தொடக்கம்:

நீதமுடன் ரோமரிஷி பூதலத்தில் கேட்ட
மானிடர்க்கு மருந்து சொல்வேன்
காதலுடன் கணபதியைத் தியானம் செய்து
கார்மேகக் கண்ணனுட தயிலப் போக்கும்

முடிவு:

திப்பிலி இவைகளைக் கரிக்கிச் சாம்பலாக்கித் தேனில் கொடுக்க உடன் நிற்கும்.

கலியாணி சகாயம். சுபம்.

## 22.5453- வைகுண்ட அம்மானை

பொருள்: நாட்டுப்புறக் கதைப்பாடல் இதழ்கள்: 205
அளவு: 35 x 3 செய்யுள் எண்ணிக்கை:-
நிலை: பழமை, நன்று, முழுமை. சுமார் 2900 வரிகள்

குறிப்பு:

பக்கத்துக்கு 7 வரிகள். 3214, 7955- வைகுண்ட அம்மானை போன்றதே. முதல் ஏட்டில் ''தேனீர் குளம் நவநீத கிருஷ்ண ஸ்வாமி கோயில் தெருவிலிருக்கும் மா.பெ.புலமாடக்கோன் வாசித்து வருகிற வைகுண்ட அம்மானை ஸ்ரீராமஜெயம்'' எனவும்

இறுதியில், 1092 (கி.பி.1917)ஆடிமீ(18-ந்தேதி) அமாவாசையும் தவ சிருப்பும் கூடிய சுபயோக சுபதினத்தில் தேனீர் குளத்தி லிருக்கும் வாத்தியார். பெ.புலமாடக் கோனுக்கு இந்த வைகுண்டம்மானை யெழுதி முடிந்தது. இந்த ஏடு எழுதினேன் ராமயன் பட்டியி லிருக்கும் முத்துத் தேவர் குமாரன் சுப்புத் தேவன் எழுதின வைகுண்டம்மானை நீடுழி காலம் வாழ்க. வால பரமேஸ்வரி துணை. இந்த லக்கினத்தில் எழுதி முகிந்தது. முற்றும். ரெங்கனாயகர் துணை " எனவும் உள்ளது.

## 23.7959 - வைகுண்ட அம்மானை

பொருள்: நாட்டுப்புறக்கதைப் பாடல்
செய்யுள் எண்ணிக்கை: - தொடர் பாடல்
நிலை: சிதைவு, குறை.

குறிப்பு:

முற்கூறிய 7955 - வைகுண்ட அம்மானை போன்ற பிரதியே. இதில் பல ஏடுகள் இடையிடையே காணவில்லை. கடைசி ஏட்டின் எண் 145 என உள்ளது. சிதைவு காரணமாய் விவரங்கள் அறிய இயலவில்லை.

## 24.6670-வைகுண்ட அம்மானை

பொருள்: நாட்டுப்புறக்கதைப்பாடல் இதழ்கள்: 240
அளவு: 40 x 3 செய்யுள்எண்ணிக்கை: -
நிலை: சிதைவு, முழுமை. சுமார்3850 வரிகள்

குறிப்பு:

பக்கத்துக்கு 8 வரிகள். 7959-வைகுண்ட அம்மானை போன் றதே. மிகுந்த சிதைவு காரணமாய்ப் பிற விவரங்கள் அறியக் கூடவில்லை.

## 25.11278-வைகுண்ட அம்மானை

பொருள்: நாட்டுப்புறக் கதைப்பாடல் இதழ்கள்: 295
அளவு: 38 x 2 செய்யுள்எண்ணிக்கை: -
நிலை: நன்று, முழுமை. 4150 வரிகள்

குறிப்பு:

பக்கத்துக்கு 7 வரிகள். 7795-வைகுண்ட அம்மானை போன்ற பிரதியே.

இறுதியில் ''பவ வருடந் தை மாதம் பதினெட்டாம் தெய்தி (தேதி) தன்னில் தவமுடைய பஞ்சமியில் சனிவார விந்தமதில் விவரிதமா யிக்கதையை விளங்கவே தானெழுதி சுபயோக சுபதினமும் சோபனமு முண்டாக'' என உள்ளது.

## 26. 10354- வைகுண்ட அம்மானை

பொருள்: நாட்டுப்புறக் கதைப் பாடல் இதழ்கள்: 69
அளவு: 32 x3 செய்யுள் எண்ணிக்கை:-
நிலை: சிறு சிதைவு, குறை. சுமார் 1250 அடிகள்

குறிப்பு:

பக்கத்துக்கு 9 வரிகள். 7955-வைகுண்ட அம்மானை என்ற நூலின் பிரதி போன்றதே.

## 27. 10369- வைகுண்ட அம்மானை

பொருள்: நாட்டுப்புறக் கதைப்பாடல் இதழ்கள்: 113
அளவு: 40x2 செய்யுள் எண்ணிக்கை:-
நிலை: பழமை, குறை. சுமார் 1580 அடிகள்

குறிப்பு:

பக்கத்துக்கு7 வரிகள். 7955-வைகுண்ட அம்மானை போன்றதே. ''இறுசெய் குமரன் சிவஞான புரத்திலிருக்கும் பரத்திரெட்டியார் மகன் சோமசுந்தரம் எழுதியது. சிவமயம்'' என்னும் குறிப்புள்ளது.

## 28. 10333-வைகுண்ட அம்மானை

பொருள்: நாட்டுப்புறக் கதைப் பாடல் இதழ்கள்: 240
அளவு: 38 x 3 செய்யுள் எண்ணிக்கை:-
நிலை: சிறு சிதைவு, முழுமை. சுமார் 3850 வரிகள்

குறிப்பு:

பக்கத்துக்கு 8 வரிகள். 7955-வைகுண்ட அம்மானை போன்ற பிரதியே இது. இறுதியில் ௲௮௱௨௰௯ (கி.பி.1829) அற்பிசைமீ (ஐப்பசி மாதம்) உயருடு (25-ந் தேதி) புதன்கிழமையும், அமரபட்சத்து சத்தமியும், புனர்பூச நட்சத்தரமுங் கூடின சுபதினத்தில் இடகால் கறுப்பன் கைப்பட எழுதி முகிந்தது. சிவகாமியம்மன் துணை. இதன் பின்னர் 2 ஒற்றை ஏடுகளில் முருகன் தோத்திரமுள்ளது.

## 29. 10370 - வைகுண்ட அம்மானை

பொருள்: நாட்டுப்புறக் கதைப் பாடல் இதழ்கள்: 259

அளவு: 38 x 3 செய்யுள் எண்ணிக்கை: -

நிலை: சிறுசிதைவு, முழுமை. சுமார் 3000 வரிகள்

குறிப்பு:

பக்கத்துக்கு 6 வரிகள். 7955-வைகுண்ட அம்மானை போன்ற பிரதியே. இறுதியில் ௲௮௱௭௰௪ (கி.பி.1874) ஸ்ரீமுக வருஷம் கார்த்திகை மீ௳ எ டு (7-ந்தேதி) வியாழக்கிழமை முகிந்தது. ...அணைஞ்ச பெருமாள் பிள்ளை வைகுண்ட அம்மானை என்ற குறிப்பு உள்ளது.

## 30. 11621 - வைகுண்ட அம்மானை

பொருள்: நாட்டுப்புறக்கதைப்பாடல் இதழ்கள்: 300

அளவு: 42 x 3 செய்யுள் எண்ணிக்கை: -

நிலை: சிதைவு, முழுமை. 3600 வரிகள்

குறிப்பு:

பக்கத்துக்கு 6 வரிகள். 7955 - வைகுண்ட அம்மானை போன்ற பிரதியே.

## 31. 9236 - வைகுண்ட அம்மானை

பொருள்: நாட்டுப்புறக் கதைப்பாடல் இதழ்கள்: 86

அளவு: 36 x3 செய்யுள் எண்ணிக்கை: -

நிலை: நன்று, குறை. சுமார் 1200 வரிகள்

குறிப்பு:

பக்கத்துக்கு 7 வரிகள். 7955 - வைகுண்ட அம்மானை என்ற பிரதி போன்றதே.

## 32.8503 - வைகுண்ட அம்மானை

பொருள்: நாட்டுப்புறக் கதைப்பாடல் இதழ்கள்: 154
அளவு: 44x3 செய்யுள் எண்ணிக்கை:-
நிலை: நன்று, குறை. சுமார் 6500 வரிகள்

குறிப்பு:

பக்கத்துக்கு 3 பகுதிகளாக 7 வரிகள் வீதம் (7 x3 =21 வரிகள்) எழுதப் பட்டுள்ளன. முதல் 30 இதழ்கள் இல்லை. இறுதியில் அ௱ ௬ சா (கி.பி.1671) மாசி மாத (14-ந் தேதி) மங்கள வாரமும், புனர்பூச நட்சத்திரமும் ஏகாதசியும் கன்னியா லெக்கினத்திலே எழுதி முகிப்பித்தேன். சிங்கிகுளம் வடமலையப்ப வாத்தியார் குமாரன் நல்லசிவ வாத்தியார் கையெழுத்து. ராமசாமி பாதார விந்தமே கதி. வைகுண்(ட) பதி சகாயம். குருபாத முன்னிற்க. காந்திமதியம் மாள் சகாயம்.

## 33.9063 - வைகுண்ட அம்மானை

பொருள்: நாட்டுப்புறக் கதைப்பாடல் இதழ்கள்: 79
அளவு: 42 x3 செய்யுள் எண்ணிக்கை:-
நிலை: சிதைவு, குறை. சுமார் 1100 வரிகள்

குறிப்பு:

பக்கத்துக்கு 7 வரிகள். 7955 - வைகுண்ட அம்மானை போன்றதே. 76 ஏடுகளை அடுத்து 79, 83, 89 என்ற எண்ணுள்ள ஏடுகள் இல்லை.

## 34.6673 - வைகுண்ட அம்மானை

பொருள்: நாட்டுப்புறக் கதைப்பாடல் இதழ்கள்: 221
அளவு: 40x3 செய்யுள் எண்ணிக்கை:-
நிலை: சிறுசிதைவு, முழுமை. சுமார் 4000 வரிகள்

குறிப்பு:

பக்கத்துக்கு 9 வரிகள். இப்பிரதியும் 7955- வைகுண்ட அம்மானை போன்றதே. இடையில் பல ஏடுகள் முறிந் துள்ளன. இறுதியில் சில ஒற்றை ஏடுகள் குமரேச சதகம், கிருஷ்ணன் தூது வசனம் என்பன வும், தனிப்பாடல்கள் சிலவும் உள்ளன.

நூலின் இறுதியில் பிரமாதீச ஸ்ரீ ஐப்பசி மீ௳(19ந்தேதி) புந்தி வார னாள் வைகுண்ட அம்மானை எழுதினது பெருமருதூரிலிருக்கும் கணக்குச் சுப்பான் கை நெட்டெழுத்து. உறரி: ஓம்,நன்றாக. குரு வாழ்க.குருவே துணை. ஸ்ரீமந் நாராயண மூர்த்தி துணை.

## 35.32/4 - வைகுண்ட அம்மானை

பொருள்: நாட்டுப்புறப்பாடல் இதழ்கள்: 263
அளவு: 36 x 3 செய்யுள் எண்ணிக்கை:-
நிலை: பழமை,முழுமை. சுமார் 3700 வரிகள்

குறிப்பு:

பக்கத்துக்கு 7 வரிகள்.இந்நூல் 7955 - வைகுண்ட அம்மானை என்ற நூலைப் போன்றதே.

## 36.7955 - வைகுண்ட அம்மானை

பொருள்: நாட்டுப்புறக் கதைப்பாடல் இதழ்கள்: 248
அளவு: 42x3 செய்யுள் எண்ணிக்கை:-
நிலை: நன்று,முழுமை. சுமார் 3800 அடிகள்

குறிப்பு:

பக்கத்துக்கு 8 வரிகள்.இஃது பாண்டவர்கள் பாரத யுத்தம் முடிந்து நாட்டை ஆண்ட பிறகு வைகுண்ட மெய்திய செய்திகளைக் கூறும் அம்மானைப் பாட்டாகும்.அம்மானைப் பாடல் தமிழ் இலக்கிய வகையில் நாடோடி இலக்கியமாக வரும் நெடும் பாட்டாகும். ஆசிரியர், அச்சான விவரங்கள் தெரியவில்லை.தொடக்கத்தில் வாக்குண்டாம் என்ற கணபதி துதியுடன் ஏடு ஆரம்பமாகின்றது.அடுத்து இருபாடல்களில் அமைந்துள்ள திருமால் துதியினை அடுத்து, ௲௮௱௮௰௪ (கி.பி.1884) தை மீ௯உ (9-ந்தேதி)கீழப்பாவூரிலே வாசம் பண்ணுகிற சொரி முத்துக்கோன் குமாரனாகிய சொக்கலிங்க வாத்தியார் வாசித்து எழுதி வருகிற வைகுண்ட அம்மானை,நன்றாக,தர்மதேவி இரட்சி த்து முன்னிற்க.

**தொடக்கம்:**

கந்தனே செந்தமிழ்சேர் கணபதியே காப்பாமே
எந்தன் சரசோதி எப்போதும் வாக்கில்நித்தம்
வந்துதவி செய்ய வழுத்துகிறே னிக்கதையை
முந்து பரமீசர் மொழிந்த வசனமிது
செப்புதற்கு லட்சுமியாள் சீதேவி வந்துதவாய்
இப்புவியில் வேதாந்த மெடுத்து உரைத்திடவே
மாபாரதக் கதையாய் வகுத்துரைத்த சாத்திரத்தால்
பூபால ரைவர் பொருதுதிரி யோதனனை
வென்று புவியாண்டு விட்டுணுபதம் சேர்ந்த கதை
.... ... ... ......

**முடிவு:**

மன்னவரே நீங்கள் மண்ணாசை யிற்றுவந்தீர்
என்னகரி லெப்போது மிருமென்று தானுரைத்தார்
ஆனந்த வாருதிகொண் டைவரையு நீராட்டித்
தானந்த மான்வள்ளல் சாத்தி முடிசூட்டி
மாயவனார் தானு மனமகிழ்ந்து தான் வாழ்த்தி
நேயமுடன் கொண்டுசென்று நித்திலஞ்சேர் மண்டபத்தில்
அன்பாக நம்மிடத்தி லருகே யிருமெனவே
இன்பமுடன் மாய னிருமென்றா ரம்மானை.

*எனக்கூறி நூற்பயனைப் பின்னர்க் கூறுமிடத்து,*

'' இந்த வைகுண்டக் கதை யியல்பாக முன்னாளில்
சிந்தைமகிழ் சீரங்க ராசருட தன்சீஷன்
வெங்கி யருள்வடவன்., விளம்பினா னிக்கதையை''

*அதனைத் தமிழில்,*

திருந்துபுகழ் வைகைத் தென்வீரை யம்பதியான்
பொருந்து தவம் பெற்றோன் புகழழகு தன்புதல்வன்
மன்னவனும் பொன்னழகு மகீபனுட தன் மருகன்
சொன்னபடி கேட்டுத்......................
..........தாசனெனுங் கூறித்
தமிழினா லிக்கதையைக் கேட்டுத்.......

*என்பதனால் ஆசிரியர் பற்றிய செய்திகளும் தெரிகின்றன. இதன் பின்னர் நூற்பயனும் எட்டு விருத்தங்களும் உள்ளன.*

மெய்யே சொன்னேன் சரசு பதி
விமலர் தாமு மருள்புரிந்தார்
அய்யர் நமக்கு எப்போதும்
அருளும் பொருளு மேதருவார்
கையால் மனத்தால் பேரறிவாக்
கருத்தா லிருத்திக் காண்பதற்கு
உய்வார் வைகுண்டப் பேறும்
உடனே தருவார் தப்பாதே

*(அ)*

*ஸ்ரீவைகுண்டம்மானை முற்றிற்று.முற்றும்.*

## *37.11544 - b- விநாயகர் அகவல்*

**பொருள்:** *துதி* **இதழ்கள்:** *9*
**அளவு:** *24 x 3* **செய்யுள் எண்ணிக்கை:** *-*
**நிலை:** *நன்று, குறை.* *சுமார் 162 வரிகள்*

**குறிப்பு:**

*பக்கத்துக்கு 9 வரிகள். இப்பிரதி 11544 - a - என்பதுடன் சேர்த்து வைக்கப்பெற்ற போதிலும், அளவு சரியாக இல்லை. இது தனிச் சுவடியாக இருக்க வேண்டும். இந்தச் சுவடியிலும் 8 முதல் 16 ஏடுகள் இல்லை. இதன் பின்னர் 2 ஏடுகளில் ஔவையாரருளிய விநாயகரகவலும் பின் 7 ஏடுகளில் குமர குருபர ஸ்வாமிகளருளிய கந்தர் கலிவெண்பாவும் உள்ளது. அச்சானது.*

**தொடக்கம்:**

**வினாயகரகவல்**

சீத களபச் செந்தா மரைப்பூம்
பாதச் சிலம்பு பலவிசை பாட
பொன்னரை ஞாணும் பூந்துகி லாடையும்
வள்ள மருங்கில் வளர்ந்தழ கெறிப்ப.

**முடிவு:**

ஆயும் பழைய அடியா ருடன்கூட்டித்
தோயும் பரபோகந் துய்ப்பித்துச்-சேயக்

கடியேற்கும் பூங்கமலக் கால்காட்டி யாட்கொண்டு
அடியேற்கு முன்னின் றருள்.

கலிவெண்பா முகிந்தது. முற்றும். சண்முகநாதன் பாதார விந்தமே கெதி.

## 38. / /503 -a- வாக்குண்டாம்

பொருள்: நீதி
அளவு: 38 x 3
நிலை: நன்று, முழுமை.

இதழ்கள்: 8
செய்யுள் எண்ணிக்கை:- 30

குறிப்பு:

பக்கத்துக்கு 4 வரிகள். ஔவையாரருளிச் செய்த வாக்குண் டாம் என்ற நூலின் பிரதி. அச்சானது.

தொடக்கம்:

நன்றாக. குருவே துணை. கணபதி துணை. ஔவையாரருளிச் செய்த வாக்குண்டாம் நன்றாக.

மூலம். காப்பு. நேரிசை வெண்பா.

வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம் மாமலரா
நோக்குண்டாம் மேனி நுடங்காது - பூக்கொண்டு
துப்பார் திருமேனி தும்பிக்கை யான்பாதம்
தப்பாமற் சார்வார் தமக்கு.

ஸ்ரீ கலியாணி சகாயம். அழகப்பன் சுவடி நன்றாக.

முடிவு:

சாந்துணையுந் தீயனவே செய்திடினுந் தாமவரை
யாந்தனையுங் காப்ப அறிவுடையோர் - மாந்தர்
குறைக்குந் தனையுங் குளிர்நிழலைத் தந்து
மறைக்குமாங் கண்டீர் மரம்.

முற்றிற்று - ஸ்ரீ.

## 39.6353 - சீவக சிந்தாமணி

பொருள்: காவியம்
அளவு: 38x3
நிலை: சிதைவு, குறை.

இதழ்கள்: 120
செய்யுள் எண்ணிக்கை:- சுமார் 2650 வரிகள்

குறிப்பு:

பக்கத்துக்கு 11 வரிகள். அச்சானது. ஏடுகள் பல தலைப்பகுதியில் சிதைந்துள்ளன. 450 ஏடுகள் கொண்ட சுவடியில் 120 ஏடுகளே உள்ளன. அவையும் சிதைந்துள்ளன. இறுதியில் படல அட்டவணையும், பாடல் எண்களும் குறிக்கப் பெற்றுள்ளன. ''உரையெழுதினதிற் கவி 3353 இருப்பதற்கு, இருப்பது 3315 போக, காணவேண்டியது 38 கவிகள்''. என்றுள்ளது குறிப்பிடத் தக்கது.

## 40.11606 - சீவக சிந்தாமணி

பொருள்: காவியம் இதழ்கள்: 28
அளவு: 42 x 3 செய்யுள் எண்ணிக்கை: - 98
நிலை: சிதைவு, குறை.
குறிப்பு:

பக்கத்துக்கு 10 வரிகள். 6353 - சீவகசிந்தாமணி போன்றதே. இதில் நாமகள் இலம்பகம் 98 ஆம் பாடல் வரை உள்ளது.

## 41.11599 - சீவக சிந்தாமணி

பொருள்: காவியம்

குறிப்பு:

இது 6353 - சீவகசிந்தாமணி போன்ற பிரதியே. பதுமையாரிலம்பகத்தில் தொடங்கி இலக்கணையாரிலம்பகம் வரை உள்ளது. ''அ எ(கி.பி.1722)ஆம் வருஷம் கார்த்திகை மாதம் வெள்ளிக் கிழமையுந் தசமியும் ரேவதியும் சுபயோக சுபகிரணமும் பெற்ற சுபதினத்திலே இந்த சிந்தாமணியுரைப் புத்தகம் எழுதி முகித்தான் அழகிய நம்பியா பிள்ளை திருவேங்கட முடையான் திருஞான தேசிகனே தஞ்சம். இலக்கணையாரிலம்பக முற்றும். ரெத்தினக் கவிராயருக்கெழுதியது'' என்ற குறிப்புள்ளது.

## 42.6348 -a- சீவகசிந்தாமணிச் சுருக்கம்

பொருள்: காவியம் இதழ்கள்: 76
அளவு: 35 x 2 செய்யுள் எண்ணிக்கை: 607
நிலை: நன்று

குறிப்பு:

*பக்கத்துக்கு 7 வரிகள். திருத்தக்க தேவரியற்றிய சீவக சிந்தாமணி பாடல்களைத் தொகுத்து 607 பாடல்களிலேயே சுருக்கியது. முதலில் பாடல் அட்டவணையும், பாடல் எண்களும் குறிக்கப் பெற்றுள்ளன. அச்சானது. டாக்டர். ஐயரவர்களால் கி.பி. 1887-ல் முதன் முதல் பதிப்பிக்கப் பெற்றுள்ளது.*

தொடக்கம்:

| | | | |
|---|---|---|---|
| நாமகள் இலம்பகம் | 408 | | 1989 |
| கோவிந்தயார் | 84 | இலக்கணையார் | 497 |
| காந்தர்வதத்தையார் | 355 | விசையை | 53 |
| குணமாலையார் | 306 | முத்தி | 495 |
| பதுமையார் | 146 | | ------ |
| கேமசரியார் | 145 | | 3034 |
| கனகமாலையார் | 332 | | ------ |
| விமலையார் | 106 | | |
| சுரமஞ்சரி | 107 | | |
| | ------ | | |
| | 1989 | | |
| | ------ | | |

*இக்காலத்து வழங்குவன 3153.*

பாயிரம்:

மூவாமுதலா வுலகமொரு மூன்று மேத்தத்
தாவதா வின்பந் தலையாயது தன்னி னெய்தி
ஓவாது நின்ற குணத் தொண்ணிதிச் செல்வன் என்ப
தேவாதி தேவனவன் சேவடி சேர்து மன்றே.

முடிவு:

முந்நீர் வலம்புரி சேர்ந்தசைந்து பாயமுரன்று முழங்கி யீன்ற
செந்நீர்த் திருமுத் திருபத்தேழ் சேர்ந்தணிந்து திருவில் வீசும்
செந்நீர்த் தரளவடம் போற் சிந்தாமணி யுரைத்தார் கேட்டார்
இந்நீர ராயுய்வர் ஏந்து பூந் தாமரையாள் காப்ப ளாமே.

*பிள்ளையார் துறவு முத்தியிலம்பக முற்றிற்று. சீவக சிந்தாமணிச் சுருக்கம் முற்றிற்று.*

## *43.8 / 7 - ஸ்ரீமத் பாகவதம்*

பொருள்: *புராணம்* இதழ்கள்: *340*
அளவு: *36 x 3* செய்யுள் எண்ணிக்கை: *—*
நிலை: *நன்று, முழுமை.*
குறிப்பு:

*இந்நூல் திருமால் அவதாரங்களைக் குறிப்பிடும் பாகவத மாகும். இதில் 12 கிரந்தங்களும் உள்ளன. ஆசிரியர் செவ்வைச் சூடுவார். திருமலை திருப்பதி தேவஸ்தானத்தால் 1949ல் அச்சானது.*

தொடக்கம்:

ஹரி: ஓம் நன்றாக. பாகவத புராணம்
பாயிரச் சிறப்பு
பிறந்தபொழு தேதுறந்து பினர்க் குழவி
பேரடைப்பப் பின்போய்த் தொன்னூல்
அறைந்தபுகழ் வியாத முனி யாதரத்தான்
மதவாயென் றழைப்பச் செவ்வாய்
திறந்து நறை பொழியுமலர்ச் செழுந்தருவு
மேயென்ன வுயிர்கள் யாவு
நிறைந்துறையு சுகமுனிவ னிரையிதழ்த்தா
மரையிதழ்த்தாள் நினைத்தல் செய்வாம்.

ஒருமுதலாகி யிருசுடராகி யுயர்ந்தமும் மூர்த்தியுமாகி
அருமறைநா லாயைந்து பூதமுமாய் ஆறுசாலைத்
திரங்களா யெழு பருவ பருப்பதமாகிப் பலமிலாநலக்
கிரகத்தின் சுருபமாய் விளங்கி தச வவதாரஞ்
செய்திடும் சோதியைத் துதிப்பாம்.

முடிவு:

இணைய நூல் கேட்குனர் யாது வேண்டினு
மனமுவந் தளிக்குவர் மனுக்கள் வானுளோர்
வினையறு தென்புல மேய மேலவர்
முனிவரர் விஞ்சையர் முதலி னோர்களே.
கனைத்து வண்டுழாய் கண்ணன் மாக்கதை

மனத்துற வழங்கினர் மகிழ்ந்து கேட்குநர்
வினைத்திருக் கற்றுறு மெய்ம்மை யாதியா
நினைத்தவை பெற்றிவ ணீடு வாழியே.

புராண வளமை யுரைத்த வத்தியாய முற்றும். பாகவத முற்றும். [illegible] (கி.பி.1879)ஆவணி மீ உயஉ(20ந் தேதி) வியாழக்கிழமை மூலநட்சத்திரமான சுபதினத்தில் எழுதி முகிந்தது.

## 44.8500 - e- சமாதி சகசம். பிரமசகசம்

பொருள்: யோகம்
இதழ்கள்: 120
அளவு: 26 x 3
செய்யுள் எண்ணிக்கை: –
நிலை: பழமை

குறிப்பு:

சமாதி சகசம், பிரம சகசம், ஆனந்த சகசம், காட்சி, நாட்டம், அறிவு மலம், அகண்டம், பரம விவேகம் என்ற தலைப்பில் பாடல்கள் உள்ளன. இதன் மேலும் 4 ஏடுகளில் வைராக்கிய தீபம் என்ற நூல் குறையாக உள்ளது. வேறு விபரமறியக் கூடவில்லை. தொடக்கம் முடிவு எழுதக் கூடவில்லை.

## 45.3884 - b- சைவ பூஷணம்

பொருள்: சமயம்
இதழ்கள்: 147
அளவு: 30 x 3
செய்யுள் எண்ணிக்கை: - உரைநடை
நிலை: நன்று, முழுமை.

குறிப்பு:

பக்கத்துக்கு 9 வரிகள். தமிழும், சமஸ்கிருதமும் கலந்த மணிப்பி ரவாள நூலாகும். வேறு விபரங்கள் அறியக் கூடவில்லை. இறுதியில் 2 இதழ்களில் பைரவாஷ்டகம் என்ற வடமொழி நூலும் உள்ளது.

யக ஆம் வருஷம்(கி.பி.1846)அற்பசி மீ (ஐப்பசி மாதம்) (2-ந்தேதி) மிரு(க) சீரிஷ நட்சத்திரமும் அமரபட்ச சதுர்த்தி திதியும் கூடின சுபதினத்தில் சைவ பூஷணம் எழுதி முகிந்தது. முற்றும். கணேசர் துணை.

## 46.3975 -b- சிந்தாமணி

பொருள்: நீதி
இதழ்கள்: 23
அளவு: 14 x 3.5
செய்யுள் எண்ணிக்கை: - 138
நிலை: நன்று, முழுமை.

குறிப்பு:

பக்கத்துக்கு 11 வரிகள். விவேக சிந்தாமணி என்ற நூலின்பிரதி இது. அச்சானது.

தொடக்கம்:
ஹரி: ஓம் நன்றாக குருவே துணை. சிந்தாமணி.

கற்பக தருவைச் சார்ந்த காகமும் அமிர்தமுண்ணும்
விற்பனை விவேகமுள்ள வேந்தரைச் சார்ந்தோர் வாழ
கிற்பன இலவு காத்து ஏறுகின்ற பச்சிபோல
அற்பரைச் சார்ந்தோர் வாழ்வு மரிதரி துலகி லம்மா.

முடிவு:
அரும்பு கோணினா லதுமணங் குன்றுமோ
கரும்பு கோணினால் கட்டியும் பால்தரும்
இரும்பு கோணினா யானையும் வணங்கிடும் என்
எலும்பு கோணினால் யானதுக் கென்சொல்வேன்.
தேவி சகாயம் உண்டு. குருவே துணை.

## 47. 8500 -b- ஞானத் தாழிசை

பொருள்: வேதாந்தம்
இதழ்கள்: 2
அளவு: 26 x 3
செய்யுள் எண்ணிக்கை: - 10
நிலை: மிகப்பழமை

குறிப்பு:

பக்கத்துக்கு 9 வரிகள். மாணிக்க வாசகர் இயற்றிய ஞானத் தாழிசை என்னும் சிறுநூல். சமயக் குரவர் நால்வரில் ஒருவராகிய மாணிக்க வாசகரினின்றும் இவர் வேறானவர். அச்சான விபரம் தெரியவில்லை.

தொடக்கம்:
சுழியாகிய முனைகண்டபி னுத்தாருற வற்றா
சூதும்பல பொய்பேசிய தொழிலும் பிறர்க்கிட்டாய்

வழியாகிய துரைகண்டபின் அனுஷ்டானமு மத்தாய்
வழங்கும் பலநூல் சாஷ்திர நினைவு பிறர்க் கிட்டாய்
விழியாகிய மலர்கண்டபின் னுயரர்ச்சனை யற்றாய்
மெய்நீறிடு தவமந்திர விட்டாய் சிவமுற்றாய்
அழியாப் பதி குடியேறியே பின்னமும் பிற ரார்ப்ப
அவராயினை யத்தனை அலைத்தேத் திருமனமே.

முடிவு:

குருபாதமே கதி. சிவாயநம. ஞானத் தாழிசை முற்றும்.

## 48.8500 -f- ஞான வெண்பா

பொருள்: *சமயம் (இஸ்லாமியம்)*
அளவு: *26 x3* செய்யுள் எண்ணிக்கை: *- 70*
நிலை: *சிறுசிதைவு, குறை.*

குறிப்பு:

*இச்சுவடியில் விசுமில்லா கிற்றகிமானிற்றகீம் காட்டான் சேகுசா ஞான வெண்பா என உள்ளது. காப்புச் செய்யுளிலிருந்துஇந் நூல் 100 பாடல்கள் கொண்டதெனத் தெரிய வருகின்றது. 70 பாடல்கள் முழுமையாகவும் பிறகு 2 ஏடுகள் சிதலமாகப் பாடல் கள் அறிய முடியாத வண்ணமும் உள்ளன.*

தொடக்கம்:

ஆனபா னானபொரு ளானமெஞ் ஞானதொரு
ஞான வெண்பா நூறு நவிலவே - ஆனதோ
ரண்ட பகி ரண்டரண்டத் தண்டமு நிறைந்து
கண்டு கொண்டு நின்றானே காப்பு.

*அமாணல்லா கிருபை செய் முகைய்யதீ னாண்டவர் துணை. நீடுழி காலம் வாழ்கீ. ஆமீன். ஆமீன்.*

முடிவு:

*எழுத இயலவில்லை.*

## 49.7969 - a - ஞானக்கும்மி

பொருள்: வேதாந்தம் இதழ்கள்: 28
அளவு: 19.7 x 3 செய்யுள் எண்ணிக்கை: - 151
நிலை: நன்று, முழுமை.

குறிப்பு:

பக்கத்துக்கு 5 முதல் 7 வரிகள். ஒவ்வொரு பாடலும் . ஞானப் பெண்ணே. என்றோ, கும்மியடிங்கடி என்றோ முடிவு பெறுகின்றன. யோகத்தின் ஆறு ஆதாரத் தானங்களும், சித்த வைத்திய முப்பூ, அகர, உகரம் பற்றிய செய்திகளும், போலித் துறவு வேடக் கண்டிப்பும், மும்மல நீக்கம், பிங்கலை, இடகலை பற்றிய இது போன்ற செய்திகள் இயம்பப்பட்டுள்ளன. ஆசிரியர், அச்சான விபரம் தெரியவில்லை.

## 50. 8039 -a- ஞானக்கும்மி

பொருள்: வேதாந்தம் இதழ்கள்: 20
அளவு: 26,8 x 2.7 செய்யுள் எண்ணிக்கை:-
நிலை: நன்று, குறை. 155 கண்ணிகள்

குறிப்பு:

பக்கத்துக்கு 7 முதல் 8 வரிகள். அனைத்துக் கண்ணிகளும் வேதாந்த உட்பொருளை மறைமொழியாகச் சுட்டிக் காட்டுவனவாக உள்ளன. இதனை அடுத்தும் 6 இதழ்களில் (37 கண்ணிகள்) ஞானக் கும்மி மீண்டும் எழுதப்பட்டுள்ளது.

## 51. 7963 -a- ஞானப் பாட்டு

பொருள்: வேதாந்தம் இதழ்கள் : 4
அளவு: 29.5 x 3.1 செய்யுள் எண்ணிக்கை: -
நிலை: நன்று, குறை. 18 கண்ணிகள்

குறிப்பு:

பக்கத்துக்கு 5 முதல் 6 வரிகள். கும்மி வடிவினது. ஞானப் பெண்ணே என ஒவ்வொரு கண்ணியும் முடிவடைகின்றது. முதல் 32 கண்ணி கள் இல்லை. 33 முதல் 51 கண்ணி வரை உள்ளது. ஆசிரியர், அச்சான விவரம் தெரியவில்லை.

## 52.8/59 -c - ஞான மருந்து

பொருள்: வேதாந்தம் இதழ்கள்: 2
அளவு: 27 x3 செய்யுள் எண்ணிக்கை:-
நிலை: நன்று, குறை. சுமார் 28 வரிகள்

குறிப்பு:

பக்கத்துக்கு 7 வரிகள். ஆசிரியர், அச்சான விபரம் தெரிய வில்லை. தலைவி தோழியை தன் உள்ளத்து மையல் நோய்க்கு மருந்துண்டோ என வினவ, தோழி, மருந்துண்டு என இறைவன் இருக்கும் ஊர்களை எல்லாம் குறித்து, அங்குள்ள மருந்துச் சரக்குகளைக் கூறு முகத்தான் இறைவனருளைப் பெறக் கூறும் நூல் இது.

தொடக்கம்:

செங்கமலக் காவிலுள்ள சீரா ரிளங்கோவே
அங்கவளைச் சார்ந்து அடிவணங்கிச் சேர்ந்து கொண்டு
என்னுள்ள நோய் தீர மருந்துண்டோ தோழி சொல்லென்றாள்
உண்டுண்டு தோழி ஒரு மருந்து சொல்லுகிறேன்.

முடிவு:

வடக்கே யிருந்து கொணர்ந்த மருந்து
வாலி கொணர்ந்த மருந்து
அனுமார் கொணர்ந்த மருந்து
அங்கதன் கொணர்ந்த மருந்து
ஸ்ரீமத் நாராயணா வென்று துய்த்த மருந்து.

## 53. 32/7 -a- தக்ஷிணாமூர்த்தி சூத்திரம்

பொருள்: மருத்துவம் இதழ்கள்: 5
அளவு: 25.5 x 3.6 செய்யுள் எண்ணிக்கை:- 16
நிலை: நன்று, முழுமை.

குறிப்பு:

பக்கத்துக்கு 8 முதல் 9 வரிகள். வாத,பித்தத்தால் வரும் நோய்களுக்கு மருந்து செய் முறைகள் (மாத்திரை,கஷாயம்,பற்பம் போன்றன) விவரிக்கப் பட்டுள்ளன. அச்சானதாகத் தெரியவில்லை.

தொடக்கம்:

ஓம் நன்றாக.தெக்ஷணாமூர்த்தி வயித்திய சூத்திரம்.

வாதபித்தத்துக்கு வயித்திய சூத்திரம்.வாத பித்தக் குண மருந்து பதினாறு.

விந்தை நல்லுகில் வாழு மேவிய சனங்களுக்கு
முந்தனான் சொன்ன நூல்கள் முதுமொழி ஆய்ந்து தோய்ந்து
எந்தனுக் குரைக்கலுற்றார் எவ்வுயிர்க் கிரங்கி முன்னாள்
கந்தனுங் கணபதியுங்கார் சரசோதி காப்பாய்.

முடிவு:

அடைத்த மருந் தெடுக்கையிலே தீபங் காட்டி
யந்தந்த வியாதிக்கி யனுப்பானங் கண்டு
ப(டைத்)த பரம்பரத்தை தியானஞ் செய்து
பார்மகனே குடுக்கயிஞ்சிச் சாத்தி லீய்வாய்
விடைத்த மறு வாரா வியாதி யேது
வெகுபேதி யாகுமடா வேகமெத்த வுண்டு
சடைத்த மொழி பேசாதே சணத்தில் செய்நீ
சாஸ்திரம் பதினாறு சூத்திர முத்தே.

## 54.6214 -a- தக்ஷிணாமூர்த்திக்கும் சட்டை முனிக்கும் தர்க்கம்

பொருள்: மருத்துவம் | இதழ்கள்: 52
அளவு: 20.3 x 3.6 | செய்யுள் எண்ணிக்கை:- 120
நிலை: நன்று, முழுமை.

தொடக்கம்:

சித்திதரும் புத்திதரும் செந்தமிழர் வாரவிந்து
முத்தி தரும் கணவா முன்னின்று

சத்திசிவத் தானே தப்பாத ஐங்கரனே
பத்தியுடன் நெஞ்சே பணி.

முடிவு:

பேணுகிறேன் சித்தருக்கும் சீஷன் வாழி
பேறான அட்டதிசை யெட்டும் வாழி
காணுகிறேன் சிவகுருவின் பாதம் போற்றி
கண்டவர்கள் கேட்டவர்கள் காச்சி முத்தே
-ளஉய.

தக்ஷிணாமூர்த்திக்கும் சட்டமுனிக்கும் தர்க்கம்.சாஸ்திரம் வயித்தியம் முற்றும்.

## 55. I/389 -f- திருப்பல்லாண்டு

பொருள்: *சமயம்(சைவம்)* இதழ்கள்: *4*
அளவு: *22.8 x 3* செய்யுள் எண்ணிக்கை: *- 13*
நிலை: *நன்று.*

குறிப்பு:

*பக்கத்துக்கு 6 முதல் 9 வரிகள்.ஒன்பதாம் சைவத் திருமுறையில் அடங்கிய சேந்தனாரின் திருப்பல்லாண்டு. அச்சானது.*

தொடக்கம்:

மன்னுகதில்லை வளர்க நம் பத்தர்கள் வஞ்சகர் போயகலப்
பொன்னின் செய் மண்டபத் துள்ளேபுகுந்து புவனியெல்லாம்
விளங்க
அன்னநடை மடவா ளுமைகோ னடியோமுக் கருள் புரிந்து
பின்னைப் பிறவி யறுக்க நெறிதந்த பித்தர்க்குப் பல்லாண்டு
கூறுதுமே.

முடிவு:

எந்தை யெந்தாய் சுற்றமுற்று மெமக்கமுதா மெம்பிரா னென்று
சிந்தை செய்யுஞ் சிவன் சீரடியா ரடிநாய் செப்புறை
அந்தமி லானந்தச் சேந்த னெனப்புகுந்தாண்டு கொண்
டாருயுர்மேற்
பந்தம் பிரியப் பரிந்தவ னென்று பல்லாண்டு கூறுதுமே.
*-ய*

*திருச்சிற்றம்பலம் . திருப்பல்லாண்டு முற்றுப் பெற்றது.*

## *56. 3923 -b- திருவேங்கடமாலை*

**பொருள்:** *துதி* **இதழ்கள்:** *9*
**அளவு:** *28 x 3.7* **செய்யுள் எண்ணிக்கை:** *- 101*
**நிலை:** *சிறுசிதைவு, முழுமை.*

**குறிப்பு:**

*பக்கத்துக்கு 10 வரிகள். பிள்ளைப் பெருமாளையங்கார் அட்டப் பிரபந்தங்களுள் ஒன்று. இறுதி இதழ்கள் ஓரம் சிதைந்துள்ளன. இறுதி இதழ் மிகுதியும் சிதைந்துள்ளது. அச்சானது.*

**தொடக்கம்:**

பொன்னு மணியும் பொதிந்தோங்கிப் பார்மகட்கு
மின்னு மணிமுடியாம் வேங்கடமே - மன்னும்
பரமபத நாட்டினான் பையரவின் சூட்டிற்
சரமபத நாட்டினான் சார்வு.

**முடிவு:**

........காந்தள் குலமலரும்
விண்டவரை நிற்கும் வேங்கடமே தொண்டருக்கு
வை...............ருணீய்ந்து
வைகுந்த நாடான் வரை.

## *57. 10349 - துருபத மஹாராஜா கதை*

**பொருள்:** *கதை* **இதழ்கள்:** *60*
**அளவு:** *37.8 x 3.3* **செய்யுள் எண்ணிக்கை:** *- சுமார் 2400 அடிகள்*
**நிலை:** *சிறுசிதைவு, குறை.*

**குறிப்பு:**

*பக்கத்துக்கு இரு பகுதிகளாக 18 முதல் 20 வரிகள். மகாபாரதத்து துருபத மன்னனைப் பற்றிய கதை. முதல் 2 இதழ்கள் இல்லை. 8-ஆம் இதழைக் காணவில்லை. நாட்டுப் புறப் பாவடிவு கொண்டது. அச்சானதாகத் தெரியவில்லை.*

தொடக்கம்:

...னிருப்பிடத்தில் நன்றியுடன் சென்றதுவும்
சென்ற வுடனே சிவசங்கரர் மகிழ்ந்து
நன்றியுடன் இருத்தி நன்முதல்வர் தன்பிறப்பும்
உரை மூன்று காலத் துட்பொருளை யென்றதுவும்

முடிவு:

வென்றி துரோணனுந்தான் வீறுடனப் போது சொல்வான்
இன்று நீ சொன்ன மொழி இனிச்(சொல்ல)மறவாதே
என்றிறுதி பேசி இருந்த..................
அன்னவனுக் கன்........................

## 58.67/9 -a- தத்துவ விளக்கம்

பொருள்: வேதாந்தம் இதழ்கள்: 12
அளவு: 28.6 x 3.5 செய்யுள் எண்ணிக்கை:- 101
நிலை: சிறுசிதைவு, குறை.

குறிப்பு:

பக்கத்துக்கு 9 வரிகள். முதல் 9 பாககள் இல்லை. ஏட்டிறுதி குறிப்பால் இதுவே கைவல்ய நவநீத நூலென்பதும் தெரிகிறது. 6277-a- கைவல்ய நவநீதத்துடன் ஒப்புமை உள்ளது.

தொடக்கம்:

சாதன மன்றி யொன்றைச் சாதிப்பா ருலகி லில்லை
ஆதலா லிந்த நான்கு மறிந்தவர்க் கறிவுண் டாகும்
நூதன விவேகி யுள்ளில் நுழையாது நுழையும் ஆகில்
பூதசென் மங்கள் கோடி புனிதரும் புருட னாமே

என்ற பாடலிலிருந்து உள்ளது.

முடிவு:

குலவுகா குருவின் பாதம் குளிர்ப்புனை தலைமேல் கொண்டால்
உலகினிற் தீர்த்த மெல்லா முற்றபே ரடைவாள் சால
நலமே யாகுங் கைவல்லிய நவநீத நூலைக் கற்றார்
பலகலை ஞான நூல்கள் படித்தபண்டி தராய் வாழ்வார்.

-எய-

தத்துவ விளக்கம் முற்றும். குருபாதமே கெதி. பிரமமே கெதி. சற்குரு முன்னிற்க.

## 59. 6383 –c- திருக்குறள்

பொருள்: நீதி இதழ்கள்: 21
அளவு: 33.3 x 3.3 செய்யுள் எண்ணிக்கை: - 536
நிலை: நன்று, குறை.

குறிப்பு:

பக்கத்துக்கு 9 வரிகள். திருக்குறளினின்றும் தேர்ந்தெடுக்கப் பட்ட குறட்பாக்கள் தொகுக்கப்பட்டுள்ளன. இறுதியில் முப் பாலின் 133 அதிகாரங்களின் வரிசை,அட்டவணைப்படுத்தப் பட்டுள்ளது.

## 60. 6368 -a- தண்டியலங்காரம்

பொருள்: இலக்கணம் இதழ்கள்: 75
அளவு: 20.2 x 2.5 செய்யுள் எண்ணிக்கை: - சுமார் 1200 வரிகள்
நிலை: நன்று, முழுமை.

குறிப்பு:

பக்கத்துக்கு 8 வரிகள். அச்சானது.

தொடக்கம்:

சொல்லின் கிழத்தி மெல்லிய லிணையடி
சிதைவைத் தியம்புவல் செய்யுட் கணியே - க.
செய்யு ளென்பவை தொகைதொடர் நிலையென
வேத்திறத் தனவு மீரிரண் டாகும்.

முடிவு:

முப்பத்தேழா மெழுத்து நாற்பத் தொன்பதா மெழுத்தாகவும் வரும்படி, ஒற்றுள்பட ஐம்பத்தோ ரெழுத்தினாலொரு செய்யுட் செய்து உபதேச முறைமையால் அட்டநாகம் வரைந்து அதிலடைத்துக் கொள்வது அட்டநாக பந்தத்தின் விதியாம்.

முற்றிற்று.

## *61. 8854* - தேவரணங்கு மாறும் வகை

## *(சல்லிய நூல்)*

பொருள்: *மந்திரம்* இதழ்கள்: *59*
அளவு: *21 x 3.5* செய்யுள் எண்ணிக்கை: *- உரைநடை*
நிலை: *சிதைவு, குறை.*

குறிப்பு:

*பக்கத்துக்கு 7 முதல் 8 வரிகள். மந்திரம் குறித்த செய்திகளின் தொகுப்பு. மந்திர எழுத்துகளும், சுலோகங்களும், எந்திரம், தேவதைகளின் படங்களும் வரையப்பட்டுள்ளன.*

*தொடக்கம் முடிவு எழுத இயலவில்லை.*

## *62. 11380* - திருவாய்மொழி வியாக்கியானம்

பொருள்: *சமயம் (வைணவம்)* இதழ்கள்: *270*
அளவு: *44.8 x 2.8* செய்யுள் எண்ணிக்கை: *- உரைநடை*
நிலை : *மிகு சிதைவு, குறை.*

குறிப்பு:

*ஆழ்வார்கள் அருளிய பாசுரங்களின் வியாக்கியானம். பக்கத்துக்கு 8 வரிகள். பூச்சி அரிப்புக்களால் விளைந்த சிதைவு மிகுதி. பல இதழ்கள் முறிவுபட்டுள்ளன. பிற்பகுதி மிகு சிதைவு. 258, 259 ஆம் இதழ்களைக் காணவில்லை. அச்சானது.*

*தொடக்கம், முடிவு எழுத இயலவில்லை.*

## *63. 6383 -b-* திருவள்ளுவர் சரித்திரம்

பொருள்: *வரலாறு* இதழ்கள்: *2*
அளவு: *33.3 x 3.2* செய்யுள் எண்ணிக்கை: *- 31*
நிலை: *நன்று, முழுமை.*

குறிப்பு:

பக்கத்துக்கு 7 முதல் 9 வரிகள். இதில் ஆதிக்கும் பகவானுக்கும் பிறந்த ஔவை, உப்பை, அதிகமான், வள்ளியம்மை, உலுவை, கபிலர், திருவள்ளுவர் ஆகிய எழுவர் பாடல்களும் இறைவன் சொக்கநாதன் தருமிக்குத் தந்த திருமுகப்பாசுரம், இறைவர் நக்கீரர் வாதப்பாடல்கள் போன்ற தனிப்பாடல்களும் , திருக்குறளைச் சிறப்பித்து ஔவை, கபிலர், உக்கிரப் பெருவழுதியார், மாங்குடி மருதனார், இடைக்காடர் பாடிய திருவள்ளுவ மாலைப் பாடல் களும் இடம்பெற்றுள்ளன. அச்சானது.

தொடக்கம்:

ஔவை:

இட்டமுட னென்றலை யிலின்னபடி யென்றெழுதி
விட்டசிவ னுஞ்செத்து விட்டானோ- முட்ட முட்டப்
பஞ்சமே யானாலும் பாரமவ னுக்கன்னாய்
நெஞ்சமே யஞ்சாதே நீ.

முடிவு:

இடைக்காடர்:

கடுகைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக்
குறுகத் தறித்த குறள் - யரு. முற்றும்.

## 64. I/283 - a - திருவள்ளுவர் சரித்திரம்

பொருள்: வரலாறு இதழ்கள்: 26
அளவு: 37.8 x 3.7 செய்யுள் எண்ணிக்கை: - உரைநடை
நிலை: நன்று, முழுமை.

குறிப்பு:

பக்கத்துக்கு 6 வரிகள். திருவள்ளுவரின் பெற்றோர் எனப் படும் ஆதி, பகவான் என்பவரின் பிறப்பு தொடங்கி ஔவை, உப்பை, அதிகமான், உலுவை, கபிலர், வள்ளயம்மை, வள்ளுவர் போன்ற எழுவர் பிறப்பும், வாசுகி கற்புத்திறன் நிகழ்சிகளும், வள்ளுவர் வாழ்க்கையின் செவிவழிச் செய்திகளும் அடங்கி யுள்ளன.

தொடக்கம்:

உலகத்தில் மஹா சிறப்புப் பொருந்திய கைலாசகிரியிலே அரசி ருக்கை மண்டபத்தில் பிரமாதி முப்பத்து முக்கோடி தேவர் கள்,நாற்பத்தொண்ணாயிர முனிவர்கள்.,கின்னரர் ,கிம்புருடர், கருடர், காந்தர்வர், சித்தர், வித்தியாதரர் முதலானோர் வணங்கிச் சூழும்படி பார்வதி சமேதராய் பரமசிவன் திருவோலக்கமாக எழுந்தருளியிருந்தார்.

முடிவு:

சொன்ன சொல்லைக் கடவாதேயென்று அனுக்கிரகித்து உடனே பரிபூரணமானார். ஏலேலசிங்கரும்,நாயனரர் கட்டளைப் படி செய்யுமளவில், திருமேனியிற் சிதறிய தசைகளைக் காக முதலானதுக ளருந்திப் பொன் மயமானதைக் கண்டு பெரிதான ஆச்சரியமடைந்து, அவர் திருமேனி யிருந்தவிடத் தாலய மெடுப்பித்துப் பூசித்து வந்தார்கள்.திருவள்ளுவ நாயனார் சரித்திர முற்றிற்று.

## 65. 2886 -f- தெளிந்த முப்பது

பொருள்: *சமயம்(சைவம்)* இதழ்கள்: *3*

அளவு: *29.5 x 3.2* செய்யுள் எண்ணிக்கை: *- 32*

நிலை: *நன்று, முழுமை.*

குறிப்பு:

பக்கத்துக்கு 7 வரிகள்.தெளிந்த முப்பது திருவிருத்தம் எனத் தலைப்பு காணப்படுகின்றது. அச்சான விவரம் தெரியவில்லை.

தொடக்கம்:

விண்ணின் றிழிந்து வினைக்கீடாய் மெய்கொண்டு
தண்ணென்ற தாளைத் தலைக்காவன் மேல்வைத்து
உண்ணின் றுருக்கு வொப்பிலா வானந்தக்
கண்ணொன்று காட்டிக் களிம்பறுத் தானே.

முடிவு:

வாசியிலே வைத்தமன மாறாதி ருந்தாக்கால்
காசியிலே போனபலன் காணாதாம் - வாசியைத்தான்

கும்பித்தி ருந்தாற் குடலு முடலுயிரும்
வெம்பி உறைந்து விடும்.

முற்றும்.

## 66. 926 / -a- திருக்கயிலாய மான்மியம்

பொருள்: *தலவரலாறு* இதழ்கள்: *5*
அளவு: *30 x 3* செய்யுள் எண்ணிக்கை: *- உரைநடை*
நிலை: *நன்று, முழுமை.*

குறிப்பு:

பக்கத்துக்கு 6 வரிகள். இம்மான்மியம் ஆகமங்களினும், கிரந்த முதலிய புராண இதிகாசங்களிலும், தெரிந்து சுருக்கிக் கூறப்பட்டதாக இறுதியில் குறிப்புள்ளது. அச்சான விவரம், ஆசிரியர் பற்றிய விபரம் அறியக்கூடவில்லை.

தொடக்கம்:

...சிவலோகமாவது எல்லா வுலகங்களுக்கும் மேலாக வுள்ளது. அதை எல்லா வுலகத்தாருஞ் சென்று சிவபெருமானைத் தரிசித்துத் தங்கள் தங்கள் குறைகளை முறையிட்டனுக்கிரகம் பெறுதற்கு அரிதாக இருத்தல் பற்றி இவ்வுலகத்தெழுந்தருளிய கடவுள்.

முடிவு:

இதிற் சனகாதி நால்வர் முண்டிதாச் சிரமத்தரா யுள்ளவர் களென்று காமிகாகமங் கூறப்படுகிறது. அவை சூக்ஷீ மாதம், சிந்தியம், விசுவ, சாமானிய வேதங்களு முதலான வாகமங்கள் சித்தாந்த சார வழி சைவ பூஷண முதலிய கிரந்தங்களினுங் கூறப்படுகிறது. இவர்கள் கோசரம் பீட முதலியவைகளைக் கூறின் விரியுமென விடுத்தோம். திருச்சையிலை மான்மியம் ஆகமங் களினுங் கிரந்த முதலிய புராண இதிகாசங்களினுந் தெரிந்து சொல் திருக்கையிலாச மான்மியச் சுருக்கம் முற்றும்.

## 67. 8680 -b - திருவாய்மொழி நூற்றந்தாதி

பொருள்: *சமயம்(வைணவம்)* இதழ்கள்: *12*
அளவு: *41.5 x 3.2* செய்யுள் எண்ணிக்கை: *- 100*
நிலை: *நன்று, முழுமை.*

குறிப்பு:

*பக்கத்துக்கு 6 வரிகள். ஆசிரியர் நம்மாழ்வார், அச்சானது. இறுதியில் திருமலைதாஸன் லிகிதம் என்ற குறிப்புள்ளது.*

தொடக்கம்:

அல்லும் பகலு மனுபவிப்பார் தங்களுக்குச்
சொல்லும் பொருளுந் தொகுத்துத் தோற்றான் - நல்ல
மணவாள மாமுனிவன் மாறன் மறைக்குத்
தணலா னூற்றந்தாதி தான்.

முடிவு:

முனிமாறன் முன்புரைசெய் முற்றின்பம் நீங்கித்
தனியாகி நின்னு தளர்ந்து - நனியாம்
பரமபத்தி யால்ஐந்து பங்கயத் தாள்கோனை
ஒருமையுற் றுச்சேர்ந்தா னுயர்ந்து.

## *68. 11379 -b - திருவாசகம்*

பொருள்: *சமயம்(சைவம்)* இதழ்கள்: *48*
அளவு: *22.6x3* செய்யுள் எண்ணிக்கை: *- சுமார் 775 வரிகள்*
நிலை: *நன்று, குறை.*

குறிப்பு:

*பக்கத்துக்கு 7 முதல் 9 வரிகள். இது 11465 -c திருவாசகம் என்பதனைப் போன்றதே. அடுத்த 6 ஏடுகளிலும் திருவாசகப் பாக்கள் உள்ளன. அச்சானது.*

தொடக்கம்:

நமச்சிவாய வாழ்க நாதன் றாள்வாழ்க
இமைப்பொழுது மென்னெஞ்சி னீங்காதான் றாள்வாழ்க.

முடிவு:

இல்லை நின்கருணை யெம்பிரா
னேதுகொண்டு நானேது செய்யினும்
இல்லையே யெனக்கின்னு முன்கழல்
காட்டி மீட்கவும் மறுவில் வாணனே.

## 69. 1/465 -d - திருக்கோவையார்

பொருள்: சமயம்(சைவம்) இதழ்கள்: 37
அளவு: 20.7 x 3.7 செய்யுள் எண்ணிக்கை: - 228
நிலை: சிறுசிதைவு, குறை.

குறிப்பு:

பக்கத்துக்கு 9 முதல் 11 வரிகள். மாணிக்கவாசகரின் திருக்கோவையார். அச்சானது.

தொடக்கம்:

திருவளர் தாமரை
சீர்வளர் காவிக ளீசர் தில்லை
குருவளர் பூங்குமிழ் கோங்கு பைங்காந்தள்
தொண்டோங்கு தெய்வ
மருவளர்...................

முடிவு:

மன்போல் பிறையணி மாளிகைசூழ்த் தவர்மடவாய்
நின்போ னடையன்னந்
துன்னி முன்றோன்று நன்னீ னகரே
கோடுங் கடந்த குழைமுக மாதர்க்கு
தடங்கு சூழ் தன்னகர் காட்டியது.

-உஉஉஉ

## 70. 4/03 –a - தேவாரம்

பொருள்: சமயம்(சைவம்) இதழ்கள்: 75
அளவு: 34.7 x 3 செய்யுள் எண்ணிக்கை: - சுமார் 600 வரிகள்
நிலை: சிறு சிதைவு, குறை.

குறிப்பு:

பக்கத்துக்கு 4 முதல் 6 வரிகள். தேவார மூவர். மாணிக்க வாசகரின் பாடல்கள் சில இடம்பெற்றுள்ளன.

தொடக்கம்:

கொந்தணவும் பொழில்சூழ் குளிர்மாமதில் மாளிகைமேல்
வந்தணவும் மதிசேர்சடை மாமுது குன்றுடையாய்
பந்தணவும் விரலாள் பாவையிவள் தன்முகப்பே
அந்தணனே யருளா யடியேனிட் டளங்கெடவே.

முடிவு:

கடல்கழி தழிநாகைக் காரோ ணன்றன்
வடவரை யெடுத்தார்த்த வரக்கனை
யடர் வூன்றிய பாத மனைதரத்
தொடர வஞ்சுந் துய்க்கறுங் காலனே.

## *71. 11379 -e- திருவிசைப்பா*

பொருள்: *சமயம்(சைவம்)* இதழ்கள்: *69*
அளவு: *22.7 x 3* செய்யுள் எண்ணிக்கை: *- சுமார் 815 வரிகள்*
நிலை: *நன்று, குறை.*

குறிப்பு:

*பக்கத்துக்கு 7 முதல் 9 வரிகள். 9 ஆம் திருமுறை திருவிசைப் பா பாக்கள் தொகுத்தெழுதப்பட்டுள்ளன. அச்சானது.*

தொடக்கம்:

ஒளிவளர் விளக்கே யுலப்பிலா வொன்றே
யுணர்வுசூழ் கடந்தோ ருணர்வே
தெளிவளர் பளிங்கின் றிரண்மணிக் குன்றே
சித்தத்துட் தித்திக்குந் தேனே.

முடிவு:

ஏயுமா றெழிழ் சேதிபர்கோன் தில்லை
நாய னாரை நயந்துரை செய்தன
தூயவா ருரைப்பார் துறக்கத் திடை
ஆய வின்ப மெய்தி யிருப்பாரே.

## 72. 4331 - திருவாய்மொழிவியாக்யானம்

பொருள்: சமயம்(வைணவம்) இதழ்கள்: 16
அளவு: 43 x 3.5 செய்யுள் எண்ணிக்கை:-
நிலை: சிறுசிதைவு, குறை. உரைநடை

குறிப்பு:
பக்கத்துக்கு 8 வரிகள். பெரிய வாச்சன்பிள்ளை அவர்களின் உரையாகும். மணிப்பிரவாள நடையது. அச்சானது.
முனை முறிவுகளும், பூச்சி அரிப்புகளும் பரவலாக நிகழ்ந்துள்ளன.

## 73. 11283 - b - திருவள்ளுவ மாலை

பொருள்: மாலை(வாழ்த்து) இதழ்கள்: 9
அளவு: 37.7 x 3.1 செய்யுள் எண்ணிக்கை:- 55
நிலை: நன்று, முழுமை.

குறிப்பு:
பக்கத்துக்கு 6 வரிகள். இறையனார் முதல் ஔவையார் ஈறாக உள்ள சங்கத்தார் ஐம்பத்து நான்குபேர்கள் பாடிய வள்ளுவ வாழ்த்து மாலை. அச்சானது.

தொடக்கம்:
திருத்தகு தெய்வத் திருவள்ளுவ ரோடு
உருத்தகு நற்பலகை யொக்க - விருக்க
உருத்திர சன்மரென வுரைத்து வானில்
ஓரக்கவோ லென்றதோர் சொல்.

முடிவு:
அணுவைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக்
குறுகத் தறித்த குறள்.

திருவள்ளுவ மாலை முற்றிற்று.

## 74. 11464 -c- திருவாசகம்

பொருள்: சமயம்(சைவம்) இதழ்கள்: 92
அளவு: 20.5 x 3.3 செய்யுள் எண்ணிக்கை:- 652
நிலை: சிறுசிதைவு, முழுமை.

குறிப்பு:

*பக்கத்துக்கு 10 வரிகள்.44 -ஆம் இதழ் 3.7செ.மீ நீளத்துக்கு முறிந்துள்ளது. அச்சானது.*

தொடக்கம்:

நமசிவாய வாழ்க நாதன் றாள்வாழ்க
இமைப்பொழுது மென்னெஞ்சி னீங்காதான் றாள் வாழ்க
கோகழி யாண்ட குருமனிதன் றாள் வாழ்க
வாகம மாகிநின் றண்ணிப்பான் றாள்வாழ்க.

முடிவு:

செம்மைநல் மறியாத சிதடரொடு திரிவேனை
மும்மைமல மறுவித்த முதலாய முதல்வன்றான்
நம்மையுமோர் பொருளாக்கி நாய்சிவிகை யேற்றுவித்த
அம்மையெனக் கருளியவா ரார் பெறுவா ரச்சோவே.

*சூ[illegible]ய [illegible] (கி.பி.1859) சித்திராவுத்தி ஆண்டு ஆடி [illegible] (26 - ந் தேதி) மங்கள வாரம் பூர்வ பட்ச ஏகாதசி மூல நட்சத்திரத்தில் எழுதி முகித்தது.*

## 75. 8448 -b- தத்வத்ரய வியாக்யானம்

பொருள்: *சமயம்(வைணவம்)* இதழ்கள்: *96*

அளவு: *44 x 3.3* செய்யுள் எண்ணிக்கை:

நிலை: *நன்று, முழுமை.* உரைநடை

குறிப்பு:

*பக்கத்துக்கு 8 வரிகள். கிரந்த லிபிக் கலப்பு மிகுதி.*

தொடக்கம்:

[illegible] என்கிறபடியே பஷ்யை யறியப் பெறாதே தேவர் [illegible] மென்று [illegible]

முடிவு:

ஜ வா த வோத வேந ஜீயர்
திருவடிகளே சரணம்.

## 76. 8825 - b - திருமேனிக்கறுப்பு

பொருள்: துதி இதழ்கள்: 9
அளவு: 29.5x3.2 செய்யுள் எண்ணிக்கை: - 42
நிலை: நன்று, முழுமை.

குறிப்பு:

பக்கத்துக்கு 7 வரிகள். மாலின் வண்ணம் கறுப்பாயிருத்தலுக்குக் காரணம் கூறும் முகமாகப் புராண, இதிகாசச் செய்திகளை எடுத்தாண்டு புகழ்ந்து கலித்துறையாற் துதிக்கப்பட்டுள்ளது. அச்சான விபரம் தெரியவில்லை.

தொடக்கம்:

மன்றாார் பசுந்துடர் மாலையுஞ் சாத்தி வளர்ந்திருந்து
சென்றாயர் வீட்டுக்குள் பால்வெண்ணை சேரத் திருடித் தின்று
அன்றாச்சி கைகொண் டடித்தற்கோ அதுதானு மல்லால்
கன்றால் கனியெய்தற் கோதிரு மேனி கறுத்ததுவே.

முடிவு:

விடமான ராவணன்மேல் வேட்டை செல்ல விடுதிவிட்டுத்
திடமான சோலை மலையழகா செஞ்சிலை பிடித்து
மடமா துரைத்ததுங் கேளாமல் பாலைவனந் தனிலே
கடமான் பின்சென்றதற் கோதிரு மேனி கறுத்ததுவே.

## 77. 8829-a- தன்வந்திரி பகவான் கலைக்கியானம் ஐந்நூறு

பொருள்: மருத்துவம் இதழ்கள்: 70
அளவு: 35.8 x 3.4 செய்யுள் எண்ணிக்கை: - 499
நிலை: நன்று, முழுமை.

தொடக்கம்:

ஆதிஎன்ற பூரணமாய் வெளியாய் நின்ற
அகன்றபரி பூரணத்தின் த(ா)ளே போற்றி
சோதி என்ற மணிவிளக்கின் சுடரே போற்றி
சொற்பெரி....தர்கள் சொருபம் போற்றி
வாதிஎன்ற வல்லபையா னருளே போற்றி
வளமான கெசமுகன்றன் பாதம் போற்றி
நீதி என்ற சர....காப்பு
நெறியான தற்பரையின் பாதங் காப்பே.

முடிவு:

கேளப்பா வின்னூலில் வெளியாச் சொன்னேன்
கெடியான மற(ப்)பெல்லாம் வெட்டவெளி யாகும்
ஆளப்பா வின்னூலை குகையில் வைத்து
வப்பனே பூசைசெய்து வர்ச்சனைகள் செய்நீ
வாளப்பா மதியமுர்தம் மனதாற் கொள்ளு
வளமான ரேசகத்தா லின்னூ லைப்பூசி
நாளப்பா பூசைசெய்து பணிந்து போற்று
நலமாக வின்னூலைச் சார்வார் முற்றே.
*தன்வந்திரி பகவான் கலைக்ஞான முற்றுப் பெற்றது.*

*வாத்தியார் முத்துச் சுவாமியா பிள்ளைக்கு*

*சிவகாமி துணை.*

## *78. 5449 -d- திருப்பள்ளியெழுச்சி*

பொருள்: *சமயம்* இதழ்கள்: *3*
அளவு: *41 x 3* செய்யுள் எண்ணிக்கை: *- 10*
நிலை: *நன்று, முழுமை.*

குறிப்பு:
*தொண்டரடிப் பொடியாழ்வாரின் திருப்பள்ளியெழுச்சி. அச்சானது.*

## 79. 5449 - c- திருமாலை

பொருள்: சமயம் இதழ்கள்: 12
அளவு: 41 x 3 செய்யுள் எண்ணிக்கை: - 45
நிலை: நன்று, முழுமை.

குறிப்பு:

நாலாயிரத். திவ்ய பிரபந்தத்திலுள்ள தொண்டரடிப் பொடியாழ் -வாரின் திருமாலை இடம்பெற்றுள்ளது. அச்சானது.

## 80. 5449 -a- திருப்பாவை

பொருள்: சமயம் இதழ்கள்: 19
அளவு: 41 x 3.1 செய்யுள் எண்ணிக்கை: - 30
நிலை: நன்று, முழுமை.

குறிப்பு:

முன் இதழில் மா.பெருமாள்கோன் வாசித்து வருகின்ற ஆண்டாள் திருப்பாவை என்ற வரியும் அடுத்த பக்கத்தில் ஒவ்வோர் பாடலின் முதற் சொற் குறிப்பு வரிசையும் இடம்பெற்றுள்ளன. அச்சானது.

தொடக்கம்:

அன்னவயல் புதுவை ஆண்டாள் அரங்கார்க்குப்
பன்னுந் திருப்பாவை பல்பதியம் - இன்னிசையால்
பாடிக் கொடுத்தாள்நற் பாமாலை மாலை
சூடிக் கொடுத்தாளைச் சொல்.

சூடிக் கொடுத்த சுடர்க்கொடியே தொல்பாவை
பாடிய ருளவல்ல பல்வளையாய் - நாடிநீ
வேங்கடவர்க் கென்னை விதியென்ற விம்மாற்றம்
நாங்கடவா வண்ணமே நல்.

முடிவு:

திருவாடிப் பூரத்து செகத்துதித்தான் வாழியே
திருப்பாவை முப்பதும் செப்பினான் வாழியே

பெரியாழ்வார் பெற்றெடுத்த பெண்பிள்ளை வாழியே
பெரும்புத்தூர் மாமுனிக்கும் பின்னானாள் வாழியே.
ஒருநூற்று நாற்பத்து மூன்றுரைத்தான் வாழியே
உயராங்கர்க் கேகண்ணி உகந்தளித்தாள் வாழியே
மருவாரும் திருமல்லி வளநாடி வாழியே
வன்புதுவை நகர்கோதை மலர்ப்பதங்கள் வாழியே.

## *81. 8026 -ஒ- திருப்பரங்குன்ற மாலை*

பொருள்*: துதி* இதழ்கள்*: 8*
அளவு*: 38 x 3* செய்யுள் எண்ணிக்கை*:- 30*
நிலை*: நன்று, முழுமை.*

குறிப்பு:

*திருப்பரங்குன்ற முருகன் மீது பாடப்பட்டுள்ளது. அச்சான விபரம் தெரியவில்லை.*

தொடக்கம்:

காலன் தனையுதைத்து கங்காளர்க் கன்பான
பாலன் பரங்கிரிமேல் பாமாலை பாடுதற்கு
ஞால வானவருக்கும் நல்லவித்தை புத்திதரும்
வேலவர்க்கு முன்பிறந்த வினாயகனே முன்னடவாய்.

பாரய்யா என்முகத்தை பார்த்ததுவு முன்னையல்லால்
ஆரய்யா சொல்லும் ஆறுமுகத் தரசே
காரய்யா யென்னுயிரை காலனணு காதபடி
சேரய்யா கந்தா திருப்பரங்குன் றதிபனே.

-க

முடிவு:

திருப்பரங் குன்ற மாலை சிவத்தலந் தன்னில் வாழ்க
விருப்பமாய்ப் படிப்பேர் கேட்போர் மேதினி வாழ்வாரென்றும்
பொறுப்பது கயிலைமேவும் புனிதனா லுரைத்த புன்சொல்
மருப்படா மேனியாதி மானிலம் வாழ்வார் தாமே.

-ங்ய

(௲௯௱௰௫ (கி.பி. 1915) தை ௴ ௨௩ புதன் கிழமையன்று திருப் பரங்குன்ற மாலை முற்றிற்று. குருவே துணை.

## 82. 5639 –c - திருவிசைப்பா

பொருள்: சமயம் இதழ்கள்: 35
அளவு: 17.8 x 4.6 செய்யுள் எண்ணிக்கை: –
நிலை: நன்று, முழுமை.

குறிப்பு:
திருமாளிகைத் தேவர் அருளிச் செய்ததாகும் அச்சானது.

தொடக்கம்:
ஒளிவளர் விளக்கே யுலப்பிலா வொன்றே
உணர்வுகள் கடந்ததோ ருணர்வே
தெளியசுர பளிங்கின் திரண்மணிக் குன்றே
சித்தத் துட்டித் (தித்) திக்குந் தேனே.

முடிவு:
சீரார் மாளிகைத்தேவர் கருவூர் தேவர்
திகழ்நம்பி கண்டராதித்த தேவர்
பாரார் வேணாட்டு திருவடிகள் முதலாளி
பரம்புரு டோத்தம பண்பயில் சேதிராய
ஓரரு மிளம்பெருமா- னடிகள் சேந்தரெனும்
புகழ்திரா வடிகடி ளிவரேரா டின்னம்
போரருங் கல்லாடர் பட்டணத்துப் பிள்ளை
பெருகுதிரு விசைப்பாவைப் பேணி னாரே
குமரகுருபரன் துணை, ௲௮௱௫௰௭ (1857 ஆம் ஆண்டு)
பிங்கல ௵ சித்திரை ௴ (மாதம்) (20-ந் தேதி) குருவாரம் பூச நட்சத்திரங் கூடின சுபதினம்.
இதன் விலை கிரையம் ரூ. 2

## 83. 5454 -a- திருவாசகம்

பொருள்: சமயம் இதழ்கள்: 127
அளவு: 11.7 x 4.8 செய்யுள் எண்ணிக்கை:
நிலை: சிறுசிதைவு, குறை.

குறிப்பு:

*5639*-a திருவாசகம் என்ற ஏட்டின் பிரதியே. *30,75* - ஆம் ஓலைகளைக் காணவில்லை. இறுதி *3* இதழ்கள் வலப்புறமாகச் சிதைந்துள்ளன. *74*-ஆம் ஓலை இடப்புறமாகச் சிதைந்துள்ளது.

## *84. 5639*-b - *திருவாசகம்*

பொருள்: *சமயம்* இதழ்கள்: *106*
அளவு: *17.8x4.6* செய்யுள் எண்ணிக்கை: *- 652*
நிலை: *நன்று, முழுமை.*

குறிப்பு:

திருவாசகப்பாக்கள் அமைந்துள்ளன. இறுதியில் திருவாசகத் தொகை விபரம் தரப்பட்டுள்ளது.

தொடக்கம்:

தொல்லை யிரும்பிறவி சூழத்தளை நீக்கி
அல்லலறுத் தானந்த மாக்கியதே - எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூ ரெங்கோன்
திருவாசக மென்னுந் தேன்.

திருச்சிற்றம்பலம். [illegible] (கி.பி.1856) அற்பசி [illegible] (ஐப்பசி மாதம்) அனுஷ நட்சேத்திரமுங் கூடின சுபதினத்தில் எழுத ஆரம்பஞ் செய்தது.

முடிவு:

செம்மைநல மறியாத சிதரடொடுந் திரிவேனை
மும்மைமல மறுவித்து முதலாய முதல்வன்றான்
நம்மையுமோர் பொருளாக்கி நாய்சிவிகை யேற்றுவித்த
வம்மையெனக் கருளியவா ரார்பெறுவா ரச்சோவே.

திருச்சிற்றம்பலம். அச்சோபத்து முற்றிற்று. ஆகப் பதிகம் திருவிருத்தம் [illegible] ளருயஉ சூ[illegible]யகம் [illegible] (கி.பி.1856) கார்த்திகை [illegible] உய [illegible] சோமவாரமும் பூர்வ பக்ஷத்துப் பிரதமையும் மூல நட்செத்திரமுங் கூடிய சுபதினத்தில் திருவாசக மெழுதி முற்றுப் பெற்றது. ஸ்ரீவைகுண்டம் அம்பலத்தடித்தெரு முத்தும் பெருமாள் கையெழுத்து. நீடுழி வாழ்க. குரு பாதமே கெதி. கயிலாசபதி சிவகாமியம்பாள் பாதர விந்தந் துணை. வேலே துணை.

## 85. 7946 –b- திருச்சிற்றம்பலம் திருவாசகம் சிவபுராணம்

பொருள்: சமயம் | இதழ்கள்: 15
அளவு: 28 x 4 | செய்யுள் எண்ணிக்கை:- 14
நிலை: நன்று, குறை.

குறிப்பு:

எட்டாம் திருமுறை திருவாசகத்தினின்று தெரிவுப் பாடலாக 14 இடம் பெற்றுள்ளன. ஆசிரியர் மணிவாசகர். அச்சானது. ஒரு இதழில் சிதைவால், இன்னதென்று உணர இயலாத செய்தி உள்ளது. அடுத்தது ஒரு பக்கம் கைவலி மந்திரம் என்பதும், அடுத்த 2 இதழ்களில் சகல கலைக்யானம் சிதம்பர சக்கரம் என்பவையும் உள்ளன.

தொடக்கம்:

நமச்சிவாய வாழ்க நாதன் றாள் வாழ்க
இமைப்பொழுது மென்னெஞ்சி னீங்காதான் றாள்வாழ்க
கோகழி யாண்ட குருமனிதன் றாள்வாழ்க
வாகம மாகிநின் றண்ணிப்பான் றாள்வாழ்க
வேக னேகன் னிறைவனடி வாழ்க
வேகங் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க.

முடிவு:

வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி
ஊனாதி யுயிராகி யுண்மையுமா யின்மையுமாய்
கோனாகி யானெனதென் றவரவரைக் கூத்தாட்டு
வானாகி நின்றாயை யென்சொல்லி வாழ்த்துவனே.

-யரு

## 86. 6368 -b- தொல்காப்பிய நன்னூற் சூத்திரங்கள்

பொருள்: இலக்கணம் | இதழ்கள்: 23
அளவு: 20.2 x 2.5 | செய்யுள் எண்ணிக்கை: –
நிலை: நன்று, குறை.

குறிப்பு:

தொல்காப்பியம் நன்னூல் இலக்கண நூல்களினின்று தெரிந்தெடுக்கப்பட்ட சூத்திரங்கள் தெரிவுகளாக இடம் பெற்றுள் ளன. அச்சானது. தொல்காப்பியப் பாயிரத்தில் அமைந்துள்ள முன்னிருபாக்கள் கவனிக்கத்தக்கவை.

தொடக்கம்:

இந்திர திருவிலி யைந்தாங் கியைந்த
அந்தமி லிருமுது குரவரை
மைந்தரோடு பழிச்சுது மதிநலம் பெறவே.

வெண்டா மரையாள் விளங்குமணி நூபுரஞ்சூழ்
தண்டா மரையேசாண் சந்தனப் பொதியத் தடவரைச்
செந்தமிழ் பரமா சாரியன் பதங்கள்
சிரமேற் கொள்ளுதுந் தெருடரற் பொருட்டே.
வடவேங்கடந் தென்குமரி யாயிடைத்
தமிழ் கூறு நல்லுலகத்து.

முடிவு:

கஅ - உருபுபுணரியன் முற்றிற்று. ஆக இயல் ருரு. சூத்திரம் உ௱-

க- பாயிரச் சூத்திரம் சா ஆக பாயிரமுட்படச் சூத்திரம் உ௱சாக- எழுத்திதிகார முற்றிற்று.

அடையெண் பெயர்முறை தோற்றம் வடிவள் ஆதியந்தம்
இடைநிலை போலியென் னீரைந்தெழுத்து மிருபதமும்
படுபுணர் மூன்றினியல்பும் விகாரமுஞ் சாரியையும்
உடனுணர் வாரை யெழுத்தறி வாரென்ப ருத்தமரே.

## *87.3928 - தமிழறி மடந்தை கதை*

பொருள்: *நாட்டுப்புறக் கதை* இதழ்கள்: *72*
அளவு: *32..8 x 3.1* செய்யுள் எண்ணிக்கை: *-*
நிலை: *சிறு சிதைவு, குறை.* *உரைநடை*

குறிப்பு:

*பக்கத்துக்கு 7 வரிகள். 55,64 முதல் 68 வரை உள்ள இதழ்களைக் காணவில்லை. ஆசிரியர், அச்சான விவரங்கள் தெரியவில்லை.*

தொடக்கம்:

கோதாபுரி யென்றொரு பட்டணம். அந்தப் பட்டணத்திலே கோளரியென்கிற ராசா. அந்த ராசாவுக்கு ஆரிய சக்கிரவித்தி யென்றொரு குமாரனுண்டு. அந்த குமாரனைப் பள்ளிக்கு வைத்த விடத்திலே படியாதபடியினாலே, கோளரி யென்கிற ராசா தன் கண்ணெதிரே நில்லாதேயென்று கோவிச்சுக் கொண்டார்.

முடிவு:

......பாரியானா ளென்று வசை வாராமல் தேவரீர் வாக்கினாலே அரியென்கிற அட்சரம் வருத்திவிக்க வேணுமென்றா ளந்தப்படிக்கு வினாயக பூசையுஞ் சரசுவதி..........

## 88. 3249 - திரிகாண்ட ஜோசியம்

பொருள்: சோதிடம் இதழ்கள்: 51
அளவு: 10x2.8 செய்யுள் எண்ணிக்கை:- உரைநடை
நிலை: சிறுசிதைவு, முழுமை.

குறிப்பு:

பக்கத்துக்கு 6 முதல் 7 வரிகள். சோதிடப் பலன் பற்றிக் கூறுகின்றது.

தொடக்கம்:

வெள்ளை வாரணப் பிள்ளை யார்பதம்
உள்ளு வார்மனக் கள்ள மாறுமே.

இந்த திரிகாண்ட சோசியம் மூன்று பேரிலக்கம் சொல்லிக் கூடிய துகையை மூணில் கழித்து முதல் காண்ட மிரண்டாங் காண்டம் மூணாங் காண்ட மென்றறிந்து அதை யள யளக்கு கொடுக்க, அதை ஏட்டில் பார்க்க எண்ணிய காரியம் சொல்லும்.

முடிவு:

நீ நினைத்து இருக்கிற காரியம் கைகூடும். இது மகா உத்தம உத்திர காண்டம் முற்றும். திரி காண்ட பரிச்சம் முற்றும். சண்முகன் துணை.

## 89. 14/03 – d - திருவாலவாயப்பன் காந்தாரம்

பொருள்: *சமயம்(சைவம்)* இதழ்கள்: *2*

அளவு: *33.3 x 3* செய்யுள் எண்ணிக்கை: *- 10*

நிலை: *நன்று.*

குறிப்பு:

ஞானசம்பந்தர் தேவாரப் பதிகம்.

தொடக்கம்:

மந்திரமாவது நீறு வானவர் மேலவர் நீறு.

முடிவு:

ஆற்ற லூடல் விடை யேறும் ஆலவாயன் றிருநீற்றைப்
போற்றிப் புகலும் நிலாவும் பூசுர ஞான சம்பந்தனே
தேற்றித் தென்ன னூட லூற்றதீரப் பிணியா யினதீர்
சாற்றிய பாடல்கள் பத்தும் வல்லவர் நல்லவர் தாமே.

## 90. 7931--a- தெக்ஷிணாமூர்த்தி சூத்திரம்

பொருள்: *மருத்துவம்* இதழ்கள்: *9*

அளவு: *25 x 2.8* செய்யுள் எண்ணிக்கை: *- 12*

நிலை: *நன்று, முழுமை.*

குறிப்பு: *1200 செய்யுட்களின் கருப்பொருளைச் சுருக்கி 12 சூத்திரங்களில் தந்துள்ளதாகக் குறிப்பிடுகிறது. வழலை முறைகள் உரைக்கப்பட்டுள்ளன. அச்சான விவரம் தெரியவில்லை.*

தொடக்கம்:

தரமான உன்மனையாள் பாதம் போற்றி
சாஸ்திரமாம் ஆயிரத் திருநூ றுக்குள்
தோயாத கருவையெல்லாம் திரட்டிச் சேர்த்துச்
சொல்லடக்க மாயுரைத்தேன் வழலை யென்று.

முடிவு:

தேனென்ற சற்குருவைக் காண வேண்டும்
சிதையாமல் பன்னிரண்டும் சேர்த்து முற்றே.

## 91. 6348-b - திருக்கோவையார்

பொருள்: சமயம்(சைவம்) இதழ்கள்: 21

அளவு: 35 x 2 செய்யுள் எண்ணிக்கை:- 135

நிலை: நன்று, குறை.

குறிப்பு:

பக்கத்துக்கு 7 வரிகள். மாணிக்க வாசகரருளிய திருக்கோவை யாரிலிருந்து தொகுத்தெழுதப்பட்டுள்ளது. அச்சானது.

தொடக்கம்:

ஆரணங் காணென்பர் அந்தணர் யோகிய ராகமத்தின்
காரணங் காணென்பர் காமுகர் காமநன் னூலதென்பர்
ஏரணங் காணென்பர் எண்ணர் எழுத்தென்ப ரின்புலவோர்
சீரணங் காயசிற் றம்புலக் கோவையைச் செப்பிடினே.

(இது பிற்காலத்தது)

முடிவு:

புகழ்தல்

காரணி கற்பகங் கற்றவர் நற்றுணை பாணரொக்கல்
சீரணி சிந்தா மணியல்ல தில்லைச் சிவனடிக்குத்
தாரணி கொன்றையன் தக்கோர்தஞ் சங்கநிதி வீதிசேர்
ஊருணி யுற்றவர்க் கூரன்மற் றியாவர்க்கு மூதியனே.

திருக்கோவையார் சுருக்கம் முற்றும்.

## 92. 11142 - தத்துவத்ரயம் ஆதிய நூல்கள்

பொருள்: சமயம்(வைணவம்) இதழ்கள்: 126

அளவு: 36 x 3 செய்யுள் எண்ணிக்கை: -

நிலை: பழமை, முழுமை. உரைநடை

குறிப்பு:

இதில் வைஷ்ணவ சம்பிரதாய நூல்கள் தத்துவத்திரயம் முதலிய நூல்கள் மணிப்ரவாள நடையில் உள்ளன. தமிழும், கிரந்தமும், கலந்த நடை .ஆர்த்தி, ஞானசாரம், ஸப்த் காதை, சாமக்ரீபாம்பராநாதம், அருளிச் செயல் ரஹஸ்யம், மாணிக்க மாலை, அவஸ்தாத்ரயம், கத்யத்ரயம், நிகமம், நவரத்னமாலை, ரயம், கத்யத்ர்யம், நிகமம், நவரத்னமாலை, ஆத்ம விவாஹம், முமுக்ஷீக்ருத்யம் போன்ற நூல்கள் உள்ளன. அச்சானது.

ஏடு பழமையாக இருப்பதால் தொடக்கம், முடிவு, எழுத இயலவில்லை.

## 93. 8/59 –b- தழுவன் பாடல்

பொருள்: *சமயம்(வைணவம்)* இதழ்கள்: *4*
அளவு: *27 x 3* செய்யுள் எண்ணிக்கை: *- 10*
நிலை: நன்று.

குறிப்பு:

**பக்கத்துக்கு 8 வரிகள், திருக்குறுங்குடி அழகிய நம்பிப் பெருமாள் 10 நாள் உற்சவத்தை விளக்கும் பாடல்கள். ஆசிரியர், அச்சான விவரம் தெரியவில்லை.**

தொடக்கம்:

ஆரணத்தின் பொரு ளாகிநின்ற
அழகியநம்பி முதல் திருநாள்
பூரண பொற்குட மெல்லை யல்லால்
பொன்னின் விளக்கொளி யும்புகுந்து
தோரணம் வீதியெல்லாந் துலங்கத்
தோன்றும் பவனி தொழுதிறைஞ்சி
தாரணி வாழவே தையநல்லீர்
சாத்தித் தழுவன் படுகாவாரீர்

முடிவு:

பத்தர்க் கினியராய் நின்றநம்பி
பத்தாந் திருநாளில் பத்தரெல்லாம்
சித்தங் குளிர்ந்து சேவிக்கவே
திருப்பரா களி லெழுந்தருளி
நித்தியம் போலித .................
..................................
நேமியும் சங்கமும் தரித்தா னென்றே
நினைத்து தழுவனப் படுகா வாரீர்
மாங்காய் பிலாக்காய் வழுதலங்காய்
மஞ்சளொடு யிஞ்சி சிறுகிழங்கு
தேங்கா யுருட்டுமாய் காண வாரீர்
சீராமன் தழுவவர காண வாரீர்.

## 94. 10320 -C- திருவாசகம்

பொருள்: சமயம் இதழ்கள்: 31
அளவு: 26x3 செய்யுள் எண்ணிக்கை: - சுமார் 434 வரிகள்
நிலை: நன்று, குறை.

குறிப்பு:

பக்கத்துக்கு 7 வரிகள். சைவத் திருமுறைகள் பன்னிரண்டனுள் ஸ்ரீமாணிக்கவாசகர் அருளிய எட்டாம் திருமுறையாகிய திருவாசகப் பகுதிகள் இதன்கண் உள்ளன. முதல் 85 ஏடுகள் காணப் பெறவில்லை. 86 முதல் 117 என்ற எண்ணுள்ள ஏடு வரை உள்ளன. இவற்றில் கண்டபத்து ,செத்திலாபத்து, பிரார்த்தனைப் பத்து, உயிருண்ணப்பத்து, அச்சோப்பத்து, திருப்பாண்டிவிருத்தம், பிடித்தப்பத்து, ஏசறப்பத்து, திருப்புலம்பல் 3 பாடல்கள் ,கோயில் குலாவப்பத்து, திருவார்த்தையறிவித்தல் 8 பாடல்கள் என்ற பகுதிகள் உள்ளன. இதன் பின்னர் சுப்பிரமணியர் கவசம் என 3 ஏடுகளும், ஆவுடையம்மன் துதி, சுப்பிரமணியர் துதி என 3 ஏடுகளும் உள்ளன.

தொடக்கம்:

கண்டபத்து

இந்திரிய மதிமயங்கி இறப்பதற்கே காரணமாய்
அந்தர மேதிரிந்து அருநரகில் வீழ்வோர்க்கு
சிந்தனையைத் தந்தென்னைச் சிவமாக்கி மாண்டானை
வந்தமில்லா வானந்த மணிகொடில்லைக் கண்டேனே.

முடிவு: திருவார்த்தையறிவித்தல்

பூவலா கொன்றையெம் மாலை மார்பன்
பொருகிற வன்புலி கொன்ற வீரன்
மாதர் நல்லாளுமை மங்கை பங்கன்
வண்பொழில் மேவிய மங்கையர்தோள்
புணரு முருவறிவா ரெம்பிரா னாவரே.

..........

232570
17118
DR. T. P. M. LIBRARY,

## 95. 4106 -a- தாயுமானவர் பாடல்

பொருள்: வேதாந்தம் இதழ்கள்: 64
அளவு: 29.5x3.5 செய்யுள் எண்ணிக்கை: -
நிலை: நன்று உரை விரவியது

குறிப்பு: பக்கத்துக்கு 4 முதல் 8 வரிகள். 58 முதல் 62 வரை உள்ள 6 இதழ்களைக் காணவில்லை. அச்சானது.

தொடக்கம்:

அங்கிங் கெனாதபடி எங்கும் ப்ரகாசமா
ஆனந்த பூர்த்தியாகி அருளொடு நிறைந்ததெது
தன்னருள் வெளிக்குளே அகிலாண்ட கோடியெல்லாந்
தங்கும் படிக்கிச்சை வைத்துயிர்க் குயிராய்த் தழைத்துதெது
மனவாக்கினிற் தட்டாம நின்றதெது
சமய கோடிகளெல்லாந்
................

முடிவு:

வசனாதி களாவன;வசனம்,கமனம். தானம், விசர்க்கம். ஆனந்தம் உருவர்க்குகளாவன. சூக்குமை பைசந்தி. மத்திமை வைகரி கூறு. குணங்களாவன: சத்துவம். ரச்சு தமசு [illegible]

அகங்காரங்களாவன: தைச்சாகங்காரம் வைகாரிகாகங்காரம், பௌதாரிகாகங்காரம். ஆக [illegible] இவை [illegible]யம் புறநிலைக் கருவிகள்.

## 96. 3923 - b - திருவேங்கட மாலை

பொருள்: சிற்றிலக்கியம்(மாலை) இதழ்கள்: 9
அளவு: 27x3 செய்யுள் எண்ணிக்கை: - 101
நிலை: சிறுசிதைவு, முழுமை.

குறிப்பு:

பக்கத்துக்கு 10 வரிகள். திவ்யகவி பிள்ளைப் பெருமாளையங்கார் அருளிய அஷ்டப்பிரபந்தங்களில் ஒன்று. இறுதி ஏடு சிதைந்துள்ளது. அச்சானது.

**தொடக்கம்:**

திண்பார் புகழுந் திருவேங்கட மாலை
வெண்பாவாய் நூறும் விளம்புதற்குக் - கண்பாராய்
நாதாய ணாவடியே னாளுந் தமிழ் வேத
பாராய ணாசட கோபா.

**முடிவு:**

பாம்புகுளிர் சந்தனத்தின் பக்கத்தி நிற்கின்ற
வேம்புமரு ந்துகைக்கும் வேங்கடமே- காம்புகர
மானவரை நன்குடைய ராளாய்த் தொழுதேற்று
மானவரை நன்குடையார் வாழ்வு.

*(இதற்கு மேல் எழுத இயலவில்லை. ஏடு சிதைந்துள்ளது)*

## *97. 4409 -a- திவ்வியபிரபந்தம் திருச்சந்த விருத்தம்*

**பொருள்:** *சமயம்(வைணவம்)* **இதழ்கள்:** *10*
**அளவு:** *38x3* **செய்யுள் எண்ணிக்கை:** *- 120*
**நிலை:** *சிறுசிதைவு, குறை.*

**குறிப்பு:**

*பக்கத்துக்கு 10 வரிகள். திருமழிசை யாழ்வாரருளிய சந்த விருத்தம் நாலாயிர திவ்யப்பிரபந்தத்தைச் சேர்ந்தது. அச்சானது.*

**தொடக்கம்:**

திருச்சந்தப் பொழில் தழுவு தாரணியின் துயர்தீரத்
திருச்சந்த விருத்தம் செய் திருமழிசை(ப்பான்) வருமூர்த்தி
கருச்சந்தங் காரகிலுங் கமழ்கொங்கை மரைநாறுந்
திருச்சாந்தத் துடன் மருவு திருமழிசை வளம்பதியே

**முடிவு:**

இயக்குறாத பலபிறப்பி லென்னை மாற்றி இன்றுவந்
துயக்கொள் மேகவண்ணவ னெண்ணி யெண்ணிய கண்ணிலே
மயக்கி னான்றன் மன்று...சோதியாகலாற்
.............

## 98. 11299 - திருப்புகழ்

பொருள்: *சமயம்* இதழ்கள்: *41*
அளவு: *37x2* செய்யுள் எண்ணிக்கை: *- 108*
நிலை: *மிகுசிதைவு*

குறிப்பு:

*பக்கத்துக்கு 8 வரிகள். இரண்டு ஓரப் பக்கங்களும் முறிந்து மிகுந்த சிதைவுக்களாகியுள்ளது. 108 திருப்புகழ்ப் பாடல்கள் உள்ளன என்று மட்டுமே அறிய முடிகின்றது.*

*முதலும், முடிவும் எழுத இயலாத நிலையில் உள்ளது.*

## 99.5760 - திருப்புகழ்

பொருள்: *சமயம்* இதழ்கள்: *52*
அளவு: *30x3* செய்யுள் எண்ணிக்கை: *- சுமார் 730 வரிகள்*
நிலை: *சிதைவு, குறை.*

குறிப்பு:

*பக்கத்துக்கு 7 வரிகள். அருணகிரிநாதர் அருளிய திருப்புகழ் தொகுப்பு. அச்சானது.*

தொடக்கம்:

கடவுள் துணை

ஏறுமயி லேறிவிளை யாடுமுக மொன்றே
ஈசருடன் ஞானமொழி பேசுமுக மொன்றே
கூறுமடி யார்கள் வினை தீர்க்குமுக மொன்றே
குன்றுருவ வேல்வாங்கி நின்றமுக மொன்றே
மாறுபடு சூரரை வதைத்தமுக மொன்றே
வள்ளியை மணம்புணர வந்தமுக மொன்றே
ஆறுமுக மானபொருள் நீயருளல் வேண்டும்
ஆதியரு ணாசலமமர்ந்தபெரு மாளே.

காப்புகள் முற்றும்.

ஆறுமுக மானபொருள் நீயருளல் வேண்டும்
ஆதியரு ணாசல மமர்ந்தபெரு மாளே.
காப்புகள் முற்றும்.

முடிவு:

எழுத இயலாத வகையிற் சிதைந்துள்ளது.

## 100. 5641 - திருப்புகழ்

பொருள்: *சமயம்* இதழ்கள்: *8*
அளவு: *27 x 3* செய்யுள் எண்ணிக்கை:- *சுமார் 112 வரிகள்*
நிலை: *பழமை*

குறிப்பு:

*பக்கத்துக்கு 7 வரிகள். அருணகிரியார் அருளிய திருப்புகழ் ஒற்றை ஏடுகள். பல ஏடுகள் கொண்ட பிரதியில் 14, 19, 40 என்ற எண்களுள்ள ஏடுகளும், மேலும் முனை முறிந்தமையால், எண்களறியாத வண்ணம் இரண்டு ஏடுகளும் உள்ளன. முதல் ஏட்டிற்கும் முன் சில ஏடுகள் இருக்க வேண்டும். ஏடுகளில் புள்ளியும், கொம்பு, ர இவற்றில் மாற்றமும் உள்ளன.*

தொடக்கம்:

கணபதி துணை. திருப்புகழ்
சுப்பிரமணியர் துதி

.....யிடை யிபமாகி, யக்குற மகளுடன்
அச்சிறு முருகனை அக்கண மணமருள் பெருமாளே
முத்தைத் தரு பத்தித் திருநகை யத்திக்கிறை சத்திச் சரவண
முத்திக்கொரு வித்துக் குருபர எனவோதும்

முடிவு:

எழுத இயலாத வண்ணம் சிதைந்துள்ளது.

## 101. 11475 திருப்புகழ்

பொருள்: சமயம் இதழ்கள்: 30
அளவு: 13 x 4 செய்யுள் ண்ணிக்கை: - 75
நிலை: நன்று

குறிப்பு:

பக்கத்துக்கு 15 வரிகள். அருணகிரி நாதரருளிய திருப்புகழ்ப் பாடல்கள் 75 கொண்ட பிரதி. இதன்கண் திருப்பரங்கிரி, திருச் செந்தில்( 6) திருப்பழனி, திருவேரகம், குன்றுதோறாடல், திருப்போரூர், திருச்செங்கோடு, திருச்சோலை மலை, ஸ்ரீபுருட மங்கை திருவேங்கட மாமலை, திருவானைக்கா கற்குகுடி, திருவருணை, திருத்தணி, குமரக்கோட்டம் திருப்புலியூர் ஆகிய தலங்களுக்குரிய திருப்புகழ்ப் பாக்களும் பிறவும் உண்டு. அச்சானது.

தொடக்கம்:

கணபதி துணை. அருணகிரிநாதர் அருளிச் செய்த திருப்புகழ்.
எல்லாரும் ஞானத் தெளிஞரே கேளீர்சொல்
கல்லெல்லாம் மாணிக்கக் கல்லாமோ - பொல்லாக்
கருப்புகழைக் கேட்குமோ கானமயில் வீரன்
திருப்புகழைக் கேட்குஞ் செவி. முருகன் துணை.

முடிவு:

துள்ளுமத வேள்கைக் கணையாலே
தொல்லை நெடுநீலக் கடலாலே
மெள்ள வருசோலைக் குயிலாலே
மெய்யுருகு மானைத் தழுவாயே
தெள்ளு தமிழ்பாடத் தெளிவோனே
செய்ய குமரேசத் திறலோனே
வள்ளல் தொழுஞானக் கழலோனே
வள்ளி மணவாளப் பெருமானே.
செந்திலாபன் துணை.

## 102. 3974 - d-தாயுமானார் - பாயப்புலி

பொருள் : வேதாந்தம் இதழ்கள் : 19.
அளவு : 14 x 3. செய்யுள் எண்ணிக்கை: - 59
நிலை : நன்று, குறை.

குறிப்பு :

பக்கத்துக்கு 7 வரிகள். தாயுமான சுவாமிகளின் பாடல்களில் பாயப்புலி எனத் துவங்கும் பாடலுடன் கலித்துறைச் செய்யுட்களாக அமைந்துள்ளன. அச்சானது. அதன்பின்னர் காடுங் கரையும் எனத் துவங்கும் தாயுமானார் பாடல்கள் 6 சீர் விருத்தம் 3 உள்ளன.

தொடக்கம்:

தாயுமானார் பாயப்புலி

பாயப்புலிமுன் மான்கன்றைக் காட்டும் படியகில
மாயைப் பெரும்படைக்கே யிலக்காவெனை வைத்தனையோ
நீயெப்படி வகுத்தாலு நன்றேநின் பெருங்கருணை
தாயொத் தடியார்க் கருள்சச்சி தானந்த தற்பரமே.

முடிவு:

ஆத்திரம் வந்தவர்போ லலையாம லரோகதிட
காத்திருந் தந்தென்னை (யே ய)ன்னை போலுங் கருணைவைத்திம்
மாத்திர முன்னி... த்தினையெம் மவுனா வினிநன்
காத்திரஞ் சொன்ன படியிய மாதியுஞ் சாதிப்பனே.

(ரு ௱)

காடுங் கரையு மனக்குரங்கு கால்விட் டோவதன் பிறகே
......................................
......................................
தேடும் பருவமிது கண்டீ சேரவாருஞ் சகத்திரே
......................................
......................................
ஏக வுருவாய் கிடக்குதையோ இன்புற்றிடநாம் இனியெடுத்த
தேகம் விழுமுன் புசிப்பதற்குச் சேரவாரும் சகத்தீரே.

## 103. 4073 - b - திருவண்ணாமலைப் புராணம்

பொருள் : புராணம் இதழ்கள் : 24
அளவு : 14 2 செய்யுள் எண்ணிக்கை : 88
நிலை : நன்று, குறை.

குறிப்பு:

பக்கத்துக்கு 7 வரிகள். சைவ எல்லப்ப நாவலரியற்றிய அருணாசலப்புராணம். பாயிரம் 2 பாடலும் திருமலைச் சருக்கமும் மட்டும் உள்ளது. அச்சானது.

தொடக்கம் :

ஒருமானைக் கரத்தினில்வைத் தொருமானைச் சிரத்தினில்வைத்
துலகமேழுந்
தருமானை யிடத்தினில்வைத் தருள்வானை பவளநெடுஞ்
சயிலம்போல்
வருமானை முகத்தானை யளித்தானைப் பொருமானை
மகிழவேறும்
பெருமானை யருணகிரிப் பெம்மானை யடிபணிந்து பிறவி
தீர்ப்பாம்.

முடிவு :

அரியயனு மளவிடுதற் கரியமலை நிலையுரைக்க
அரிதென்றாலுந்
தெரியவுனக் கறிந்தபடி சிறிதுரைத்தேன் இனியுரைக்குந் திறமே
தென்றான்
வரிசைபெறு மார்க்கண்ட முனிமகிழ்ந்து பணிந்துமையாள்
மதியிற் றோன்றி
அரியசிவ னிடங்கலந்த கதையுமுரைத் தருளுகென வுரைப்ப
தானான்.

(அஅ)

## 104. 6376 - திருப்பதிக் கோவை

பொருள் : சிற்றிலக்கியம் (கோவை) இதழ்கள் : 36
அளவு : 30 x 4 செய்யுள் எண்ணிக்கை :-
நிலை : சிதைவு சுமார் 750 வரிகள்

குறிப்பு :

பக்கத்துக்கு 10 வரிகள். விவேகன் என்பான் வரலாற்றைக் கூறி, இறுதியில் இறைவன் திருப்பதிகள்ளைக் கூறுமாறு விவேகன் கேட்க, அருளியதாக வைணவ, சைவத் திருப்பதிகளைப் பற்றிய அட்டவணை கொண்ட நூல். மிகவும் சிதைந்துள்ளது. எனவே முதலும், முடிவும் எழுத இயலவில்லை.

## 105. 9018 - C - திருப்பரங்குன்ற மாலை

பொருள் : துதி இதழ்கள் : 8
அளவு : 36 x 3 செய்யுள் எண்ணிக்கை: 30
நிலை : நன்று, முழுமை.

குறிப்பு :

*பக்கத்துக்கு 4 வரிகள். திருப்பரங்குன்ற முருகன் மீது பாடப் பட்டுள்ளது. ஆசிரியர், அச்சான விவரங்கள் தெரியவில்லை. இதனுள் மூதுரை, கதிர்காம மாலையும் உள்ளன.*

தொடக்கம் :

பாரய்யா என்முகத்தைப் பார்த்துதவ நின்னையல்லால்
ஆரய்யா சொல்லும் ஆறு முகத்தவனே
காரய்யா என்னுயிரைக் காலனணு காதபடி
சேரய்யா கந்தா திருப்பரங்குன் றாதிபனே.

(க)

முடிவு:

திருப்பரங் குன்றமாலை செகதலந் தன்னில் யாவர்
விருப்பமாய்ப் படிப்போர் கேட்போர் மேதினி யாள்வரென்று
பொருப்பது கயிலை மேவும் புனிதனா ருரைத்தவண்ணம்
மருப்படா மேனியாகி மானிலந் தன்னில் வாழ்வார்.

## *106. 9049 - திருப்பரங்குன்ற மாலை*

பொருள்: *துதி* இதழ்கள்: *26*

அளவு: *32 x 2.5* செய்யுள் எண்ணிக்கை: *- 30*

நிலை: *நன்று, முழுமை.*

குறிப்பு:

*பக்கத்துக்கு 4 வரிகள். 9018 - c - திருப்பரங்குன்ற மாலை - என்ற சுவடியைப் போன்றதே இது.*

## *107. 8664 - d - திருப்பரங்குன்ற மாலை*

பொருள்: *துதி* இதழ்கள்: *9*

அளவு: *35 x 3* செய்யுள் எண்ணிக்கை: *- 30*

நிலை: *நன்று, முழுமை.*

குறிப்பு:

*பக்கத்துக்கு 4 வரிகள். இச்சுவடி 8026 - g, 9018 -c, 9049 திருப்பரங்குன்றமாலை போன்றதே. எனினும் முதலில் ஒரு காப்புச் செய்யுள் உள்ளது.*

காப்பு:

காலன் றனையுதைத்த கங்காளற் கன்பான
பாலன் பரங்கிரிமேற் பாமாலை பாடுதற்கு
ஞால மதிலெவர்க்கும் நல்வித்தை புத்திதரும்
வேலவர்க்கு மூத்த விநாயகனே முன்னடவாய்

## 108. 8660 - e - திருப்பரங்குன்ற மாலை

பொருள்: துதி
இதழ்கள்: 8
அளவு: 45 x 2
செய்யுள் எண்ணிக்கை: - 30
நிலை: நன்று, முழுமை.

குறிப்பு:

பக்கத்துக்கு 4 வரிகள். 8663 - a - திருப்பரங்குன்றமாலை என்பதன் பிரதியே. உலகநீதி, மூதுரை, விபீஷணன் புத்திப்படலம் என்ற நூல்களும் இதில் உள்ளன.

## 109. 8653 - f - திருப்பரங்குன்ற மாலை

பொருள்: துதி
இதழ்கள்: 8
அளவு: 42 x 2
செய்யுள் எண்ணிக்கை: - 30
நிலை: நன்று.

குறிப்பு:

பக்கத்துக்கு 4 வரிகள். 8660 -e- திருப்பரங்குன்ற மாலை போன்றதே. இப்பிரதியில் மூதுரையும், கம்பராமாயணம் - விபீஷணன் புத்திப்படலமும் உள்ளன.

௲௮௱௭௰௪ (கி.பி. 1874) சித்திரை ௴ சா ௳ தேதி ஏகஸங்கி திதி ௵ நகீ குருவப்ப(ன்) குமாரர் வீரப்ப(ன்) படித்து வருகிற திருப்பரங்குன்ற மாலை என்ற குறிப்புள்ளது. மற்ற இரு நூல்களிலும் குறிப்பு இவ்விதமே உள்ளது.

## 110. 3946 - l - நமச்சிவாய மாலை

பொருள்: சமயம் (சைவம்)
இதழ்கள்: 2
அளவு: 24.8 x 5
செய்யுள் எண்ணிக்கை: - 27
நிலை: நன்று, முழுமை.

குறிப்பு:

பக்கத்துக்கு 20 வரிகள். திருவாவடுதுறை நமசிவாயம் குறித்த பாடல்கள்.

தொடக்கம்:

கற்றகலாச் சுற்றத்தைக் காதலிக்கு மென்னெஞ்சப்
பற்றகற்றி நின்னருளைப் பாவிப்ப தென்னாளோ
சற்றகலா துற்றவர்க்குச் சர்க்கரையே நற்றவரை
யுற்றகலா வாவடுதண் டுறைநமச்சி வாயனே.

முடிவு:

உன்னியல்பே யென்னோ டுறுமியல்பா மென்னியல்பே
உன்னியல்பை யொட்டி யுணர்வதற்கென் கைமாறே
தன்னியல்பே யல்லாநீ தவிழ்ந்தநடை தானாகும்
உன்னியல்பே யாவடுதண் டுறைநமச்சி வாயனே.

- உஎ

முற்றும். திருச்சிற்றம்பலம்.

## 111. 3946 - m - நமச்சிவாய மூர்த்தி தாராட்டு

பொருள்: துதி இதழ்கள்: 2

அளவு: 24.8 x 5 செய்யுள் எண்ணிக்கை:- 41

நிலை: நன்று, முழுமை. கண்ணிகள்

குறிப்பு:

பக்கத்துக்கு 18 வரிகள். நமசிவாயத் துதி நாட்டுப்புறத் தாலாட்டு வடிவில் பாடப்பட்டுள்ளது. அச்சானதாகத் தெரிய வில்லை.

தொடக்கம்:

நற்றுறைசைத் தேசிகனை நல்லறிவாய்த் தாராட்ட
கற்றவர்க்கு ஞானமருள் கற்பகத்தைக் கைதொழுவோம்

- க

அகளமாய் நின்ற வஃருளே வடிவாகிச்
சகலமால் நீக்கவிங்குத் தான்வேண்டி வந்தாரோ.

- உ

முடிவு:

திருவா வடுதுறையிற் சேர்ந்தவர்க்கு மெய்ஞானந்
தருவோ மெனக்கிருபை தாங்கி யிருந்தாரோ
எல்லையிலா யின்ப மெனக்குத் தரக்கருதித்
தில்லைப் பொதுவீற் றிருநடனஞ் செய்தாரோ

- ய

வாழ்க குரு நமச்சிவாயன் மலரடிகள்
வாழ்க வேலப்ப குருவாழ்க வடியாரே.

- சக

திருச்சிற்றம்பலம்.

## 112. 8198 - b - நாடி சாஸ்திரம்

பொருள்: *மருத்துவம்* இதழ்கள்: *6*
அளவு: *41.6 x2.6* செய்யுள் எண்ணிக்கை: *- 33*
நிலை: *நன்று, குறை.*

குறிப்பு:

*பக்கத்துக்கு 5 வரிகள். அச்சான விவரம் தெரியவில்லை.*

தொடக்கம்:

அனைத்துயி ரென்றென் றெண்ணி அரும்பசி யெவர்க்கு மாற்றி
மனத்துள்ளே பேதாபேதம் வஞ்சனை களவும் பொய்யும்
சினத்தையுந் தவிர்ப்பாயாகில் செய்தவம்பின் வேறுண்டோ
உனக்கிது வுறுதியான வுபதேச மிதுவே கண்டாய்.

முடிவு:

தானது பங்குனிக்குந் தனதுநல் லாவணிக்கும்
மானமாம் புரட்டாசிக்கு மற்றைராத் திரியிற் பார்க்கத்
தேனென்று மூன்று நாடித் தெளிவாகக் காணுமென்று
கானமர் முனிவர் சொன்ன கருத்தைநீ கண்டுபாரே.

## 113. 8027 - நீலி கதை

பொருள்: *நாட்டுப்புறக் கதைப் பாடல்* இதழ்கள்: *71*
அளவு: *36 x 3* செய்யுள் எண்ணிக்கை: *- சுமார் 700 வரிகள்*
நிலை: *சிறு சிதைவு, குறை.*

குறிப்பு:

*பக்கத்துக்கு 5 வரிகள். ''காராள நீலி பழிகாரி நாடகத்தை'' என்று தலை இதழில் குறிப்புள்ளது. பழகை நல்லூர் நீலி மீது பாடப்பட்டுள்ளது. அச்சாகியுள்ளதாகத் தெரிகிறது.*

தொடக்கம்:

அழகுபெறும் பழகைநல்லூர் அம்மையப்பர் திருக்கோவில்
குழைவுடைய சங்கீதம் கூத்தாடும் முறைக்காரி
பணிவிடையெல் லாம்முகிந்து படிகடந்து வெளியில் வந்தாள்

மணியமெரடு கோவிலுக்கு வாய்மூப்புக் காரன்(வ)ன்
விரும்பியுந்த கோவில்நம்பி வேசைமகள் அருகே வந்தான்
கரும்பினிய மொழியாள்மேல் கண்ணோட்டம் போட்டானே.

முடிவு:

கஞ்சிகுடி யாதபெண்கள் தமக்கிவள் நஞ்சைக் கலந்திடுவாள்
நஞ்சைக் கலந்தவள் பானையிலிட்டு நறுந்தயிர் போலாக்கி
நாட்டமுண் டாக்குவேன் என்றுபழகை நடுவிலே கொண்டு
வந்தாள்
கஞ்சி குடியாமல் பட்டினித் துக்கங்கள் காத்தவர் மோரு
கொள்வீர்

## *114. 6383 -a- நாலடியார்*

**பொருள்:** *நீதி* **இதழ்கள்:** *16*
**அளவு:** *33.2 x3.3* **செய்யுள் எண்ணிக்கை:** *- 153*
**நிலை:** *நன்று, குறை.*

குறிப்பு:

*பக்கத்துக்கு 7 வரிகள். நாலடி நானூற்றிலிருந்து தெரிந்தெடுக்கப்பட்ட செய்யுட்கள் தொகுத்தெழுதப்பட்டுள்ளன. இறுதியில் நாலடியாரின் அறம், பொருள், காமத்துப்பாலிலுள்ள அதிகார அட்டவணை தரப்பட்டுள்ளது.*

## *115. 6368 - e - நேமிநாதம் (தெரிவு)*

**பொருள்:** *இலக்கணம்* **இதழ்கள்:** *14*
**அளவு:** *20.3 x 3.3* **செய்யுள் எண்ணிக்கை:** *- சுமார் 22 வரிகள்*
**நிலை:** *நன்று, குறை.*

குறிப்பு:

*பக்கத்துக்கு 8 வரிகள். நேமிநாதத்தினின்று சில சூத்திரங்கள் தெரிவு செய்யப்பட்டுத் தொகுத்தளிக்கப்பட்டுள்ளன.*

'' புல்லா வெழுத்தில் கிளவிபொ ருட்படினும்
இல்லா விலக்கணத்த வென்றொழிக்க - நல்லாய்
மொழிந்த மொழிப்பரு திக்கண் ணேமொழியா
தொழிந்தவுஞ் சார்த்தி யுணர்''

என்ற பாவோடு முடிவுறுகின்றது.

## //6. 636/ -a- நேமிநாதம் (மூலமும், உரையும்)

பொருள்: இலக்கணம்
அளவு: 24.2 x 3.2
நிலை: நன்று, முழுமை.
இதழ்கள்: 99
செய்யுள் எண்ணிக்கை:- 96. உரை விரவியது

குறிப்பு:

பக்கத்துக்கு 8 வரிகள். இறுதியில் அதிகாரம், சூத்திரங்கள் எத்தனை என உரைக்கப்பட்டுள்ளது.

''ஆக மரபு - ௯௫ - வெண்பா - எய - துதி - க - எழுத்ததிகாரம்
- வெண்பா - உ௱ - பாயிரம் - உ.
ஆக அதிகாரம் - உரு பாயிரங்களுட்பட வெண்பா - ௯௬
நேமிநாத மூலமு முரையு முற்றிற்று'' - என உள்ளது.

இதனை அடுத்து உள்ள வெண்பாவில் ''கோமிகா மற்புயனை வெல்லுங் குணவீரன்'' என ஆசிரியர் பெயர் குறிக்கப்பட்டுள்ளது. அச்சானது. இவ்வேடு கி.பி. 1877இல் எழுதப்பட்டதாகத் தெரிகிறது.

## //7. //530 - நெல்விடு தூது

பொருள்: சிற்றிலக்கியம் (தூது)
அளவு: 26.6 x 2.8
நிலை: நன்று, முழுமை.
இதழ்கள்: 36
செய்யுள் எண்ணிக்கை:- சுமார் 450 வரிகள்

குறிப்பு:

பக்கத்துக்கு 5 முதல் 7 வரிகள். 2-ஆம் இதழைக் காணவில்லை. அச்சானது. எஸ். வையாபுரிப்பிள்ளை அவர்கள் பதிப்பித்துள்ளார்.

தொடக்கம்:

சீர்கொண்ட வெள்ளிச் சிகரமும் பொற்சிலம்பும்
வார்கொண்ட தந்தரந்தேர் மந்தரமும் - பேர்கொண்ட
வெவ்வேறாய் நின்றால் விடையேறு மெங்கோனுக்
கவ்வேறு சிந்தன்னையுண் டாமென்று வெவ்வேறாய்.

முடிவு:

போனாரை நெஞ்சைவிட்டுப் போகாரை - மின்னுருவ
மானாரைக் கள்ளவிழி மானாரை - தேனாரை
வல்லியா ரைச்சுரத வல்லியா ரைக்காம
வல்லியா யரைக்கூட்டி வா.

## 118. 2886 - i- நாதாந்த சாரம்

பொருள்: சமயம் (சைவம்) இதழ்கள்: 26
அளவு: 29.5 x3.2 செய்யுள் எண்ணிக்கை: - 199
நிலை: நன்று, முழுமை.

குறிப்பு:

பக்கத்துக்கு 9 வரிகள். நாதாந்த அட்சரம், பிறப்பிறப்பு என்ற இரு பகுதிகளாக உள்ளது. இதனை அடுத்து ஒரு இதழில் 'நெஞ்சோடு புலம்பல்' உள்ளது.

தொடக்கம்:

அரியென வோதுகின்ற ஆ...ய மட்சரத்தைத்
தெரியவே யறிவிலார்க்குச் செப்புநா தாந்த சாரம்
உரியதோர் பொருளிதென் றுநான் கூறுதற்குக்
கரிமுக(க்) கடவுளான கழலினை(க்) காப்புக் கொள்வாம்.

முடிவு:

ஒடுங்கி நடப்பவ ருத்தம ருள்ள
னடுங்குவ தில்லை நமனு மங்கில்லை
யிரும்புக ழில்லை யிராப்பக லில்லை
கடும்பசி யில்லை கற்றுணர்ந் தோர்க்கே.

- ௱௫௯

ஆக விருத்தம் ௱௯௯ நாதாந்த சாரம் முற்றும்.

## 119. 5918 - நைடதம்

பொருள்: காவியம் இதழ்கள்: 16
அளவு: 43.5 x 2.7 செய்யுள் எண்ணிக்கை: - 38
நிலை: மிகுசிதைவு, குறை.

குறிப்பு:

பக்கத்துக்கு 6 வரிகள். நாட்டுப்படலப் பாடல்கள் இடம் பெற்றுள்ளன. ஓரம், மேல், கீழ்ப் பகுதிகள் முறிவு பட்டுள்ளன. அச்சானது.

''தழைவிரி கடுக்கைமாலை தனிமுதற் சடையிற்சூடும்''
என்ற பாடலுடன் துவங்குகிறது.

''நாகிள வரிவண் டுண்டு நறவுகே... ளிக்கு மகை தாவ
பாகுறு களைவேளேய் யிரிபரிப் பரி(தா)யுள் ளாவி
யேகமே தளர்ந்தோர் நெஞ்ச மீர்ந்திடு முளளம் பென்றே
வாகை... மதளைச் செற்றேன் வனைந்திடா திகழ்ந்த வாறே.

## 120. 8/23 - நைடதம்

பொருள்: காவியம் இதழ்கள்: 192
அளவு: 29.3 x 2.9 செய்யுள் எண்ணிக்கை: - 1170
நிலை: சிதைவு, முழுமை.

குறிப்பு:

அதிவீரராம பாண்டியரின் நைடதமே, அச்சானது. 124-ஆம் இதழினைக் காணவில்லை. 97,98-ஆம் இதழ்கள் பாதியாகச் சிதைந்துள்ளன. பின்பகுதி இதழ்கள் மிகு சிதைவு. 5918-நைடதம் என்ற பிரதி போன்றதே.

''தழைவிரி கடுக்கைமாலை தனிமுதற் சடையிற் சூடும் ''என்ற பாடலுடன் துவங்குகின்றது.

முடிவு:

ஆழிசூழ் புவிமுழுவது மாழியொன் றுருட்டி
வாழிநல் லறம்புரி தருமகம் பல்வாற்றிச்
சூழ்மால்.........பிடருறு சுமையொழித் தாடற
பாழியம்புயத் துலகெலாம் பரித்தினி திருந்தான்

அரசாட்சிப் படல முற்றும். குத்தாலநாத சுவாமி துணை.
ஆக படலம் உயஅரு. விருத்தம் சூ ளஎய(1170)நளன் கதை முகிந்தது. முற்றும்.

## 121.8/32-நைடதம்

பொருள்: காவியம் இதழ்கள்: 142
அளவு: 34 x 3.2 செய்யுள் எண்ணிக்கை: - 1070
நிலை: சிறு சிதைவு, முழுமை.

குறிப்பு:

பக்கத்துக்கு 6 முதல் 9 வரிகள். 7985 - நளன் கதை என்பதனோடு ஒப்புன்டயது.

கருவி மாமழை கலைமக ளுருவென விளங்கி

என்ற பாடலோடு துவங்கி

''ஆழிசூழ் புவிமுழுவது மாழியொன் றுருட்டி''

*(பார்க்க: 8123 - நைடதம்)*

*என்ற பாடலோடு முடிவுறுகின்றது.*

## *122.9141-நைடதம்*

**பொருள்:** *காவியம்* **இதழ்கள்:** *210*
**அளவு:** *36.4 x2.3* **செய்யுள் எண்ணிக்கை:** *- 1154*
**நிலை:** *சிறு சிதைவு, குறை.*

**குறிப்பு;**

*பக்கததுக்கு 5 வரிகள். 1-4 ,116,140,141,185,193,214,218 - ஆம் இதழ்களைக் காணவில்லை. இறுதி 4 ஏடுகள் 9 x2.3 செ.மீ. நீளத்துக்கு நடுவில் சிதைந்துள்ளன.*

**தொடக்கம்:**

கிவளொளி மணிமுத்துஞ் சிந்திய முன்றில் தோறும்

குவிமுலைக் கயவாய்ச் செங்கட் குடம்புரை செருத்தன் மேதி

கவையடி பெயர்ப்ப மாழ்கிக் காரளர்ந் தொதுங்கு மன்றே.

**முடிவு:**

செய்யதா டொழு மன்னனைச்....

கொப்புளைப் பரியுள மறி விஞ்சையுங் கொடுத்து

மையன் மாமதி முக

யைய னேவலி லரசனு யோகதி நாடடைந்தான்.

## *123. 3923 -a- நளன் கதை (நைஷதம்)*

**பொருள்:** *காவியம்* **இதழ்கள்:** *142*
**அளவு:** *28 x 4* **செய்யுள் எண்ணிக்கை:** *- 1160*
**நிலை:** *நன்று, முழுமை.*

**குறிப்பு:**

*பக்கத்துக்கு 8 முதல் 10 வரிகள். 5918, 8123, 3998, 8132, 9141 - நைடதம், 7985, 8635, 11512 - நள்ன் கதை என்ற பிரதிகள் போன்றதே.*

## 124. 7985 - நளன் கதை (நைடதம்)

பொருள்: காவியம் இதழ்கள் : 271

அளவு: 35x3.5 செய்யுள் எண்ணிக்கை:- 1170

நிலை: சிறு சிதைவு, முழுமை.

குறிப்பு:

பக்கத்துக்கு 7 முதல் 11 வரிகள். 5918, 8123 - நைடதம் என்பவற்றை ஒத்ததே. ஆயின் உரையுடன் காணப்படுகின்றது. கொல்லம் ஆண்டு 999 (கி.பி. 1824) சுபானு வருடம் துலா மாதம் 23-ந் தேதி குமாரசுவாமி என்பவரால் எழுதப்பட்டதாகக் குறிப்புள்ளது.

## 125. 8635 - நளன் கதை (நைடதம்)

பொருள்: காவியம் இதழ்கள்: 297

அளவு: 42.2 x 4.5 செய்யுள் எண்ணிக்கை:- 1070

நிலை: சிறு சிதைவு, முழுமை.

குறிப்பு:

பக்கத்துக்கு 7 முதல் 10 வரிகள். பாடலும், உரையுமாக அமைந்துள்ளது. 5918, 8123, 3898 - நைடதம், 7985 - நளன் கதை - என்ற பிரதிகளைப் போன்றதே. கொல்லம் ஆண்டு 1027.(கி.பி.1852) ஆடி ௴ 25-ந் தேதி சுக்கிர வாரத்தில் எழுதத் துவங்கி, இதே ஆண்டு வைகாசி மாதம் 20-ந் தேதி திங்களன்று ,கொல்லங் கிடாரம் நாட்டாண்மை குருவப்ப நாடார் எழுதி முடித்ததாக இறுதியில் குறிப்புகளுள்ளன.

## 126. 11512 - நளன் கதை

பொருள்: காவியம் இதழ்கள்: 102

அளவு: 42 x 3.3 செய்யுள் எண்ணிக்கை:- சுமார் 1230 வரிகள்

நிலை: சிறு சிதைவு, குறை.

குறிப்பு:

பக்கத்துக்கு 6 வரிகள். 13-ஆவது போர்புரி படலம். 19-ஆம் பாடல் (''கொன்னவிற் பருதி'') வரை உள்ளது. 7985 - நளன் கதை, 8123, 8132 நைடதம் என்ற பிரதிகளைப் போன்றதே.

## 127. 8829 - C- நந்தீசுவரர் கருக்கிடை முந்நூறு

பொருள்: *மருத்துவம்* இதழ்கள்: *50*
அளவு: *35.8 x 3.4* செய்யுள் எண்ணிக்கை:- *305*
நிலை: *நன்று, முழுமை.*

**தொடக்கம்:**

மூலம்என்ற கணபதியின் பாதம் போற்றி
முற்றிபெற்ற சுழிமுனையின் முனைமேல் நின்று
கோலம்என்ற குண்டலிக்குள் குகைதா னுண்டு
குகைதனிலே குருபரனு மம்மை வாழ்வார்
சீலம்என்ற தவமகிமை பெற்ற சித்தர்
தேடியதோர் வீடதனைத் தெளிந்து பார்த்து
ஆலம்என்ற கொடிமரத்தின் கீழே நந்தி
அமர்ந்துநின்ற பீடம்என்ற ஆதி காப்பே.

**முடிவு:**

முத்திபெறு ஞானரிஷி தங்கி நின்று
மோட்சநிலை தானறிந்து சித்தும் பெற்றுப்
பற்றிநின்ற சுடரொளியைப் பதிவாய்க் கண்டு
பழக்கத்தால் வாசிநின்ற தலமுங் கண்டு
சித்திபெற்ற கருவினிட சூட்சங் கண்டு
தெளிந்தமதி மாயைவிட்டுச் சிவமே என்று
சத்திநின்ற யிடங்காணப் பேறும் பெற்றுச்
சகலஉயிர் தானாம் முந்நூறும் முற்றே.

நந்நீசுரர் கருக்கிடை அருளிச் செயித முந்நூறு முற்றும். வாத்தியார் முத்துசுவாமியா பிள்ளை சிவகாமி துணையாக வேணும். செயம். செயம்.

## 128. 5954 -C- ஸ்ரீநந்திகேசுபரர் பரம ஞானம்

பொருள்: *ஞானம்* இதழ்கள்: *7*
அளவு: *31.5 x 3.6* செய்யுள் எண்ணிக்கை:- உரைநடை
நிலை: *நன்று, முழுமை.*

தொடக்கம்:

பரம ஞானமாவது பரமாகிய மூலாதி பாதத்திலே பரனென்றும்

பரையென்று(ம்) ரைக்குடிலையென்றும், பரதையென்றும், பரை-விந்தென்றும், ஆறாதாரமாயிருக்கும் இதின் விரிவு பரமாகிய நாதாந்தச் சோதி பராபரமாகிய பெரும்பாழ்வெளியிலே ஆண், பெண், அலி மூன்று மல்லாதவனாய் யிருளொளி வெளி மூன்றுக்கு மப்பாலே விசுவப் பிரகாசனாய் விள்ரயில்லா தனித்தாய் சருவானந்த மயமாய் சருவ லோக கர்த்தனாய்...

முடிவு:

ஸ்ரீநந்திதேவர் திருமூலர்க் கருளிச் செய்து இப்படி சத்தியுஞ் சிவமும் ஒன்றுபட்ட விடம் பேரொளிக் கோளத்தே கடவுள் னாடியாய் நிற்கும். கடவுள் நாடியாவது சுழிமுனை. அந்த சுழிமீதிலே பேரொளி பிரபையாலே பிண்டரண்டமாய்த் தோன்றி ஒடுங்கு மென்றவாறு. சற்குரு பாதமே துணை. பரம ஞான(ம்) எழுதி முடிந்தது. நாதாக்கள் பாதமே துணை. சிதம்பர அய்யர் எழுதினது.

## 129. 8239 - C - நட்சத்திர தஞ்சை

**பொருள்**: *சோதிடம்* **இதழ்கள்**: *21*
**அளவு**: *29.7 x 4.4* **செய்யுள் எண்ணிக்கை**: *- உரைநடை*
**நில்லை**: *நன்று, குறை.*

குறிப்பு:

*அனைத்துச் செய்திகளும் அட்டவணை வடிவாக விளக்கப் பட்டுள்ளன.*

தொடக்கம்:

நட்செத்திரம் உயஎக்கு திசை ஆக்கு ரு ளஉயறு அபகாரம் பிரித்ததுக்கு வகை விபரம். கேது திசை சூரு எறு ஸஷ திசை எ பெருக்கு....................

முடிவு: ந உயசாறு ஆனி பு உ ய ௳ முற்றும்.

## /30. 866/ -c- நாலு மந்திரி கதை

பொருள்: நாட்டுப்புறக் கதை
இதழ்கள்: 3
அளவு: 28.2 x3.6
செய்யுள் எண்ணிக்கை: - சுமார் 45 வரிகள்
நிலை: நன்று, குறை.

குறிப்பு:

பக்கத்துக்கு 7 வரிகள்,8442 - நாலு மந்திரிக் கும்மி என்பதன் பிரதியே.

## /31. 8866 -j-நவகிரக கக்கிச சக்கரம்

பொருள்: சோதிடம்
இதழ்கள்: 28
அளவு: 16.3 x3
செய்யுள் எண்ணிக்கை: - 109
நிலை: நன்று. முழுமை.

குறிப்பு:

நவகிரக பலன்கள் உரைக்கப்பட்டுள்ளன. அச்சானதாகத் தெரியவில்லை.

தொடக்கம்:

கார்பொழி மூலவட்டக் கணபதி பாதம் போத்தி
சீர்மொழி மறைநூல் வேதந் தெரிந்துஉளம் உண்ம நோக்கி
கூர்மொழி யதியசூச்சங்கொள்சிவ சத்திகக்கிஷஞ்
சார்பொழி சாச்சியானாதா...வம் விரித்துச் சொல்வேன்.

முடிவு:

கட்(டான)விருத்தங்கள் பூரங்கள்
கனமான தேவதையி னச்சரங்கள்
தொட்டோடுங் கருக்குருவும் தியான....
சோர்வில்லா ரேசக யூரகமாங் கும்பம்
மட்டாள மூலியும் பச்சியுட வல்லூறு
வல்லுக் குரைச்சல் வகையெல்லா மாய்ந்துதேடி
இட்டமுடன் பாத்தாக்கால் நேரடியாம் வித்தை
எனையீன்ற கக்கிசத்தாய் பாதமுத்தே.

குருசுவாமி துணையாக வேணும். சிவமயம்.
ஸ்ரீ(ராம)செயம். முத்துச்சாமி பிள்ளை துணை.

## 132. 6368 -C- நேமிநாதம்(தெரிவு)

பொருள்: இலக்கணம் இதழ்கள்: 14
அளவு: 20.2x2.5 செய்யுள் எண்ணிக்கை: –
நிலை: நன்று, குறை.

குறிப்பு;

நேமிநாதத்தினின்றும் தெரிந்தெடுக்கப்பட்ட சூத்திரங்கள் இடம் பெற்றுள்ளன. இதனை அடுத்து இடைச்சொல் இயல் 11 பக்கங்களும், செய்யுளியல் 22 பக்கங்களும் உள்ளன. 28 பக்கங்கள் இந்திரகாவியம், வச்சணந்தி மாலை போன்றவைகளும் உள்ளன.

தொடக்கம்:

பூவின்மேல் வந்தருளும் புங்கவன்றன் பொற்பாதம்
நாவி னாளு நவின்றேத்தி - மேவுமுடி
எல்லா முணர வெழுத்தினில் கணத்தைச்
சொல்லா லுரைப்பன் றொகுத்து.

உண்ண முடியாத வோதநீர் வான்வாய்ப்பட்
டெண்ண வமிழ்தான தில்லையோ - மண்ணின்மேல்
நல்லாரைச் சேர்தலா னான்சொல்லும் புன்சொல்லும்
எல்லாருங் கைக்கொள்வ ரிங்கு.

முடிவு:

ஆசு - நேமிநாத மூலபாட முற்றிற்று.
தொல்காப்பியக் கடலுட் சொற்றீவின் சுற்றளக்கப்
பல்கால் கொண்டோட்டும் படவேனெனப் - பல்கோடி
கோமிகா மற்புயனை வெல்லுங் குணவீரன்
நேமி நாதத்தி னெறி: ஸ்ரீ ஙு - ஸ்ரீஸைாநநு

## 133. 6354 - b -நவசங்கையர் விவேகம்

பொருள்: வேதாந்தம் இதழ்கள்: 6
அளவு: 8.2x2.9 செய்யுள் எண்ணிக்கை: - உரைநடை
நிலை: நன்று, முழுமை.

குறிப்பு:

பேச்சு வழக்குச் சொற்கள் மிகுந்து, எளிய உரைநடை யிலியன்றது.

தொடக்கம்:

உத்தாலகருடைய மகன் சுவேதகேது பனிரண்டு வயசு மட்டாய் விற்றை யற்பியாசியாமல் விளையாடித் திரியிற மகனைப் பார்த்து உத்தாலகாரன் வா தம்பி நீ சாஸ்திரம் படியாவிட்டால் மூடனாய்ப் போவாய்............

முடிவு:

ஞானி அக்கி ஞானி யிரண்டு பேருஞ் சரியாய் நடந்து கொண்டாலு மக்கி ஞானி ஆற்மாவைத் திருடின திருடனாகையா லவனைத் தாபத் திறைய மென்கிற மழுச் சுடுகிறதுனாலே யகப்பட்டு சகலர் கையினாலேயும் நிந்திக்கப்படுவன். ஞானி யானவன் சகல தாபத்தையும் மாற்ம சொரூபமாகவே யறிவன். அவனைக் கன்மந் துடர மாட்டாது. அவனைச் சகலரும் பூசிப்பார்களப்படிப்பட்ட ஞானியுடைய பெருமை யின்னபடி யென்று திருமூர்த்தியாலுஞ் சொல்லப்படாது. அவர் சுகபோக சொருபமாகவேயிருப்பாரென்று சொல்லியது கேட்டு சுவேதகேது திருத்தியடைந்து, குறையில்லாத சொரூபமேயானார். ஆகையா லிந்த சரந் - தொக்கிய சுருதியில் சொல்லப்பட்ட நவ சங்கையர் விவேகத்தைச் சகலரு மறிந்து சுகபோத சொரூபமேயாக்கக் கடவர். சுத்தப் பிரமமே நித்தியம்.

## 134. 3268 - நாடி சாஸ்திரம்

பொருள்: மருத்துவம் . இதழ்கள்: 23

அளவு: 25.5x3.3 செய்யுள் எண்ணிக்கை:

நிலை: சிதைவு, குறைவு. –

குறிப்பு:

நாடி முறைகள் பற்றியது. முதல் 7 இதழ்கள் பாதியாக முறிந்துள்ளன.

தொடக்கம்:

சீர்பெறு வரகுடத்தின் தெளிந்துரை ......<br>
.....யி.....குவகுணத்தைப் பாரீர்<br>
பேர்பெ........<br>
.....றுறநீதி வண்ண கணபதி வணக்க......

முடிவு:

ந....கு...தேர் பிணிகள் வந்தவகை யேதென்னில்
நாடி வெழு பொசுப்பருந்தல் நலத்தினாலே
சிலுகுபெருந் தாதாம் பிணியோ மீறுந்
தீன்றுந்து தின்பீரால் பிணியோ யில்லைக்
கொலுகுடனே திரிபோகஞ் செய்வீ ரானால்
கொடியபிணி வந்துவிடும் குறையுந் தாது
வலுவறிந்து பொசுப்பருந்திப் போகஞ் செய்தால்
அலுபிணிக ளவரிடத்தில் வரா...தென்றே.

## *135. 8867 - நயன விதி*

பொருள்: *மருத்துவம்* இதழ்கள்: *18*
அளவு: *23 x 3* செய்யுள் எண்ணிக்கை: *- 92*
நிலை; *பழமை, குறை.*

குறிப்பு:

*பக்கத்துக்கு 7 வரிகள். இந்தச்சுவடியில் முதலில் 20 இதழ்களில் இன்ன நூலென்று புரியாத வகையில் 52 பாடல்கள் சிதலமாக வுள்ளன. அதன் பிறகு 18 ஏடுகள் நயன விதிகள் என்ற வைத்திய நூல் உள்ளது. அதனை அடுத்து 75 இதழ்களில் சில மந்திரங் களும், சக்கரங்களும் உள்ளன. படித்து அறியக்கூட வில்லை. பின்னர் 3 ஏடுகளில் கந்தர் சஷ்டி கவசம் உள்ளது (இது அச்சானது).*

தொடக்கம்:

நயன விதி வாகடம்

மாதுமை பாகன் சொன்ன வடமொழி தன்னையாய்ந்து
தீதுகள் வாராவண்ணம் திருவுளத் துதித்தபோது
ஆதி முனிவன்சொன்ன ஆயுறு வேதந்தன்னை
நாதனா ரருளிச் செய்தார் நயனமாம் விதிகள்தானே.

உதித்திடு நயனந்தன்னில் உறுபலம் வியாதி கேளாய்
நற்துணை யாகுமிந்த நாயக னருளிச் செய்தார்
பத்தர மாகுவண்ணம் படுக்குமோர் திரிசைதன்னை
மத்துமா மலையிலுள்ள மாமுனி யருளிச் செய்தார்.

முடிவு:

வானத்தின் மீது மலையரசன் கைநகமும்
ஏனத்தின் கொம்பு யிரவரிவார் நெஞ்செலும்பு
கூனன் முதுகும் குறுஞ்சித்தன் பல்லும்
கானக் குறத்திமுலைப் பாலிலரைத்துக் கண்ணிலிட
ஆணிப் பூவானம் அறும்அதிய கிட்டிணா.

## 136. 3240 - நாடி நிதானம்

பொருள்: மருத்துவம் இதழ்கள்: 48
அளவு: 19x2.4 செய்யுள் எண்ணிக்கை: - 212
நிலை: சிறு சிதைவு, குறை.

குறிப்பு:

நாடி பார்த்து நோயறியும் முறைகள் உரைக்கப்பட்டுள்ளன. முதல் இதழ் இரண்டாக முறிந்துள்ளது. ஆசிரியர், அச்சான விபரம் தெரியவில்லை.

தொடக்கம்:

....த்தின் குணத்தைக் கேளாய் பெருங்கால்
....விலா வெரிந்து மெத்த னொந்து
....கண்ணிற் சிவந்து வுத்த சிறுநீர்
....ஞ்சிவந்து வுதகமெத் தாகமதாய்
....கோளை தலைவலிக்கும் தாகரிச் சிவரு
....தாமே.

முடிவு:

பாதசுர ெ....தாகும் பாத்து ளடியிவய்க்க
மோதிய வித்யாதி மூவாயிரத்து முன்னூற்று நர்ம்பாகு
னாதியா கையிரண்டில் உரைக்கின் வியாதி யாறுந் தீரு(ம்)
நாலாயிரத்து நானூற்று நாற்பத் தெட்டே.

- உ ௱ ய உ

## 137. 8442 - நாலு மந்திரிக் கும்மி

பொருள்: நாட்டுப்புறக் கதைப் பாடல் இதழ்கள்: 37
அளவு: 24.8x3.3 செய்யுள் எண்ணிக்கை: - தொடர்பாடல்
நிலை: நன்று, முழுமை.

குறிப்பு:

தங்கள் மதிநுட்பத்தால் மந்திரி பதவி பெற்ற 4 மந்திரிகளின் கதை கும்மி வடிவில் பாடப்பட்டுள்ளது. அச்சிட்டிருப்பதாகத் தெரிய வில்லை.

தொடக்கம்:

செந்தமிழ் போற்று மளகா புரிவளர்
மந்திரி நாலுபேர் மீதினிலே
சந்ததக் கும்மி தமிழ்பாடச் சிவ
தந்தி முகன்பதங் காப்பாமே.

முடிவு:

மண்டல மெல்லாந் தான்புகழு மிந்த
வானவர் தேவருந் தான்வாழி
அண்டர்கள் போற்றும் செந்தில் வேலவன்
அய்யன் பன்னிரு புயம்வாழி

ஆறுமுக நாடான் நாலுமந்திரிக் கும்மி முகிந்தது முற்றும்.
நாயன் துணை.

## 138. 10406 - நாசிகேது புராணம்

பொருள்: புராணம் இதழ்கள்: 21
அளவு: 34 x 2 செய்யுள் எண்ணிக்கை: - 83
நிலை: நன்று, முழுமை.

குறிப்பு:

பக்கத்துக்கு 4 வரிகள். இந்நூல் நாசிகேது என்ற ரிஷி குமாரன் சிவபூஜைக்குப் புஷ்பம் எடுத்துவரத் தாழ்த்தியதால், யமலோகஞ் சென்று, யமனுடன் உரையாடி மீட்டும் பூலோகம் வந்த புராணத்தை எளிய தமிழ்ப் பாடலாற் கூறுவதாகும். அச்சான விபரம், ஆசிரியர் பெயர் தெரியவில்லை.

தொடக்கம்:

அம்பவளத் துய்யநிரை யஞ்ஞான மெஞ்ஞானக்
கம்பவள மதையானையைக் கட்டுரைக்கில் - கொம்பால்

பொறுமைவரும் வினைதீரும் போக்குமே ஞானம்
தரும் நினைத்த தெல்லாமே தான்.
ஒருபரன் றன்னையெல்லாம் உருவமா யுருவில்லானை
கருவரம் பாகிநின்று கருத்தினால் கருதினானைத்
திருவரம் பாகிநின்று திருநட மன்றுளாடுங்
குருபரன் றன்னையென்றும் நாவினால் கூறுவோமே.

முடிவு:

வாழுமந்த நாசுகேதுவின் புராணம்
வழுவறக் கேட்டோரும் வாசித்தோரும்
சூழுமந்தப் பாவமெல்லாம் விட்டு நீங்கிச்
சொல்லரிய மெஞ்ஞான சுகிர்த முண்டாம்
ஆளுமந்தப் புத்திரரும் மனையா ளோடும்
அழியாத பாக்கியமும் அருளும் பெற்று
நாளுமந்தச் சவுபரிசந் தானம் போலே
நலம்பெறவே வாழ்வரென்று நவின்றார் மேலோர்
(அ ௩)

நாசுகேது புராணம் முற்றிற்று, குருவே துணை. குமரன் துணை.

## 139. 10434 - நளன் கதை

பொருள்: நாட்டுப்புறக்கதை இதழ்கள்: 124
அளவு: 40x3 செய்யுள் எண்ணிக்கை: -
நிலை: சிதைவு, குறை. உரைநடை

குறிப்பு:

பக்கத்துக்கு 7 வரிகள். முதல் 6 ஏடுகள் இல்லை. 130-ஆம் ஏட்டிற்குப் பின்னரும் இல்லை. ஆசிரியர் பெயர் முதலிய விவரங்கள் தெரியவில்லை.

தொடக்கம்:

....பார்க்கத் தக்கதாக ஆதியோடந்தமாய், நான் கேட்கவேணும் நீங்கள் சரியுத்தரமாக யென்பேரில் தயவு பண்ணி அந்த நளராசன் கதையைச் சொல்ல வேணுமென்று தர்மராசன் கேட்க, அந்த வார்த்தையை முனியீஷ்பரர் கேட்டு சந்தோஷப்பட்டு, நளராசா கதையை சவிஷ்தாரமாகச் சொல்லத் தொடங்கினார்.

முடிவு:

அன்பத்தாறு தேசத்து ராசாக்களும் , அவரவர்கள் ரத கெச துரக பதாதிகளுடனேயும் மந்திரிகள் சாமாந்தாள கிரீடாபதிகள் துரகபதாதிகள் நாயக்கர் கூட்டங்கள்,சேனாபதிகள் முதலான பேர்களுடனேயும் பேரிகை,டமாரம்,உடுக்கு,நாகசுரம்,பில்லாங்குழல்,.....மல்லாரி திரிச்சின்ன ஒத்தைச் சங்கு கர்ணா பூரிகை சின்ன முதலான பதினெட்டு வாத்தியங்களும் முழங்க வெகு ஆடம்பரமாக திவ்விய வஷ்தி.... ..............

## 140. 7956 - நளன் கதை

பொருள்: நாட்டுப்புறக் கதை இதழ்கள்: 99
அளவு: 40x3 செய்யுள் எண்ணிக்கை:- உரைநடை
நிலை: நன்று, முழுமை.

குறிப்பு:

பக்கத்துக்கு 10 வரிகள். இப்பிரதி 10434 நளன் கதை போன்றதே. "௲௮௰௨ இறுதியில்(கி.பி.1867) அற்பசிமீ(ஐப்பசி மாதம்) ௰௪ (14) திங்கள்கிழமையும் புனர் பூச நட்சத்திரமும் கூடிய சுபயோக சுபதினத்தில் சொரிமுத்துக்கோன் மகன் சொக்கலிங்கம் வாசித்து வருகிற நளன் கதை முற்றும். தேவி சகாயம். தக்ஷிணாமூர்த்தி முன்னிற்க. சுடலைமாட சுவாமி பாதாரவிந்தமே கதி. மணிகண்ட வாத்தியார் மகன் முத்து வாத்தியார் பாதாரவிந்தமே கதி'' என்றுள்ளது.

## 141. 10294 - நளன் கதை

பொருள்: நாட்டுப்புறக் கதைப்பாடல் இதழ்கள்: 250
அளவு: 38x3 செய்யுள் எண்ணிக்கை:-
நிலை: சிதைவு சுமார் 450 வரிகள்

குறிப்பு:

பக்கத்துக்கு 9 வரிகள். இது நளச் சக்கரவர்த்தி கதையை நாடோடிப் பாடலில் கூறுவதாகும். ஏடு சிதலமாக இருப்பதால் பிற விபரங்கள் அறியக்கூடவில்லை. முதலும், முடிவும் எழுத இயலவில்லை.

## 142. 10373 - நளன் கதை

**பொருள்:** கதை **இதழ்கள்:** 155

**அளவு:** 30x3 **செய்யுள் எண்ணிக்கை:** - உரைநடை

**நிலை:** நன்று, முழுமை.

**குறிப்பு:**

பக்கத்துக்கு 8 வரிகள். நளச் சக்கரவர்த்தி பற்றிய கதை நாட்டுப்புற வழக்கில் எழுதப்பட்டுள்ளது. முதல் ஏட்டில் சரஸ்வதி துதியாக 'வெள்ளைக் கலையுடுத்தி' என்ற பாடலும், கணபதி துதியாக 'செந்திருவைச் சேரலாம்' என்ற பாடலும், முருகன் துதியாக 'ஆறுமுகவனை நாலு மலர்கொடு கூறுமடியவர் பேறு பெறுவரே' என உள்ளது. அதன் பிறகு நூல் தொடங்குகின்றது.

**தொடக்கம்:**

.....காலகாதேவி சமீதரான சனியீசுபரநம அருந்துதி சமேத வசிட்டரே நம நளன் சரித்திரம் வியாசய விட்டுணு ருபாய நமா வென்று முனிவர் சிகாமணியாகிய வேதவியாசரை தோத்திரம் பண்ணி வைசம்பாயினானவர் செனமேச ராசனுக்குச் சொன்ன அஞ்சாம் வேதமான பாரதக் கதையிலே இருக்கப்பட்ட நவரசம் போலே ருசிக்கப் பட்ட நளச்சக்கரவர்த்தி கதையைக் கிரிசித்தச் சுவாமியார் அரிக்கியானந்தமா்ன தெண்டஞ்செய்து சொல்லுகிறார்.

**முடிவு:**

இந்த நள சரித்திரத்தை யாராகிலும் பயபுத்தி பத்தி விசுவாசத்-துடனே படித்தாலும் யெழுதி வைத்துப் பூசை பண்ணினாலும் அவர் களிடம் சனியீஷ்பரரானவர் ரொம்பவும் சந்தோஷப்பட்டுக் கொண்டு அவர்களுடைய...... ....... ....... ....... ...... ....... ...... ...... ....... ..... ஆசூர்ய சம்பத்துடனே வாழ்ந்து, ஆசந்தர காலம் கீர்த்திப் பிரதிஷ்டைகளுடனே வாழ்ந்து பின்பு சாம்பசிவ மூர்த்தியுட பாதம் படிந்து மோட்சம் பெறுவார்கள் என்று வைசம்பாயினரான முனியீஷ்பரரானவர் செனமேஷ ராசனுக்கு யிந்தக் கதையைச் சொன்னாரென்றவாறு.

## 143. 9122 - நளன் கதை

**பொருள்:** காவியம் **இதழ்கள்:** 138

**அளவு:** 24x3 **செய்யுள் எண்ணிக்கை:** - சுமார் 1950 வரிகள்

**நிலை:** சிறு சிதைவு, குறை.

குறிப்பு:

*பக்கத்துக்கு 7 வரிகள். இஃது அதிவீரராமபாண்டியர் இயற்றிய நைடதமாகும். இதில் 13-வது போர்புரி படலம் வரை உள்ளது அச்சானது.*

தொடக்கம்:

*நல்லகுத்தால நாதர் குமாரன் பாவனாசம் படித்து வருகிற நளன் கதை நன்றாக நீடூழி வாழ்க. தேவி சகாயம். லோக நாயகி துணை.*

தழைவிவரி கடுக்கை மாலை தளிமுதற் றலையிற் சூடு
குழவிவெண்டிங்...கோட்டது குறையென் றெண்ணி
புழைநெடுங் கரத்தாற் பற்றி பொற்புற விணைத்து நோக்கும்
மழைமதக் களிற்றின் செய்ய மலரடி சென்னி வைப்பாம்.

முடிவு:

கண்ணகல் ஞால மளித்த கழற்கால்
அண்ணலை யேத்தி யருந்ததி மானும்
பெண்ணமு தத்தை வியந்து பெருஞ்சீர்
விண்ணவர் தம்பதி மேவின ரன்றே. (எஎ)

வேறு:

அங்கண் வானத் தமரரும் ஆழியிற்
பொங்கு தானை யரசரும் போயபின்
சிங்க வேறனை யான்றிதழ் மைமணி
தங்கு பைம்பொ னிருக்கையிற் சரிந்தனன்.
போர்புரி படல முற்றும்.

## *144. 5646 - b - நளவெண்பா*

பொருள்: *காவியம்* இதழ்கள்: *62*
அளவு: *21 x3* செய்யுள் எண்ணிக்கை: *- சுமார் 1100 வரிகள்*
நிலை: *சிறு சிதைவு, முழுமை.*

குறிப்பு:

*பக்கத்துக்கு 9 வரிகள். இது புகழேந்திப் புலவர் இயற்றிய நளவெண்பாவின் பிரதி. அச்சானது. புதிதாகக் காப்புச் செய்யுள் 3 உள்ளது.*

தொடக்கம்:

சொற்பெரிய மன்னன் சுகந்தன் நளன்கதையை
இப்பெரிய பாரி னெடுத்துரைக்கத் - தக்க

தடவிகட தந்தியுரித் தாழ்சடையோன் பெற்ற
கடவிகட வாரணமே காப்பு. (க)

வேத நெறிபயில்க விண்ணோர்க ளேத்திடுக
சாதியொரு நான்குந் தழைத்திடுக - ஆதி
திருநாம மஞ்செழுத்துஞ் செப்பிடுக மண்மேல்
ஒருநாளும் வாரான் கலி.

நல்ல நெறிபயிலு ஞான நெறி யெய்துவிக்கும்
எல்லையிலா யின்ப மிசைவிக்கும் - பல்சபையின்
நல்லோர்கள் கேட்கு நளன்கதையை நானுரைக்க
வெல்லோருங் கேளு மினி.

முடிவு:

ஏவார் சிலைக்கை யிராமசரி தம்போலத்
தாவா மொழிச்சந் திரன்சுவர்க்கி - பாவாணர்
முந்துரைக்க நின்றார் முகமலர்ந்து மங்கலச்சொல்
வந்துரைக்க வீற்றிருந்தான் வாய்ந்து.

புகழேந்தி வெண்பா முற்றும். தேவி சகாயம்.
திருநெல்வேலி வடக்குக் கோபுர வாசல் தெரு சுப்பிரமணிய பிள்ளை குமாரர் நெல்லையப்பப் பிள்ளை எழுதியது. நன்றாக.

## 145. 3923 - b -நளன் கதை(நைடதம்)

பொருள்: காவியம் இதழ்கள்: 143
அளவு: 27 x 3 செய்யுள் எண்ணிக்கை:- சுமார் 2850 வரிகள்
நிலை: நன்று, முழுமை.

குறிப்பு:

பக்கத்துக்கு 10 வரிகள். இது 5646 - நளவெண்பா போன்ற பிரதியே. அதிவீரராம பாண்டியர் இயற்றிய நைடதம். அச்சானது.

## 146. 10320 - a - நளவெண்பா

பொருள்: இலக்கியம் இதழ்கள்: 85
அளவு: 26 x 3 செய்யுள் எண்ணிக்கை:- 434
நிலை: நன்று, முழுமை.

குறிப்பு:

பக்கத்துக்கு 7 வரிகள். புகழேந்திப் புலவர் இயற்றிய நளவெண்பா என்ற நூலாகும். முதலில் ஒரு ஏட்டில் ஏடெழுதியவர் காப்பாகக் கூறியுள்ளதன் முன்னே நளன் கதை, வெள்ளைக் கலையுடுத்து, ஆயகலைகள் என்ற பாடல்கள் உள்ளன.

தொடக்கம்:

கலாப மயிலிருந்த பாகத்தார் கங்கை
உலாவுஞ் சடைமே லுறையு - நிலாவை
வழியவார்த் தாலன்ன மாநீற்றர் நாகங்
கழியவார்த் தார்நமக்குக் காப்பு.

ஆதித்த னிக்கோல மானானடி யவர்க்காச்
சோதித் திருத்தூணிற் றோன்றினான் - வேதத்தின்
முன்னின்றான் வேழ முதலே யெனவழைப்ப
வென்னென்றா னெங்கட் கிறை.

முடிவு:

ஏனை முடிவேந்தர் போற்றிசைப்ப வெம்மருங்குஞ்
சேனை புடைசூழத் தேரேறி - வானர்புகழ்
பொன்னகரை யாளும் புரந்தரனைப் போலிருந்து
நன்னகரை யாண்டான் நளன்.

அளாநடயசு

நளன் வெண்பா முகிந்தது. முற்றும்.
உமையம்மன் துணை. சத்துரு சங்கார சண்முகத் தெய்வமே துணை.
ஆஉயரு(கி.பி.1850)விரிச்சிக மீ ஆடெ (9-ஆம் தேதி) முகிந்தது.
முற்றும்.

## 147. 11117 - நன்றோ தீதோ

பொருள்: சோதிடம் இதழ்கள்: 119
அளவு: 12×2 செய்யுள் எண்ணிக்கை:- உரைநடை
நிலை: சிறு சிதைவு, முழுமை.

குறிப்பு:

பக்கத்துக்கு 4 வரிகள். 5760 - பிரச்னபலன் என்ற பிரதி போன்றதே. திரும்பித் தொழுவார் வினைதீர்க்கும், விகட கடக்

கணபதிமுன் இந்த நிமித்த சூடாமணி சகாதேவர் அருளிச் செய்தது என்ற குறிப்புள்ளது.

## 148. 3884 - a - நித்ய கர்மவிதி

பொருள்: சமயம் இதழ்கள்: 37
அளவு: 30x3 செய்யுள் எண்ணிக்கை:- உரைநடை
நிலை: பழமை, குறைவு.
குறிப்பு:

பக்கத்துக்கு 11 வரிகள். சைவர்கள் தினந்தோறும் செய்ய வேண்டிய காரியங்களைப் பற்றித் தமிழும் சமஸ்கிருதமும் கலந்த (கிரந்த லிபியில்) மணிப்பிரவாள நடையில் எழுதப்பட்டுள்ளது. ஸ்நானவிதி, பிரதிஷ்டா விதி, சிவ பூஜை, போஜன விதி என்ற உட்பிரிவுகளுமுள்ளன. ஆசிரியர், அச்சான விவரங்கள் அறியக் கூடவில்லை.

## 149. 11503 - b - நல்வழி

பொருள்: நீதி இதழ்கள்: 10
அளவு: 38 x 3 செய்யுள் எண்ணிக்கை:- 40
நிலை: நன்று, முழுமை.
குறிப்பு:

பக்கத்துக்கு 4 வரிகள். ஔவையாரருளிய நல்வழி. அச்சானது.

தொடக்கம்:

நன்றாக. குருவே துணை. கடவுள் துணை.
ஔவையாரருளிச் செய்த நல்வழி மூலம்.
காப்பு.

பாலுந் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலுங் கலந்துனக்கு நான்தருவேன் - கோலஞ்செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீயெனக்குச்
சங்கத்தமிழ் மூன்றுந் தா.

முடிவு:

தேவர் குறளுந் திருநான் மறைமுடிவு(ம்)
மூவர் தமிழு முனிமொழியுங் - கோவை
திருவா சகமுந் திருமூலர் சொல்லும்
ஒருவா சகமென் றுணர்.
நல்வழி முற்றிற்று.

## 150. 11503 - c - *நன்னெறி*

பொருள்: *நீதி* இதழ்கள்: *10*

அளவு: *38 x 3* செய்யுள் எண்ணிக்கை: *- 40*

நிலை: *நன்று, முழுமை.*

குறிப்பு:

*பக்கத்துக்கு 4 வரிகள். துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் அருளிச் செய்தது. அச்சானது.*

தொடக்கம்:

காப்பு

மின்னெறி சடாமுனி விநாயக னடிதொழ
நன்னெறி வெண்பா நாற்பதும் வருமே.

என்று முகம னியம்பா தவர்கண்ணுஞ்
சென்று பொருள் கொடுப்பர் தீதற்றோர் - துன்று
பூவிற் பொற்குழலாய் பூங்கை புகழவோ
நாவிற் குதவ நயந்து.

முடிவு:

பொன்னணியும் வேந்தர் புனையாப் பெருங்கல்வி
மன்னு மறிஞரைத்தா மற்றொவ்வார் - மின்னுமணி
பிறவுறுப்புப் பொன்னே யது புனையாக்
காணுங்கண் ணோக்குமோ காண்.

## 151. 10405 -a-*நல்வழி*

பொருள்: *நீதி* இதழ்கள்: *10*

அளவு: *36 x 3* செய்யுள் எண்ணிக்கை: *- 40*

நிலை: *பழமை, முழுமை.*

குறிப்பு:

*பக்கத்துக்கு 4 வரிகள். 11503 - b- போன்றதே இப்பிரதி. அச்சானது. இப்பிரதியில் 2 பிரதிகள் நல்வழி உள்ளன. இரண்டாம் பிரதி இறுதியில் ௲௮௱ஆம்ஙீ (கி.பி.1831) நந்தன சித்திரை 5 ௳ (5ந்தேதி) சகவீர பாண்டியபுரம்....ஆசாரிமகன் துளகிரிசாமி சுவடி நல்வழி என்னவென்றால் எடுத்த பேர்கள் கொடுத்துவிட வேண்டியதென்று விண்ணப்பம். அருணாசலயீசுபரர் துணை.*

## 152. 3217 - b- பலபிணி மருந்து

பொருள்: மருத்துவம் இதழ்கள்: 178
அளவு: 25.5 x 3.6 செய்யுள் எண்ணிக்கை: -
நிலை: நன்று, முழுமை. உரை விரவியது

குறிப்பு:

பக்கத்துக்கு 7 முதல் 9 வரிகள். பல அளவுள்ள, பலர் கையெழுத்துள்ள ஏடுகளின் தொகுப்பு. பல்வேறு நோய்களும், மருந்துகளும், செய்முறைகளும் விவரிக்கப்பட்டுள்ளன. அச்சாக வில்லை.

தொடக்கம்:

கிஷாயத்தின் மருந்து

நன்னாரி,அவரைவேர்,பொன்னாங்கண்ணி,அமுக்கிராவேர்,முத்தக்காசு, சீறுகீரை,தாமரைவளையம்,சாரணைவேர்,சீந்தித்தண்டு,லாமிச்சு,வெட்டி தூளப்பா வகை யொன்று பலமூன்று மித்துத்து வகையான் வருகுறுணி மிடாவில் சிலஞ் சேரே வற்றக் காய்ச்சக் கிஷாயம்.

முடிவு:
முருங்கைப் பட்டைச் சாறு வெச்சேன். குடுக்கக் காய்ச்சல், குளிர் மாறல். சுரமென்னப் பட்டதுக்கெல்லாம் சீரகக் கிஷாயத்தில் மூலரோகத்துக்குச் சாதிக்காய் கசாயத்தில். மேகம் இருப்துக்கும் ........................ ......

## 153. 6226 - பலபிணி மருந்து

பொருள்: மருத்துவம் இதழ்கள்: 29
அளவு: 30.5 x 3 செய்யுள் எண்ணிக்கை: - 129
நிலை: சிதைவு, குறை.

குறிப்பு:

பக்கத்துக்கு 8 வரிகள். செந்தூரம், பற்பம், சுண்ணம் என்ற பல்வேறு மருந்துசெய் முறைகளும், நீங்கும் நோய் விபரங்களும் தரப்பட் டுள்ளன. முதல் 80 பக்கங்கள் இல்லை. 81 முதல் 210 வரை 129 பாக்கள் உள்ளன. முன் ஏடுகள் 10 செ.மீ.நீளத்துக்கு முறிந்துள்ளன. அச்சானதாகத் தெரியவில்லை. சிதைவு காரணமாய்

தொடக்கம் எழுத இயலவில்லை. இதனை அடுத்து சில மருந்துசெய் விபரங்கள் 3 இதழ்களிலும், அதனைத் தொடர்ந்து 3 ஏடுகளில் மந்திர, எந்திரங்களும் உள்ளன.

முடிவு:

மற்றினுட சாற்றிலே சாம மொன்று
வாகாக முன்போ லுண்டை செய்து
பெற்றதொரு சாம்பிராணி புகையிற் காட்டி
பெருமையுற்ற வெள்ளியுட் சிமிழ்க்குள் வைப்பாய்
சற்றியுட சாபத்தை நிவிர்த்தி செய்து
சாதகமாய் வயிரவனைப் பூசை பண்ணி
முற்றிபெறுங் குளிகையெல்லாம் முன்பின் பாரா(ய்)
முனையென்ன சன்னியெல்லா முறிந்து போமே.

- உ ா ய -

## 154. 3898 - நைடதம்

பொருள்: காவியம் இதழ்கள்: 311
அளவு: 41.2 x 2.7 செய்யுள் எண்ணிக்கை: - 1070
நிலை: நன்று, முழுமை.

குறிப்பு:

அதிவீரராம பாண்டியரின் நைடதம். அச்சானது. இப்பிரதி 5918, 8123 - நைடதம், 7985 - நளன் கதை (உரையுடன்) என்ற பிரதிகளைப் போன்றதே. பாடலும், உரையுமாக உள்ளது. கொல்லம் ஆண்டு 1016(கி.பி.1841) ஆடி மாதம் 26-ந் தேதி) எழுதியதாக இறுதியில் குறிப்புள்ளது.

தொடக்கம்:

தழைவிரி கடுக்கை மாலைத் தனிமுதற் சடையிற் சூடும்
குழைவெண் டிங்க ளிற்றை கோட்டது குறையென் றெண்ணிப்
புழைநெடுங் கரத்தால் பற்றிப் பொற்புற விரைத்து நோக்கும்
மழைமதக் களிற்றின் செய்ய மலரடி சென்னி வைப்பாய்.

முடிவு:

பெரிய வட்டக் கயங்களின் பிடரியிலே யிருக்கிற யோக பாரச்
சுமையை யிறக்கிய துகள் பிடரி வலி தீரப் பெருமை
பொருந்திய தன்புயத்திலேயிந்தச் சுமையை

வைத்துப்பூலோகத்தையெல்லா மிரட்சித்துக்கொண்டு தானுந்
தமையந்தி யுமாகச் சந்தோஷத் துடனே யிருந்தார்கள்.

## 155. 8140 - a- பல்லி நூல்

பொருள்: சோதிடம் இதழ்கள்: 14
அளவு: 19.3 x 3.3 செய்யுள் எண்ணிக்கை: - 61
நிலை: நன்று, முழுமை.

குறிப்பு:

பக்கத்துக்கு 8 முதல் 9 வரிகள். கெவுளிசாஸ்திரம். தினச் சக்கரம், ராகுப் பாய்ச்சல், சூரியனில் சூரியன், மதியில் மதி, செவ்வாயில் செவ்வாய், புதனில் புதன், சனியில் சனி, ராகுவில் ராகு, நல்வினை, தீவினை நாளறிய என்ற முறையில் அமைத்து விளக்கப்பட்டுள்ளன.

தொடக்கம்:

முந்திய கெவுளித்தான மொழியவ ரறிய வேண்ட
லிந்திர னனலோன் கால னியக்கர்கோன் வருணன் வாய்வுச்
சந்திர னீசன்திக்குச் சாத்திய திசைக ளெட்டு
வந்தவை யறிந்தாக்கன் வருவது வகுத்துச் சொல்வாம்.
-க-

முடிவு:

உச்சக கெவுளி முதல்சாம முயர்கோன் வருசையொன் றிரண்டில்
பட்சமுடன் தூதவன் வரத்துப் பார்வேந்தே மூன்றினிற் கலகம்
அச்சமற நான்கினி லாப மஞ்சி மகிழ்ச்சி யாறுதுக்கம்
எச்சில்வரு மேழிடஞ் சுக்தி யெட்டில் பெரியோர் வருவாரே.
-சாக-

குருவே துணை.

## 156.8068 - a - பஞ்ச தசப் பிரகரணம்

பொருள்: வேதாந்தம் இதழ்கள்: 57
அளவு: 22.5 x 4.1 செய்யுள் எண்ணிக்கை: - உரைநடை
நிலை: சிதைவு, குறை.

குறிப்பு:

பக்கத்துக்கு 9 வரிகள்.

தொடக்கம்:

பஞ்ச தசப்பி....ம வித்தியாரன் ....சுவாமிகள்
லோகாவனுக்கிரக நிமித்தியமாகச் சகல வேதாந்தத்தி ....ய
பொருள்களெல்லாம் மனதிலே சேகரித்துக் கொண்டு சகல
வேதாந்த.....திகரிக்க மாட்டாத பேருக்குஞ் சகல
வேதாந்தமெல்லாம்
படித்தாலு மதனருத்தந் தெளிந்தறிய மாட்டாத பேருக்கு
மெளிதாக வேதாந்தத்தினுடைய....

முடிவு:

....வொட்டாது ஆகையா லாறா மவத்தை கூடுமென்றுத்தரம்
சிதர்பாச....ண்டய வாறா மவ....தயந் தெரிந்துது
தடையற்ற வானந்தத்தை விரள்மா....ச் சொல்லுமென்..ன்ற
சங்கைக்கு இகலோக பரலோகத்தைக் குறித்து.......

## 157. 2315 - b - பந்துப்பாட்டு

பொருள்: *துதி* இதழ்கள்: *4*
அளவு: *19.8 x 2.8* செய்யுள் எண்ணிக்கை: *- 11*
நிலை: *சிறு சிதைவு, முழுமை.*

குறிப்பு:

*பக்கத்துக்கு 5 வரிகள். பரவையம்மன் துதி. அவள் பந்தாடியதாகக் கூறும் துதி நாட்டுப்புறப் பாவடிவில் அமைக்கப்பட்டுள்ளது. பிழை மலிந்து, பேச்சு வழக்கிலியன்றது. அச்சானதாகத் தெரியவில்லை.*

தொடக்கம்:

ஜ ஸ்ரீ....வினில் வரத கண்டத்தில் செனிக்குமெங்கள் நாயகி
ஸ்ரீதரன்றாள் திருக்கயில்வளர் திரிசங்கு சக்கர மூர்த்தியே
பாருலகினில் பணிந்து போத்திட பரவையென்னும் நாயகி
மங்கையனருள் தன்னினாலே பணிந்துஒன்று பந்தாடினாள். -க-

முடிவு:

......ம் வாழி அமரர் வாழி அச்சுத நிறமும் வாழியே
......வான் பார்வதி வாழி ஆறுமுகமும் வாழியே
.....றுமையாகி யமச்சநாட்டில் பிரசைகளெல்லாம் வாழியே
.....றுக்கப் பரவையம்மந் தானும் பெரியேபந் தாடினாள்.

-யக-

## 158. 3946 - f - பூசைக் கொத்து

பொருள்: சமயம் (சைவம்) இதழ்கள்: 2
அளவு: 24.8x5 செய்யுள் எண்ணிக்கை: - உரைநடை
நிலை: நன்று, முழுமை.

குறிப்பு:

பக்கத்துக்கு 19 வரிகள். சிவனைக் குறித்த துதியும், நமசிவாய மந்திரங்களும் கொண்டது.

தொடக்கம்:

திருவு....தெளி பளிங்கு சடா மகுடத்திழி
சிறுபிறையு மூவைந்து திருநயனம் வலப்
பாற் கரதலத்தின் சத்திபையுஞ் சூலநீண்ட கட்ட..
நீது தமருகமு மற்றை யிடக் கரத்தில் வாதமர் துளங்க
பலம் போகி சிவமாலை மணமலி நீலோற்ப
முடைய....

முடிவு:

சிவமூர்த்தியேங் சிவாயங் ஆர்மதத்து வாதி பதியே சிவாயங்
விதியாத் துவாதிபதியே சிவாயநம சிவத்துவாதிபதியே
சிவாயநமசர்வத் துவாதி பதியே சிவாயநமனென
மன்னின்யங் சிவகுருவெங்
யோக பீடாயங் விதியாபீடாயநம.

## 159. 6347 - c - போகநாதர் பூசாவிதி

பொருள்: பூசாவிதி இதழ்கள்: 5
அளவு: 44x3.5 செய்யுள் எண்ணிக்கை: - 44
நிலை: நன்று, முழுமை.

குறிப்பு:

பக்கத்துக்கு 9 வரிகள். அமிர்தத்தின் சிறப்பும், உண்ணுமுன் பூஜிக்க வேண்டிய முறைகளும் இயம்பப்பட்டுள்ளன. இம்முறைகளுக்கு மூலவாசிரியர் காலாங்கிநாயன் எனத் தெரிகிறது. அச்சானதாகத் தெரியவில்லை.

தொடக்கம்:

பாரப்பா வாலைதனைத் தியானஞ் செய்யப்
பாங்கான நவகோண மிட்டுச் சூழச்

சேரப்பா விருவளையம் வாசல் நாலு
சிறப்பாக ரீங்கார மிட்டு நன்றாய்க்
காரப்பா கீழ்வாசல் கணபதியுங் கந்தன்
கருணையுள்ள செயவீர வாகு தேவர்
ஆரப்பா வறைகளிலே கிழக்குத் தொட்டு
அகாரமுட னுகாரசவ்வு மகாரம் போடே.

முடிவு:

காணப்பா தத்துவத்தைப் பிரித்து நன்றாய்க்
கைமுறையாய்க் காலாங்கி யாசான் சொன்னார்
ஆணப்பா யாண்பிள்ளை யாரென் றாக்கா
லமுர்தமுண்டு நிலையில்நின்றா லவனே சித்தன்
வீணப்பா மற்றதெல்லாம் நாய்வால் பத்தி
வெள்ளத்தைக் கடத்துவோ மென்ற வெத்தி
பூணப்பா யிந்தமுறை யாருங் காணார்
புரையுயர்ந்த சூத்திரந்தான் முடிவு முத்தே.

*லோகனாத மூர்த்தி அருளிச்செய்த சூத்திரம் நாற்பத்தினாலு முற்றிற்று.*

## *160. 6347 - b - போகநாதர் சோடச சூத்திரம்*

பொருள்: *மருத்துவம்* இதழ்கள்: *3*
அளவு: *44 x 3.7* செய்யுள் எண்ணிக்கை: *- 51*
நிலை: *நன்று, முழுமை.*

குறிப்பு:

*பக்கத்துக்கு 9 வரிகள். முப்பூ விபரங்கள் தெளிவுறுத்தப்பட்டுள்ளன. அச்சானதாகத் தெரியவில்லை.*

தொடக்கம்:

முப்பாழுக் கப்பால் முதலான நிற்குணப்பாழ்
அப்பாழ் வழலை யறிவீரால் - எப்போதுந்
தானவனாய் நிற்குஞ் சகலகுரு வானதொன்றாம்
ஆனைமுகன் காப்பாம் அறி.

ருக

முடிவு:

வானுறு சூடனொன்று வாருதி யுப்ப தொன்று
கானுறு கல்லினாதங் கலரிது வன்னபேதி
ஊனுறு மமுரிமந்திர உமுரியின் பூவாமுத்தே.

## 161. 6347 - a - போகநாதர் எழுநூற்றறுபது

பொருள்: மருத்துவம் இதழ்கள்: 84
அளவு: 44 x 3.7 செய்யுள் எண்ணிக்கை: - 760
நிலை: நன்று, முழுமை.

குறிப்பு:
*பக்கத்துக்கு 8 முதல் 10 வரிகள். பல்வேறு மருந்துசெய் முறைகள் விவரிக்கப்பட்டுள்ளன. அச்சான விபரம் தெரியவில்லை.*

தொடக்கம்:

ஆனந்த மாய்நிறைந்த வாயி பாதம்
அகண்டபரி பூரணமா மய்யர் பாதம்
வானந்த மாய்நிறைந்த கிணேசன் பாத
மருவியதோர் மூலத்தி னந்தி பாதம்
தானந்த மாகியதோர் காலாங்கி பாதஞ்
சகலருடன் வியாக்கிறமர் பதஞ்சலிதன் பாதம்
போனந்த மாகியதோ ரிஷிகள் பாதம்
போற்றியெழு நூற்றிரட்டுப் புகலாங் காப்பே.

முடிவு:

சொன்னதொரு சூஷ்திரத்தில் பொய்யொன்று மில்லை
துலங்கியதோர் மணித்தாயை யெழுதரந் துதித்தேன்
சொன்னதொரு குருபதத்தை அனுதினமுந் துதித்தேன்
துலங்கியதோர் மூலருட பதத்தையென்றுந் தொழுதேன்
சொன்னதொரு காலாங்கி அய்யருட பதத்தைத்
தொழுதுகொண்டு யேழுநூற் றறுபத்தாச் சொன்னேன்
சொன்னதொரு சித்தருட பதங்கள் போற்றி
சூஷ்திரந்தான் பாடியது கடைசி முற்றே.

*சுபானு ௵ தை ௴ உயஅ ௳ ஸ்ரீகுரு கல்யாண சுவாமியுடைய அன்பன் சென்னய்யன் எழுத்து.*

## 162. 6347-d- போகநாதர் கொடைமுறை

பொருள்: மருத்துவம் இதழ்கள்: 3
அளவு: 44x3.5 செய்யுள் எண்ணிக்கை: - 26
நிலை: நன்று, முழுமை.

குறிப்பு:

பக்கத்துக்கு 10 வரிகள். வைப்புச் சரக்குகள் பற்றி விவரிக்கின்றது. இதற்கு மூலவாசிரியர் நந்தீசர் எனத் தெரிகிறது. அச்சானதாகத் தெரிய்வில்லை.

தொடக்கம்:

தந்திமுகத்தைக் காணென் றருளும் பெற்ற
தாயெனக்குக் கருணைபுரிந் தளித்தவர்க்கு
வந்தெனக்கு நந்தீச ரெனக்குச் சொன்ன
வைப்புமுறை யிருபத்தி யாறும் பாட
மந்திரத்தோன் குருவாகும் பட்டை
மகத்தான வாசமப்பா வறியவேண்டு
மிந்திரனுரு நாலு பத்து வாசமஞ்சு
வியல்பாகக் கொடைமுறை யிறக்கி டாயே.

முடிவு:

சுழுகாகு மின்னூல்போ லொன்று மில்லை
சொற்பெரிய காலாங்கி யையர் பாதம் போற்றி
சுழுகாகு முன்னூலி லிருபத் தைஞ்சிற்
சூட்டினேன் கருக்குருவுந் திறமா யப்பா
சுழுகாகு மிந்தநூல் கிட்டித் தானாற்
சுகமாக யெனைப்போலே வாழ்வார் பாரு
சுழுகாகும் வைப்புக்குத் திறவு கோலாஞ்
சூத்திரமாய்ப் பாடினதோர் காசி முற்றே.

-உ

போகநாதர் கொடைமுறைச் சூத்திர முற்றிற்று.

## 163. 9593 - பாச விலாசன் கதை

பொருள்: புராணக்கதை இதழ்கள்: 42
அளவு: 37x3.7 செய்யுள் எண்ணிக்கை: - சுமார் 750 வரிகள்
நிலை: சிதைவு, குறை.

குறிப்பு:

பக்கத்துக்கு 9 வரிகள். 120,128,132,136-142,147-149 152, 156-158 -ஆம் இதழ்களைக் காணவில்லை. மிருக வியாதீதன் கதை, சதவுருத்திரன் கதை, பகீரதன் கதை, வேதாளக்கதை என்று பல கதைகளும் விபூதி மான்மியம், உருத்திராட்ச மான்மியம் என்ற மான்மியங்களும் அடங்கியுள்ளன.

தொடக்கம்:

தரும முழுதையு முணர்ந்த....காலந் தளர்வு தீர்ந்தோ
யருவினையே னைய்யா பாடறுத்தியா லைய்யம்போ
லகந்தையுண்டோ
யிருநிலத்தோன் கோற்கீ......

முடிவு:

உந்தியங் கமலத்தோங்குந் திசைமுகத் தொருவன்செல்(ல)
வந்தரத் திமையோர் யாரு மன்னுவர்க் கெதிரே வானத்
துந்துமி முழங்க மற்றைப் பல்லியந்...வப்பப் பொன்னாட்டு
இந்திர னெதி(ர்)நின் றேத்தத் தன்னுல கெய்தி னானால்.

## 164.6809 பாம்பு கடி மருந்து

பொருள்: விஷவைத்தியம் இதழ்கள்: 65
அளவு: 19.3x4 செய்யுள் எண்ணிக்கை:- விரவியது
நிலை: நன்று, முழுமை.

குறிப்பு:

பக்கத்துக்கு 7 முதல் 8 வரிகள். மலையாள எழுத்தில் அமைந்துள்ளது.

## 165.5641 - C - பாண்டவர் வனவாசம்

பொருள்: *நாட்டுப்புறக்கதைப்பாடல்*
அளவு: *30.7 x 3*
நிலை: *சிதைவு, குறை.*
இதழ்கள்: *39*
செய்யுள் எண்ணிக்கை: - *சுமார் 1200 வரிகள்*

குறிப்பு:

*பக்கத்துக்கு இருபகுதிகளாக 16 முதல் 19 வரிகள். பஞ்ச பாண்டவர்கள் வனவாசம் சென்ற மகாபாரதக் கதை, அம்மானை வடிவில் பாடப்பட்டுள்ளது. இடையிடை பல இதழ்களைக் காணவில்லை. ஒர முறிவினால் இதழ் எண்ணும் அறிய இயலவில்லை. ஐவர் அம்மானை என மதுரை காமராசர் பல்கலைக் கழக ஆசிரியர் விநாயகமூர்த்தி அண்மையில் வெளியிட்டுள்ளார்.*

தொடக்கம்:

(ந)டந்தார் வனவாசம் நால்வருமாய்த் தான்கூடி
(கட)ந்தார் வெகுதூரங் காடுமது தான் தேடி
....ன்னோ ரெனப் புவியில் வாளகிரி மாமலையில்
(போ)னார்கள் நல்ல புதுமையெல்லாந் தானறிந்து.

முடிவு:

நந்த கோபால ரெங்கள் நரசிங்க மூ....
தன்மருந் தம்பியருந் தான்போற்றி....
மின் மருவு திண்புயனே வேத நாராயண
நாலுமுகந் தானிரு(ந்)து நடப்பீ ரிருப்பீர்க(ள்)
மேலு மிருப்பீர் மேதினியுந் தானாள்வீ(ர்)

## 166. 5762 - பாண்டவர் வனவாசம்

பொருள்: *நாட்டுப்புறக் கதைப்பாடல்*
அளவு: *39.7x3.5*
நிலை: *நன்று, குறை.*
இதழ்கள்: *52*
செய்யுள் எண்ணிக்கை: - *சுமார் 1660 வரிகள்*

குறிப்பு:

*பக்கத்துக்கு இருபகுதிகளாக 16 வரிகள். 1-18, 19-31, 33-48, 52, 53, 55-58, 60-69, 71-79, 81-87, 90-107, 112-114,*

*117-119, 121-125, 127-131, 133-136, 138, 139, 141-161, 163, 164, 167-170, 172, 174-188, 190, 194-213, 221-225, 233-235 237, 239, 244, 245-* ஆகிய இதழ்களைக் காணவில்லை. அச்சானதாகத் தெரியவில்லை.

**தொடக்கம்:**

உத்ததோர் வசனங்கேட்டு ஒருநொடி தன்னில் தூதன்
அத்தினா புரியில்சென்று ஐவரை வணங்கி நின்று
கத்தனா ரருளிப்பாடல் கருதியே யுரைத்தபோது
சித்தமே மகிழ்ந்து தன்மர் சீக்கிர பயணமென்றார்.

**முடிவு:**

கடுத்து வயிறொழுகில் கண்டிக் கொண்டையுடன்
அடுத்து நடுக்கமது சந்து வாதமுதல்
வலிப்பு விசிப்பு வறநோய் வறசியுடன்
கலிப்புப் பிளவை கண்ணாசி விற்புருதி

## *167. 9067 - பாண்டவர் வனவாசம்*

பொருள்: *நாட்டுப்புறக்கதைப்பாடல்* இதழ்கள்: *31*
அளவு: *32.8x3.7* செய்யுள் எண்ணிக்கை: -
நிலை: *சிறு சிதைவு, குறை.* *சுமார் 868 வரிகள்*

**குறிப்பு:**

பக்கத்துக்கு இருபகுதிகளாக 17 முதல் 22 வரிகள். அச்சுப் புத்தகத்தினின்றும் வேறுபட்டது.

**தொடக்கம்:**

சீராரும் பஞ்சவர்க(ள்) சீமைவிட்டுக் காடுறைந்து
வண்டுறையும் பூங்கா வனத்தி லிருக்கையிலே
தேசத்தை யாளுங் திரியோதனன் பாவி
வஞ்சமற்ற பாவி வணங்கா முடிவேந்தன்.

**முடிவு:**

சங்கை யுடனே சடுதியில் கறைக்கு
கொள்ளலென்று சொல்லி கூறி வர விட்டதினால்
அந்தமுள்ள சுந்தரியை தோன்றிவிட்டா லெந்தனுக்கு
ஆகையி னாலே அன்னபிரா னடியேன்

## 168. 11379 - g - பெரியபுராண செய்யுட்டிரட்டு

பொருள்: *சமயம்(சைவம்)* இதழ்கள்: *9*
அளவு: *22.8x3* செய்யுள் எண்ணிக்கை: *- 34*
நிலை: *நன்று, முழுமை.*

குறிப்பு:

*பக்கத்துக்கு 7 வரிகள். சேக்கிழார் அருளிய பெரிய புராணத் தினின்று சில பாடல்கள் திரட்டிக் கூறப்பட்டுள்ளன.*

தொடக்கம்:

உலகெலா முணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதிய னம்பலத் தாடுவான்
மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்.

முடிவு:

தனிவேள் விடைமே னெடுவிசும்பிற் றலைவர் பூதகண நாதர்
முனிவ ரமரர் விஞ்சையர்கள் முதலா யுள்ளோர் போற்றிசைப்ப
இனிய கறியுந் திருவமுது மமைத்தார் காண வெழுந்தருளிப்
பணிவெண் டிங்கண் முடிதுளங்கப் பரந்த கருணை
நோக்களித்தார்.

ஙூ -

## 169. 8818 - பஞ்சதந்திரக் கதை

பொருள்: *நீதிக்கதை* இதழ்கள்: *104*
அளவு: *26x2.8* செய்யுள் எண்ணிக்கை: *- 530*
நிலை: *நன்று, முழுமை.*

குறிப்பு:

*பக்கத்துக்கு 5 முதல் 7 வரிகள். ஐந்து வகையான வாழ்க்கை நெறிகளை (மித்ரபேதம், சுகிர்லாபம், அர்த்தநாசம் ,சம்பிரேஷம், காரியத்வம்)எனக்கூறும் வடமொழி நூலின் தமிழ்மொழி பெயர்ப்பு. ஆசிரியர் மார்த்தாண்டர்.அச்சானது.*

தொடக்கம்:

திருவளர் கமலவாவி திகழ்புலி யூரிற் செம்பொன்
மருவிய பொதுவிலாரும் வள்ளலைப் போற்றி(செய்தே)

(பெருகிய)வுபாயநீதிப் பேரறி வுடைய நீரார்
கருதிய பஞ்சதந்திரக் கதையையான் கழற லுற்றேன்

முடிவு:

ஐவகைத் திறத்தி னடைவைநான் றமளி னாலே
ஐயிவ்வகை யறிந்தவாறிங் கியம்பினன் புலமை மிக்கோர்
செவ்விதி னுவப்பர் தங்கள் சிறுவர்சொற் பழுதா(னா)லும்
அவ்வகை பெரியோராகி யகமகிழ்ந் துவப்ப ரன்றே.

## 170. 8069 - பஞ்சதந்திரக் கதை

பொருள்: *நீதிக்கதை* இதழ்கள்: *54*
அளவு: *38.4x2.8* செய்யுள் எண்ணிக்கை: *- சுமார் 750 வரிகள்*
நிலை : *சிதைவு, குறை.*

குறிப்பு:

*பக்கத்துக்கு 7 வரிகள். முன், இறுதிப் பகுதிகளில் இதழ்கள் இருபுறமும் சிதைந்துள்ளன. 42-44, 51-53 ஆகிய இதழ்களைக் காணவில்லை. பஞ்சதந்திரப்பாயிரம் கவி 14, மித்திரபேதகம் கவி 202, சுகர்லாபம் கவி 140, அர்த்தநாசக் கதைக் கவி 41, சம்பிரே(டி)க் காரியத்துவக் கதை கவி 58 ஆக 455 கவிதைகள் என இறுதியில் குறிப்புள்ளது. 8818 - பஞ்சதந்திரக் கதை போன்றதே.*

## 171. 4103 - b - பஞ்சதந்திரக் கதை

பொருள்: *நீதிக்கதை* இதழ்கள்: *12*
அளவு: *35x 3.4* செய்யுள் எண்ணிக்கை: *- உரைநடை*
நிலை: *நன்று, குறை.*

குறிப்பு:

*பக்கத்துக்கு 6 வரிகள். 12-ஆம் இதழினின்றும் தொடங்கு கின்றது. முதல், முடிவு இல்லை.*

தொடக்கம்:

புத்திர னல்லவா வெனத் தமனகன் சுவாமி யென்று வணங்கிச்
சும்மா விருந்தது. சிங்க மேதாவது சொல்ல வேண்டியிருந்தாற்
சொல்லென தமனகன் ,தேவரீர் தண்ணீர் குடியாமல் மெய் மறந்து
சும்மா நிற்கிறீரென.......

முடிவு:

அதைக் கேட்டு கொக்கு பேராசைப்பட்டுத் திரும்பி யந்தக்குளத்துக்கு நேரே வருகையில், நண்டு கொடுக்கினா லந்தக் கொக்கின் கழுத்தை இரண்டு துண்டாக நறுக்கிக் குளத்தில்வீழ்ந்து சுகமாய் வாழ்ந்தது. ஆகையா லந்தக் கொக்கைப்போலப் பாம்பையுங் கொல்ல வேண்டுமெனக் காகம் அப்படிப்பாம்பைக் கொல்ல நான் செய்ய வேண்டிய வுபாய மென்னென்றுகேட்க ,நரி நீயிப்பட்டணத்து ராஜ......

## 172. 7961 - பஞ்சதந்திரக் கதை

பொருள்: நீதிக்கதை இதழ்கள்: 74
அளவு: 42.3x3.9 செய்யுள் எண்ணிக்கை:- உரைநடை
நிலை: சிறு சிதைவு, குறை.

குறிப்பு:

பக்கத்துக்கு 9 வரிகள். மித்திரபேதக் கதை மட்டும் உள்ளது.

தொடக்கம்:

பாடலிபுரமென ஒரு பட்டணம். அந்தப் பட்டணத்துக்குச் சுக தெரிசனனென் றொரு ராசா. அந்த ராசாவானவர் சகல சாஸ்திர வல்லவனாய் மனுநீதி வழுவாமல் அமரசந்திர(ன்)என்கிற ழந்திரியுடனே ராச்சிய பரிபாலனம் பண்ணுகிற நாளிலே .....

முடிவு:

வெற்றி பெறுகிறது மந்திரி யூகத்தினாலே யல்லாது வேறில்லை யென்று(ராச)குமாரர்களுடனே சோமசன்மா வென்(ற) பிராமணி சொல்ல வருகின்றா ரென்றவாறு. சுசயளு (கி.பி.1868) அப்பிசி ூ(ஐப்பசி மாதம்)சுக்கிர வாரத்தன்று சொரிமுத்துக் கோனரர் குமாரன் சொக்கலிங் கக் கோனார் எழுதினது.

## 173. 8809 - பஞ்ச தந்திரக் கதை

பொருள்: நீதிக்கதை இதழ்கள்: 137
அளவு: 41 x 3 செய்யுள் எண்ணிக்கை: - உரைநடை
நிலை: சிறு சிதைவு, குறை.

**குறிப்பு:**

*பக்கத்துக்கு 5 முதல் 7 வரிகள். முதல் இதழ் இல்லை. இறுதி 13 இதழ்கள் இடது கீழ்ப்புறமாக 3.5 செ.மீ. நீளத்துக்குச் சிதைவு பட்டுள்ளன.*

**தொடக்கம்:**

பிராணனை எண்ணலாகாது. பாத்திர மறிஞ்சு தியாபத
கோகேக(?)வேணும். குணமறிந்து கிறிசிக்க(?)வேணும்.
பந்து சனங்களோடே போக போக்கிய மனுபவிக்க வேணும்.
யுத்த களத்திலே போனால் யுத்தம் பண்ண வேணும்.

**முடிவு:**

...(சந்)தோசப்பட்டு பிராமணனு....குமரன் பண்ணினான்.
அதின் பிறகு தானும் பிள்ளைகளுமாக ராட்சிய பரிபா.....
தார்கள்.
*பஞ்ச தந்திரக் கதை முகிந்தது. முற்றும்.*
*நல்லா(ப்)பிள்ளை மகன் அருணாசலம் எழுதின சுவடி.*

## *174. 5452 - பாண்டவர் அசுவமேத யாகம்*

**பொருள்:** *கதை* **இதழ்கள்:** *180*
**அளவு:** *43.7 x 3* **செய்யுள் எண்ணிக்கை:** *- உரைநடை*
**நிலை:** *நன்று, முழுமை.*

**குறிப்பு:**

*பக்கத்துக்கு 5 முதல் 6 வரிகள். பாண்டவர்கள் அசுவமேத யாகம் செய்த கதை நாட்டுப்புறக் கதை வடிவில் இயற்றப் பட்டுள்ளது. அச்சான விபரம் தெரியவில்லை.*

**தொடக்கம்:**

*சினமே செய முனியானவர் சினமேச ராசனைப் பார்த்து,
வாரும் சினமேச ராசனே! ஒங்கள் பாட்டனார் காலத்தில்
பதினெட்டுனாள் பாரத யுத்த(ம்) நடத்தியிருக்கிற
அதிசெயத்தைச் சொல்லுகிறேன். வெள்ளைப் பாண்டு மகராசன்
குமாரர் தர்மராசன்.........*

முடிவு:

மானும் புலியும் ஒரு துறையிலே தண்ணீருண்ண நீதி முறை தவறாமல் தினமொன்றுக்கு லெட்சம் பிராமணாளுக்கு சாச்சி போசனஞ்செய்து ஆலையங்களுக்கும் தேர்த்திருனாள் நடத்தி, அத்தினாபுரியிலே தர்மராசன், தம்பிமார், மந்திரிமார் இவர்களுடன் அரசாட்சி செய்து வந்தார்கள்.

கேட்டீரோ செனமேசராசனே யென்று செபமுனி சொன்னா ரென்றவாறு.

சூகய [illegible] (கி.பி.1916)ஐப்பசி [illegible] ரு (5-ந்தேதி)சரசுவதி பூசையன்று அசுவமேத யாகம் ராமயன்பட்டி முசுப்புத் தேவர் எழுதி முகித்தது.

## 175. 5776 - பஸ்ம சிந்தூர வகைகள்

பொருள்: மருத்துவம் இதழ்கள்: 114
அளவு: 21x3.2 செய்யுள் எண்ணிக்கை: - விரவியது
நிலை: நன்று, [illegible]

குறிப்பு:

பக்கத்துக்கு 6 வரிகள். மருத்துவச் செய்திகளின் தொகுப்பு. இடையிடை பாடல்கள். முதல் முடிவு இல்லை. அச்சானதாகத் தெரியவில்லை.

தொடக்கம்:

(தி ரு)கு கள்ளிப்பால் ஊத்தின விளக்கெண்ணை யீர் வெங்காயச்சாறு இலுமிச்சம் பழச்சாறு இவைகள்(வ) கை ஒன்றுக்கு நாழிகை விட்டரைத்து பருத்திக் கொட்டை பிரமாணம் குளிகை பண்ணி வெ ன்னீரில் குடுக்க வயறு கழியும்.

முடிவு:

புதிரெட்டுக் குட்டத்துக்கும் வெருகன் கிழங்கும் விளாம் பொருக்கும் தயில மிறக்கிக் கற்பங் கூட்டித் தயில்மிட நிற்கும். சூலைக்கு மிந்தப்படி தயில....(க)ரனாங் கள்ளிக் கற்ப....முற்றும்.

## 176. 1199 - பக்த சரித்திரம்

பொருள்: புராணக் கதை இதழ்கள்: 165
அளவு: 40.5 x 3.7 செய்யுள் எண்ணிக்கை:- உரைநடை
நிலை: சிறு சிதைவு, முழுமை.

குறிப்பு:

பக்கத்துக்கு 6 முதல் 8 வரிகள். பக்த சரித்திரக் கதைகளின் தொகுப்பு. சில கதைகள் கிரந்தத்தில் உள்ளன.

## 177. 1559-e- போகர் நாயன் சூத்திரம் ஐம்பது

பொருள்: மருத்துவம்(கற்பம்) இதழ்கள்: 8
அளவு: 11 x 2.7 செய்யுள் எண்ணிக்கை:- 52
நிலை: நன்று, முழுமை.

தொடக்கம்:

முப்பாழுக் கப்பால் முதலான நிற்குணம்பார்
அப்பாம் வழலை யறிவீரார் - எப்போதுந்
தானவனாய் நிற்குஞ் சகலகுண வானதொன்றா
மானைமுகன் காப்பா மறி.

முடிவு:

வானுறு சூடனொன்று வாருதி யுப்பதொன்று
தானுறு சாரமொன்று தனித்திடு சீனமொன்று
கானுறு கல்லிநாதங் க.....ரிது யமுத பேதி
ஊனுறு மமுரிமந்திரம் வமுரியின் பூவாமுற்றே
ருஉ

## 178. 1559 - b- போகர் நாயன் சூத்திரம்

பொருள்: முப்பூ இதழ்கள்: 9
அளவு: 11 x 2.7 செய்யுள் எண்ணிக்கை:
நிலை: நன்று, முழுமை.

தொடக்கம்:

பெரியோர்கள் பாதத்தைப் போற்ற வேணும்
பேசரிய மெஞ்ஞானம் கற்க வேணும்

அரிதான மூன்றெழுத்தை யறிய வேணும்
அப்பனே முப்பூவை முடிக்க வேணும்
விரிவான சாத்திரத்தைப் பார்க்க வேணும்
வேதாந்த வடுகனுட பூசை வேணுங்
கரிமுகவன் தனைப்பணிந்து ஆத்தாள் தீட்சை
கற்றவர்க்கு வாதமுறை கைக்குள் ளாமே.

முடிவு:

பாத்திடவே யின்னூற்குக் குருச்சொல் வேண்டாம்
பராபரையைப் பூசித்த பண்புள் ளோர்கள்
பாத்திடவே வாதமெல்லாஞ் சித்தி யாகும்
பாலகனே யின்னமொரு பான்மை கேளு
சூத்திரமார் கடைக் காண்ட சூத்திரத்தில்
சொல்லிவைத்தேன் கருவையெல்லாஞ் சூட்சம் பெற்றோர்
பாத்திடவே பொருள்வாழி காலாங்கி வாழி
பரம்பெற்ற நாய(ன்)மார் வாழி முற்றே.

முற்றும்.

## *179. 5954 - f - பிரமமுனி நூல்*

பொருள்: *மந்திரம்* இதழ்கள்: *6*
அளவு: *31.5 x 3.6* செய்யுள் எண்ணிக்கை: - *25*
நிலை: *நன்று, முழுமை.*

குறிப்பு:

இதனை அகத்தியருக்கு பிரமமுனி கூறியதாகக்குறிக்கப் பட்டுள்ளது இதனை அடுத்து பிரமமுனி அகத்தியர்க்குக் குடிநீர் சொன்ன விபரம் என்ற சிறுதலைப்புடன் ஏடு முடிகிறது.

தொடக்கம்:

பிர்மமுனி அகஷ்தியர்க்கு வுரைக்கும் வாக்கு
...ய்ப் போக்குமென் றுள்ளி வைய்யா
கர்மமது உண்டான படியதினால் யானும்
...உள்ளறிவு கூறினே......
வர்மமது அணுகாமல் ம..னும் கூறி
வரிசைபெற மூலிகைதன் னுளத்தில் புகட்டினேன்
கர்மமது வருவதுவுஞ் சகலகலை வல்லவனாய்ப்
பேறுபெற நலமதாக் காற்ப தாமே.

முடிவு:

அணையாலே ரேகமெல்லா குளிரோ யில்லை
அன்பான பெரியோர்க ளழைக்கச் செய்வார்
கணையாலே யெய்தாக்கால் காய மில்லை
(இ)ராக்காலங் கணங்களுட ஒளியே தாண்டும்
வணையாலே ரேகத்தில் தயிலம் பூச
தப்பாமல் சூரியனு மேலே கொள்ளார்
பணையாலே சிரசுமேல் தயிலம் பூச
(ப) கண்டபடி மழையதுதான் மேலே நனையார்.
குருவே துணை.

## 180. 5449 - b - பெருமாள் திருமொழி

பொருள்: *சமயம்* இதழ்கள்: *6*
அளவு: *41 x 3.1* செய்யுள் எண்ணிக்கை: *- 11*
நிலை: *நன்று, குறை.*

குறிப்பு:

*''தில்லை நகர்த்திருச் சித்ர கூடாமல் தொல்லி ராமனாய்த் தோன்றிய கதை'' - எனத்தலை இதழில் ஓரத்தலைப்பு இடம் பெற்றுள்ளது. அச்சானது.*

தொடக்கம்:

அங்கனெடு மதிள்புடைசூ ழயே(ா)த்தி யென்னும்
அணிநகரத் துலகனைத்தும் விளக்கும் சோதி
வெங்கதிரோன் குலத்துக்கோர் விளக்காய்த் தோன்றி
விண்முழுது முய்யக்கொண்ட வீரன் றன்னை
செங்கணெடுங் கருமுகிலை யிராமன் றன்னைத்
தில்லைநகர்ச் திருச்சித்ர கூடந் தன்னுள்
எங்கள்தன் முதல்வனை யெம்பெருமான் றன்னை
யென்று கொலோ கண்குளிரக் காணு நாளே.

முடிவு:

தில்லைநகர்த் திருச்சித்ர கூடந் தன்னுள்
திறல்விளக்கு மாருதியோ டமர்ந்தான் றன்னை
எல்லையில்சீர்த் தயரதன்றன் மகனுய்த் தோன்றிற்று
அதுமுதலாத் தன்னுலகம் புக்க தீறா

கோழியர் கோன்குடைக் குலசேகரன் சொற்செய்த
நல்லியலின் தமிழ்மாலை பத்தும் வல்லார்
நலந்திகழ் நா ரண னடிக்கீழ் நண்ணுவாரே.

அங்கண்வந்து செவ்வரி தொத்து வலிதனம் குரை
அம்பொன் செறி அன்றுதில்லை பூநிரை
குலசேகரப்பொருமாள் திருவடிகளே சரணம்
ஜீயர் திருவடிகளே சரணம். பெருமாள் திருமொழி சம்பூரணம்.
ஆக
திருமொழி யாக்கும் பாட்டு. ளரு.

## *181. 8026 - a - பிள்ளையார் சிந்து*

பொருள்: *துதி* இதழ்கள்: *3*
அளவு: *38 x 3* செய்யுள் எண்ணிக்கை: *- தொடர் பாடல்*
நிலை: *நன்று, முழுமை.*

குறிப்பு:
*பிள்ளையாரைத் துதி செய்து சிந்து வடிவில் பாடப் பட்டுள்ளது.*

தொடக்கம்:
வேளை முகத்து விநாய(க)னைத் தொழ
வாழ்வு மிகுத்து வரும்
வித்தை முகத்து விஞயகனைத் தொழ
புத்தி மிகுத்து வரும்
அத்திமுக துத்த மனை
நித்தம் நினை சித்தமே.

முடிவு:
குருவை நினைக்கின் றோர்தமக்கு
குறையத்த வாழ்வைக் கொடுப்பீர்.
அருளும் பொருளு மாண்டாக்கி வப்பீர்
அத்தனை வள்ளி.....றனே.

*பிள்ளையார் சிந்து முற்றும். (கி.பி.1910)மாசி மூகூவ ( 6 - ந் தே தி ) புதன்கிழமை உத்திர (ா)ட நட்செத்திரத்தில் முற்றும்.*

## 182. 8889-a- பரிபாஷை
## (மூன்று, நர்ன்கு, ஐந்தாம், காண்டங்கள்)

பொருள்: மருத்துவம் இதழ்கள்; 21
அளவு: 35.5 x 3.3 செய்யுள் எண்ணிக்கை: —
நிலை: நன்று, முழுமை.

குறிப்பு:

நாத விந்து, வழலை, அமிர்தம், முப்பூ, அண்ட விபரம் போன்ற பரிபாஷைச் சொற்கள் விவரிக்கப்பட்டுள்ளன.

தொடக்கம்:

சிவமான பூரணமே நாத விந்து
சின்மயமாய் நின்றதொரு பரமே சத்தி
உவமான மில்லாத பரந் தனக்கு
முனையாகி நின்றதொரு நாதம் நாதம்
நவமான நாதவிந்து ரெண்டு மொன்றாய்
நளினமுள்ள பரிதிமதி சுடர்தா னாச்சு
பவமான யிந்தநூல் மூணாங் காண்டம்
பராபரமே ஐங்கரனே காப்புத் தானே.
-க.

முடிவு:

மிதுவென்ற -அண் ட பகிரண்ட மென்று
மகத்தான மதுபே ரண்ட மென்றும்
பதுவென்ற பரமென்ற அஞ்சாங் காண்டம்
பகருமொழி ஓரடைப் பதியு மென்று
மதுவென்று மவுன அண்ட மிதுவே என்று
மகத்தான என்குருவு முபதே சித்தார்
சதுவான சற்குருவு மிதுவே யென்று
சமரசத்தின் பிரமமென்று சார்வே முற்றே.
எ

குருபாதமே கெதியாக வேணுமென்று இருக்குறேனிதுவே சரி.
-ருஉ-

## /83. 379/ - e- பரிபூரண சூத்திரம்

பொருள்: மருத்துவம் இதழ்கள்: 52

அளவு: 30.3x3.2 செய்யுள் எண்ணிக்கை: - உரை விரவியது

நிலை: நன்று, குறை.

குறிப்பு:

நவலோக பற்பங்களும், போக்கும், வியாதிகளும் சிறப்பாகப் பேசப்படுகின்றன. அச்சானதாகத் தெரியவில்லை.

தொடக்கம்:

காற்செறி மெய்யன் வெண்மை கடவுளுங் காணாப்பாதம்
போற்பொ ருண்மை தன்னைப் புறநூலின் போற்றத்
தாற்செறிக் கொன்றை சூடி தாய் சரசுவதி தந்தன
மாமத யானைப்பிள்ளை யார்பதங் காப்ப தாமே,

-க-

ஒன்றான பூரணமு மாறா தாரம்
உரைப்பதற்கு மேலாருந் தொண்ணுத் தாறு
பன்றான தீட்சை பதீரெண்டு ரெட்டி
பத்துடனே முப்பத்தி ரெண்டு திட்சை
உண்டான சமாதிகற்ப வாசி நேர்மை
உறைப்பான சிவயோகம் பிராணா யாமம்
நன்றான வாதத்தின் திட்சை யோடு
நலமான சவுக்காரத் திறவு கோலே.

முடிவு:

அப்பைக் கிழங்கு குகையாகச் செய்து, சீலைமண் செய்து, குடத்தில் வைக்க நீறிப்போம். பொரிகார கட்டி வாங்கி, சங்கு னீத்தி, அதை குகை செய்துநீளர பொரிகாரம் வைத்துச்சீலை செய்து குடத்தில் நீறிப்போம். நீரடைப்பு முதலானது தீரும். தாம்பிரத்துக்கு வெள்ளைருகுச்சாறு விட்டு அரிதாரத்தை அரைத்து தாம்பிரத்துக்குக் கவசம் செய்து கிசபுடம் போட பற்பம். புடம்ரெண்டு அண்டத் தோடு, அரைத்து தாம்பிரத்துக்குக் கவசம் செய்து கிசபுடம் போட பற்பம். விருகங்கிழங்கு தொண்டு வந்து குடைந்து ஈயத்தை வைத்து அம்பது வறட்டியில் பற்பம்.

## 184. 4/10 - a - பிரம பத்திர காண்டம்

பொருள்: சமயம்(சைவம்) இதழ்கள்: 4
அளவு: 15.3 x 3.7 செய்யுள் எண்ணிக்கை:- சுமார் 96 வரிகள்
நிலை: நன்று, முழுமை.

குறிப்பு:

பக்கத்துக்கு 12 வரிகள். எழுத்துகள் மிகச் சிறியனவாக உள்ளன.

தொடக்கம்:

பங்கயத் தவிசின்மேவி யிருந்துடற் பற்று நீக்கி
அங்குநற் பூதசுத்தி யடைவுடன் செய்து பின்னர்
கங்கையைத் தரித்தசென்னி கற்பகத் தருவைச் செம்பொன்
கொங்கைவேற் பனையபச்சைக் கொடியொடு முறத்தில்
வைத்தே.

முடிவு:

என்றுதமிழ்க் குறுமுனிவன் பள்ளியொடு மிருநிலத்தி லிறைஞ்ச
லோடும்
நன்றுனது துதிமகிழ்ந்தே னான்மறையோ யித்துதியை
நவின்றோர் யாரும்
பொன்றவரும் பெரும்போக னுகந்திடுவ ரீங்கிதனைப்
பொறித்த வெரு
மன்றன மனையகத் திருப்பின் வறுமைதரு த்வ்வையவள்
மருவல்செய்யாள். -ஏ-

## 185. 1/403 - பாவ பலன்

பொருள்: சோதிடம் இதழ்கள்: 99
அளவு: 18.2 x 2.9 செய்யுள் எண்ணிக்கை:- உரை விரவியது
நிலை: நன்று, குறை.

குறிப்பு:

இதழ்கள் முறைமாறி உள்ளன. இடையே தொடர்பில்லாது பல செய்திகள் உள்ள ஏடுகள் உள்ளன. கெர்ப்பந்தரிக்க, என்ற சிறு தலைப்பி னின்று தொடங்கும் ஓலை முன்பு உள்ளது. பிழைகள் மலிந்துள்ளன.

தொடக்கம்:

தகரியாய்ப் புத்திரேசன் கழத்திறாகியும் பிலனாய்ச் சார
யகில மாமாறோன் பார்க்கப் பரவிந்து திரியுண்டாவள்
பகரி வேழுடையோன் வாக்கோன் பாவியளு டவன்கூடச்
செகமுடைச் செகமுடைவனே பார்க்கில் செலாதரிக்குங்
கொர்ப்பம்

முடிவு:

சாற்றிய தளத்தான் தான் தத்துருவத் தானன் கூட
மாத்தவன் பகரேபார்க்க மருந்திடுந் திரிபாவ மாயவன்
சீத்தமாய மதியை ராகு திருட்டக் கர்மநாதன்

பேற்றியும் யேழான்கூட திரியினால் மரணஞ் சொல்வேன்.

## 186. 6730- பழமொழி விளக்கம்

பொருள்: *நீதி* இதழ்கள்: *50*
அளவு: *36.5 x 2.4* செய்யுள் எண்ணிக்கை: *- 200*
நிலை: *சிறுசிதைவு, குறை.*

குறிப்பு:

*பக்கத்துக்கு 4 வரிகள்.(1பாடல் வீதம்) முதல் இரு இதழ்கள் மிகுதியாக சிதைந்துள்ளன. தண்டைலையார்சதகம்.*

தொடக்கம்:

சீர்கொண்ட (கற்)பகத்தை வரந்தரும் விநாயகனை
தில்லை வாழு.........................
கார்கொண்ட கரிமுகனை வகிட சக்கிர கணபதியை
கருத்தில்.............
பேர் கொண்ட ஞான நாயகி..........
பாகர்நீள் நெறியோன் பெரும........
ஏர் கொண்ட நவகண்டம் இசைந்த பழமொழி விளக்கம்.
...........

முடிவு:

அந்தணரை பெரியோரை பரமசிவ மடியாரை அகந்தையாக
நிந்தனை சொன்னாலுமென்ன வைதாலு மதினாலே நிகழ்த
முண்டோ

சுந்தரர்க்குத் தூதுசென்ற தண்டலைநீ ணெரியாரே துலங்கும்
மூரண்

சந்திரனைப் பாத்துநின்று நாய்குலைத்தா லதனுக்குத்
தாழ்வுண்டாமோ

ஓரைய்யா மணிவீதித் தண்டலைநீ ணெரியாரே
உம்மைப்போலே

ஆரய்யா உனைப்போல மென்மேலு முதவிச்செய்ய
அறியமாட்டார்

பாரய்யா செல்வமும்போய் வெறுங்கூலிக் காராய்ப்
பிழைப்பாயப்பா

ஆரய்யா மாவடுவாய்க் கிடந்தபின்பு கருத்தரி கிரிகை.
உள

## 187. 8087 - பலபிணிகளுக்கு மருந்து.

**பொருள்:** *மருத்துவம்* **இதழ்கள்:** *24*
**அளவு:** *29 x 3.5* **செய்யுள் எண்ணிக்கை:** *- உரைநடை*
**நிலை:** *நன்று, குறை.*

**குறிப்பு:**

*பல வித நோய்களை நீக்கும் மருந்துகள் விவரிக்கப் பட்டுள்ளன. காயகல்பத்தால் உடலை இளமையாக வைத்திருக்கும் முறைகளும் இயம்பப்பட்டுள்ளன. இதனை அடுத்த 15 பக்கங்களில் பாசாண வைப்புகள் இடம் பெற்றுள்ளன.*

**தொடக்கம்:**

கொடி வேலி வேர்ப்பட்டையை அரைத்து ,கொட்டைப் பாக்களவு ௨௪ படி பசுவின் பாலிலாவது, வெள்ளாட்டுப் பாலிலாவது வியாதியின் வலுவிற்குத் தக்க படி ஒரு மண்டலம் அரைமண்டலம் சாப்பிடவெட்டை, அரையாப்பு, வாயுசூலை, கட்டுசூலை,ஊமுலம் கெர்ப்பத்தை அழிக்கு கிரந்தி ,யோனியைத் தின்னும் கிரந்தி, செங்கிரந்தி, கருங்கிரந்தி, அரிகிரந்தி, கெர்ப்ப வாயு தீரும்.

**முடிவு:**

கீலக ஸ்ரீ ஆனி [illegible] உ பார்க்கும் போது, அவருடைய வயசு [illegible] சிறுவர் போலவே இப்பவும்

இருக்கிறார். இன்னம் அழகர் மலையில் பா(ர)தாள உச்சத்தில் ஓர் கள்ளனும் அப்படியே இருக்கிறான் என்பது தோற்றத்தினால் தெரிந்து கொள்ளலாம். ஆகையால் இது பூரண தேகசித்திக்கி முன் சொல்லியது. குருக்கள் புத்தி ஓர்மைக்கு கண்டு கொள்ளவும். இதன் சுலோகம் எழுதப் பட்டிருக்கிறது.

## 188. 889 - பலபிணி மருந்து

பொருள்: மருத்துவம் இதழ்கள்: 20
அளவு: 26.2 x 3.3 செய்யுள் எண்ணிக்கை: - உரை விரவியது
நிலை: நன்று, குறை.

குறிப்பு:

பல நோய்களுக்குமுரிய பல்வேறு மருந்துகளின் தொகுப்பாகக் காணப்படுகின்றது. பிழைகள் மலிந்து காணப்படுகின்றன. இறுதி 21 பக்கங்களில் மலையாள எழுத்தில் செய்திகள் உள்ளன.

தொடக்கம்:

தீருமடா திங்கட்சென்று பிள்ளைப் பெற்றால்
சீறியழும் பாலனுக்கு மருந்து கேளும்
கூருடனே சிறுத்தேக...ந்திப்பிலியுங்
குறுகவே பொடிசெய்தே னாவி னெய்யில்
வேருப்படமும் யாம்பிள்ளை உண்ணும்போது
விக்கலும்போம் பொருமலும்போம் வீச்சும் போகும்
பாருநீ திப்பிரோ கணியுங் கூட்டிப்
பருவமுட னெய்க் குழைத்து மூங்கையிற் பூச்சே.

-க-

முடிவு:

சீரகம் யக இது கலந்து நுணுக்கிப் போடு யேற்கிறபத(த்)தில் ...யக நுணிக்கிப் போடு. பதமாயிகா(ச்)சி எறக்கிக் கொ(ள்ள)வும். ஏழாநாள் காலமே புளிதலி சாப்பிட விடும்.

## 189. 6264 - பலபிணி மருந்து

பொருள்: மருத்துவம் இதழ்கள்: 72
நிலை: நன்று, குறை. செய்யுள் எண்ணிக்கை: —

குறிப்பு:

நோய் விபரம், மருந்து விபரம், உட்கொள்ளு முறைகள் விவரிக் கப்பட்டுள்ளன.

தொடக்கம்:

கரிமுக னடியினை கைகொழு தேற்ற
பெரிகிய நோய்பிணி பிறப்ப றுக்குமே
வேளை முகத்து வினாயகனைத் தொழ
வாழ்வு மிகுத்து வரும்.

சீனக்காரம் பொரி காரம் தெளியு மிந்துப்புச் சவுக்காரம்
தானத் தளவே ஒருநிறையாய்த் தணியும் நாயுருவி
பணைக்கதிரு
பானைக் கதலித் தண்டுடனே பரிவாய்ச் சுட்டுப் பொடியாக்கித்
தேனிற் குழைத்து மிழுங்கிடவே தெறிக்குங் கல்லுத்துன்
மாங்கிஷமே.

முடிவு:

ஆடா தோடை அறிந்திடு கோட்டம்
வாடா நெல்லி வசம்பு கடுக்காய்
கோடா தேனில் குழைத்து-முழுங்கிட
பாடா நாவும் பண்ணிசை பாடுமே.
குமரன் துணை. குரு பாதமே கெதி.

## 190. 6257-d-பலபிணி மருந்து

பொருள்: மருத்துவம் இதழ்கள்: 33
அளவு: 25.6 x 3.6 செய்யுள் எண்ணிக்கை:- உரைநடை
நிலை: சிறுசிதைவு, குறை.

குறிப்பு:

பல்வேறு நோய்களுக்குரிய பயனுள்ள மருந்துகள் எளிய நடையில் இயம்பப்பட்டுள்ளன. பயன் தரத்தக்க செய்திகள் உள்ளன.

தொடக்கம்:

கிராணிக்கு மருந்து

நத்தச்சூரி விரையிடித்து வடிகட்டி மா ஒரு பங்கும், குறுவைநெல் பச்சரிசி மாவாக்கி ரண்டு பங்கும் ஒன்றாய்க் கலந்துவைத்துக்

கொண்டு.......சுக்குத் தட்டிப்போட்டு ஒருபடிசிலம் விட்டு எட்டொன்றாய்க் குறுக்கி ,அதில் நாலு கழஞ்சி பனைவெல்லம் போட்டு இந்த மாவுந் தூவி ஒருகரண்டி நல்லெண்ணை விட்டுக் கிளறி ,மூன்று நாள் உதையத்தில் சாப்பிடவும் குணமாம்.

முடிவு:

வட்டத் துத்திவேர் கொண்டுவந்து எலுமிச்சங் காயளவு....பாலில்.....கமங்கிறிசனமா பத்தியம்...மகத்துரு மஞ்சனத்திலிருந்து ...ஈர வெங்காயம் படி குடுக்கவும்.... ரத்த மேக நிற்கும். பத்தியம் கட்டாய... எண்ணை முழுகவும்.

## 191. 6354-f- பரப்பிரம சாதனம்

பொருள்: யோகம் இதழ்கள்: 4
அளவு: 8.2 x 2.8 செய்யுள் எண்ணிக்கை: - உரைநடை
நிலை: நன்று, முழுமை.

குறிப்பு:

பரப் பிரும்ம நிலை அடையும் முறைகள் விவரிக்கப் பட்டுள்ளன. பிற விவரங்கள் தெரியவில்லை.

தொடக்கம்:

பிரம அப்பியாசத்துக்கு மகாத்துமாக்கள் அட்டாங்க யோக விதப் பிரமாணமாகச் சொன்னது இயமம் ,நியமம்,ஆசனம், பிரணா யாமம்,மாத்தியாகார மதியானம்,தாரணை,சமாதியென்று எட்டு விதமாகச் சொல்லப்படும்.

முடிவு:

யாதொரு வுருவமெல்லா மவன்றிரு வுருவமாகும்
யாதொரு நாமமெல்லா மவன்றிரு நாமமாகும்
யாதொரு பூசையெல்லா மவன்றிருப் பாதபூசை
யாதுமாயறி யானந்த குரு திருப்பாதமே போத்தி.

சிவமயம் முற்றும்.

## 192. 8088 -l- போக நயினார் சூத்திரம் பதின்மூன்று

பொருள்: மந்திரம் இதழ்கள்: 2
அளவு: 30 x 3.4 செய்யுள் எண்ணிக்கை: - 13
நிலை: நன்று, முழுமை.

குறிப்பு:

மந்திரக் கட்டங்கள் அமைத்து, அவற்றுள் தெய்வங்களை நிறுத்தும் பூசை முறைகள் உரைக்கப்பட்டுள்ளன. இதனை அடுத்து இறுதியில் நாக்கு வளர்த்திக்கு மருந்து, கொம்மட்டிக்காய்க் குழம்பு, தோஷங் கட்குப் பார்வை மந்திரம் ஆகியவை கூறப்பெற்றுள்ளன.

தொடக்கம்:

பாரப்பா வாலைதனைத் தியானஞ் செய்யப்
பாங்கான நவகோண மிட்டுச் சூழச்
சேரப்பா யிருவளையம் வாசல் நாலு
சிறப்பாக ரீங்கார மிட்டு நன்றாய்க்
காரப்பா கீழ்வாசல் கணபதியுங் கந்தன்
கருணையுள்ள செயவீர வாகுதேவர்
ஆரப்பா யவர்களிலே கிழக்குத் தொட்டு
அகாரமுடன் உகார சவ்வு மகாரம் போடே.

-க-

முடிவு:

கூடியிங்கே யவரவரைக் கண்டு பேசக்
கூசாம லனவரதங் குமுறி யாடுந்
தேடியெங்கு மிந்தமுறை கிட்டா தப்பா
தேவிமுதற் சிவனங்கே திருநடனஞ் செய்வார்
நாடிநின்று வாடாதே என்தாய் பூசை
நல்லவர்க்கு எய்துமடா காமிக் கில்லை
பாடியிந்தப் பதின்மூன்று பாட்டுக் குள்ளே
பரபூசை சிவபூசை பணிந்தி டாயே.

## 193. 14103 - a - பரதம்

பொருள்: நாட்டிய சாஸ்திரம் இதழ்கள்: 2
அளவு: 33.3 x 3 செய்யுள் எண்ணிக்கை: —
நிலை: நன்று

தொடக்கம்:

கல்யாணி வாராள் நித்திய கல்யாணி வாராள்
செல்வமிகு பரங்கள் வளசைமேவிய தேவர்

வில்வனேசர் மருவிய வில்லுமுலை கலியாணி
சுக்கிர வாரத்தினில் சிவிகைமீதில் கல்யாணி வாராள்.

முடிவு:

பன்னுதமிழ் கும்ப முனிகள் பரவவே
பரவு முத்தையன் புத்திரர் பெருகவே
மன்னும் நித்தியப் பூசை பெருகவே
மாத மூன்றும்நன் மழைகள் பெருகவே
தென்னன் மருமகன் பழைய தேவரைச்
சேரும் ராச துரைப்பெண்
நித்திய கல்யாணி வாராள்.

## 194. 10404 - பழனியந்தாதி

பொருள்: அந்தாதி இதழ்: 27
அளவு: 40 x 3 செய்யுள் எண்ணிக்கை:- 100
நிலை: நன்று, முழுமை.

குறிப்பு:

பக்கத்துக்கு 4 வரிகள். நூலின் இறுதியில் 2 இதழ்களில் 85-90 பாடல்கள் மீட்டும் எழுதப்பெற்றுள்ளன. 19-வது ஏடு இரண்டாக முறிந்துள்ளது. இடையிடையில் சில பாடல்கள் பூச்சியரிக்கப் பெற்றுள்ளன. ஆசிரியர் பெயர், அச்சான விபரம் தெரியவில்லை.

தொடக்கம்:

சீருற்ற காவும் பழனாபுரியுஞ் சிறந்த செழுங்
காருற்ற பொங்குவ டோங்குந் தடமும் கனகமயில்
பேருற்ற வாரும் பிணிதீர்க்கும் வேலும் பிறைநுதலுந்
தாருற்ற மாமாயெ... சண்முகமே காப்பு.

சண்முக னென்னுஞ் சதாசிவந் தானென்றும் சந்தத்தமிழ்ப்
பண்ணிசைக் கல்வித் தமிழால் பகர்ந்து பலனுற்ற
மண்ணுல கோரும்பொன் வானுல கோருன் மலரடியை
எண்ணுற் வேல னடியேனு மென்னெஞ் சிறுத்தியதே.

முடிவு:

பெற்றே னருளும் பெருக யெந்நாளும் பெரிதுமனம்
உற்றேன் பழனிக் கிரிவேலன் சிந்தையி னுள்ளிருக்க

மற்றே தினிக்குறை நின்பா லெளியன் வணக்கமுற்றும்
பொற்றாளு மன்பு மென்னெஞ்சு மொன்றாகப் புரிந்ததுவே.

பழனியந்தாதி முகிந்தது. வேலுண்டு வினையில்லை.

## 195. 8085 - பாண்டவர் வனவாசம்

பொருள்: *நாட்டுப்புறக் கதைப்பாடல்* இதழ்கள்: *176*
அளவு: *47.8x3.6* செய்யுள் எண்ணிக்கை: -
நிலை: *மிகு சிதைவு, குறை.* சுமார் 9000 வரிகள்

குறிப்பு:

*பக்கத்துக்கு 3 பகுதிகளாக 23 முதல் 30 வரிகள். அச்சானது. 5641 c, 5762 போன்றதே.*

தொடக்கம்:

நிருபருக்குள் ளிலக்கணம் யாவையும் நிரப்பி
தெருவிடைத் திரிபுதல்வ னவ்வனத்திடைத் திரியும்
கரியரிக் குலம்புலிக் கணம்யாவை யுங்காத்தால்
வெருவரப் பிடித்தடுத் தொழில்கண் டுளம்வியந்தான்.

முடிவு:

முன்னே அடைக்கலமாய் வைத்ததொரு ஆயுதத்தை
ஆனைபரி தேர்தனையு மன்பா யருளுமென்றார்
அப்பொழுதே மாகாளி யன்புடனே அன்னேரம்
மெய்ப்பான ஆயுதத்தை விரையவே தானெடுத்து
அன்புடனே தான்குடுத்து அனுப்பினாள் மாகாளி.

## 196.5760 - பிரச்ன பலன்

பொருள்: *சோதிடம்* இதழ்கள்: *108*
அளவு: *16x2.5* செய்யுள் எண்ணிக்கை: - *உரைநடை*
நிலை: *நன்று, முழுமை.*

குறிப்பு:

*பக்கத்துக்கு 4 வரிகள். அச்சான விவரம் தெரியவில்லை. பல விஷயங்களையும், செய்வதற்குரிய பலன் நன்று அல்லது தீது எனக் குறிக்கப்பட்டுள்ளது. முதல் ஏட்டில் 108 விஷயங்களுக்கு அட்டவணை உள்ளது.*

தொடக்கம்:

பகவானே லஷ்ம்மா வென்று சநிக்கிழமை உஷத் காலத்திலே ஸ்ரீநிவாசனை ஆராதித்து அவர் முதலில் நினைத்த காரியத்துக்கு மூன்று பேரை நூத்தெட்டிலே படிக்க லக்கங் கேட்டுத் துகையைக் கூட்டி எட்டில் கழித்து வரும் லக்கத்துக்கு ஏடும் வரியுந் தள்ளிப் பார்க்க உள்ளது சொல்லும்.

தேவதாப் பிரதிஷ்டை செய்ய - நன்றோ?தீதோ?

ஏடு-1 தேவதா பிரதிஷ்டை செய்ய னன்று
காணி யாக்ஷி கொள்ள லாபமுண்டு
இந்த வூரில் குடியிருக்க நன்று
அடுமை கொள்ள நன்று
கடன் கொடுத்து வாங்கச் சண்டை யுண்டாம்
இந்த வீடு மச்சிட மிகவும் நன்று
இந்த நாட்டு ராசாவின் பேரில் கலகமுண்டு.

முடிவு:

ஏடு-108

வீடு மச்சிடப் பாழாம்.ராசாவின் மேல் படை வராது. வாய்க்கால் வெட்ட நன்றாம். மணிய காரருக்கு லாபமுண்டு. வையாசி ௴ ௰ (கி.பி 1735 வைகாசி மாதம் 10 -ந் தேதி) சுண்டப்பாளையம் ராமசுவாமியால் எழுதி முகிந்தது.

## *197. 9060 - பிரமோத்திர காண்டம்*

பொருள்: *புராணம்* இதழ்கள்: *116*
அளவு: *36.7 x 3.8* செய்யுள் எண்ணிக்கை: *1294*
நிலை: *சிதைவு, குறை.*

குறிப்பு:

பக்கத்துக்கு 9 வரிகள். 9,10-ஆம் ஓலைகளைக் காணவில்லை. சிவனியல்பும்,பந்தபாச நீக்கும் பிரதோஷத்தின் பூசையின் பலனும்,சோம வாரத்தின் மான்மியமும்,அடியவர் திறனும்,சிவ கவசமும்,பூதியின் செயலும்,பூசனைப் பொலிவும்,கற்பினள் பழியகற்று மகேச்சுரமும்,வேத நான்கினும் விளங்குசீ ருத்திரர் வீறு மோது கெணிகள் கேண்மின்களெனத் தொகுத்துச் சூதமா முனி சொன்னதாகக் குறிக்கப்பட்டுள்ளது. அச்சான விவரம் தெரிய வில்லை.

தொடக்கம்:

நல்ல சொற்பொருள் நாடி நடாத்தவும்
எல்லை காணரும் பேரின்ப மெய்தவும்
வெல்லு மானை முகத்தனை மேவிவாழ்
வல்லமைக் குரியானை வழுத்துவாம்.

பூமேவு சதுமுகனுந் திருமாலும் போற்றிசெய்யத்
தேமேவு குழலுமையாள் செழுங்குவளை விழிகளிப்ப
மாமேவு மிதழிநறு மழைதுளிப்ப மணிமன்றந்
தாமேவு நடம்புரியந் தனிப்பொருளை வணங்குவோம்.

முடிவு:

அன்னவனா மீச னடித்தாமரை பரவ
என்னதவப் பயனீங் கெய்தியதென் றேம்பலுற்றுக்
கன்னமொழி மாதுமையைக் கண்ணுதலைக் கண்டுகண்டு
துன்னிய வானந்த வாரி சுழிப்பட்டாள்.

## 198. 3909 - பிரமோத்திர காண்டம்

பொருள்: *புராணம்* இதழ்கள்: *145*
அளவு: *19.6 x4.5* செய்யுள் எண்ணிக்கை: *- 1321*
நிலை: *சிறு சிதைவு, முழுமை.*

குறிப்பு:

*பக்கத்துக்கு 10 முதல் 12 வரிகள். 22 அத்தியாயங்கள் கொண்டது. 9060 - பிரமோத்திர காண்டம் என்பதன் பிரதி போன்றதே.*

தேவர்தம் பெருமான் சிறந்த வஞ்செழுத்தின்
சீர்புகழ் மாக்கதை முதலாய்
பாவ நின் றகற்றும் புராணநூல் கேட்போர்
பலன்பெறல் மொழிகதை யீறாய்
மேவாப் புகன்ற சிவகதை முழுதுழ்
விழைவுடன் கேட்குன ரவர்தாம்
யாவா மற்றேனு மாலயன் முதலோரே
யதருஞ் சிவபத மடைவார்.

சிவபுராணங் கேட்டவன் முத்திபெற்ற அத்தியாய மிருபத்து ரண்டினாற் றிரு விருத்தத் தொகை கலிசநாயஅகூ (கி.பி.1724)தை மாதம் உயஅ ட (28 - ந் தேதி) எழுதினேன் சங்கரனாயகம். இந்த ஏடு பார்த் தெழுதினது. பிழை பார்க்க வேணும்.

## 199.6/68 - பிரமோத்திர காண்டம்

பொருள்: புராணம் இதழ்கள்: 78
அளவு: 25.6 x3.6 செய்யுள் எண்ணிக்கை:- 838
நிலை: சிதைவு, குறை.

குறிப்பு:

பக்கத்துக்கு 7 முதல் 10 வரிகள். 9060, 3909, பிரமோத்திர காண்டம் என்பவற்றின் பிரதி போன்றதே.

தன்னுருக் கரந்தொளிந்திடத் தாகமும் பசியுந்
துன்னு தீக்குணந் தொலைந்ததும் பாவங்க டொலையு
மன்னு முற்பவத் தியற்றின தோன்றலு மனத்தான்
முன்னி மாதவ கேட்டியென் றிறைஞ்சினன் மொழிவர்ன்

என்ற பாடல் வரை உள்ளது.

## 200. 8224 - பாசுரப்படி உபன்யாசம்

பொருள்: வைணவ நூல் இதழ்கள்: 52
அளவு: 43.8 x3.8 செய்யுள் எண்ணிக்கை:- உரைநடை
நிலை: சிதைவு, குறை.

குறிப்பு:

கிரந்த எழுத்துகள் மிகுதியும் கொண்ட மணிப்ரவாள நடையிலியன்றது. முதல் 5 இதழ்கள் இடதுபுறமாகச் சிதைந் துள்ளன.

தொடக்கம்:

வதியாய் அவர் உத்ஸவத் கர் ஜநோய்
ஸவித் கலெண்டணர்க்கு நான்
வெகுணா...எ யோக ஸ்ரீ ஸ்ஹாயேதாஜ் நாநாந ஙல
என்றும் ஸெவெகுணா கூஉ ரேஜோகே ஸ்ரீயா
ஸாமெவதி என்றும் சுடரொளியாய் நின்ற தன்னுடைச்
சோதியென்றும் தெளிவிசும்பென்றும் சச்சக்கா

முடிவு:

...ரஷ்களிறே யிவருது பிறந்தாருயர்ந்தே இத்தையறிந்தவர்கள் [illegible]ஷிலே பிறந்து வைதே நிலை [illegible] களோ டொப்பர் பிறந்த தெய்யர்ந்தார் [illegible]பாதி இவர்களுடைய பிறப்பு ஆழ்வார் திருவடிகளே சரணம்.

## 201. 7931 பலவித மருந்துகள்

பொருள்: மருத்துவம் இதழ்கள்: 31
அளவு: 25 x 2.8 செய்யுள் எண்ணிக்கை: - உரைநடை
நிலை: நன்று, குறை.

குறிப்பு:

பல்வேறு மருந்துகளின் செய்முறைகள் விவரிக்கப் பட்டுள்ளன. மருந்துப் பொருட்களின் பெயர்கள் மருத்துவத்துக்கே உரிய சுருக் கெழுத்திலும் சில இடங்களில் எழுதப்பட்டுள்ளன. ஆசிரியர், அச்சான விவரங்கள் தெரியவில்லை.

தொடக்கம்:

முள் முருக்கன் செவி செவியம் சுக்கும் [illegible](மிளகு)
சீரகம் ஆக யிந்த ரு(5)வகையும் ஒரு பங்கு முள்
நெருக்கன் செவி மூன்று பங்குமாக யிடித்து சூரணம் பண்ணி...

முடிவு:

சூதத்தைச் சுத்தி செய்து ஊமத்தின் சாற்றில் செம்பையுருக்கிச் சாய்க்கவும். செம்புக்குப் ய [illegible](பத்துக்கு)ஒன்று போட வெள்ளி [illegible]

## 202. 9024 - பாகவதம்

பொருள்: புராணம் இதழ்கள்: 267
அளவு: 42 x 2 செய்யுள் எண்ணிக்கை: - சுமார் 4300 வரிகள்
நிலை: பழமை, முழுமை.

குறிப்பு:

பக்கத்துக்கு 8 வரிகள். 8117 - ஸ்ரீமத் பாகவதம் என்பது போன்ற பிரதியே இது.

## 203. 611 - பாகவதம்

பொருள்: புராணம் இதழ்கள்: 223
அளவு: 36 x 3 செய்யுள் எண்ணிக்கை:- உரைநடை
நிலை: சிதைவு, குறை.

குறிப்பு:

ஸ்ரீமத் பாகவதமே உரைநடையாக எழுதப்பெற்றுள்ளது. முதலும், முடிவும் காண இயலாவண்ணம் ஏடுகள் சிதலமாகி யுள்ளன. இடையிடையே சில ஏடுகள் காணப் பெறவில்லை.

## 204. 3887 - பாபநாசத் தலபுராணம்

பொருள்: தலபுராணம் இதழ்கள்: 125
அளவு: 20 x3 செயயுள எண்ணிக்கை:- சுமார் 2500 வரிகள்
நிலை : நன்று.

குறிப்பு:

பக்கத்துக்கு 10 வரிகள். நெல்லை கட்டபொம்மன் மாவட்டத் தைச் சார்ந்த பாபநாசம் என்னும் தலத்தைப் பற்றிய புராணம் ஆகும். அச்சாகி யுள்ளது. பிற விவரம் தெரியவில்லை.

தொடக்கம்:

பூமாது சிங்கை செய்ய பூங்கமல மேல்வாழ்க புவனியோங்க
ம்மாமார் பொழிகவென்றும் மறையவரா னினம்வாழ்க
வானளாவித்
தேமாரி நதிபெருகச் செழித்ததிரு முக்களாவிற் சிறந்துவாழுங்
கோமானி னருள்பெருகக் கொற்றவர் செந்தமிழ்ப் புலவோர்
செழித்து வாழ்க

முடிவு:

என்று சூதமா முனிவர னுரைசெய விருந்தவர் பலகேட்டுத்
துன்று மானந்த வாரியின் மூழ்கியச் சூதனைப் பணிந்தேத்தி
நன்று கூர்சிவ சரிதைநின் வாக்கினால் நாங்கள் கேட்டிடப்
பெற்று
ஆனறிடா நலம் படைத்தன மென்றனர் குறைவிலாத்
தவத்தோர்கள்
ருவது புராண மகிமைச் சருக்கம் முடிந்தது.

## 205. 8/59 - பாகவதக் கும்மி (ராசக்ரீடை)

பொருள்: நாட்டுப்புறப்பாடல்
அளவு: 27 x 3
நிலை: நன்று, குறை.
இதழ்கள்: 4
செய்யுள் எண்ணிக்கை:- 24 கண்ணிகள்

குறிப்பு:

பக்கத்துக்கு 6 வரிகள். ஸ்ரீமத் பாகவதம் தசமஸ்கந்தத்தில் ராசக் கிரீடை கோபிகா கீதை கும்மியாகப் பாடப்பெற்றுள்ளது.

தொடக்கம்:

கார்பெருஞ் சோலையில் நீர்பொருந்திச் சூழும்
காரப்பங் கானெனு மூரொப்பிவாழ்
சீர்பெருந் தேவிதன் மார்புறைந்து வாழும்
தேவனை யென்மன மேவவைத்து
கோகனக மலரேகிய வேந்தனக்
கொம்பனையாள் வாணி தம்பதத்தை
பாகவதக் கும்மியாக விளம்பிட
பற்றினேன் நான்மிகு நற்றுணையாய்.

முடிவு:

இப்படி மாதர்கள் ஆடுகையில் - ஒரு
ஏந்திழை யாளைக் கணவன் கண்டு
கைப்பிடி யாகப் பிடித்துக் கொண்டு - பெருங்
காவலிட் டானந்தப் பாவியவன்.

## 206. 57/9- பிரச்னபலன் நூற்றியெட்டு (நன்றோ தீதோ)

பொருள்: சோதிடம்
அளவு: 16 x 3
நிலை: நன்று, முழுமை.
இதழ்கள்: 108
செய்யுள் எண்ணிக்கை:- உரைநடை

குறிப்பு:

பக்கத்துக்கு 4 வரிகள். 5760 - பிரச்ன பலன் என்ற பிரதி போன்றதே. ஆனால் பிரச்னங்கள் முறை மாறி வந்துள்ளன.

## 207. 11544 - a - பஞ்சரத்னத் திருப்புகழ்

பொருள்: சமயம் இதழ்கள்: 8
அளவு: 30 x 3 செய்யுள் எண்ணிக்கை: - சுமார் 144 வரிகள்
நிலை: பழமை

குறிப்பு:

பக்கத்துக்கு 9 வரிகள். அருணகிரி நாதரருளிய திருப்புகழ்ன்று. அச்சிடப்பட்டுள்ளது. இதைத் தொடர்ந்து 5 ஏடுகளில் அருணகிரிநாதரருளிய 18 திருப்புகழ்ப் பாடல்கள் உள்ளன.

தொடக்கம்:

தேனை வடித்துச் சொரிந்ததோ கொதி
பாலுட னொக்கக் கலந்த தோநல்
சீனியை விட்டுப் பிசைந்த தோபல - கனிதானோ

முடிவு:

கொத்துப் பரை கொட்டக் கனமிசைக்
குக்குக்குகு குக்குகுகுகுகு
குற்றிபுக............முதுகூகை
கொப்புற்றழ நாப்புற் றவுணரை
வெட்டிப் பலியிட்டுக் குலகிரி
கொத்துப்பட வுற்றுப் பொரவல பெருமாளே.

## 208. 3974 - - பராசக்தி அனு பூதி

பொருள்: துதி இதழ்கள்: 4
அளவு: 14 x 3 செய்யுள் எண்ணிக்கை: - 22
நிலை: பழமை, முழுமை.

குறிப்பு:

பக்கத்துக்கு 9 வரிகள். தேவி பராசக்தியை சுரம் முதலிய நோய் நீங்க வேண்டிப் பாடியுள்ள துதி நூ்ல். கந்தர் அனுபூதி போன்ற அமைப்பில் பாடல்கள் அமைந்துள்ளமையால் பராசக்தி அனுபூதி என்று பெயரிடப் பெற்றது போலும். இடையில் 9-ஆம் பாடல் இல்லை. ஆசிரியர், அச்சான விபரம் தெரியவில்லை.

தொடக்கம்:

பராசக்தி அனுபூதி நன்றாக.
திருவா ணியெனுஞ் செகத் சொரியென்

றுரு மூன்றும் ஒருப்படுகின் றவளே
சுரபீ டையினால் வரு துன்பமொழித்
தருள்வா யடியா திபரா பரையே.

(க)

முடிவு:

பத்தா திகள் மற் றைமறந் திடினும்
கற்றோ ருறுமன் புகட்டந் திடுமோ
சத்தா யிருநோக் குவைநின் கருணை
முத்தார் நகைமோ னசடா தரியே

## 209. 3974 - a - பராபரக் கண்ணி

பொருள்: *சமயம்* இதழ்கள்: *27*
அளவு: *15 x 3* செய்யுள் எண்ணிக்கை: *- சுமார் 500 வரிகள்*
நிலை: *பழமை, குறை.*

குறிப்பு:

*பக்கத்துக்கு 9 வரிகள். தாயுமானவர் இயற்றியது. அச்சானது. இடையில் 21-ஆம் எண்ணுள்ள இதழ்கள் காணப்படவில்லை. 9-ஆம் கண்ணி இரண்டாம் வரியுடன் நூல் துவங்குகின்றது.*

தொடக்கம்:

ஆரணனே வாடாத வன்புமலர் மாலைபுனை
காரணமே யிக்கவிக்குக் காப்பாம் பராபரமே.
வெள்ளை வாரணப் பிள்ளை யார்பத
முள்ளு வார்மனக் கள்ள மாறுமே
பராபரக் கண்ணி நீடூழி வாழ்க.

பல்லுயிர்க்கும்
தந்தைதா யானவகை சாற்றாய் பராபரமே.

முடிவு:

பூனாக்குஞ் சௌமுதலாம் புல்லுயிராய் என்பிலதாய்
தானாடச் செய்தவரார் சாற்றாய் பராபரமே.

## 210. 5641 - பாண்டவர் வனவாசம்

பொருள்: *நாட்டுப்புறக்கதைப்பாடல்* இதழ்கள்: *39*
அளவு: *27 x 3* செய்யுள் எண்ணிக்கை: *- சுமார் 800 வரிகள்*
நிலை: *சிறு சிதைவு, குறை.*

குறிப்பு:

பக்கத்துக்கு 10 வரிகள். பாண்டவர்கள் வனவாசம் செய்து, வைகுந்த மெய்திய கதையை நாட்டுப் பாடலாகக் கூறுகின்றது. இதில் ஏடுகள் முதலுமில்லை. முடிவுமில்லை. இடையே பல இதழ்கள் இல்லை. முதல் இதழ் 5-ஆம் எண்ணுடன் தொடங்கி வரிசை முறை பிறழ்ந்துள்ளது.

## 211. 8066 - பன்னிரு பாட்டியல்

பொருள்: இலக்கணம் இதழ்: 20
அளவு: 25 x 3 செய்யுள் எண்ணிக்கை: சுமார் 250 வரிகள்
நிலை: சிதைவு

குறிப்பு:

பக்கத்துக்கு 6 வரிகள். பாட்டியல் பற்றிய இலக்கண நூல். அச்சானது. மிகவும் சிதலமாக உள்ளமையால் வேறு விவரங்கள் எழுத இயலவில்லை.

## 212. 3798 - பள்ளிப் பிள்ளையார் துதி (சரசுவதிதோத்திரம்)

பொருள்: துதி
அளவு: 37 x 3 செய்யுள் எண்ணிக்கை: —
நிலை: சிதைவு

குறிப்பு:

பக்கத்துக்கு 4 வரிகள். பள்ளிக் கூடத்தில் படிக்கும் பிள்ளைகள் கூறும் விநாயகர் துதி. ''சிந்திப்பவர்க்கருள் கணபதி செய செய'' - என்ற பாடலைப் போன்றுள்ளது.

'பள்ளியி லுறையும் பிள்ளையார் செய சய
மன்று ளாடும் பிள்ளையார் சய சய'

என வருகின்றன. இந்தப் பிள்ளையார் துதிக்குக் காப்பாக சரசுவதி துதி பழம்பாடல்கள் உள்ளன. இறுதியில் திருமால் துதியாக 11 பாடல்கள் உள்ளன. பாடல்கள் எல்லாம் சிதைந்தும் பிழைபடவும் எழுதப் பெற்றுள்ளன. 'கருடன் மீதில் அன்புடன் ஏறி வந்தருள்செய் வாயே' என்பது மகுடம்.

## 213. 1080 - பன்னூற்றிரட்டு

பொருள்: *நீதி* இதழ்கள்: *10*
அளவு: *37 x 3* செய்யுள் எண்ணிக்கை: *54*
நிலை: *பழமை, குறை.*

குறிப்பு:

*பக்கத்துக்கு 5 வரிகள். பல நூல்களினின்றும் தொகுக்கப் பெற்ற நீதிப்பாடல்கள் அடங்கியுள்ளன. ஏடுகள் இடையிடையே படிக்க இயலாத வண்ணம் அழுக்குப் படிந்துள்ளன.*

தொடக்கம்:

மங்கு லம்பதி னாயிரம் யோசனை மயில்கண்டு நடமாடும்
தங்கு பானு மஞ்ஞீறாயிரம் யோசனை தாமரை முகில் விள்ளும்
திங்கள் ரெண்டுநூ றாயிரம் யோசனை சீர்ந்திடும் அறைகாண
எங்க ணாயினும் அன்பரா யிருப்பவர் இருதய மகலாரே.

முடிவு:

பிங்கல மச்யமும் தம்மில் பிணங்கிய கிரகம் செய்து
அங்கவர் வாதுகூறி அரசன்முன் வழக்குப் பேசி
தங்கள் தங்களையும் மாண்டு தரணியில் குலமுமற்று
மங்கியே போனதொக்கும் வாதுகூறின பேர்க்கெல்லாம்.

## 214. 3839 - பழனியாண்டவன் ஆனந்தக் களிப்பு

பொருள்: *துதி* இதழ்: *4*
அளவு: *23 x 2* செய்யுள் எண்ணிக்கை: *50*
நிலை: *சிறு சிதைவு, முழுமை.*

குறிப்பு:

*பக்கத்துக்கு 4 வரிகள். 8838 -உ - னின்றும் வேறானது. வேறு சில முருகன் துதிகள் அடுத்த 11 இதழ்களில் உள்ளன. மேலும் கும்பினியார் காலத்தைப் பற்றிய(துன்மதி வருஷம்) சில குறிப்புகளும் உள்ளன. இறுதி 2 இதழ்கள் முறிந்துள்ளன. பிற விவரங்கள் தெரியவில்லை*

தொடக்கம்:

தானா தனாதந் தனானா தந்தனா தந்தனா
தந்தனா தந்தனானா

கற்றைச் சடைமுடி யீசன் - மிகக்
கயிலை நாதனை னாளுங் கைகொழு நேசன்
விற்றைக் குருமொழிவி சேஷன் - எங்கும்
விற்பழனி யாண்டவனை மிக்க தமிழாலே
முற்றிக்கு வித்தெனப் போற்றி - யழகு
முருகன்மே லானந்தக் களிப்பையான் பாட
இற்றைக்கு மறுமைக்கு நன்மை - முற்றும்
இசையுங் கற்பூரக் கணபதி காப்பே

முடிவு:

நன்மை பெருகி வளருலகினில் நாவலர்கள்
கிளர்ந்து திமையன் பாடல்
தனைத் துதிப்போர் செகமெங்கும் வாழியவே.
-ருய

## 215. 9163 - C- முக்கூடற் பள்ளு

பொருள்: சிற்றியலக்கியம்(பள்ளு) இதழ்கள்: 14
அளவு: 37 x3.3 செய்யுள் எண்ணிக்கை: - 86
நிலை: சிதைவு, குறை.

குறிப்பு:

பக்கத்துக்கு 8 வரிகள். ஏடுகளின் மேல், கீழ்ப் புறங்கள் மிகுந்த சிதைவுக்களாகியுள்ளன. அச்சானது. சிதைவு காரணமாய்த் தொடக்கம் முடிவு எழுத இயலவில்லை.

## 216. 2611 - மார்க்கண்டன் சரித்திரம்

பொருள்: புராணக் கதை இதழ்கள்: 31
அளவு: 25.3 x3.3 செய்யுள் எண்ணிக்கை: - உரை விரவியது
நிலை: நன்று, முழுமை.

குறிப்பு:

பக்கத்துக்கு 7 முதல் 8 வரிகள். நாட்டுப்புறப்பா வடிவும், அகோ வாரும் பிள்ளாய் என்பது போன்ற வசனமும் கலந்த இசை நாடக அமைப்பு. மேடையில் பாடி நடிக்கப்பட்டிருக்கக் கூடும். கட்டியக்காரனின் பாத்திரப்படைப்பும் உண்டு. பாடல், வசனங்களில் 5655 - a- மார்க்கண்டன் கதை என்பதினின்று வேறுபட்டதாகவும் உள்ளது. விநாயகர், திருக்கடையூர்

அமிர்தலிங்க நாதர் துதியினை அடுத்து ஆதிதேவர் தோற்றத்துடன் நாடகம் தொடங்குகின்றது.

தொடக்கம்:

ஆதிதேவருந் தோன்றினார் - ஆகுவி லேறி
ஆதிதேவருந் தோன்றினார்
பாதிமதியுங் கொன்றை நீதியுட னணியும்
பசுபதி யும்மயீன்ற கசமுக வடிவுள
பகவனை யனுதினம் பரவியே துதிசெய்ய
ஆதி தேவருந் தோன்றினார்.

முடிவு:
வசனம். அகோ வாரும் மிருகண்ட மகாரியே. உம்மையும் உமது பத்தினியாகிய மருதவதியையும் நமது சிவ கணங்களால் தருவிக்கிறோம். நீங்கள் கயிலாசத்துக்கு வரலாம். முனீஸ்வரரே. அப்படியே மகா பாக்கியமை யா சுவாமி. மங்கள மார்க்கண்ட னுக்கு மங்களம் எங்கள் மாதவ மார்க்கண்ட னுக்கு மங்களம். திங்களணி வேணியர்க்குந் திருக்கடையூ ரீசனனுக்கும் மங்கையபிராமியர்க்கும் மாதவத் தோரெவர்களுக்கும்மங்கள மார்க்கண்டனுக்கு மங்களம். எங்கள் மாதவமார்க்கண்டனுக்கு மங்களம். முற்றும்.

## 2/7. 9/08 - மார்க்கண்ட நாடகம்

பொருள்: புராணக்கதை இதழ்கள்: 20
அளவு: 26.2x3.3 செய்யுள் எண்ணிக்கை:- உரை விரவியது
நிலை: சிறு சிதைவு, குறை.

குறிப்பு:
பக்கத்துக்கு 6 முதல் 8 வரிகள். சிந்து, விருத்தம் போன்ற பாடல் அமைப்புகளுடன், வசனமும் விரவிய நாட்டுப்புற இசை நாடக வடிவினது. 2611 - மார்க்கண்டன் சரித்திரம் என்பதினின்று வேறானது. அச்சானதாகத் தெரியவில்லை. முதல் 4 இதழ்களைக் காணவில்லை. இறுதிப்பகுதியும் இல்லை. முன் இதழ்களின் இடப்புறமாக முறிவு நேர்ந்துள்ளது.

தொடக்கம்:

மேதினி தழைத்துவாழ மிருகண்ட ரிஷிக்கு மைந்தன்
ஏதியில் லாதவண்ணம் இருதயத் தன்பு கூர்ந்து

மாதுதான் மனைவியோடு மாதவஞ் சிறக்க யெண்ணிக்
காதல னிடத்தில் செல்லக் கருத்தினில் சிந்தை செய்தார்.

முடிவு:

தருக்கம்:

உலகில் சனமிகுத்து ஒன்று நூறாய்க் கலித்து
தலையில் சுமந்த பாரந் தாங்காமல் சேடனுந்தான்
சிலையி லழகு பூமா தேவியாய் விட்டலற
கலைசேர் பிரமனுக்கு கார்வண்ண னோடுரைத்தாள்.

என்னால் சுமக்கரிது இந்தச் சுமையெனவே
சொன்னாளே பார்மடந்தை துலங்கிய தேவரோடும்
அன்னா ளயனுமாலு ம(ம)ரா் முனிவர்களும்
பொன்னுங் கயிலைமலை புனிதரிடத்......

## *218. 8254 - மார்க்கண்ட நாடகம்*

**பொருள்*: புராணக்கதை* இதழ்கள்*: 39***

**அளவு*: 38.3x3.3*** **செய்யுள் எண்ணிக்கை*:- சுமார் 400 வரிகள்***

**நிலை*: நன்று, குறை.***

குறிப்பு:

*பக்கத்துக்கு 4 முதல் 6 வரிகள். வசனமின்றி, சிந்து கொச்சகம், விருத்தம், கலித்துறவு, அகவல் போன்றன அமைந்தயாப்பினது. நாட்டுப்புறப்பாடல் வடிவினது. 4,5,8,11,16,17,21,34,47-53-ஆகிய இதழ்களைக் காணவில்லை.*

''பன்னுதமிழ்க் கச்சையப்ப ருரைத்த நூலை
பவுசுடைய கெவுனரென்ற பரதர் வாழும்
சென்னைப் பட்டணந் தனிலுகந்த செல்வனுன சின்னய்யா முதலியார் சித்தமாக
மன்னனுரை தஞ்சைநகர் ரெங்கசுவாமி மகிபர்செய்த
மார்க்கண்டன் கதையைக் கண்டு''

*என்ற குறிப்புகள் முதல் ஏட்டில் உள்ளன.*

தொடக்கம்:

வினாயகர் வந்தாரே
அந்தரர் போற்றவே ஆகுவி லேறிக் கொண்டு

சுந்தரக் கோடிலங்கத் தொந்தியுந் தான்குலுங்க
வினாயகர் வந்தாரே.

முடிவு:

கூர்ந்தெமன் ஓலமிட்டுக் கொன்றைவில்லி தன்னருளால்
மார்க்கண்டன் தன்னைவலம் லந்துசுத்தி வானில் பத்தி
சீர்கடலுள் தன்னில் விழச் செய்கையெல்லாம் சண்டன் கண்டு
கோர்பிலத்தை யுன்னியே தீய்க்கொள்ளிபோல் துள்ளினனே.

## 219. 8253 - மார்க்கண்ட நாடகம்

பொருள்: புராணக்கதை இதழ்கள்: 66
அளவு: 33.4 x3.5 செய்யுள் எண்ணிக்கை: -
நிலை: நன்று, குறை. சுமார் 930 வரிகள்

குறிப்பு:

பக்கத்துக்கு 6 முதல் 8 வரிகள். இது 8254 - மார்க்கண்ட நாடகம் போன்ற பிரதியே. சென்னையைச் சேர்ந்த சின்னய்யா முதலியாருக்காகத் தஞ்சை நகர் ரெங்கசுவாமி என்பவர் எழுதியதாக உள்ள குறிப்பு இதிலும் உள்ளது. மார்க்கண்டன் தன் பூஜா பலத்தால் புஷ்பக விமானமேறியது வரை உள்ளது.

## 220. 6322 - மகாபாரதக் கதை

பொருள்: கதை இதழ்கள்: 247
அளவு: 47x3.3 செய்யுள் எண்ணிக்கை: -
நிலை: சிதைவு, குறை. சுமார் 7500 அடிகள்

குறிப்பு:

பக்கத்துக்கு இரு பகுதிகளாக 21முதல் 27 வரிகள். மகாபாரதக் கதை நாட்டுப்புறப்பாட்டு வடிவில் அம்மானையாகப் பாடப் பட்டுள்ளது. அர்ச்சுனன் தவநிலையிலிருந்தே உள்ளது. அச்சான விவரம் தெரியவில்லை. இடைப்பட்ட சில ஏடுகளில் வலப் புறமாக 6 x2 செ.மீ. அளவுக்குச் சிதைவு நேர்ந்துள்ளது.

தொடக்கம்:

விசையன் தவங்குலைப்ப னென்று விரைந்தெழுந்து
அசையான் மனத்தான் அவன்வாளி தொட்டனனே
தொட்ட கணையதனை தோள்விசையன் பாராமல்
திட்டமுடன் சிவனார் செயலென்று தானறிந்து-

முடிவு:

முப்பது முக்கோடி தேவர்களும் வாழியதே
பாருலக மெல்லாம் படித்தோர்மிக வாழியதே
ஆல்போல் தழைத்து அறுகம் போல் வேரூன்றி
மூங்கில்போ லன்ன சுற்றம் முழுதுமிக வாழியதே.

மகாபாரதம் முற்றிற்று.

(கி.பி.1861) அற்பசி பூ(ஐப்பசி மாதம்)ய(19-ந்தேதி)திடியூர் மனகாவல் பெருமாள் ஓதுவார் மூர்த்தியவர்கள் குமாரன் பலவேச ஓதுவார்க்கு சங்கர மூர்த்தியாபிள்ளை எழுதிக் கொடுத்தது.

## 221. 5655- - மார்க்கண்டன் கதை அல்லது சித்திரபுத்திர நயினார் கதை

பொருள்: புராணக் கதை இதழ்கள்: 13
அளவு: 39 x 2.8 செய்யுள் எண்ணிக்கை:- விரவியது
நிலை: நன்று, முழுமை.

குறிப்பு:

பக்கத்துக்கு இரு பகுதிகளாக 10 முதல் 12 வரிகள். பாடல்கள் இடையிடை உரைநடையுமாக உள்ளது. 'அகோதெப்படி யென்றால்' என்ற முறையில் வசனங்களும் இடம்பெற்றுள்ளன. அச்சான விவரம், ஆசிரியர் பெயர் தெரியவில்லை.

தொடக்கம்:

அப்பால் நடக்குகிற அதிசயத்தை கேளுங்கள்
மிருகண்டன் தன்கதையை மெய்யாகச் சொல்லுகிறேன்
வருந்தி மிருகண்டன் மகனுமே வேணுமென்று
ஈசனே பிள்ளை யருளென்றே தவமிருந்தார்.

முடிவு:

கன்னியிளந் தாதியர்கள் கட்டியங்கள் கூறிடுவார்
நாட்டியங்க ளாட நல்லசின்னந் தான்முழங்க
சிவலோக வாசலிலே சென்றுகொடு வாருமென்றார்
அவ்வேடு போட்டு அவர்களுக்குப் புத்திசொல்லி
மற்றுமொரு ஏடெடுத்து வாசிக்கு மன்னேரம்
அமராபதி யேடு அகப்படு தவர்கையிலே

சித்திர புத்திர நயினார் கதை முகிந்தது.

*(கி.பி.1895) பங்கூனி ய சூடெ (19 - ந்தேதி) முற்றிற்று. உதய காலம். இந்த படிக்கி அ. மாசானம். கைஎழுத்து.*

## 222. 8433 - மார்க்கண்டன் கதை

**பொருள்:** *கதை* **இதழ்கள்:** *33*
**அளவு:** *28 x 3.3* **செய்யுள் எண்ணிக்கை:** *- சுமார் 925 வரிகள்*
**நிலை:** *நன்று, முழுமை.*

**குறிப்பு:**

*பக்கத்துக்கு இரு பகுதிகளாக 14 முதல் 16 வரிகள் வரை உள்ளன. மார்க்கண்டனின் கதை நாட்டுப்புறப்பா வடிவில் பாடப் பட்டுள்ளது. லெ.மா்டசுவாமி நாடான் ஏடு என மூன்றாம் இதழ் ஓரத்தில் பேனாவால் எழுதி வைத்துள்ளனர். அச்சான விவரம் தெரியவில்லை.*

**தொடக்கம்:**

கணபதியும் என்குருவும் கினாவிலேயும் நான்மறகேன்
குணபதியே அறுமுகனே குஞ்சரமே நான்பாட
பாடுவேனே நானும் உன்னை பலகாலம் உனைத் தொழுவேன்
நாட்டிலேயும் நல்ல நாடு நாவலர்கள் புகழும் நாடு
சென்னல் கன்னல் விளையும் நாடு சிறுகதலி பழுக்கும் நாடு
வருணமுள்ள நாடதிலே வாரமுள்ள சீமையிலே

**முடிவு:**

வினாயகரும் வாழ்க வாழி
கனகமுடன் தெய்வானை வாழ்க வாழி
சீருடனே கேட்டவர் தான் வாழி
கவிவாக்குக்கு வள்ளி மனோ கரன்தன்
பொன்னய்யனும் வாழி தமிழ் வாழி. முற்றிற்று

## 223. 7967 - மகாபாரத நாடகம்

**பொருள்:** *இதிகாசக் கதை* **இதழ்கள்:** *79*
**அளவு:** *40 x3* **செய்யுள் எண்ணிக்கை:** *-*
**நிலை:** *நன்று, குறை.* **உரை விரவியது**

**குறிப்பு:**

*பக்கத்துக்கு 6 முதல் 7 வரிகள். முதல் ஏடு இரண்டாய் முறிந்தும், இறுதி ஏடு சிதைவுக்காளாகியும் உள்ளன.*

பாட்டும், வசனமுமாக அமைந்துள்ளது. துரியோதனன் அரண் மனைக் கட்டியங்காரன் வருகையோடு நாடகம் தொடங்குகிறது. துரியோதனன் கொலுவுக்கு வருதலைக் கட்டியம் கூறுகிறான் இவன். பாண்டவர்கள் வீட்டுவாச்சாரியார் ,துரோணர், விதுரர், மற்றும் பெரியோர்களிடம் விடைபெற்று வனம்ஏகல் வரை உள்ளது. விநாயகர் போன்ற கடவுள் துதிகள் முன்பகுதியில் உள்ளன.

தொடக்கம்:

மட்டில்லாக் கீர்த்திபெற்ற மதிக்குலக் கொலுத்தானந்தா
அஷ்டதிக் கெல்லாம் போற்றும் அரசர் கோமான்
துஷ்டரை அடக்கிவிக்கும் திரியமகா ராசன்வாசல்
கட்டியக் காரன்வந்து களரியில் தோணினானே.

வசனம்:

அகோ தெப்படி யென்றால் ராசாதிராசான் ராச மார்த்தாண்டன் ராச மார்த்தாண்டன் ராச கெம்பீரன் ராச உத்தண்டன் சந்திர குல வம்முஷ....

முடிவு:

வசனம்:

கேளுந் தர்மராசனே! முன்பு மகா சக்கிரவர்த்தியான அரிச்சுந்திரன் நாடு, நகர் எல்லாம் விசுவாமித்திரனுக்குக் குடுத்து விட்டு, பெண்சாதி பிள்ளையை வித்து,தானும் விலைப்பட்டு ,படாத துன்பங்களைல்லாம் பட்டு மறுபடியும் இந்த உலகத்தை சக்கி....

## 224. 32/6 - மதுரை வீரன் கதை

பொருள்: நாட்டுப்புறக் கதைப் பாடல் இதழ்கள்: 183
அளவு: 26 x 2.3 செய்யுள் எண்ணிக்கை:- சுமார் 2200 வரிகள்
நிலை: நன்று, குறை.

குறிப்பு:

பக்கத்துக்கு 5 முதல் 8 வரிகள். 42, 101, 143 ஆம் இதழ்களைக் காணவில்லை. முதல் 16 இதழ்களும் இல்லை.

தொடக்கம்:

மங்கல வாழ்த்துநிறை மங்கிலியர்கள் வாழ்த்தி நிற்க
சங்கையில் லாமல்பலர் தானங் கொடுத்துநிற்க

எங்க ளரசனா ரிருக்குமந்த வேளையிலே

பொங்கமுட னவ்வரசன் புத்திரனில் லாமையினால்

..............................

முடிவு:

ஐயாவே வீரனே அனைவரையுங் காக்க நி...

ஆலவா பங்கில் அனு(தின)முங் காக்கிறா...

என்னை(யு)ங் காத்து இரச்சிக்க வேணுமையா

என்று திருமாலை நா(ய)க்கன் இன்பமுடனே தொழுதுவாழ்

மதுரைச் சொக்கர் மதுரை மீனாச்சி யம்மாள்...

## 225. 6/99 - மதனநூல்

**பொருள்:** *காமசாஸ்திரம்* **இதழ்கள்:** *10*
**அளவு:** *17.3 x3.4* **செய்யுள் எண்ணிக்கை:-** உரைநடை
**நிலை:** *நன்று, குறை.*

**குறிப்பு:**

*பக்கத்துக்கு 6 வரிகள். மலையாள எழுத்தில், தமிழ் மொழியில் அமைந்துள்ளது.*

## 226. 564/ - மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ்

**பொருள்:** *சிற்றில்க்கியம்(பிள்ளைத்தமிழ்)* **இதழ்கள்:** *13*
**அளவு:** *27 x3* **செய்யுள் எண்ணிக்கை:-** *சுமார் 160 வரிகள்*
**நிலை:** *நன்று, குறை.*

**குறிப்பு:**

*பக்கத்துக்கு 6 முதல் 8 வரிகள். குமரகுருபர சுவாமிகள் அருளிய மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ். குறைப்பிரதி. இடையிடையே சில ஏடுகள் காணப்பெறவில்லை. முதலில் 4 ஏடுகள் இல்லை. அதன் பிறகு 5,7,17,21,22,26,29,30,34,36,37,38,39,40 என்ற ஏடுகளே உள்ளன. அம்மானைப் பருவம் 6 பாடல்களுடன் குறையாக உள்ளது. அச்சானது.*

**தொடக்கம்:**

காப்புப் பருவம். திருமகள்.

வெஞ்சூட்டு நெட்டுடல் விரிக்கும் படப்பாயல்

........................

நீலமேகத்தி னாகத்து றுஞ்சு
படலைமணி மென் பா லுறுத்து நேர்ந்து
பஞ்சூட்டி.....தைத்து மதன் வெங்கதிர்ப்
பருமிள வெயிற் குடைந்தும்

முடிவு:

அயிரா வதத்தினை நிகர்க்கு மதுரைத்தலைவி
யம்மானை யாடியருளே
யாகங் கலந்தொருவர் பாகம் பகிர்ந்தபெண்
ணம்மானை யாடி யருளே.

## 227. 2315 - C - முளைப்பாட்டு

பொருள்: *துதி* இதழ்கள்: *4*
அளவு: *18.8 x3.1* செய்யுள் எண்ணிக்கை: *- 56 வரிகள்*
நிலை: *சிறுசிதைவு, குறை.*

குறிப்பு:

*பக்கத்துக்கு 7 வரிகள். ஸ்ரீவில்லிபுத்தூர் சூடிக்கொடுத்து நாச்சியாரான ஆண்டாள் மீது பாடப்பட்டுள்ளது. அச்சானதாகத் தெரியவில்லை.*

தொடக்கம்:

திருமகிழ்ந்து நாளும்வளர் ஸ்ரீவில்லி நகர்தன்னில்
துருவ மதாய் வாசம் செய்யும் சூடிக் கொடுத்தவள்மேல்
புவியோரெல் லாம்புகழு மமுத முளைப் பாட்டுரைக்க
திவ்விய வடிவான விஷ்வஸேநர் பதம் தான் துணையே.

முடிவு:

வேதியர்கள் தன்னெறியும் வேந்தர்கள்தம் நீதியது
மாதவர்கள் குறியதுவும் வானோர்கள் குறியதுவும்(உயக)
குத்தமின்றி லங்கா கோதையம்மன் பதம்பணிந்து
சத்தியமாயிப் பெண்களெல்லாம் தர்மம் முளைப்
பாடுங்கோடி(உஉ)
ஸதுரங்க ஸேனையுடன் தானிலங்கும் வில்லிநகர்

அதிலே வாழும் திரு(க்)கோதை ஆண்டாள் பதம் துதித்து.(உ௩)

## 228. / /559- j - மச்சமுனிநாயன் சூத்திரம் எண்பது

பொருள்: ஞானம் இதழ்கள்: 11
அளவு: 11 x2.7 செய்யுள் எண்ணிக்கை: - 83
நிலை: நன்று, முழுமை.

தொடக்கம்:

நடுமய் யகாரம் சகாரத்திறை யஞ்சொல்
கடலிகடத் தானைமுகன் காப்பாந் - திடமான
சாரத் து றையுந்த ணிச்சூடந் தண்ணீருங்
காரத்து றையுங்காண் காப்பு.

முடிவு:

ஒப்பான தாயிரமா மிதழ் கண்டவன்
யெப்போதுஞ் சாகா திருப்பான் சிவனவன்
அப்பா பராபரத் தாண்ட வெழுத்தைச்
செப்பச் சிவமாஞ் சேர்வு முத்துமே. -அ [illegible] -

குருவே துணை. மச்சமுனி நாய்ன்சூத்திரம் எண்பது முற்றும்.

## 229. 5920 - மனை அலங்காரம்

பொருள்: சாஸ்திரம் இதழ்கள்: 11
அளவு: 36 x3.2 செய்யுள் எண்ணிக்கை: - 64
நிலை: நன்று, குறை.

குறிப்பு:

வீடு அமைக்க வேண்டிய முறைகள், விளையும் நல்ல, தீய பலன்கள் விளக்கப்பட்டுள்ளன.

தொடக்கம்:

செந்திருவைச் சேரலாம் செந்தமிழைப் பாடலா
மிந்திரனைப் போல்வாழ்ந் திருக்கலாம் - மந்திரஞ்சேர்
வெற்பகத்தை யூடறுத்த வேலவர்க்கு முன்பிறந்த
கற்பகத்தை கைத்தொழுதக் கால்.

முடிவு:

உத்திரதிசை யின்னூலை உயர்ந்ததோர் கிளறாப் போக்கில்
சித்திரைமாடம் பொங்கிடா போனால் சிறப்புடன் பெருகி
வாழ்வார்

உற்றதோர் மேற்குப் பேற்கில் உயந்ததோர் மனையாள் கேடாம்
வித்தக நூல்வல் லோர்கள் விளம்பினார் தமிழினாலே.

## 230. 5908 - d-மச்ச முனிவர் வாகட சாத்திரம்

பொருள்: *மருத்துவம்* இதழ்கள்: *48*
அளவு: *26 x 3.7* செய்யுள் எண்ணிக்கை: *- 141*
நிலை: *நன்று, முழுமை.*

தொடக்கம்:

வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம் வாழ்மலர்ஆம்
நோக்கொன்று மேனி னொறுங்காது -பூங்கொண்டு
துப்பாத் திருமேனித் தும்பிக்கை யான்பாதம்
தப்பாமல் சாற்றுவார் தமக்கு.

முடிவு:

பாரப்பா வருஷமொன்று உண்டா யாகில்
பாசமென்ற வினைக ளெல்லாம் ஓடிப்போகும்
சேரப்பா விந்துவைத்தான் கட்டிப் போடும்
திறமாக காயத்தை நிறுத்திக் கொள்ளும்
காரப்பா வாலைதனைப் பூசை பண்ணக்
கயிலாச பராபரத்தைக் கண்ணில் காணும்
கூரப்பா யிந்த முறை ஒருவருக்கும்
குடுத்தாக்கால் மனமுரைக்கும் போலே வேணும்
ஆரப்பா என்னூல்போ லதி(க)ஞ் சொல்வோர்
அகஷ்தியரை யல்லாமல் கண்டி லேனே.

*தர்க்கம் முற்றும். சற்குருனாதர் துணை. தேவி சகாயம். இந்த சாஷ்திரம் நமசிவாயம் பிள்ளை தம்பி சிதம்பரம் பிள்ளை எழுதினது. இது லோகத்திலுள்ள பேர்கள் அறியவும்.*

## 231. 8026 - d- முதுரை

பொருள்: *நீதி* இதழ்கள்: *8*
அளவு: *38 x 3* செய்யுள் எண்ணிக்கை: *- 30*
நிலை: *நன்று, முழுமை.*

குறிப்பு:

*ஆசிரியர் அவ்வையார். அச்சானது. பாடபேதத்துக்கு உதவும்.*

தொடக்கம்:

நன்றி யொருவருக்குச் செய்தக்கா லந்நன்றி
என்று தருங்கொ லெனவேண்டாம் - நின்று
தள்ளு வளர்தெங்கு தானுண்ட நீரை
தலையாலே தான்தருத லால்.

முடிவு:

சாந்தனையுந் தீதெனவே செய்திடினுந் தாமவரை
யாந்தனையுங் காற்ப ரறிவுடையோர் - மாந்தர்
குறைக்குந் தனையுங் குளிர்நிழலைத் தந்து
மறைக்கு மாங்கண்டீர் மரம்.

முற்றிற்று.

## 232. 3791 - b - மருந்துசெய் முறைகள் சில

பொருள்: மருத்துவம் | இதழ்கள்: 38
அளவு: 30.3 x 3.2 | செய்யுள் எண்ணிக்கை: - 168
நிலை: நன்று, குறை.

குறிப்பு:

பல்வேறு மருந்து செய் விபரங்கள், அவை நீக்கும் நோய் விபரங்கள் தரப்பட்டுள்ளன. முதல் இதழ் இல்லை. காப்புச் செய்யுளும் அடுத்த பாடலின் 3 வரிகளும் இல்லை.

தொடக்கம்:

மயக்கமற்ற உப்புழ(க்)குச் செங்கத் தூளும்
வரிசைபெற யுள்கொடுத்து வைத்திடாயே
வைத்ததொரு யிருவகையுந் தூளா யாட்டி
மைந்தனே சட்டிக்குள் பாதி னீயும்
வைத்திடுவா யதில் குகையே சூத மப்பா
வாற டா கழஞ்சிபத்து மாற்ற மின்றி
வைத்தங்கே குகைவாயில் பொடியு மிட்டு
மறுசட்டி கொண்டிட்டு வாயை மூடி
வைத்ததோர் ஏழுசீலை மண்ணும் பூசி
............அடுப்பி லேத்தே.

முடிவு:

அரைத்த தொரு செந்தூர மருந்திடவே
அஞ்சு வகைப் பாண்டு தீரும்

இரைத்ததொரு பதினெட்டு வாதம் போக
ஏரண்டத் தயிலத்தி லூட்டு வூட்டு
நிரைத்ததொரு மருந்துடனே ஆருமூலம் போக வென்றால்
நேராகச் சாரணைச் சாற்றி லுண்ணப் போகும்
பரைத்ததொரு பயித்திரண்டு மேகம் போக
பரித்திவிரை தயிலத்தில் பாச்சி பாச்சே.

ள சூஅ-

## 233. 1/403 - d- மனை நூல்

பொருள்: சாஸ்திரம் இதழ்கள்: 5
அளவு: 18.2 x 2.9 செய்யுள் எண்ணிக்கை: –
நிலை: நன்று, குறை.

குறிப்பு:

வீடு கட்டும் முறைகளைப் பற்றிக் கூறுகிறது.

## 234. 1/403 -b- மலடுக்கு மருந்து

பொருள்: மருத்துவம் இதழ்கள்: 6
அளவு: 18.2x2.9 செய்யுள் எண்ணிக்கை: –
நிலை: நன்று, குறை.

குறிப்பு:

ஆண் மலடு, பெண் மலட்டுத் தன்மைகளுக்கு மருந்து கூறப்பெற்றுள்ளது.

## 235. 8088- h- மச்சமுனி சூத்திரம்

பொருள்: மருத்துவம் இதழ்கள்: 8
அளவு: 30x3.4 செய்யுள் எண்ணிக்கை:- 81
நிலை: நன்று, முழுமை.

தொடக்கம்:

நடுமை யகாரவக் காரத் திரையமே சொல்லக்
கட்டுக்கடத் தானை முகன் காப்பான்
திடமான சவித்துறையுந் தனிச்சூ டன்றன்
னிங்காரத் துறைக்கங்களை பொன்னிமூவர் போக்கிறதலாதான்

நயமாக நாட்டினான் பகட்டான கன்னியினுண்டை
சவுக்கார மன்றி பின்னோ ருக்காரம் பிதற்று கின்றாரே.

முடிவு:

ஒப்பான வஸ்ரதா மிதன் கண்டவன்
எப்போதுஞ் சாகா திருப்பா னவன்சிவன்
பிப்பாற் பார்தாண்ட வெழுத்தை
செய்யிச் சிவமாஞ் சேர்வு முத்தியே.

-அக

மச்சமுனி நாயனார் சூத்திர மெண்பது முற்றுப் பெற்றது.

## 236. 8893 - d - மன்மத மருந்து

பொருள்: மருத்துவம்
இதழ்கள்: 4
அளவு: 24 x3
செய்யுள் எண்ணிக்கை: - விரவியது
நிலை: சிறு சிதைவு

குறிப்பு:

விந்து வீரியத்துக்குரிய முறைகள் இயம்பப்பட்டுள்ளன. அச்சான விவரம் தெரியவில்லை.

தொடக்கம்:

இரதம் வசந்தம் மதையானை
இரவாம் பூவை பசுங்கிளை
புரவுப்ப...மங்கையர் வாசம்
பொலிய மிண....மென் பூஞ்சோலை
பரவு படை வி...முரசு.....
.....ந்த கடலரங் கொடி மகரம்
முரவு மண்டில...வனங் களாம்
முயர்.....குடையுண்ட னங்கனுக்கே.

முடிவு:

சுலைக்கொம்பு மதுரம் கிராம்பு., திப்பிலி, கோஷ்டம், அக்கிர ஹாரம், காமப்பூ வில்வவேர், ஆடாதோடை , முலைப்பால், தேன் உரைத்துக் கொள்ளவும்.

## 237. 8893 - d - மன்மத சிந்தாமணி

பொருள்: மருத்துவம் இதழ்கள்: 3
அளவு: 24 x 3 செய்யுள் எண்ணிக்கை: –
நிலை: சிறுசிதைவு

குறிப்பு:

இந்நூலில் விந்து வீரியத்துக்குரிய செய்திகள் சொல்லப் பட்டுள்ளன. அச்சானதாகத் தெரியவில்லை. இதனை அடுத்த ஒரு இதழில் உதிரி மருத்துவச் செய்திகள் அமைந்துள்ளன.

தொடக்கம்:

....என வேதமுதற்.....றளிவான சோதிபதம்
ஆராய்ந்து நெஞ்சி யறிவே பார்தனி(லே)
....கத்தினால் மீறும் பல பிணிபால ரகமிளைத்து
யழண்டதினால் மாநிலத்தில் தாரிழையார்
தங்களுக்குச் கணவ னிகரில் லாமல்
மாரன் கணையதினால் வாடாமல் சீருலகில்
செந்தமிழை யாய்ந்து சிறப்பான வேதமுதன்
விந்தாதி லேகியத்தை விளம்பக் கேள்.

முடிவு:

மயக்கத் தலிவலியு மாறுத உப்புழமும்
தியக்கஞ் சலதோழஞ் சீதளங்கள் - நயக்கமுடன்
ஆனந்த நாதனருள்..மதனகா மேசுரத்தை
மானிலத்தோர் கொள்ளு மகிழ்ந்து.

## 238. 1/3/8 - முத்தணைந்த முதலியார் கும்மிப்பாட்டு

பொருள்: நாட்டுப்புறப்பாடல் இதழ்கள்: 15
அளவு: 27.5 x 24 செய்யுள் எண்ணிக்கை: -
நிலை: நன்று, குறை. தொடர் பாடல்

குறிப்பு:

முத்தண்ணைந்த முதலியார் என்பவர் மீது பாடப்பட்டுள்ளது. பிரிட்டிஷ்காரரின் ஆட்சிக் காலச் செய்திகளை அறியத் துணை புரியும். அச்சான விவரம் தெரியவில்லை.

**தொடக்கம்:**

சீரணி நெல்லை நகர்தனில் வாழுமிச்
செல்வர் முத்தணைந்த மீதினிலே
பார்புகழ் கும்மிப் பாட்டு உரைக்க
பராபர வஷ்துமே காப்பாமே.

**முடிவு:**

வண்டி கொ்ண்டு வடக்கே போனீரென்று
சொல்லி மகிழ்ந்து வீட்டி லிருந்தேனே
குண்டுகள் பட்டுக் குடல் வெளியில் வரக்
கூட்டத்தில் காண விதி வசமோ
முன்னும் பின்னுமாகக் குண்டுகள் போடவே
மூளை சிதறிக் கீழே விழ
..........................

## 239. 8888- மன்மத நூல்

**பொருள்:** *சாஸ்திரம்* **இதழ்கள்:** *62*
**அளவு:** *36 x 3* **செய்யுள் எண்ணிக்கை:-** விரவியது
**நிலை:** *நன்று, குறை.*

**குறிப்பு:**

பக்கத்துக்கு 9 வரிகள். ஆண்,பெண் உறவுகளைப் பற்றிய செய்திகளைக் கூறும் நூலும்,உரையும் உள்ளது. இரண்டாம் அத்தியாயத்திலிருந்து தொடங்கி ஆறாம் அத்தியாயம் வரை உள்ளது.பஞ்சபாணன் பதத்தை வணங்குவாம் என்ற புதுமைக் காப்போடு இரண்டாம் அத்தியாயம் துவங்குகின்றது. ஆறாம் அத்தியாயத்துடன் முடிகின்றது. அச்சான விவரம் ஆசிரியர் பெயர் தெரியவில்லை.

**தொடக்கம்:**

அஞ்சி லோதிய ராடமைத் தோழியர்
வஞ்ச மத்து மருவி வசஞ் செய்ய
எஞ்ச லின்றி இளையவர் யாவரும்
பஞ்ச பாணன் பதத்தை வணங்குவாம்.

**முடிவு:**

மாத வத்தவர் வாழி வனமுலைப்
போத ளர்ந்திடு பூவையர் வாழிவேள்

வேதம் வாழி விரகமும் வாழிமெய்க்
காதல் கூறும் கல்வியும் வாழியே.

## 240. 7943 - மதன நூல் எட்டு வகை (எட்டு வகை)

பொருள்: *சாஸ்திரம்* இதழ்கள்: *12*
அளவு: *18x2* செய்யுள் எண்ணிக்கை: *- சுமார் 170 வரிகள்*
நிலை: *பழமை, குறை.*

குறிப்பு:

பக்கத்துக்கு 7 வரிகள். சிற்றின்பம் பற்றிய நூலாகும். தேவதத்துவம், முனி தத்துவம், நாக தத்துவம், காந்தர்வ தத்துவம், யோகி தத்துவம், அரக்கி தத்துவம், பிசாசு தத்துவம்....என எட்டு வகைத் தத்துவங்கள் கூறப்பெற்றுள்ளன. ஏடு பழமையாதலால் தொடக்கம், முடிவு எழுத இயலவில்லை.

## 241. 6429- b - மதன வித்தார மாலை

பொருள்: *சிற்றிலக்கியம் (மாலை)* இதழ்கள்: *27*
அளவு: *30x2.5* செய்யுள் எண்ணிக்கை: *- சுமார் 325 வரிகள்*
நிலை: *நன்று, முழுமை.*

குறிப்பு:

பக்கத்துக்கு 6 வரிகள். மருதப்பன் மீது கடிகை முத்துப் புலவரியற்றிய மதன வித்தார மாலை என்னும் நூல். இதில் மருதப்பனை 'சீவலவன் முன்னோன் திருவேங்கடநாதன் ஆவலுறு மைந்தன்' எனக் குறிப்பது ஆராயத் தக்கது. இவர் ஊற்றுமலை ஜமீன்தாராக இருக்கலாம். அச்சானது.

தொடக்கம்:

பூமருவு வாழ்வும் பொருந்துமரு தப்பனுக்கு
மாமதன வித்தார மாலைசொல்ல - நாமகிழத்
தாங்கிய மாறாந்தலைமுன் னாலுகரஞ் சத்திகொண்ட
காங்கயனாம் பிள்ளையார் காப்பு.
சுவாமி நவநீத கிஷ்ட்ண சுவாமி கிருபை யுண்டாக.

முடிவு:

வாழி திருவேங் கடநாதன் மைந்த னென்றும்
வாழி கிருவை மருதப்பன் - வாழியவ

னென்னாளுந் தன்கிளைசூ ழின்பமெய்தி ஊற்றுமலைத்
தென்னாடும் வாழி செழித்து.
மதன வித்தார மாலை முற்றும்.

## 242. 6404 - மதன வித்தார மாலை

பொருள்: சிற்றிலக்கியம்(மாலை) இதழ்கள்: 27
அளவு: 30x2.5 செய்யுள் எண்ணிக்கை: - சுமார் 325 வரிகள்
நிலை: நன்று, முழுமை.
குறிப்பு:

பக்கத்துக்கு 6 வரிகள். 6429 - மதனவித்தார மாலை போன்ற பிரதி. இதில் காப்பையடுத்து ''ஊற்றுமலைத் துரையவர்களாகிய பூசைத்துரையவர்கள் பேரில் மதன வித்தார மாலை. கடிகை முத்துப் புலவர் பாடியது'' என்ற குறிப்புள்ளது.

## 243. 11607 -மதன காமராஜன் கதை

பொருள்: நாட்டுப்புறக் கதை இதழ்கள்: 76
அளவு: 45x3 செய்யுள் எண்ணிக்கை: உரைநடை
நிலை: நன்று, குறை.

குறிப்பு:

பக்கத்துக்கு 9 வரிகள். இப்பிரதி மதனகாமராஜன் என்ற உரைநடை நூலாகும். இதில் நாடோடிக் கதைகள் ஆறு இடம் பெற்றுள்ளன.

## 244. 3975 - - மகம்மதிய வேதம்

பொருள்: சமயம்(இஸ்லாம்) இதழ்கள்: 11
அளவு: 14 x3.5 செய்யுள் எண்ணிக்கை:- உரைநடை
நிலை: சிறு சிதைவு.

குறிப்பு:

பக்கத்துக்கு 12 வரிகள். இஸ்லாம் மதத் தொடர்புடையது. பிற விவரங்கள் தெரியவில்லை. முடிவு எழுத இயலாத வண்ணம் எழுத்துகள் மிகச் சிறிதாகவுள்ளன.

தொடக்கம்:

நாயனது...பிசுமில்லாகி அற்ரகுமான் றகீம் பைக்கீற் ஏடு
நன்றாக.

நயினாற் இறசூல் சல்லலாகு அலெகிய ஓசல்லம்.

திருவிளமானா என்னும் மதத்துக்களிலேய்ந்தான் ஒருத்தன்

இந்த நாற்பதுகதீதையும் ஓதுவானாகில் அல்லாதும் பாடம் படிப்பானாகில்

ஓ அவ்வாள் எல்லாரும் ஓலியல்லா வென்று சொல்லுவார்கள்.

நாளைக்கு யாமத்திலே இந்த அடியா னெழுந்திருக்கும் போது

காலியானவர்கள்.

## *245. 8660 - b - மூதுரை*

பொருள்: *நீதி* இதழ்கள்: *10*

அளவு: *45 x 2* செய்யுள் எண்ணிக்கை: *- 33*

நிலை: நன்று, முழுமை.

குறிப்பு:

*பக்கத்துக்கு 4 வரி. அவ்வையா ரருளிய மூதுரை என்ற நூலின் பிரதி. காப்புச் செய்யுளில் மூதுரையானது முப்பதும் வருமே என்று கூறப் பெற்ற போதிலும் நூலில் 33 வெண்பாக்கள் உள்ளன. பாடபேதங்கள் பலவுண்டு.*

தொடக்கம்:

காப்பு:
ஆதி யனாதி யகஸ்தியர் வேதநூ
லோதுவா ரோதும் பொருளெல்லாம் - மேதினியில்
ஆதிரை யானை யடிபணிந் தேத்த
மூதுரை யானது முப்பதும் வருமே.

முடிவு:

முப்பதா மாண்டளவில் மூன்றத் தொருபொருளைத்
தப்பாமல் தன்கைப் படானாகிற் - செப்புங்
கலையளவே யாகுமாங் காரிகையார் தங்கள்
முலையளவே யாகிவிடும் மூப்பு.

*௲ ௬ ௧ ஆம் ஸ்ரீ (கி.பி.1886) ஆனிமீ ய ௳ (10-ஆம் தேதி) அனந்த (சிவன்) படித்து வந்த மூதுரை முற்றிற்று. ஸ்ரீராம ஜெயம். சிவமயம்.*

## 246. 8653 - a - மூதுரை

பொருள்: நீதி இதழ்கள்: 9
அளவு: 42 x2 செய்யுள் எண்ணிக்கை: - 33
நிலை: நன்று, முழுமை.

குறிப்பு:

பக்கத்துக்கு 4 வரிகள். 8660 - மூதுரை என்ற பிரதியைப் போன்றதே.

## 247. 8663 - b - மூதுரை

பொருள்: நீதி இதழ்கள்: 10
அளவு: 35 x 3 செய்யுள் எண்ணிக்கை: - 32
நிலை: சிறு சிதைவு

குறிப்பு:

பக்கத்துக்கு 4 வரிகள். 8653, 8660 - b - மூதுரை போன்ற பிரதியே இது. பாடல்கள் முறை மாறியுள்ளன.

## 248. 1 / 548 - b - மூதுரை

பொருள்: நீதி இதழ்கள்: 5
அளவு: 22 x 3 செய்யுள் எண்ணிக்கை: - 31
நிலை: நன்று, முழுமை.

குறிப்பு:

பக்கத்துக்கு 9 வரிகள். ஔவையாரியற்றிய மூதுரை பல பாட பேதங்களுடன் கூடிய பிரதி. இதிலுள்ள பாட பேதங்கள் சில நல்ல பாடங்களாகவும், ஆராயத் தக்கனவாகவும் உள்ளன.

சான்று:

கவையாகிக் கம்பாகிக் காட்டகத்தே நிற்கும்
அவையெல் லாம் நல்ல மரங்கள் - சபையகத்தே
நீட்டோலை வாசிக்க நின்றான் குறிப்பறிய
மாட்டா தவனே மரம்.

தொடக்கம்:

ஆதிரை யானை யடிபணிந் தேத்த
மூதுரை வெண்பா முப்பதும் வருமே.

முடிவு:

முப்பதா மாண்டளவில் மூன்றற் றொருபொருளைத்
தப்பாமற் றன்கைப் படானாகில் - செப்புங்
கலையளவே யாகுமாங் காரிகையீர் தங்கள்
முலையளவே யாகிவிடு மூப்பு.

## 249. 11318 - b - சத்தி குன்மம்

பொருள்: *மருத்துவம்* இதழ்கள்: *10*
அளவு: *23.3 x 2.8* செய்யுள் எண்ணிக்கை: *- 39*
நிலை: *நன்று, குறை.*

குறிப்பு:

*நோய்கள், குறிப்பிட்ட அந்நோய்களுக்கு உரிய அறிகுறிகள் இயம்பப்பட்டுள்ளன. ஆசிரியர், அச்சான விபரம் தெரியவில்லை.*

தொடக்கம்:

மயங்கிடும் வெளுக்கு மேனிவாய்வு மிகுந்து குற்றும்
பயங்கெட உண்ண வொட்டார் பயிற்றிய மிகுந்து நின்று
செயங்கெட சத்திபண்ணுஞ் செரித்திடா திருக்குமாகில்
தயங்கிய சத்திகுன்மம் தானெனுந் தடங்கண் மாதே.

முடிவு:

உண்டியில் பொருமலாலும் உடன்மலம் வீழ்தலாலும்
கொண்டுதான் களிந்த தண்ணீர் கொதிப்புடன் வெதும்பி னாலும்
மண்டியே வெளுத்துக்காயும் மயங்கெட வுலர்த்தலாலும்
அண்டமா முனிவர்சொன்ன அக்கினி மந்தமாமே.

## 250. 8661 - b - அரிச்சந்திரன் கும்மி

பொருள்: *கதை* இதழ்கள்: *7*
அளவு: *28.2 x 3.6* செய்யுள் எண்ணிக்கை: *- தொடர் பாடல்*
நிலை: *நன்று, குறை.*

தொடக்கம்:

பூமா திருந்து வளரு மய்யோத்திவாழ்
போச னரிச்சந்திரன் தன் கதையை
பார்மேவு செந்தமிழ்க் கும்மி சொல்ல
பாலன் கணபதி காப்பாமே.

பொய்யாதவர்க் கரிச்சந்திரன் கதையைப்
புகழ்ந்து மகிழ்ந்து புவிமீதில்
மெய்யாகச் செந்தமிழ்க் கும்மி சொல்ல
வேலவர் தன்பாதங் காப்பாமே.

முடிவு:

என்பது(ண்)மை இதுவரைக்கும் வனம்
இப்படியாக அழித்த துண்டோ
மன்ன னிடத்தி லுரைப்ப மென் (மே)ற
வனம் இப்படியாக அழித்ததுண்டோ
பூமியிலுள்ள மிருகமெல்லாம் வனம்
பூந்துமே ரெம்ப அழிக்குதென்று

## 251. 9287 - b - உலகநீதி

பொருள்: *நீதி*
அளவு: *41.2 x 2.4*
நிலை: *நன்று, குறை.*
இதழ்கள்: *6*
செய்யுள் எண்ணிக்கை: —

குறிப்பு:

*5654 - c.8660 - a,8663 - a* - உலகநீதி என்பனவற்றின் பிரதியே.

வஞ்சமறப் பரப்பிவித்த மருத்துவத்தி கூலி
மகாநோவு பண்டிதனார் கூலி
என்சொலுடன் கூலி குடா திருந்தபேரை
ஏதேது செய்வானோ யியமன் தானே.

*என்பது வரை உள்ளது.*

## 252. 5654 - c - உலக நீதி

பொருள்: *நீதி*
அளவு: *30.3 x 2.4*
நிலை: *நன்று, குறை.*
இதழ்கள்: *1*
செய்யுள் எண்ணிக்கை: —

குறிப்பு:

*8660 - a ,8663 - a* - உலகநீதி என்பனவற்றின் பிரதியே.

உற்றதொன்றும் வேண்டாதார்க் குரைக்க வேண்டாம்

*என்று தொடங்கும் பாடல் இறுதியில் உள்ளது.*

## 253. 8026 - f - இராசகோபால மாலை

பொருள்: துதி
இதழ்கள்: 12
அளவு: 38 x 3
செய்யுள் எண்ணிக்கை:- 40
நிலை: நன்று, முழுமை.

தொடக்கம்:

நந்தன்வரை மோதகத்தின் வரையில் வாழும்
ராச கோபால ரருள் மாலை தன்னை
விந்தைசெறி பூவுலகில் நீதி சாரம்
விபரமுடன் நாயடியேன் விளம்பும் பாடல்
பந்துமுலை வள்ளிதெய் வானை பங்கின்
பாரமயில் மீதேறிப் பவனி மீதில்
கந்தனுக்கு முன்பிறந்த அய்ங்கரத்தோன்
கணபதிதன் னிருசரணம் காப்ப (த)ாமே.

வாக்குண்டா நல்ல மனதுண்டா வாழ்மலராய்
நோக்குண்டா மேனி நுடங்காது - பூக்கொண்டு
துபப்ா திருமேனி தும்பிக்கை யான்பாதம்
தப்பாமல் சேர்வார் தமக்கு.

முடிவு:

ஓசையாய்ப் படித்த பேர்க்கும் உகந்துடன் எழுதினோர்க்கும்
நேசமாய்க் கேட்ட பேர்க்கும் நிச்சய மிவர்க ளெல்லாம்
வாசவன் பதவி பெற்று வாழ்வுட னிருப்பார் தாமே.
*ராஜகோபால மாலை முற்றிற்று.*
குருவே துணை.

## 254. 8026 - c - உலகநீதி

பொருள்: நீதி
இதழ்கள்: 7
அளவு: 38 x 3
செய்யுள் எண்ணிக்கை:- 24
நிலை: நன்று.

குறிப்பு:

உலகநாத முனிவர் இயற்றியது. பல பதிப்புகள் வெளி வந்துள்ளன. இந்தச் சுவடியில் பல பாடபேதங்கள் உள்ளன.

தொடக்கம்:

இலகு செந்தமிழ் யாவ துதிக்கவும்
அலகு தன்னை யிருநீதி மதிக்கவும்
உலக நீதிப் புராண முரைத்திட
நிலைகளா யென்றிடக் கணபதி காப்பு.

ஓதாம லொருநாளு மிருக்க வேண்டாம்
ஒருவரையும் பொல்லாப்புச் செய்ய வேண்டாம்
மாதாவைப் பிறக்கழித்து வாழ வேண்டாம்
வஞ்சினைகள் செய்வாரோ டிணங்க வேண்டாம்.

முடிவு:

ஆதரித்துப் பலவகையாப் பொருளுந் தேடி
அருந்தமிழா லறுமுகனைப் பாடம் வேண்டி
ஓதிவைத்த வாத்தியார் பொருளா யீந்து
உண்மையாய்ப் பாடிவை(த்)த உலக நீதி
காதலித்து உலகமதி(ல்)கற்றோர் கேட்டோர்
கனபவிசு பெற்றுநல்ல புத்திர ருண்டாய்
பூதலத்தில் மிகவாழ்ந்து பொருளுந்தேடி
பூலோக முள்ளளவு மிருப்பார் தாமே.

*உலகநீதி புராணம் முற்றிற்று.*

குருவே துணை.

## *255. 8882 - a - அகத்தீசர் பஞ்சாக்ஷரப் பத்து*

பொருள்: *மந்திரம்* இதழ்கள்: *8*
அளவு: *12 x 3* செய்யுள் எண்ணிக்கை: *10*
நிலை: *நன்று, குறை.*

குறிப்பு:

*நமசிவாய என்ற பஞ்சாக்ஷர மந்திர முறைகள் விவரிக்கப் பட்டுள்ளன. இதற்குமுன் 7 இதழ்களில் சில மருந்துகள், மந்திரம், எந்திரங்களின் படங்கள் போன்றன இடம்பெற்றுள்ளன.*

தொடக்கம்:

ஆதியாம் பராபரனைப் போத்தி செய்து
ஆதிசக்தி உலகனைத்தும் பிழைக்க வேண்டி
நீதியாய் மந்திரிக்க சக்கரங்கள் மூலி
நிசமாக உரையென்று அரனைக் கேட்க

சோதியே உமையவளே நீதான் கேளாய்
சொல்லுகிறேன் பஞ்சாக்ஷரத்தின் சுருவந் தன்னை
வாதியாம் பெரியோர்க்கும் புத்தியுள்ள
மன்னவர்க்கு மிதுவாகும் வகையைக் கேளே.

முடிவு:

| | |
|---|---|
| அஞுஉஎஓ | நமசிவய |
| ஐகிசிறிசி | சிவயநம |
| யவிவயறி | சிவயவசி |
| யயயயயயய | வங்சிங் |

## *256.3791 -d- அகத்தியர் நீலகண்டம் ஐம்பது*

பொருள்: *மருத்துவம்* இதழ்கள்: *9*
அளவு: *30.3 x 3.2* செய்யுள் எண்ணிக்கை: *- 50*
நிலை: *நன்று, முழுமை.*

குறிப்பு:

*பல்வேறு மருந்து விவரங்கள், நீங்கும் நோய்கள் விவரிக்கப் பட்டுள்ளன. அச்சானதாகத் தெரியவில்லை.*

தொடக்கம்:

நாடியதோ ரகண்ட பரிபூரண மாய்நின்ற
நர்தமுறு கிணேசனொடு கந்தன் காப்பு
ஆடியதோர் சிவனாரும் யென்னைப் பெத்த
ஆத்தாளும் நாவுதனில் குடிகொண் டேதான்
பாடியதோர் வைத்தியம் பத்துந்தான் சொல்வேன்
பாண்புலத் தியனே யின்னூல் லோடை
தேடியதோர் அரண்(சூ)ஷ்த்திரத்தில் நன்றாய்
திட்சையொடு கருகுருவுந் திரமி தானே.

-க-

முடிவு:

கண்டாக்கால் வாதமெல்லா மடிக்கீழ் போத்துங்
கருவான சவுக்கார மகிமை தன்னை
விண்டாக்கால் நசித்திடுவாய் னூல்கு டாதே
எந்தவித மிதனையென்றா லீயார்பாரு
தொண்டுசெய்து பதினாறு வருஷங் காத்தால்

சோதித்துப் பின்புஅவர்க் கீய்வா யப்பா
சண்ட மாருதம் இப்பாலே வெளியதாக
சாத்தியதோர் வியாதியு அன்பதுந்தான் முற்றே.
-ருய-

நீலகண்டம் ஐம்பது. குருவே துணை.

## 257. 379I -a- அட்டவணைச் சருக்கம்

பொருள்: மருத்துவம் இதழ்கள்: 1
அளவு: 30.3 x 3.2 செய்யுள் எண்ணிக்கை: - உரைநடை
நிலை: நன்று, முழுமை.

குறிப்பு:

இப்பகுதியில் உலோக செந்தூரம்,அதனுடன் சேரும் சில மருந்து கள் எவ்வெவ் வியாதி போக்கும் என்பது கூறப்பட்டுள்ளது.

உள்ள செய்திகள்

துத்தங் காரந் தரா வெண்கார மன்னி மிளை
கடங்கை கழஞ்சி - க - கெந்தி பல முறை பழச்
சாத்தாலாட்டி குகை சேர்த்து சிறு புடத்தைப்
போட செந்தூரமாகி நிற்கும். காசளவு சீனியில்
கொள்ள வயிற்றுவலி கிராணி போகு வற்குட்டம்
சலகழிச்சல் மாந்தமும் சாதிக்காய்ப் பொடியி
லூட்ட மந்தங் கரப்பு கிறமய சலிபோமே.
செந்தொட்டி வேரை வாங்கித் தொலியுரித்து தூளாயாட்டி
செந்தூரம் வைத்து குடுக்க கிராணி யெல்லாம் வாங்கும்.

## 258. 62I I - C- அகத்தியர் கெர்ப்ப சூத்திரம்

பொருள்: மருத்துவம் இதழ்கள்: 4
அளவு: 18.3x3.3 செய்யுள் எண்ணிக்கை:- 16
நிலை: நன்று, முழுமை.

குறிப்பு:

கர்ப்பம் தரிக்காததற்குக் காரணம்,தரிக்க மேற்கொள்ளும் வகை கள்,மருந்து விவரங்கள் விளக்கப்பட்டுள்ளன.

தொடக்கம்:

பாரப்பா பெண்மலடாம் கெர்ப்பக் கோளின்
பக்குவத்தைச் சொல்லுகிறேன் பண்பாய்த் தானே
ஆரப்பா ஆண்மலடே யாகு மல்லால்
அப்பனே பெண்மலடு யாது மில்லை
நேரப்பா தவசிருந்தும் பொருளே யீந்து
நேர்ந்ததிலை யறு.....யாலே தானும்
ஏரப்பா தேவதை யாலே...கெர்ப்பம்
விரைந்துண்ண ராய்ப் புகலுகிறேன் விரும்பிக் கேளே.

முடிவு:

மதுவாகும் வேதமுறை னான்கண்டு சொன்னேன்
சத்தியந்தா னிந்தனூல் சாய்ந்து பாரு
மதுவாகு மிதுவாகு மென்றே யெண்ணி
அலைந்து அலந்து திரியாம லருளை நோக்கிப்
பொதுவாகு னினவுகொண்டு யிருப்பா ராகில்
புத்திசித்தி முத்திமுதல் புனித மாமே.

-ய சா-

கெர்ப்ப விதி முற்றும். சிவமயம்.

## 259. 5454 - b - அகத்தியர் திரட்டு

பொருள்: சமயம் இதழ்கள்: 43
அளவு: 11.7 x 4.8 செய்யுள் எண்ணிக்கை: –
நிலை: நன்று

குறிப்பு:

5639 -a- அகத்தியர் திரட்டு என்பதன் பிரதியே இது. பாட பேதங்களுள்ளன.

## 260. 2137 - அகத்தியர் திரட்டு

பொருள்: சமயம் இதழ்கள்: 50
அளவு: 23.8 x 2.8 செய்யுள் எண்ணிக்கை: –
நிலை: நன்று, முழுமை.

குறிப்பு:

*5454* - a, *5639* - a - அகத்தியர் திரட்டு என்பனவற்றின் பிரதியே. இறுதியில் 9 இதழ்களில் பண் பற்றிய விவரங்கள் இடம் பெற்றுள்ளன.

## 261. 5935 - a - அகத்தியர் திரட்டு

பொருள்: சமயம் இதழ்கள்: 21
அளவு: 30×3.7 செய்யுள் எண்ணிக்கை:- 110
நிலை: நன்று, முழுமை.

குறிப்பு:

*2137, 5454* - , அகத்தியர் திரட்டு போன்றதே. இவற்றில் இல்லாத இரு வெண்பாக்கள் இதில் இறுதியில் உள்ளன.

நீலகண்டன் பங்கயத்தா னல்நேசமா யுள்ளிருத்தும்
பாலனே ஞானப் பரஞ்சுடரே - ஆலமுண்டான்
வண்டா ரணிபுயனே வள்ளலைப் பூசித்தபலன்
தண்டீசனே பணிந்தேன் தா.

சதுர் மறைதாந் துதிசெய்து வணங்கும்
மதிரம் பொளிக்குள மறைக்காட் டுறை மைந்தாவிது
கனகிறை வைத்தருள் செய்கவெனக் குன்கதவம்
திருக்காப்புக் கொள்ளும் கருத்தாலே.

-ஏய.

பூசைத்திரட்டு முற்றும். திருச்சிற்றம்பலம்.

## 262. 7946 - a - அகத்தீசுவரர் இந்திரசாலம் ஆயிரத்திருநூறு

பொருள்: ஜாலதந்திரம் இதழ்கள்: 129
அளவு: 28×4 செய்யுள் எண்ணிக்கை:- 1200
நிலை: நன்று, முழுமை.

குறிப்பு:

இரசவாதம், இந்திரசாலம், மாந்திரீகம் போன்ற நான்கு துறைகள் மூன்று காண்டங்களாக ஒரோர் காண்டத்தும் முந்நூறு பாக்களாக மொத்தம் 1200 பர்க்கள் அமைந்துள்ளன.

தொடக்கம்:

காரணமே மூலவட்டந் தன்னில் நிற்கும்
கணபதியும் வல்லபையுந் தேவர் காப்பு
பூரணமாம் பராபரையுஞ் சிவனும் நந்தி
பொருந்திநின்ற பஞ்சகர்த்தா கணங்கள் காப்பு
வாரணமே தேறிவிளை யாடு மெந்தன்
மன்னுகுரு வருள்சுரந்த குமரன் காப்பு
நாரணனும் நான்முகனு மறியா நின்ற
நலமான வேதாந்தங் காப்புத் தானே.

முடிவு:

சித்திபெறுந் தேவரீஷ(ர்)குகைக்குள் தோறுந்
திருவருளா லடக்கிவைத்து யிந்த நூலைப்
பத்தியுடன் பூசைசெய்து வரைகள் தாண்டிப்
பலன் பெறு மென்மேலு மவுன மப்பா
முத்திபெறுந் தவயோகி யானா லிந்த
மொழிதப்பா துலகினிலே நடந்தா யானால்
சத்தியருள் சகலசித்துங் கைக்குள் ளாகுஞ்
சத்தியந்தா னிந்தநூல் காண்ட முத்தே.

*மாந்திரீகம் நாலாங் காண்ட முடிந்தது. முற்றும்.காண்டம் சுரு(45)விருத்தம். க ஊ உள(1200) குருபரமே உதவி செய்வாய்.*

## 263. 5639 - a - அகத்தியர் திரட்டு

பொருள்: *சமயம்* இதழ்கள்: *29*
அளவு: *17.8 x 3.6* செய்யுள் எண்ணிக்கை:
நிலை: *சிறு சிதைவு, முழுமை.*

குறிப்பு:

*சைவத் திருமுறைப் பாக்களில் சில அகத்தியர் திரட்டு என்ற பெயரில் திரட்டிக் கூறப்பட்டுள்ளன. அச்சானது.*

தொடக்கம்:

திருவருளும் வெண்ணீ றெழுத்தஞ்சுங் கோயிலான்
உருவுமென் றிலைமே லாக்குந் - திருவடியுஞ்
சிட்டான வரசனையுந் தொண்டுஞ் சிவாலையற் கென்(று)
இட்டா ரகத்தியனா வெட்டு.

முடிவு:

மன்னியசீர் மறைநாவ னின்றவூர்ப் பூசல்
வரிவளைக்கு மானிக்கு நேசனுக்கு மடியேன்
தென்னவனா யுலகாண்ட செங்கணார்க் கடியேன்
றிருநீல கண்டத்துப் பாணனார்க் கடியேன்
அன்னவனா மானடியே யடைந்திட்ட சடைய
னிசைஞானி காதலன் றிருநாவ லர்க்கோன்
அன்னவனா மாரூர னடிமை கேட்டு கப்பா
ராரூர னாரூரி லம்மானுக் காளே.

-யக.

திருச்சிற்றம்பலம். அகத்தியர் திரட்டு முற்றும். (கி.பி.1856) அற்பசி ௨ உயகவு(21-ந் தேதி) சோமவாரம்.

## 264. 9/28 - b - அமராபதி கதை

பொருள்: நாட்டுப்புறக் கதை இதழ்கள்: 46
அளவு: 40 x 3 செய்யுள் எண்ணிக்கை: _
நிலை: சிறு சிதைவு, முழுமை.

குறிப்பு:

5448 - b. 7962 - b, 8249 - b , அமராபதி கதை என்பனவற்றோடு ஒப்புமை உடையது.

இறுதியில் ''௲௮௱௪௰௪(கி.பி.1844) ஆடி மாதம் ரு(5)தேதி அமரபச்சம் நவமியும் உத்திராட நட்செத்திரமு புதன் கிழமையுங் கூடி.....அமராபதி கதை யெழுதினது முற்றும். ஹரி ஓம் நன்றாக குருவே துணை ''என்ற குறிப்புள்ளது.

## 265. 5448 - b - அமராபதி கதை

பொருள்: நாட்டுப்புறக்கதை இதழ்கள்:27
அளவு: 40.5 x 3 செய்யுள் ண்ணிக்கை: -
நிலை: நன்று, முழுமை. தொடர்பாடல்
குறிப்பு:

8411 - b, 8249 - b, 7962 - b - அமராபதி கதை என்பனவற்றோடு ஒப்புமை கொண்டது.

தொடக்கம்:

அன்னம் அமுதுபடி ஆராய்ந்து தான்வருவாள்
எக்கோவி லுக்கும் இலங்கும்விளக் கேத்திடுவாள்
நற்கிணறு வெட்டிவைத்தாள் நன்தவனம் போட்டுவைத்தாள்
பந்தலிட்டு நிழற்சாலை பதித்தான் பெருவழியில்
பாரம் இறக்கிப் பசியாறித் தான்போக
தூரத்துக்குத் ததூரம் சுமைதாங்கி போடலுற்றாள்.

முடிவு:

ஆல்போல தழைத்து அறுகதுபோல் வேரூன்றி
மூங்கில்போ லன்னசுத்தம் முசியாமல் வாழ்ந்திருப்பார்

*சித்திர புத்திர நயினார்கதை முற்றுப் பெற்றது.*

*(கி.பி.1828) பங்குனி மாதம் யக௳(11-ந்தேதி)வெள்ளிக் கிழமையன்று யிந்தயேடுயெழுதினது தேனீர்குளம் நவநீத கிருஷ்ண சவி (சுவாமி) கோவில் தெருவிலிருக்கும் மாசானக்கோன் குமாரர் பெருமாள்கோன். இந்த யேட்டில் பிசகு இருந்தபோதிலும் வாசிக்கப்பட்ட புண்ணிய வான்கள் என்பேரில் தயவுசெய்து பிழை திருத்தி வாசிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.*

## *266. 7962 - b - அமராபதி கதை*

பொருள்: நாட்டுப்புறக்கதை
இதழ்கள்: 40
அளவு: 40.7x3.2
செய்யுள் எண்ணிக்கை: -
நிலை: நன்று, குறை.
தொடர்பாடல்

குறிப்பு:

*8249* -b- அமராபதி கதை என்பதுடன் பெரிதும் ஒப்புமை உடையது. சிலசொல், வரி அளவில் மாறுபாடுகளும் உண்டு. இறுதியில் ஒரு இதழ் மட்டுமே இல்லை எனத் தெரிகிறது.

தொடக்கம்:

அட்டதிக்குங் கொண்ட அறம்வளக்கும் பெண்பெருமாள்
அமரா பதியா ளருந்துதியாள் தன்கதைக்கு
மட்டிஸெயும் பூங்குழலாள் மாதுயம ராபதியும்
செட்டிச்சி யம்மையந்தச் சீமாட்டி தன் கதையை
காரணத்தால் பாடக் கணபதியே முன்னடவாய்.

முடிவு:

சரசோதி லெட்சுமியுந் தானுகந்து வாழியதே
இந்திரனார் வாழி யிமையோருந் தான் வாழி
சந்திரருஞ் சூரியருந் தழைத்தோங்கி வாழியதே
ஆனைமுகத் தய்ங்கரனு மறுமுகவர் வாழியதே

## 267. 8249 - b - அமராபதி கதை

பொருள்: நாட்டுப்புறக்கதை இதழ்கள்:42
அளவு: 34.3 x 2.7 செய்யுள் எண்ணிக்கை:-
நிலை: நன்று, முழுமை. தொடர்பாடல்
குறிப்பு:

*8411 -b- அமராபதி கதை என்பதுடன் கதையால் ஒப்புமை உடையது. நடை, போக்கில் மாறுபாடுகள் உள்ளன. ஆசிரியர், அச்சான விவரங்கள் தெரியவில்லை.*

தொடக்கம்:

செட்டிச்சி அம்மையெனுஞ் சீமாட்டி தன்கதையைக்
காரணத்தால் பாடக் கணபதியே முன்டைவாய்
வேழ முகத்து வினாயகனே முன்னடவாய்
உமையாள் திருமகனே உத்தமனே முன்னடவாய்
ஆன மகராசி அமராபதி ஒருத்தி
பூதலத்தில் செல்வம்புகழ் போற்(ற)வே வாழ்ந்து கொண்டு
மட்டில்லாச் செல்வம் வாழ்பெறவே வாழ்ந்துகொண்டு
..............................................................................

முடிவு:

ஆல்போல் தழைத்து அறுகதுபோல் வேரூன்றி
மூங்கில்போ லன்னசுத்த முசியாமல் வாழியவே

*சித்திரபுத்திர நயினார் கதையும் அமராபதி கதையும்எழுதி நிறை வேறியது. களுலயஉ, ஸ்ரீ ஆருயவ(1042 ஆம் ஆண்டு) (கி.பி.1867) 2உ சனிக்கிழமையும் அமரபக்ஷத்து ஏகாதசியும் ரோகணி நக்ஷத்திரமும் கூடின சுபயோகத்தில் முடிந்தது.*

## 268. 841 / - b - அமராபதி கதை

பொருள்: நாட்டுப்புறக்கதை இதழ்கள்: 33
அளவு: 30.2 x 3.5 செய்யுள் எண்ணிக்கை: -
நிலை: நன்று, முழுமை. தொடர்பாடல்

குறிப்பு:

சித்திரபுத்திர நயினார் கதையைத் தொடர்ந்து அமைவது. பல்வேறு தான தருமங்கள் செய்தும், சித்திரபுத்திரரை எண்ணாத தால் அல்லலுற்ற, தன்மராயன் மனைவி அமராபதி என்ற செட்டிச்சியின் கதை கூறுகிறது. அச்சான விவரம் தெரியவில்லை.

தொடக்கம்:

சித்திர புத்திரனார் சிவனார் பெருங் கணக்கர்
தேவர்கள் சூழுஞ் சிவனார் கயிலைதனில்
தன்மராயன் தேவி யமராபதிப் பெருமாள்
அவள்தன்மக் கணக்கைத் தான் விரித்துப் பட்டோலை
இன்னபடி யென்று வாசிக்க உத்தமனார்
சிவபூசை குருபூசை மயேசுர பூசையுடன்
மடங்கள் கட்டி யன்னமிட்டார் வணிகேசப் பெண்பெருமாள்

முடிவு:

ஆல்போல் தழைத்து அறுகதுபோல் வேரூணி
மூங்கில்போ லன்னசுத்த முசியாமல் வாழியதே.

அமராபதி க்தை முற்றும். ஹூ ய சூ ம் (ஞ) (கி.பி.1884) பங்குனி ஹூ உ ய உ (22-ந்தேதி) சாம வாரத்தன்று அனுச நட்சத்திரத்தில் எழுதி முகிந்தது.

குரு ரெட்சிக்க.

## 269.865 / - c - ஆசிரிய விருத்தம்

பொருள்: துதி இதழ்கள்: 13
அளவு: 35 x 2.5 செய்யுள் எண்ணிக்கை: —
நிலை: சிதைவு, குறை.

குறிப்பு:

இன்னார் மேல் பாடப்பட்டதெனத் தெரியவில்லை. அனைத்து இதழ்களின் வலப்புற ஓரமும் முறிவுபட்டுள்ளது. இதனை அடுத்து 54 இதழ்களில்(1)மூவரையன் வண்ணம் (2)ஏசல் (3)ஆவுடையம்மன் பேரில் தாய் மகளேசல் ஆகியன உள்ளன. சிதறிய ஓலைத் துணுக்குகளின் தொகுப்புகளே.மிகு சிதைவுக்கு ஆளாகியுள்ளன.

தொடக்கம்:

சீருலவு பூமகளை மார்பிலணி யாய்வைத்த செங்கமல
மலர்விழியினான்
சிவனெனவு மரியெனவு மிருபொருளு மொன்றதாய்ச் செப்புதற்
கரிதானவன்
திகிரி சங்கணி சூரன் குலவு பங்கய முகன்
திகழு மிங்கித முகுந்தன் சீதை பங்காளன்
காரணன் காணெனுந் தேவர் பண்பாடு நண்பன்

முடிவு:

நாராயண னிசைந்தனுபன்......
மகினம் தந்து இயல்மாய னுரைபோல....
.....(அ)ரிச்சந்திரர் சகல கலையில் பரிந்திடு சற்குணா
.....ரையிலய்ம்பொன் மேருவைப் போன்று
நல்லுலகு புகழவந்த மாலெனத் தோன்றிய
இளசை வளரு.........

## 270. 6354 - 0-உரோம ரிஷி ஞான சூத்திரம் ஐம்பது

பொருள்: ஞானம் இதழ்கள்: 8
அளவு: 8.2 x 2.9 செய்யுள் எண்ணிக்கை:- 52
நிலை: நன்று, முழுமை.

தொடக்கம்:

மூலாதாரத் தொளியாய் வெளியாய் ரூபாய்
முக்கோண வட்டமதில் முளைத்த தேவி
மேலான பாதமது போத்தி யேத்தி
மெஞ்ஞான சித்திமுதல் வாதஞ் சொல்வேன்
.....................................

முடிவு:

வாழ்ந்ததொரு ரோமர்சொன்ன அன்பத் தொன்றும்
வாகையோடே பார்த்தவர்கள் யோகி யாவார்
ஆழ்ந்ததொரு ரிஷியாவார் சித்த ராவர்
அழகான ஞானிசிவ யோகி யாவார்
போழ்ந்ததொரு மாணாக்கன் சொன்ன நூலை
பொதிகையின்மேல் தமிழ் முனிவர் தெரிந்து கொண்டு
ஏழ்ந்ததொரு உலகுக்கு வேணுமென்று
யியம்பினா ரன்பதின்மே லொன்று முத்தே.
-ருஉ.

*ரோமரிஷியா ரருளிச் செய்த ஞான முற்றும்.*

## *271. 2970 - இராமாயண காதை*

பொருள்: *இதிகாசக்கதை* இதழ்கள்: *11*
நிலை: *சிதைவு, குறை.* செய்யுள் எண்ணிக்கை: - தொடர்பாடல்

குறிப்பு:

*இராமாயணக் கதை கண்ணி அமைப்பில் பாடப் பெற்றுள்ளது. ஆசிரியர், அச்சான விபரம் தெரியவில்லை.*

முந்தி முந்தி வினாயகனே முருகன் சர(சு)பதியே
கந்தனுக்கு முன்பிறந்த கணபதியே கற்பகமே
தொந்தி வயத்தோனே தொப்பைக் கணபதியே
அந்தி மதியணியும் அரனார்க்குப் பாலகனே.

முடிவு:

ஆய்க்கும் பஞ்சாச்சர மில்லாத நாவுக்கும் ஆண்மையற்ற
சொலிக்கும் பசியற்ற நேரத்தி னுனுக்கு சீவித்தின்று
புரக்கும் பெண்பாலற்ற நித்திரைக்கு புதுப்பானையில்புற்
.....கும் பலனுண்டோ வெள்ளை னாவுள் ளிருப்பவனே.

## *272. 8088 - i- அகத்திய முனி அதீத சூத்திரம்*

பொருள்: வேதாந்தம் இதழ்கள்: *4*
அளவு: *30 x3.4* செய்யுள் எண்ணிக்கை: —
நிலை: *நன்று, முழுமை.*

குறிப்பு:

*இறுதிப்பாடலில் 'இவை சடாட்சர அந்தாதியிலுள்ளது' என்ற குறிப்பு காணப்படுகின்றது.*

**தொடக்கம்:**

ஹரிஓம் அகார வக்க்ரமு மாகி
அதிலே தான் சுழித்த விருசுழியு மாகித்
தெரியாத பொருளாகிச் சித்தரிய ராகிச்
சிவனுமாய்ச் சத்தியுமா யிரண்....னருபத்
தெரியாத நிற்மூட ரிதை யறிந்தாற்
தாயான மவுனத்தை யறிவா னையா
விரிகமலத் தோன்றியா னிந்த மூலம்
வேதாந்தஞ் சித்தாந்தம் வெளிவிட் டேனே.

முடிவு:

ஓரெழுத் தாதிநிரா மய்மைவரு முன்னறிய
பேறெழுத் தவ்வெழுத்தை மம்மைதேவி பிறகவள்பால்
ஆறெழுத்துஞ் சடையி லவதார மவனோடம்மை
ஈறெழுத் தாகிவேல ரெடுத்த திருவுருவே
இவை சடாட்சர வந்தாதி யிலுள்ளது.

*அதீத சூத்திர முற்றுப் பெற்றது.*

## *273. 8660 -* a - *உலகநீதி*

**பொருள்:** *நீதி* **இதழ்கள்:** *10*
**அளவு:** *45 x 2* **செய்யுள் எண்ணிக்கை:** *- சுமார் 80 வரிகள்*
**நிலை:** *நன்று, முழுமை.*

குறிப்பு:

*பக்கத்துக்கு 4 வரிகள். உலகநாதர் என்பார் இயற்றிய உலகநீதி எனும் நீதி நூல். அச்சானது. சில பாட பேதங்களுண்டு.*

**தொடக்கம்:**

இலகு செந்தமிழ் யாவர் துதிக்கவும்
அலகு தன்னை யறிந்து மதிக்கவும்
உலக நீதிப் புராண முரைத்திட
கலைக ளாய்ந்திடக் கணபதி காப்பதே.

ஸ்ரீராம ஜெயம் சிவமயம்.
ஹரி ஓம் நன்றாக குருவே துணை.

ஓதாமல் ஒருநாளு மிருக்க வேண்டாம்
ஒருவரையும் பொல்லாப்புச் சொல்ல வேண்ட ாம்
மாதாவைப் பிறக்கழித்து வாழ வேண்டாம்
வஞ்சனைகள் செய்வாரோ டிணங்க வேண்டாம்.

முடிவு:
ஓதிவைத்த வாத்தியா ருலக நாதன்
உண்மையாய்ப் பாடிவைத்த உலகநீதி
பூதலத்தில் மிகவருந்திப் பொருளுந் தேடிப்
புகழ்பெறவே கயிலாச மிருப்பார் தாமே.

[illegible] -(கி.பி.1886) மார்கழி [illegible] (13-ந் தேதி) அனந்தசிவ(ன்)படித்து வருகிற உலகநீதி முற்றும்.

## 274. 8663 - a - உலகநீதி

பொருள்: நீதி இதழ்கள்:10
அளவு: 35 x 3 செய்யுள் எண்ணிக்கை:- சுமார் 80 வரிகள்
நிலை: சிறு சிதைவு

குறிப்பு:

பக்கத்துக்கு 4 வரிகள். 8660 -a- உலகநீதி என்ற பிரதியைப் போன்றதே. இதிலும் சில பாடபேதங்களும், எழுத்துப் பிழைகளும் உள்ளன.

## 275. 3210 - d - அபிராமி அந்தாதி

பொருள்: துதி இதழ்கள்: 18
அளவு: 13.7 x 3.5 செய்யுள் எண்ணிக்கை:- 100
நிலை: நன்று, முழுமை.

குறிப்பு:

பக்கத்துக்கு 11 வரிகள். அச்சானது.

தொடக்கம்:

ஆடகமா மென்றுறையு மன்னமே நின்னுடைய
பாடகமுஞ் சீறடியும் பற்றினேன் - தேடரிய

அற்புதமே யம்மே யணங்கே மண்நாறுங்
கற்பகமே நீயென்னைக் கார்

முடிவு:

குழையைத் தழுவிய கொன்றையந்தார் கமலக்கொங்கை வல்லி
கழையைப் பொருததிரு நெடுந்தோளுங் கம்ல மென்னும்
விழையப் பொருதிறல் வேரியம் பாணமும் வெண்ணகையும்
முழையப் பொருத விழியும் பொற்றோடு முதிக்கின்றதே.

*அபிராமி யந்தாதி முகிந்தது. முற்றும். தேவி சகாயடு(ம்).*

## *276. 8661 - b - அரிச்சந்திரன் கதை*

பொருள்: *கதை* இதழ்கள்: *7*
அளவு: *28.2 x 3.6* செய்யுள் எண்ணிக்கை: - *சுமார் 140 வரிகள்*
நிலை: *நன்று , குறை.*

குறிப்பு:

*பக்கத்துக்கு 8 முதல் 10 வரிகள். அரிச்சந்திரன் கதை கும்மி வடிவிலமைந்துள்ளது. அச்சான விவரம் தெரியவில்லை.*

தொடக்கம்:

பூமா திருந்துவளரு மய்யோத்திவாழ் போச னரிச்சந்திரன் தன் கதையை
பார்மேவு செந்தமிழ்க் கும்மி சொல்ல பாலன் கணபதி கார்ப்பாமே
பொய்யாதவர்க் கரிச்சந்திரன் கதையைப் புகழ்ந்து மகிழ்ந்து புவிமீதில்
மெய்யாகச் செந்தமிழ்க் கும்மி சொல்ல வேலவர் தன்பாதங் காப்பாமே.

முடிவு:

பாம்புதேள் நட்டுவக்காலி யுடும்பு படுத்தடுஞ் செய்யான் பலகோடி
வீம்பு சொல்லுமவன் காபந்துக்காரர் விரட்டக்கடித்து வாட்டிடுமாம்
என்பதுண்ம இதுவரைக்கும் வனம் இப்படியாக அழித்த துண்டோ

மன்னனிடத்தி லுரைப்பமென்(றே)வனம் இப்படியாக அழிந்த
துண்டோ
பூமியிலுள்ள மிருகமெல்லாம் வனம் பூந்துமே ரெம்ப
அழிக்குதென்று.
........................................................

## 277. /043/ - இராமசாமி திருமேனிக்கறுப்பு

பொருள்: துதி இதழ்கள்: 11
அளவு: 39 x 2.3 செய்யுள் எண்ணிக்கை: - 43
நிலை: நன்று, குறை.

குறிப்பு:
பக்கத்துக்கு இரு பகுதிகளாக(2 பாடல்கள்) 8 வரிகள். கிருஷ்ணனைப் பற்றிய துதிப்பாடல்கள். அச்சான விபரம் தெரியவில்லை.

தொடக்கம்:
நெஞ்சமே வேறு நினையாத பஞ்சவர்க்குத்
தஞ்சமே யாயிருந்த தாடாளர் - மிஞ்சவே
கல்லை யுருவேற்றிக் கழலைச் சரணாக்கித்
தொல்லை யுருவேற்றித் தொழு.

முடிவு:
திருமேனி வண்ணத்தை நாற்பத்தி ரண்டையுஞ் சீருடனே
அரிதாக் கென்பவர் கற்ப வல்லோர்களு மாரிகராய்
நரவாகன் பெற்று நீடூழிகாலம்பின் னாயகமாய்ப்
பரிவாக வைகுண்டத் தீடேற்றத் தெய்வப் பதந்தருமே.
சங. -

ராமசாமி திருமேனிக் கறுப்பு முகிந்தது முற்றும்.

## 278. /154 - உலகம்மன் அந்தாதி

பொருள்: துதி இதழ்கள்: 13
அளவு: 37.8 x 2.9 செய்யுள் எண்ணிக்கை:- 100
நிலை: நன்று, முழுமை.

குறிப்பு:

*பக்கத்துக்கு 6 வரிகள். கிருஷ்ண சங்கரய்யர் உலகநீதி எனத் தலை இதழில் குறிப்புள்ளது. அச்சானது.*

தொடக்கம்:

உலகே பொதிகை மலைப் பரிசநின் றுலாவுசுமங்
கலகே கயநடங் கண்டிருப்பா யிருகாது மறைப்
பலகேள்வி யுண்மைப் பொருளே யுன்பாத பணிவனப்பால்
விலகே நெறியை விலக்கென் வினையை விலக்குவையே.

முடிவு:

மேலைக் கடவு ளிடப்பாகமுந் துள்ளும் வெள்ளருவி
மாலைப் பொதியவரைச் சாரலும் நின்ற வண்ணமுந்தான்
காலைக் கமலமுங் கலியாண விக்கிரகக் காந்தியும்பொன்
ஓலைக் குழையுங் குழற்பூவும் வாழி யுலகம்மனே.

*உலகந்தாதி முற்றும். சிவசயிலனாதன் துணை.*

## *279. 8/80 - ஐவர் அம்மானை*

பொருள்: *நாட்டுப்புறக்கதைப்பாடல்* இதழ்கள்: *110*

அளவு: *41.6 x 3.7* செய்யுள் எண்ணிக்கை: *- சுமார் 6600 அடிகள்*

நிலை: *சிறு சிதைவு, குறை.*

குறிப்பு:

*பக்கத்துக்கு 3 பகுதிகளாக 30 வரிகள். 91-ஆம் இதழ் இல்லை. முதல் இதழ் சுமார் 12 செ.மீட்டர் நீளத்துக்கு வலப் புறமாகச் சிதைந் துள்ளது.*

தொடக்கம்:

கந்தனே செந்தமிட்கும் கணபதியே காப்பாக
எந்தன் சரசோதி யெப்போதும் வாக்கில்நித்தம்
வந்துதவி செய்வாய் வழுத்துகிறே னிக்கதையை
முத்துக் கறைக்கண்டர் மொழிந்த வசனமிது.

முடிவு:

கோதை யுடனே குலாவி யிருந்தேனை
தெய்வேந் திரனுஞ் சிறப்பா யிந்தி ராணியுட
கோவேந்தர் கூடிக் குலாவி யிருக்கலையோ.

## *280. 9084 - ஒன்பதூர் விறலி விடு தூது*

பொருள்: *தூது* இதழ்கள்:*52*
அளவு: *36.5 x 3.2* செய்யுள் எண்ணிக்கை:*- சுமார் 730 அடிகள்*
நிலை: *சிறு சிதைவு, குறை.*

குறிப்பு:

*பக்கத்துக்கு 7 வரிகள். 'நவ விறலி விடு தூது மிகலு(வும்) அற்புதம்' எனத் தலையேட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.*

தொடக்கம்:

கார்பூத்த மேனிக் கருணைத் திருமாலும்
பார்பூத்த வுந்திப் பரந்தாமன் - சீர்பூத்த
வேலைகு முற்கடைந்த வேலைதருந் தெள்ளமுர்த
மாலை தருமென....

முடிவு:

தந்தச் சிமிழில் சபர்தென்று மாண்டியப்பன்
கந்தப் பொடியென்றுங் கம்பமென்றுஞ்
சந்தனங்க ளென்று மாடி ................

## *281. 8893 - e- அகஸ்தியர் அறுநூறுக்குச் சூத்திரம்*

பொருள்: *மருத்துவம்* இதழ்கள்: *20*
அளவு: *20.4 x 2.4* செய்யுள் எண்ணிக்கை:*- 264*
நிலை: *சிறுசிதைவு*

குறிப்பு:

*பல்வேறு மருந்து முறைகள் இயம்பப் பட்டுள்ளன. அச்சானதாகத் தெரியவில்லை.*

தொடக்கம்:

ஆதியாங் கிணேசன் காப்பு ஆறுநூத்துக் கருவை யெல்லாம்
சோதியாம் ஆயிபாதந் துணையென உட்கொண் டேத்தி
வீதியால் திரட்டிச் சூத்திரம் நிலைத்தவர்க் கிடமாய்ச் சால்வேன்
வாதியாம் பிணிகள் தீர்க்கும் மருந்துடன் குணத்தைக் கேளே.

முடிவு:

கேளப்பா கஞ்சாவால் கெட்டார் கோடி
 கெட்ட புகை வெகு னாத்தம்
தேளப்பா கொட்டுதல் போல் நெஞ்சிற் கட்டும்
 சீசி கசுமாலச் சித்தி மூலி
வேளப்பா யெரித்தசிவன் எனக்குச் சொன்னார்
 வேதாந்த சட்டமுனி தானுஞ் சொன்னார்
வாளப்பா யிதைவிட்டுக் கற்பங் கேளு
 வானவனை நமஸ்கரித்து வணக்க முத்தே.

## 282. 1/3/8 - C- எண்ணெய்ப் பாட்டு

பொருள்: துதி இதழ்கள்: 4
அளவு: 26.4 x 2.4 செய்யுள் எண்ணிக்கை: –
நிலை: நன்று, முழுமை.

குறிப்பு:

இறைத் துதிகள் அமைந்துள்ளன. ஆசிரியர், அச்சான விவரம் தெரியவில்லை.

தொடக்கம்:

வாத்து அனுப்பிலிடு மாதாவே பாலகர்க்கு
நேரமது சென்றாக்கலை நீங்கள் பெத்த பாலகரை
பார பிரம்பெடுத்துப் பதற யெமையடிப்பார்
கோதண்டார் மத்தில் கொண்டுபோய்த் தூக்கிடுவார்.

முடிவு:

ஆதியே ஞான அ(வ்)வையார் மொழியுரைத்த
மூதுரை யானதிலே மொழியுரைப் பதைக்கேளீர்
நாட்டு மனுடருக்குள் நல்ல நிகத்துரைக்க
மாட்டாதோ னெல்லாம் மரமாகு மென்றாரே.

## 283. 8500 - C- அடுக்குநிலை ஞான போதகம்

பொருள்: தத்துவம் இதழ்கள்: 4
அளவு: 26 x 3 செய்யுள் எண்ணிக்கை:- 10
நிலை: பழமை, குறை.

குறிப்பு:

*பக்கத்துக்கு 9 வரிகள். அச்சான விவரம் அறியக் கூடவில்லை. ஏட்டின் எண். 22 எனத் துவங்குவதால் முற்பகுதியும் அறியக்கூடவில்லை. 8500-b-ல் குறிப்பிட்ட மாணிக்கவாசகரி யற்றிய 10 பாடல்களும் விளக்கமும் உள்ளன.*

தொடக்கம்:

சொல்லிருந்த விடமெங்கே முப்பா ழெங்கே
துவாரபா லகரெங்கே முதற்பா ழெங்கே
நல்லசங்கு நிதியெங்கே வைகுன்ற மெங்கே
நாரணனு மாலிலைமேல் துயின்ற தெங்கே
அல்லல்படு மிப்பூத மொடுக்க மெங்கே
ஆறைஞ்சு மிப்பூத மொடுக்க மெங்கே
சொல்ல வல்லா ருண்டாகில் அவரைநாமும்
தொழுதுகுரு வெனப்பணிந்து வணங்கு வோமே.

முடிவு:

துங்கநிறம் பூண்ட கண நாதரென்றுந்
துவாரபா லகருடைய வாடி சென்றால்
சங்கநிதி தோற்றும்வை குந்தந் தோற்றும்
சாகரத்தில் பள்ளிகொண்ட மாலுந் தோற்றம்
அங்கணுரைத் தெரிசிக்கி லயனுந் தோற்றும்
அப்பாலும் பாபநதி தோற்றும் பால
மங்கை பிரான் கயிலாய மனையைக் கண்டால்
மானிலத்தில் பிறவியொழிந் திருப்பர் தாமே.

(ய)

*தேவி சகாயம். அடுக்குநிலை போதக முற்றும்.*

## *284. 8500 - d - அகத்தியர் சூத்திரம் பதினாறு*

பொருள்: *மருத்துவம்* இதழ்கள்: *3*

அளவு: *26 x 3* செய்யுள் எண்ணிக்கை: *- 16*

நிலை: *நன்று, முழுமை.*

குறிப்பு:

*பக்கத்துக்கு 9 வரிகள். இந்த நூல் 51-ம் சுவடியிலிருந்து தொடங்கு கிறது. இந்த ஏட்டின் இறுதியில் ஒரு அட்டவணை*

உள்ளது. அதில் இச்சுவடியில் உள்ள நூல்கள் பற்றியும், பாடல்கள் பற்றிய விவரமும் உள்ளன. இதிலிருந்து இந்தச் சுவடியில் விடுபட்ட நூல்களை அறியலாம்.பிற விவரங்கள் தெரியவில்லை.

தொடக்கம்:

ஆதிமறைச் சாத்திரங்கள் பிறந்த வாறும்
அடிமுடியும் நடுவாகிப் பொருளுண்டாகி
வேதியனு மால் சிவனு நின்ற வாறும்
வேதமுட னாகமங்கள் பிறந்த வாறும்
சாதிபல தொழில் முறைகள் ஆனவாறும்
தன்னுள்ளே அஷ்டாங்கஞ் செய்த வாறும்
ஓதியநூ லவரவர்கள் செய்த வாறும்
ஓமரச கணபதியே காப்புத் தானே.

முடிவு:

காணப்பா காவியத்துக் காக யிந்தக்
கருப்பொருளைப் பதினாறில் கருதிச் சொன்னேன்
வீணப்பா வென்றுசொல்லி யிந்த நூலை
வெளியிட்டா லுங்களுக்கு யென்மே லாணை
ஆணையப்பா முக்காலு மாணை யாணை
அறிந்துணர்ந்த ஞானிகளை யணைத்துச் சேரு
பாணப்பா உண்டுந்தான் பதத்தைப் போற்றி
பதினாறுஞ் சிவசூத்திரப் பொரு ளுரைத்தே
அகஷ்தியர் காவிய சூத்திர முற்றும்.

## 285. 8/40 - b - கெர்ப்பக் கோள்

பொருள்: *மருத்துவம்* இதழ்கள்: *8*
அளவு: *19.3 x 3.3* செய்யுள் எண்ணிக்கை: *- 23*
நிலை: *நன்று, முழுமை.* உரை விரவியது
குறிப்பு:

*பக்கத்துக்கு 9 முதல் 10 வரிகள். மலடென்று கூறப்பட்ட மாதர்கள் ஒன்று சேர்ந்து, நேமியோனிடம் தங்கள் குறை வேண்டி நிற்க, மால் அதனைச் சீனர்கள் உங்களுக்கு விளக்குவர் எனக் கூற, சீனர்கள் மலடுக்குரிய காரணங்களை விள்ளலாக 23 பாடல்களும்,*

அடுத்துத் தொடர்ந்து கெர்ப்பப் புழுவுக்கு மருந்து, அக்கினி தபனம், கெர்ப்ப வாய்வுக்கு மருந்து, கெர்ப்ப ரோகங்கள் போன்றன குறித்து செய்யுள் உரைநடை கலந்த வடிவில் விளக்கப்பட்டுள்ளன. அச்சானதாகத் தெரியவில்லை.

தொடக்கம்:

செந்தமிழ் முனிவனார் செகத்தில் மானிடர்
மைந்தரில்லா வகைமகி(ழ்)ந்து கூறிடத்
தந்திமா முகனையும் தொழுது தம்பியாங்
கந்தவேள் நாமமும் கருத்தில் நண்ணுவாம்.

-க.

முடிவு:

சலமிரத்தம் பட்டால் மருந்து சாம்பிராணி சவுக்கார மரைத்துப் பூசிப் புணரவும்.

சயித்தான் பிடித்தால் மாவிலை, மாதளை யிலை, பச்சை மஞ்சள், கத்தூரி, உச்சி முதல் துவாலை யிட்டு ஊத்தை உருட்டித்தள்ளி, கிழக்கே முகமாக விருத்தி கும்பஞ் சொரிந்து, வெள்ளைச் சீலை உடுத்து, சாம்பிராணி தூபங் காண்பிச்சு, துவாலை வெளுத்து கட்டவும்.

## 286. 8432 - குத்தாலலிங்கர் கொடிப்பாட்டு

பொருள்: பாட்டு
இதழ்கள்: 32
அளவு: 27.8 x 3
செய்யுள் எண்ணிக்கை: –
நிலை: நன்று, குறை.

குறிப்பு:

பக்கத்துக்கு 6 வரிகள். குற்றாலநாதர் கோவில் கொடிமரம் சேர்க்க தக்க மரம் தேடிப் புறப்படுகையும், மரம் கொணர வண்டி வகையும், அப்போது அவர்கள் கடந்து சென்ற ஊர் விபரங்களும், மர விபரங்களும், கொடி மரத்துக்குத் தேர்ந்தெடுத்த மரத்தின் தன்மை களும் விவரிக்கப்பட்டுள்ளன. ஊர்ப்பெயர், மரப்பெயர் அடுக்கல் கதைப்பாடல், மரபுடன் ஒப்பிடற்குரியது.

கருத்துடன் மங்கம்மாள் குப்பம்மாள் நாளையிலே
மங்க அம்மாள் சாலை பாதை கூடி

என்ற வரிகளால் இப்பாட்டு மதுரை ராணி மங்கம்மாள் காலத்திய நிகழ்ச்சிகள் ஆகலாம். ஆசிரியர், அச்சானவிபரங்கள் தெரியவில்லை.

தொடக்கம்:

குமார குருபர வெத்திவேலே
குன்ற அரியவேல் கொண்டு யெறிந்த பிள்ளா
அமர் சரங்களே விடுத்த பிள்ளா
ஆறுமுக வேலோனே
அஞ்சுதலை பொதிக மலை
அயயர் குத்தால மலையதுலே

முடிவு:

வண்டிகளும் மாடுகளும் மடமடவென்று வருகுதய்யா
கொத்தமார் ஆசாரிமார்களுமே நம்பிமார் போத்திமார் புட்டமாரும்
வாய்பாஞ்ச புலிபோலே வருகுமந்த தேவதைகள்
ஆருகுடியைக் கெடுப்போமென்று ஆரு மனையைத் தகப் போமென்று.

.................................................

## 287. 6274 - a- கொங்கணர் சரக்கு வைப்பு நூறு

பொருள்: மருத்துவம்
அளவு: 25 x 3.7
நிலை: நன்று, முழுமை.

இதழ்கள்: 22
செய்யுள் எண்ணிக்கை:- 102

குறிப்பு:

பக்கத்துக்கு 10 வரிகள். சீனக்காரம், சூடன் , வெண்காரம், நவச்சாரம், துருசு, கெவுரி, தொட்டிப்பாசாணங்கள், கெந்தகம், செயவீரம் சாதிலிங்கம், மிருதாரசிங்கி, பச்சைக்கர்ப்பூரம், வெள்வங்கம் - போன்ற சரக்கு வைப்பு முறைகளும், சுத்தி வகை களும் விளக்கப் பட்டுள்ளன. அச்சான விபரம் தெரியவில்லை.

தொடக்கம்:

ஆதியந்த மில்லாத வெளியுந் தாண்டி
யகண்டுநின்ற போகருட பாதம் போற்றி
சோதியென்ற சின்மயத்து னாயி பாதந்
துலங்கியதோ ரிஷிகளுட பாதம் போற்றி

நாதமென்ற சுந்தரமே சொல்லக் கேளு
நல்மார்க்க முறையதுவே துறந்து சொல்வேன்
நீதியென்ற வாயியுட பாதந் தன்னை
நினைவுகெட்டுச் சொல்லாதே நிலத்துள் ளோர்க்கே.

முடிவு:

சொல்வார்கள் வெளியில் விட்டேன் மண்ணுள்ளோர்க்குச்
சொன்னமடா யுத்தமமாம் பேர்க்குத் தானும்
அல்லாது வேறில்லைச் சூட்சஞ் சூட்சம்
அப்பனே பராபரமாம் பரையாள் தீட்சை
நில்லாதே நிலைகளிலே நிறுத்தி வைக்கும்
நிலையான குண்டலிதான் தாரை காட்டும்
சல்லாபக் காயசித்தி ஞான மாச்சு
சரக்குவகை சூத்திரந்தான் சார்ந்த முற்றே
- எஉ

கொங்கண சுவாமி பாதார விந்தமே கெதி.

இந்தச் சூத்திரத்தைக் களவாண்டவன் தலை தெறித்துக் குறைநோவு முண்டாய் நரகத்துக்குப் போவான்.

## 288. 6274 - b - நாடி சாஸ்திரம்

பொருள்: மருத்துவம் இதழ்கள்: 10
அளவு: 25.3 x 3.3 செய்யுள் எண்ணிக்கை:- 67
நிலை: நன்று, குறை.

குறிப்பு:

பக்கத்துக்கு 9 வரிகள். நாடி சாத்திரம் அறியும் முறை, மருந்திட்டின் குணம், பிழைக்குறி, மரணக்குறி, நல்குறி, அவத்தை, நாடி தொங்கிப் பின் குணம், பிழைக்குறி அறியும் முறை என்ற இவைகள் விவரிக்கப்பட்டுள்ளன. இப்பகுதியினை அடுத்துத் தொடர்ச்சியாக 4 இதழ்களில் விஷத்துக்கு மருந்தும் குளிர் சுரத்துக்கு மோரெண்ணையும், விளக்கப்பட்டுள்ளன.

தொடக்கம்:

கரிமுக னடியை வாழ்த்திக்
கையினில் நாடி பார்க்கில்
ஒருவிர லோடில் வாதம்

திருவிர லோடில் பித்தம்
தெரிவிரல் மூன்றி லோடில்
சிலோற்பன நாடியாமே. -க.

முடிவு:

புரிந்திமெய் சோர்ந்தி டாதே
போர்விழி சிவப்பே றாதே
வருந்திடு முடல்நா றாதே
வரிவிழி நீர்ப்பா யாதே
கரிந்துநா வறண்டி டாதே
சுவமிரை யாதே ஆகில்
வரிந்தியே பரிகா ரஞ்செய்
மாதுமை பங்கா ரனே.
- சாஎ.

## 289. 10283 - கதாசிந்தாமணி

பொருள்: கதை | இதழ்கள்: 104
அளவு: 40.5 x 3.3 | செய்யுள் எண்ணிக்கை:- உரைநடை
நிலை: சிதைவு, குறை.

குறிப்பு:

பக்கத்துக்கு 6 முதல் 8 வரிகள். மரியாதை ராமன் கதைகளாகும். அச்சானவை. இறுதிப்பகுதி ஏடுகள் பாதியளவுக்கு முறிந்து விட்டன. இடையிடை பல ஏடுகளையும் காணவில்லை. தமிழ் உரைநடை வளர்ச்சி பற்றிய ஆய்வுக்கு உதவும்.

தொடக்கம்:

முதலாவது. திருடர்கள் னாலுபேர்களில் ஒருவன். மற்றவரை மோசஞ் செய்தது. நாலுபேர் திருடர் ஒரு பட்டணத்தில் ஒரு கிழவியின் வீட்டில் இறங்கித் தாங்கள் திருடிப் பொதுவில் வைத்திருந்த உடமையையும் பணங்களையும் ஒரு தவலையிலே போட்டு மேலே முத்திரையிட்டு நாங்கள் நாலுபேருமாக வந்து கேட்கும்போது இதைக் கொடு.........

முடிவு:

....அந்த மோசக்காரன் அதுகளைத் தன்னுடைய கிரகத்துக்குக் கொண்டுபோய்க் கோர்.... .....(எ)ண்ணிப் பார்க்கும் வேளையில்

ரெண்டு முத்துக்கள் குறையக் கண்டு அந்த ரெண்டையும் தான் போக்கடித்ததாகவே நினைத்துத் திகிலடைந்து தா.........த்து வைச்சிருந்த ரெண்டு முத்துக்களையும் கூடச் சேர்த்துக் கோர்த்துக் கொண்டு போய்க் குடுத்துச் சணப்பன் வீட்டுக் கோழிதானே...

## 290. 7966 - கந்தபுராணக் கதை

பொருள்: புராணக் கதை இதழ்கள்: 90
அளவு: 44.5 x 3.5 செய்யுள் எண்ணிக்கை:- உரைநடை
நிலை: சிதைவு, குறை.

குறிப்பு:

பக்கத்துக்கு 9 வரிகள். கந்தபுராணக்கதைகள் எளிய பேச்சு வழக்கு இயன்ற உரைநடையில் எழுதப்பட்டுள்ளன. பக்க, ஓர முறிவுகள் மிகுதி. விநாயக, முருக வணக்கம். அவையடக்கம், கதை கேட்போர் பெறும் பயன் சைவ சமய வாழ்த்து என்பவை கூறும் ஆறு விருத்தங்கள் அடங்கிய பாயிரத்தினை அடுத்து கதை துவங்குகிறது. தெய்வயானை திருமணம் வரை உள்ளது.

தொடக்கம்:

தெட்சண ராசாவாகிய தக்கனென்கிற ராசாவானவன் அதல விதல தராதல மகாதல பாதாள லோகமு...புவலோகசுரலோக மகாலோகம் தவலோகம் சத்திலோகம் மிந்திரலோகத்தைச் சூழ்ந்திருக்கப்படாநின்ற ஆயிரத்தெட்டண்டமும் யிரு நூற்றிருபத்தினாலு புவனமும்.....

முடிவு:

அப்படியே குமாரக் கடவுளுந் தெண்டம் பண்ணி அனுப்பிக் கொண்டு திருப்பரங் குன்றெழுந்தருளி போயி·ருந்தார்கள். சகல தேவர்களையும் பாத்துக் கிருபையுடன் மகாதேவரும் அம்மனு மாகக் கயிலையங்கிரிக்கு எழுந்தரு...லாகிய தேவாதிகளுந் திருச் செந்தூரிலே போயிருந்து தெய்வ லோகத்துக்கு மறுவீடு போய் வந்திருந்துதிருப்பரங் குன்றமுந் திரு..........

## 291. 4103 - e-கும்பகருணப் படலம்

பொருள்: காவியம் இதழ்கள்: 20
அளவு: 35 x 3.2 செய்யுள் எண்ணிக்கை:- 120
நிலை: நன்று, குறை.

குறிப்பு:

பக்கத்துக்கு 5 வரிகள். கம்பராமாயண யுத்த காண்டத்தில் வரும் பகுதி. அச்சானது.

தொடக்கம்:

வாரணம் பொருத மார்பும் வரையினை யெடுத்த தோளும்
நாரத முனிவர்க்கேற்க நயம்பட வுரைத்த நாவுந்
தாரணி மவுலி பத்துஞ் சங்கரன் கொடுத்த வாளும்
வீரமுங் களத்தே போட்டு வெறுங்கையோ டிலங்கை புக்கான்.

## 292.6332 - கணக்கதிகாரம்

பொருள்: கணிதம்
இதழ்கள்: 50
அளவு: 29.2 x3.1
செய்யுள் எண்ணிக்கை:- உரைநடை
நிலை: சிறு சிதைவு, குறை.

குறிப்பு:

பக்கத்துக்கு 7 முதல் 9 வரிகள். இதழ்களின் இடது ஓரப் பகுதிகள் 3 செ.மீட்டர் நீளத்துக்கு முறிந்துள்ளன. 35-ஆம் இதழைக் காணவில்லை. 5683 - கணக்கதிகாரம் என்பதோடு ஒப்புமை உடையது. இடையிடை சில விவரங்கள் பா வடிவில் உள்ளன. கற்கும் மாணவர்க்கு உரிய நூல். அச்சானதாகத் தெரியவில்லை.

தொடக்கம்:
புவன விலாசம் அறிக்கை:

பூமியினுடைய பருமை விலாசமும் எவ்வளவோ வென்னில் சுத்துவிலாசம்(6480)ரோசினையும் பாதாள தாழ்வு ௩௰௲(30000) ரோசினையுமென்று . பூமி சக்கிர சாஸ்திரிகள் அளவிட்ட மேறையுரம் இந்த பாதாள நடுவாந்தரத்தில் நாகமென்கிற ராச்சிய மிருக்குமென்றறியவும். வானமென்பது பதினோரு மண்டலம் ஒன்றுக் கொன்று பற்றுக் கூறாய் விலாச மாயிருக்கும் முதலான கீழ் மண்டலம் சந்திர மண்டலம் யீரின விருஷ்த்தாரம் ௭௱௲௫௰௯
௩௭௱௯௰௮

முடிவு:

ஆடி உத்திராடந் தன்னி லடுத்திடுஞ் சுருதையவேளை
தேடியெண் திசையுங் காத்துத் திசைக்குறி அறியவல்லார்
நாடிய புகையைக் கண்டு நயம்பட உரைத்தவாறே...
.......வடமேல் மூலை
செல்லுமேல் காத்தேயாகில் செல்வமு மழையு முண்டாம்
கைதலம் நீதமுண்டாம் கடுவிடம் மூலை.

## *293. 9/24 - a - கேதார நாதர் சரித்திரம்*

பொருள்: *கதை* இதழ்கள்: *9*
அளவு: *41.7 x 3.5* செய்யுள் எண்ணிக்கை: *-*
நிலை: *நன்று, முழுமை.* *சுமார் 430 வரிகள்*
குறிப்பு:

*பக்கத்துக்கு 3 பகுதிகளாக 24 வரிகள். கேதார விரதச் சருக்கம் என்றும் முதல் இதழில் எழுதப்பட்டுள்ளது.*

தொடக்கம்:

பொற்பார சிவன்பாதஞ் சேரப்பொருந் துமைசேர்
சொற்பான்மை கேதார சொல்விரத - கற்பகற்றின்
(றூ)...ய பொருட்குத்தஞ் சொற்குத்தம் வாராமற்
பாயுமதக் குஞ்சரமே பார்.

முடிவு:

பஞ்சபாதக ராயினுஞ் செஞ்சடை தழைத்தகோன்
சங்கர னடியாரைப் பழித்த கொள்கையர்
யாவ ராகினுமின் னோன்பு நோற்றவர்
வேர்கோ னெனுஞ்செல்வ ராகுல ரென்றார்.
கேதாரனாதர் கதை முற்றும்.

*௲ அய(கி.பி.1805) வைகாசி ௴ ௩ ௳ (3-ந்தேதி) சிவ்வாய்க் கிழமை அனுச நட்செத்திரமும் கூடிய புண்ணிய தினத்தில் எழுதி முகிந்தது. காசாக்குடி பிடாகை கணக்கு வயிரவன் நாகேந்திர னெழுத்து. ராமனாதன் குருக்கள் மகன் சிவதாணுக் குருக்களய் யளேடு*

## 294. 1031б - C - கோயிற் புராணம்

பொருள்: புராணம் இதழ்கள்: 30
அளவு: 27.5 x3.2 செய்யுள் எண்ணிக்கை: 256
நிலை: நன்று, முழுமை.

குறிப்பு:

பக்கத்துக்கு 9 வரிகள். சங்கரமூர்த்தி சுவாமி தலபுராணம். சங்கற்பம் மருவு காணச் சருக்கம் - அய, உக்கிரன் வழிபடு சருக்கம் - [illegible] தக்கனைத் தவம்புரி சருக்கம் - யசா, வீரசேனன் பிணி தீர்த்த சருக்கம் - ருஅ, சயந்தரன் வினை தீர்த்த சருக்கம் - யரு, கரனவீரன் வீடு பெற்ற சருக்கம் - அ, கனமாடன் பேறு பெற்ற சருக்கம் - ௯ என 7 சருக்கங்களாக அமைந்துள்ளன. அச்சானது.

தொடக்கம்:

பைநாகந் தொழுதேத்தப் பானிற்மெல் லரும்பவிழ்ந்து
பைந்தே னூற்றும் புன்னாக வனத்துறையும் புராதன றொன்
னூல் வேட்கை பொருந்திக்கூற
மைநாகத் துடன்பிறந்த மலைமடந்தை திருவயிறு வாய்ப்ப
வந்த
கைநாகப் பசுங்குழவி காபரு சேவடிக் கமலம் கருதுவாமே. -ச-

முடிவு:

துளிப்பசுந் தேறல்மாந்தித் துதைந்துமெல் லரும்புபூசிக்
களிச்சுரும் பாற்றுபுன்னை வனத்துறை கடவு பொன்னூ
லுளத்தினில் விருப்பாற் நீட்டி யுணர்வுசா லந்தணாளர்க்
களித்தவ ராசபேயம் புரிந்தபே றடைவர் மாமன்னோ - ஈசக.

கனமர்டன் பேறு பெற்ற சருக்க முற்றும். திருச்சிற்றம்பலம். ஆவுடையம்மன் துணை. ஆக விருத்தம். உளருயஉ. [illegible] (கி.பி.1865) பிரட்டிதி [illegible] (புரட்டாசி)எ [illegible] சனிக்கிழமை(ய) ன்றைக்கு எழுதி முகிந்தது முற்றும். சொன்ன (சொர்ண) சுப்பிர மணிய பிள்ளை எழுதின எழுத்து. ஆக சருக்கம்-எ, பாயிரம் உள்படத் திருவிருத்தம் உளரு [illegible] யஅ மெங்களுக்கு எழுதியிருக்கும் அது சோதிக்கப்பெறும்.

## 295. 6277 - a- கைவல்ய நவநீதம்(மூலம்)

பொருள்: வேதாந்தம் இதழ்கள்: 53
அளவு: 24.2 x 3.6 செய்யுள் எண்ணிக்கை: - 295
நிலை: நன்று, முழுமை.

குறிப்பு:

பக்கத்துக்கு 9 வரிகள். தத்துவ விளக்கப் படலம் - 108, சந்தேகந் தெளிதற் படலம் - 185 என இரு ப்டலங்களில் 295 பாடல்கள் உள்ளன. அச்சானது.

தொடக்கம்:

முதற் கடவுள் வணக்கம்.

பொன்னில மாதராசை பொருந்தினர் பொருந்தாருள்ளந்
தன்னிலந் தரத்திற்சிவ சாக்ஷிமாத் திரமாய் நிற்கும்
என்னிலங் களினுமிக்க லெழுநில மவற்றின் மேலாம்
நன்னில மருவுமேக நாயகன் பதங்கள் போற்றி.

-க.

முடிவு:

குலவுசற் குருவின் பாதக் குளிர்புனற் றலைமேற் கொண்டா
லுலகினிற் றீர்த்த மெல்லா முற்றபே ரடைவார் போல
நலமே யாய கைவல்ய நவநீத நூலைக் கற்றால்
பலகலை ஞான நூல்கள் படித்த ஞானிகளாய் வாழ்வார்.

-எஅரு-

படலம் 2. விருத்தம் உள கூமுற்றும்.

## 296. 10366 - c- கஞ்சன் அம்மானை(கிருட்டிணன் கதை)

பொருள்: நாட்டுப்புறக்கதைப்பாடல் இதழ்கள்: 55
அளவு: 41.5 x 4 செய்யுள் எண்ணிக்கை:- சுமார் 2200 அடிகள்
நிலை: நன்று, குறை.

குறிப்பு:

பக்கத்துக்கு இரு பகுதிகளாக 20 முதல் 22 வரிகள். கிருட்டிண பரமாத்மாவின் கம்சவதம் அம்மானையாகப் பாடப்பட்டுள்ளது.

இப்பிரதியில் கோகுலத்தில் கண்ணன் கோபியரின் ஆடைகளைக் கவர்ந்து புன்னை மரத்தில் ஏறி இருக்க அவர்கள் அவற்றைத் தருமாறு வேண்டும் பகுதி வரையே உள்ளது. தஞ்சை சரசுவதி மகால் நூல் நிலையம் பதிப்பித்துள்ளது.

தொடக்கம்:

சீர்மடந்தை கேள்வன் றிருவுந்தி யோன்படைத்த
பார்மடந்தை வாழ்வுதரும் பல்லுயிரெல் லாம்படைத்த
தன்மம் பெருகத் தவஞ்செய்வோ ருண்டாக
................................

முடிவு:

எங்கோள் கரத்தில் யான்பெற்றால் வேண்டேனோ
மங்கையரே என்ன மறுத்தொருத்தி யென்சொலுவாள்
மற்றுங் கையினாய் முன்னூற்று முப்பதின்மர்
வுற்ற பகவா னொருவனுக்குத் தானஞ்சி
..........................

## *297. 6694 - காமன் கதை*

பொருள்: *கதை*
அளவு: *35.5 x 2.4*
நிலை: *சிறு சிதைவு, முழுமை.*
இதழ்கள்: *19*
செய்யுள் எண்ணிக்கை: *- சுமார் 380 அடிகள்*

குறிப்பு:

*பக்கத்துக்கு இருபகுதியாக 10 வரிகள். 5,10,13,16 ஆம் இதழ்களைக் காணவில்லை. 18,19 ஆம் இதழ்கள் 6 x1.5 அளவுக்கு வலது மேற்புறமாகச் சிதைந்துள்ளன.*
*உந்தன் மைந்தன் உரைத்தேன் ராமசாமினான் எனப் பாடியவர் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. தொடக்க வரிகளைச் சிதைவு, தெளிவின்மை காரணமாய் எழுத இயலவில்லை.*

முடிவு:

கடற்பேரிகை முழக்கன் அடப்போரிலும் துலக்கன்
காந்திமதிக் குடையான் ஏந்திழை மங்கைப் படையான்
கையில் கரும்புடையான் வையப் புகழ் துடையான்
காதலோடு ரதிக்கு ஆதரமும் வேறாக்கி
கச்சிதமாய் தான்வைத்தார் உச்சிதமா யன்னேரம்.

முற்றும்.

## 298. 9153 - a - குற்றாலக் குறவஞ்சி நாடகம்

பொருள்: சிற்றிலக்கியம்(குறவஞ்சி) இதழ்கள்: 47
அளவு: 18.2 x2.6 செய்யுள் எண்ணிக்கை:- 2
நிலை: சிதைவு, குறை.

குறிப்பு:

பக்கத்துக்கு 7 முதல் 8 வரிகள். சிதைவுடன், ஏடு முறிவுகளும் ஏற்பட்டுள்ளன. திரிகூட ராசப்பக் கவிராயரின் குற்றாலக் குறவஞ்சியே இது. அச்சானது.

வக்காவின் மணிசூடி வகைக்காரி சிங்கிசென்ற வழியைத் தேடி
மிக்கான புலிகரடி கிடுகிடென நடுநடுங்க வெறித்து நோக்கி
கக்காவென் றோலமிடுங் குருவிகொக்குக் கேற்றகண்ணி
கையில் வாங்கித்
தொக்காக நடைநடந்து திரிகூட மலைக்குழுவன் தோன்றி
னானே

என்ற பாடல் வரை உள்ளது.

## 299. 8076 - a - குலோத்துங்கன் ஐந்திணைக் கோவை

பொருள்: கோவை இதழ்கள்: 25
அளவு: 42.5 x 3 செய்யுள் எண்ணிக்கை:- 157
நிலை: சிறு சிதைவு, குறை.

குறிப்பு:

பக்கத்துக்கு 7 வரிகள். முன் ஓலைகளில் ஓர முறிவுகள் காணப் படுகின்றன. குமார மகிதரன், குமார குலோத்துங்கன், மூன்றாம் குலோத்துங்கன் மீது பாடப்பெற்றது. அச்சானது.

தொடக்கம்:

பொன்பூத்த தாமரை சேங்குமு ணீலம்பொற் கோங்குகரும்பு
மின்பூத்த காந்தளும் பூத்தெனவே வெகுண்டோருக் கெல்லாம்
கொன்பூத்த வேற்கை குமார குலோத்துங்(கன்)கோழி வெற்பி
லின்பூத்த கற்பகக்கா னடுவே ஓரிளங் கொடிக்கே.

முடிவு:

கொண்டாற் பழியுங் கொளாவிடிற் டாங்கி கொடு முனிவுந்
தண்டாம் புரவலருந் தருமாரந் தசும்பில் வெண்ணை
யுண்டாற்றுங்
கொண்டல் குலோத்துங்க சோழ னுறந்தை வெற்பில்
பண்டா ரறிவினையோ லினையென் கொளப்பட்டதுவே.

## 300. 3945 - b - கந்தபுராணம்

பொருள்: *புராணம்* இதழ்கள்: *12*
அளவு: *32 x 3* செய்யுள் எண்ணிக்கை: *- சுமார் 145 வரிகள்*
நிலை: *நன்று, குறை.*
குறிப்பு:

*பக்கத்துக்கு 6 வரிகள். கச்சியப்ப சிவாசாரியரின் கந்த புராணத்திலிருந்து சில பாடல்கள் எழுதப்பட்டுள்ளன.*

தொடக்கம்:

கண்ணரு மாசறு காட்சியா பாலன்ன
கண்ணுறி னுய்யு நலம்புகழ் வாருள்
கண்ணுறி னித்த வறோதினை யாய்யென்
கண்ணடி கட்சிலையே அருளே.

முடிவு:

சுற்றம தரனடித் தொண்டர் வலது
மற்றி லரவனடி மலகளே யலாற்
பற்றிலா சாலவு மினிய பண்பினர்
குற்றம தகன்ற கொள்கை மேயனார்.

## 301. 10448 - c - கானாமிர்தம்

பொருள்: *சமயம்(வைணவம்)* இதழ்கள்: *13*
அளவு: *34.1 x 3.4* செய்யுள் எண்ணிக்கை: *- 83*
நிலை: *சிறு சிதைவு, குறை.*

குறிப்பு:

பக்கத்துக்கு 6 வரிகள். இறுதி 4 இதழ்களின் ஓரப்பகுதிகள் சிதைவுபட்டுள்ளன. கிரந்த எழுத்தில் அமைந்துள்ளது.

## 302. 6719 - b - கைவல்ய நவநீதம்

பொருள்: வேதாந்தம் இதழ்கள்: 21

அளவு: 28.8 x 3.2 செய்யுள் எண்ணிக்கை : - 160

நிலை: நன்று, குறை.

குறிப்பு:

பக்கத்துக்கு 10 வரிகள். முதல் 12 இதழ்கள் இல்லை. முதல் 10 பாக்களும் இல்லை. 14-ஆம் இதழையும் காணவில்லை. 12 ஆம் ஏடு வலது ஓரமாக முறிந்துள்ளது. 6277 -a- கைவல்ய நவநீதம் என்பதுடன் ஒப்புடையது.

உருக்கிய திராநாநானா விருவங்க ளானாப் போல
விருத்தியள் கடப்பாடாதி விடையமாய்ப் பரிணமிக்கும்
கருப்பல விடையமெல்லா மாபாசந் தோத்தி விக்கும்
இருட்டினில் விளக்குங் கண்ணு மில்லாமல் பொருள்கா ணாதே

என்ற பாடலிலிருந்து உள்ளது.

முடிவு:

இன்னிலந் தனில் கைய்வல்லிய நவநீதமெனப் பேரிட்டு
நன்னில மருவுநாத நாராயணன் சொன்ன ஞானநூலை
பன்னி யாராய்ந்து பார்பொற பரமார்த்த சொரூபமாகி
அன்னிய மனைத்தும்பொய்யா யானந்த மெய்யா வாழ்வார்

- எக.

## 303. 11559 - h - கயிலாசச் சட்டை முனிநாயன் சோட்ச சூத்திரம்

பொருள்: மந்திரம் இதழ்கள்: 8

அளவு: 11 x 2.7 செய்யுள் எண்ணிக்கை: - 53

நிலை: நன்று, முழுமை.

தொடக்கம்:

சோதியெனுந் துரியவெளிக் கருவே அய்யா
சொற்பெரிய கயிலாச மயமே ஞானத்
தாதியே கடவுளே ஞான மார்க்கந்
தரத்திலென் றுரைத்தா லார்தான் காண்பார்.
வாதியென்று பேர்கொண்ட சுந்தரமே அய்யா
மகத்தான உவர்ச்சாரம் வழலை மார்(க்)க(ம்)
நீதியாய்ச் சொல்லுகிறே னினவாற் காணு
நிகண்டொடு பன்னிரண்டு நிலைத்திட் டோர்க்கே.

-க-

முடிவு:

ஆமப்பா சுந்தரமே அய்யா கேளு
அண்டத்தின் சுண்ணமொடு வாசிமூல
நாமப்பா நிகண்டுபன் னிரண்டு நூறு
நாட்டினேன் சூத்திரமாய்ச் சோடசமும் பாடி
வாமப்பா ரெண்டு கண்டம் வாதத்துக்கு
மகத்தான சூத்திர மிருநூறுஞ் சொன்னேன்
தாமப்பா சூத்திரமு நிகண்டுஞ் சோடசமுஞ்
சாத்திரமும் பாத்தவர்க்கே முத்து மாமே.

-ருஉ-

*சட்டைமுனி நாயன் சோடச சூத்திர மன்பத்தி மூன்று முற்றும்.*

## *304. 5954* - h- *குதிரைப்பாய்ச்சல் அகவல்*

பொருள்: *துதி* இதழ்கள்: *1*
அளவு: *31.5 x 3.6* செய்யுள் எண்ணிக்கை: *—*
நிலை: *நன்று, முழுமை.*

தொடக்கம்:

அஞ்சுக வாய னஞ்சுத மொழியரளு
வகைக் கூறுமன் கெவுரி பராபரி தூதனங்கனி
வாயமு தரந்தங்கை தாரணி குழலாள்
நின்னலந் தவிர்பரன் கும்பவார் முலையாள்
யெம்பிரான் றலைவி செம்பயில் தவிரக்
கூன்பிறை முடியாளென கடலுடையாள்.

முடிவு:

பேறாய் விளங்கும் நூறா றுகமும்
தேவரு முனிவரும் சூழ வீற்றிருந்து
தீவினை யகற்ற சாபவா னுதலையை
நமிட காவி லகிலாண்ட நாயகியைச்
சந்ததமும் போற்றித் தாள்பணி வோமே.
குருவே துணை.

## *305. 5954 - e- கைலாச சட்டைமுனி சுவாமி*

## *வேதாந்தம் ஞானம்*

பொருள்: ஞானம் இதழ்கள்: *26*
அளவு: *31.5 x 3.6* செய்யுள் எண்ணிக்கை:- *100*
நிலை: நன்று, முழுமை.

குறிப்பு:

*பரிபாஷைகளுடன் கூடிய பாடலமைதி. அச்சான விவரம் தெரியவி ல் லை.*

தொடக்கம்:

கயிலாச பராபரமே யென்னை யாண்ட
கடவுளெனும் தெட்சணா மூர்த்தி பாதம்
கயிலாசத் தெனையீன்ற மாயி பாதம்
கருணையுடன் போற்றிநின்ற ஞானம் சொல்வேன்
கயிலாச நிற்குணமே நிர்மலமே தேவா
காட்டுகிறீர் கேசரியைச் சின்மயமாயிக் காணே.

முடிவு:

ஆச்சப்பா சின்னமிந்தப் படியே யாகி
அடங்கிறது அக்கினியு மாவியுங் கூடி
வாச்சப்பா சந்திரனில் கலந்து போனால்
மாளுகுற விதமிதுதான் குளுந்து போகும்
நீச்சப்பா சின்னமொடு மானம் ரெண்டும்
..............................

*சட்டைநாதர் சுவாமியரருளிச் செய்த ஞானம்௱ம்(100) முற்றும்.*
*சற்குரு கிடாசமுண்டாதாகவும்.*

## 306. 14105 - கவிகள் பேரில் விருத்தம், வண்ணம்

பொருள்: துதி இதழ்கள்: 4
அளவு: 35 x 3 செய்யுள் எண்ணிக்கை:- 24
நிலை: சிறு சிதைவு, குறை.

குறிப்பு:

தெய்வங்கள், வள்ளல்கள், கவிகள் பேரில் பாடிய துதிப் பாடல் களின் தொகுப்பாகத் தெரிகின்றது. அச்சானதாகத் தெரிய வில்லை.

தொடக்கம்:

பரமர் திரிகூடலிங்கர் விசுவலிங்கர் வில்வவனப் பனையதேவர்
வரதர் சொக்கலிங்க...சிவசைலங் காரெங்கள் திருவன்னினாதர்
அரவர் நரசிங்க லிங்கர் கருத்தாகையிலே சாயெரித்
தாளுந்தேவர்
கரகமுனி பணிபாவனா சர்பததாமரையைக் கருத்தில்
வைப்பாய்.

முடிவு:

தண்டை கலீரெனும் கையில் வளைபட்டுச்
சல்லாப பொன்னுதலைக் குளே ளுயிரொக்கும்
உடலொக்கு முயரொத் தாதிசெய விலாசஞ் சேர்க்கப்
பொன்னாகப் படத்திலே சம்போகப் பிற்பாக மெடுக்கவே
எதிர்தோய் புனலங் கசனூரில் வந்திரு கால்கள்
பரந்தலை மோதவுஞ் செய்த சுரதத்தில் வெகுமிச்சம்
வெகுமிச்ச மெனவைப்பன்,இருவர்க்கு மிது நித்திய
மறவா துன்னாணை மோட்சங்கள் பெறுவதுவு மிதுவலோ.
உ௪.

## 307. 7958 - கிருஷ்ணன் அம்மானை

பொருள்: நாட்டுப்புறக்கதைப்பாடல் இதழ்கள்: 197
அளவு: 41.8 x 3.8 செய்யுள் எண்ணிக்கை:-
நிலை: நன்று, முழுமை. தொடர்பாடல்
குறிப்பு:

5659 - ஸ்ரீகிருஷ்ண அம்மானை என்பதுடன் கதை ஒப்புமை உடையது.

தொடக்கம்:

சீரணிந்த செல்வத் திருவனந்த மேத்துயிலும்
பாரளந்தா ரம்மானை பாடவே - ஏரனைய
விம்ப கடவிகட வேழமுதற் கிளைய
கம்பக் கடக்களிறே காப்பு.

திருவரங்கந் தனில்வாழும் சீதரன் புகழைப்பாட
குருபர னென்னவோங்கு மங்கு கண்கள் பணிந்துநாளுந்
தருவளர் கரவேலான் சண்முகத் தேவு முன்னோன்
பொருளொரு கோட்டு பிள்ளைப் பொற்பதம் சிரசில்
வைப்பாய்.

முடிவு:

தேவிதன் னுரையைக் கேட்டுத் தெய்வ நாடதனிற் புக்கி
ஏவிமா கரியில்வந்த யிந்திரன் றன்னை வென்று
காவினிற் புகுந்துயர்ந்த கற்பகத் தருவுங் கொண்டு
தூவுமால் விமான மான துவரையம் பதியில் சேர்ந்தார்.

நடை:

துவராபுரி நகரில் தொத்த முடனேதான்
வழுவாத செங்கோல் மனுநீதி தான்புரந்து
அன்றறு பதினாயிரம் வருக மாண்டு முகித்தபின்பு
வெள்ளியணை தனிலே பள்ளிகொண்டா ரம்மானை
வாழியது வாழி மங்காத நூல்வாழி
ஆழிய செங்கோல் செலுத்து மரசர் மிகவாழி
அஞ்செழுத்தும் வாழி யரனாருமை வாழி
மிஞ்சுதிரு மால்வாழி வேண்டும் புகழ்படைத்த
நால்வேதம் சாத்திரமும் நாளும் மிகவாழி
எந்தன் குருவாழி யீன்றெடுத்த தாய்வாழி
ஐந்து கரத்தோனும் ஆறுமுகனும் வாழியதே.

## *308. 5908 - e - கைலாச மூர்த்தி ஞானம்*

பொருள்: *மருத்துவம்* இதழ்கள்: *12*
அளவு: *26 x 3.7* செய்யுள் எண்ணிக்கை:- *34*
நிலை: *நன்று, குறை.*

குறிப்பு:

வேதாந்தத்துடன்,கற்ப முறைகளும் சொல்லப்பட்டுள்ளன. அச்சானதாகத் தெரியவில்லை.

தொடக்கம்:

நிற்குணமாயி நின்மலமாயி நிரஞ்சனமு மாகி
நேராத பூரணமுமாயி மனமெட் டாத
சற்குணமாயி சமரசமா யிருந்தானுந் தாண்டிச்
சச்சுதா(ந)ந்த வெளிக் கப்பால் நின்று
தற்குணமா யெனையாண்ட சின்மயத்தைப் போற்றிச்
சமரசமாயி வேதாந்த வாதஞ் சொல்வேன்
நற்குணமாஞ் சனகாதி ரிஷிகள் பாதம்
நலம்பெறவே னாவி('ல்)வைத்துப் பாடு வேனே.

-க.

முடிவு:

கூட்டுவது வகையொன்று பலமொன் றப்பா
கோரக்கர் சா(று)தான் பலமோ பத்து
நீட்டுவது நெய்யாலே வறுத்துக் கொண்டு
நேராகக் கற்பத்தை நிறுத்துப் போட்டு
மூட்டுவது அண்டமொன்று அவித்துப் போட்டு
முசியாமல் அரைத்துநன்றாய் எடுத்துக் கொண்டு
பூட்டுவது ஆவின்பால் படியோ ரெண்டு
புகழான தேனேஒரு படிதான் வாரே.

## *309. 5908* - C- *கருவூரார் சூத்திரம்*

பொருள்: *மருத்துவம்* இதழ்கள்: *34*
அளவு: *26 x 3.7* செய்யுள் எண்ணிக்கை:- *93*
நிலை: *நன்று, முழுமை.*

குறிப்பு:

மருத்துவம், வேதாந்தம், பூசாவிதி, யோகம், ஞானம், அட்டசித்து என்ற பல வகைகளும் விளக்கப்பட்டுள்ளன. அச்சான விபரம் தெரியவில்லை.

தொடக்கம்:

சீர்பெறு வேதாந்தச் சூத்தி ரத்தைத்
தெட்சணா மூர்த்திபதம் பணிந்து போற்றி
கார்பெருக்கும் ஆயியுட பதமும் போற்றி
கயிலாசத் திருமூலர் பதமும் போற்றி
பேர்பெருகுஞ் சட்.டைமுனி போக நாயன்
பேரின்ப கோரக்கர் பதஞ்சலியுங் காப்பு
ஏர்பெருகு மருளோடும் பொருளுங் கூடி
என்மகனே உத்தமர்க்கா மிந்த நூலே.

- க.

ஆமப்பா சாரவித்தை சொல்லக் கேளு
அடவுடனே கட்டிஒன்று வாங்கி வந்து
ஓ(ம)ப்பா வெள்ளாட்டு ஊனி லேதான்
உறவாக எட்டுனா லூற விட்டு
வேமப்பா எடுத்ததி....பழத்தின் சாறு
விட்டுநன்றாய்க் கழுவியதை உலர வைத்துத்
தாமப்பா கும்மட்டி விரையைப் போக்கித்
தயவாகச் சாரமந்தக் காய்க்குள் வைய்யே.

முடிவு:

பாரப்பா சூத்திரத்தில் பொருளெல்லாஞ் சொன்னேன்
பரிபாசை மருளுமந்த முறையுஞ் சொன்னேன்
பேரப்பா தேவியுட பூசை மார்க்கம்
பேரின்ப யோகமொடு ஞான மார்க்கம்
பாரப்பா அஞ்சனமுந் தம்பனமுங் குளிகை
அஷ்டசித்தி ஆடுகிற மார்க்கம் தானும்
நேரப்பா மறைப்பின்றி சொல்லி விட்டேன்
நினவோட பாத்தோர்க்குப் பலிக்குந் தானே.

**குருவே துணை.**

## *310. 5908 - a-கொங்கண சுவாமி சரக்கு வைப்பு*

பொருள்: *மருத்துவம்* இதழ்கள்: *37*
அளவு: *29.7 x 4.4* செய்யுள் எண்ணிக்கை: *- 104*
நிலை: *சிறுசிதைவு, முழுமை.*

குறிப்பு:

இது தஞ்சை சரஸ்வதி மஹால் நூலகத்தாரால் அச்சிட்டதாகத் தெரிகிறது.

தொடக்கம்:

ஆதிஅந்த மில்லாத வெறியுந் தாண்டி
அகண்டு நின்ற போகருட பாதம் போற்றி
சோதியென்ற சின்மயத்தின் சோதி பாதம்
துலங்கியதோ(ர்)ரிஷிகளுட பாதம் போற்றி
நாதமென்ற சுந்தரமே சொல்லக் கேளு
நலமாக முறையதுவே...சொல்வேன்
நீதியென்ற ஆதியுட பாதம் போற்றி
நினவு கொண்டு சொல்லாதே..னோர்க்கே.

-க-

முடிவு:

இந்த சாஸ்திரத்தை ஆராகிலும் துஷ்டபுத்தி யினாலே எடுத்து கொண்டு போனால் அவர்கள் கண் கெட்டு குட்டங் கொண்டு ரவிகோடி நரகமெய்துவார்கள். அப்படி வராதேபடிக்கி சகல சோடச யுபசாரத்தோடே வாங்கித் தெரிசினை பண்ணவும். பண்ணினால் கர்மங்கள் தீந்து சித்தனாவார்க ளென்றாவாறு.

வேலாயுத சாமியார் பாத தாமரையே துணை.

## 3//. 8239 - கிருக சமையம்.

பொருள்: சோதிடம் — இதழ்கள்: 18
அளவு: 29.7 x 4.4. — செய்யுள் எண்ணிக்கை:- 244
நிலை: நன்று, முழுமை.

குறிப்பு:

17-ஆம் ஏட்டிலிருந்து குறிப்பிட்ட இச்சுவடி தொடங்குகின்றது. பன்னிரு ராசி பலன்கள் விளக்கப்பட்டுள்ளன. அச்சானதாகத் தெரியவில்லை.

தொடக்கம்:

[illegible] [illegible](கி.பி.1861)ஆனி [illegible] (31ந் தேதி)எழுதிய ஏடு.

பாரப்பா லக்கணங்கள் பன்னிரண்டு ராசிக்குள்ளே
சீரப்பா கிரகம் நின்ற சிறப்புள்ள பலன்கள் தன்னை
ஆரப்பா புரோதிமார்க்கு அறிவுள்ள மானிடர்க்கு
நேரப்பா சமையம் பார்த்து பலனதை நிகழ்த்துவேனே.
பலனது மேடவீட்டில் பருதிசெஞ் சுடரோ னின்றால்
கலகமுந் தீர்ந்து போகுங் கடனது குடுக்க மீளும்
நலமுடன் யாபாரங்கள் நன்மையா யுள்ளதெல்லாம்
நல்கமாய் செய்ய வேண்டும் நாதனா ரருள்செய் வாரே.

முடிவு:

நாளொன்று குழிகனுக்கு நல்கிய கிரகம்பத்தும்
வாழ்வுண்டும் தாழ்வு உண்டும் வரிசையா(யா)ய்ந்து பார்ப்போர்
கோள்கண்டு தீர்க்கவேணுங் குணங்கண்டு இருக்கவேணுந்
தாழ்வில்லாப் புரோதிமார்கள் சாஸ்திரம் சவு முற்றே.

ஆக பாட்டு ௨௱௬௰௬ ௫ முற்றும்.

குழைக்காதர் துணை. குருவே துணை.

## 312. 9287 - c - கதிர்காம மாலை

பொருள்: துதி — இதழ்கள்: 8
அளவு: 41.2 x 2.4 — செய்யுள் எண்ணிக்கை:- 30
நிலை: நன்று, முழுமை.

குறிப்பு :

8026-h, 8663-e, கதிர்காம மாலை ஒத்ததே. இதனை அடுத்தும் மறு முறை கதிர்காம மாலை 26 பாடல்களும், பின்னும் ஒரு முறை 21 பாடல்களும் உள்ளன.

முடிவு:

சென்னியிலே பூவிருக்க திருக்கையிலே வேலிருக்க
பன்னிரெண்டு கையிருக்க பயமெனக்கு வருவானேன்
முன்னேவரு நாளையிலே முடிப்பெனக்குத் தந்ததுண்டோ
கன்னல் மொழி வள்ளிபங்கா கதிர்காம வேலோனே.

கதிர்காம மாலை முற்றிற்று.

௲ ௨௰௯ ௵ (கி.பி.1854)தை பூ ௨௰௬ ௳ (26-ந் தேதி).

## 3/3. 8026 - h - கதிர்காம மாலை.

பொருள்: துதி
அளவு: 38 x 3
நிலை: நன்று, முழுமை.
இதழ்கள்: 13
செய்யுள் எண்ணிக்கை:- 42

குறிப்பு:

8663 -e- கதிர்காம வேலன் மாலை ஒத்ததே. பாட பேதங்கள் உள்ளன.

தொடக்கம்:

சீரார் கதிர்காமஞ் சென்றே னறுமுகவன்
பாராறு மாலைதன்னைப் பாடுதற்கு நீயிறங்காய்
தாரார் குழலுமையாள் தானீன்ற தற்பரனே
காராறு மேனி கணபதியே காப்பாமே.

முடிவு:

இன்னிமை யாகமனம் வேறுவைத்த நாள்முதலாய்
சொன்னதை மறந்து தோகைதனைக் கடிநீர்
மன்னீர் தனக்கு மலநீர் நிகராமோ
கண்டீரோ சொல்லுங் கதிரகாம வேலோனே.

கதிர்காம மாலை முற்றிற்று.

குருவே துணை.

## 3/4. 8882 - b - குருமுனி மயேசுபரி பூசாவிதி

பொருள்: பூசாவிதி
அளவு: 12 x3
நிலை: நன்று, முழுமை.
இதழ்கள்: 5
செய்யுள் எண்ணிக்கை: —

குறிப்பு:

மகேஸ்வரியை வணங்கும் முறைகள் விவரிக்கப்பட்டுள்ளன. இதனை அடுத்து சாபநிவர்த்தி, வசிய கணபதி என்ற செய்திகள் 5 இதழ்களில் காணப்படுகின்றன. அதன்பின் சில மருந்து செய் முறைகளும், மந்திர எந்திரங்களும், சாபநிவர்த்தி ஆகியனவும் இடம்பெற்றுள்ளன.

தொடக்கம்:

சோதியாம் மயேசுபரியைத் தியானஞ் செய்ய
குஷ்சமென்ற அறுகோண மிட்டுச் சூலம்
வீதியென்ற னாக்கோணம் வாசல் நாலு
வீட்டுக்குள் அட்சரத்தை விளம்பக் கேளு
ஆதியென்ற கீழ்வாசல் வலபா கத்தில்
அரகரா கணபதியை அறிந்து போடு
நீதியென்ற தென்வாசல் ஞாகரம் போடு
நேராக மேல்வாசல் ஏகாரம் போடே.

முடிவு:

அம்மையே தாயே அடியவர்க் கடியேன்
செம்மையாய்க் காருத் தீரமா நந்தி
இம்மையை நீக்கி யேகமாய் காட்சி
நன்மைமையாய் ப்பூசை நயந்து கொள்ளம்மையே.

## 315. 7296 - குருநாடி

பொருள்: மருத்துவம்
இதழ்கள்: 36
அளவு: 29.5 x 3.2
செய்யுள் எண்ணிக்கை:- 310
நிலை: சிதைவு, முழுமை.

குறிப்பு:

நாடி விவரங்கள் விளக்கப்பட்டுள்ளன. ஆசிரியர் அகத்தியர். அச்சான விவரம் தெரியவில்லை: சிதைவு காரணமாய் பிறவிபரங் களும் தெரியவில்லை.

தொடக்கம்:

ஓங்கார...டழ்ந்த- பிரணவத்தன் செய்கையுற்
றுணிந்து சூஸ்திரமா.................
...ண்டதொரு....தேர்ந்து வருவு சுருப ன்னும்
.................மந்த நேர்மை
பாங்கா........ரைதா னார்ாய்ந்து பாடி வைத்தே
............................
நீங்காத கணபதியுங் கந்தன் றானும்
நிசமாக வந்துதவுங் கா....னே.

முடிவு:

தாகத் தண்ணீர் தாகித்து தக்கவே கொள்.....
மேகம் போலே குழல் மடவீர் விரையப் பின்னும் பொசிப்பது கேள்
ஆகஞ் சேருங் கண்டத்து ளதனைக் கொள்ளில் மிடறு
....கஞ்சேரு முடிதன்னில் பகர்ந்தார் மாமுனி பண்டிதரே.....
-ௗ௱ய

அகத்தியர் சுவாமி அருளிச் செய்த குருநாடி மூன் .... முகிந்தது. முற்றும் . விக்கினேஸ்வரருடைய கிருபையும், வாலாம்பிகை யுடைய கிருகையு முண்டாயிருக்க வே....ள ... ண்டுக்குச் செல்லு மருந்துளே காரி ௵ கார்த்திகை ௴ யஅ ௳ வியாழக்கிழமையில் முகிந்தது. முற்றும்.

## 3/6. 3/62 - a- கிரகபலம்

பொருள்: சோதிடம் இதழ்கள்: 27
அளவு: 40.6 x 3 செய்யுள் எண்ணிக்கை: _
நிலை: சிறு சிதைவு, முழுமை.

குறிப்பு:
அனைத்து இதழ்களின் வலது மேற்புறமும் சிதைவுக் காளாகியுள்ளன. 12 பாவகமும் கூறப்பட்டுள்ளன.

தொடக்கம்:

சூரிய னுதையஞ் சார்ந்தாற் சுகிபர தேசிசூரன்
ஆரிய அசலூர் வாச னழகுள்ளா.....
.....ாக் கன்னரிருக் கண்ணோய் சென்னி யிடியுற்ற காந்தல் பித்தம்
வீரியன் வலியன் காவி விகுர்திய ....ன் வானே.
-க.

முடிவு:
யிந்த கிரக பலம் ௲௲ யருஞ்ரவுத்திரி ௵ சித்திரை மாதம் உ௳ (2-ந்தேதி)சங்கரலிங்கம் எழுதினது. சங்கரலிங்கம் துணை. ரவுத்திரி. சித்தைரை மாதம் உ௳ குருவாரமும் கிட்டண பக்ஷமியம் பூருட நட்செத்திரமும் மிதுன லக்கனத்தில் எழுதின..........

## 3/7.8/44 - கல்யாண வாழ்த்து

பொருள்: நாட்டுப்புறப்பாடல் இதழ்கள்: 60

அளவு: 16.6 x 2.6 செய்யுள் எண்ணிக்கை:-

நிலை: சிறு சிதைவு, முழுமை. தொடர்பாடல்

குறிப்பு:

திருமணத்தின் போது மணமக்களை வாழ்த்திப் பாடும் பாடல்.

தொடக்கம்:

வாழ்த்துங்கள் வாழ்த்துங்கள் மங்கிலியப் பெண்டுகளே
எல்லோருங் கூடி யினிதாக வாழ்த்துங்கள்
மாப்பிள்ளை யெல்லோரும் வாழ்த்துங்கள் வாழ்த்துங்கள்
கற்பகக் கணியான் காரிகையை வாழ்த்துங்கள்
வேதமும் வேதியரும் மேன்மையுடனே வாழ்க
காஞ்சுமா முகத்துக் கற்பகத்தின் தாள் போற்றி
வள்ளி தெய்வானையள் வாழ்வுதான் போற்றி
பார்பதியை யெங்கள் பரமுனுடன் பதம் போற்றி
தேவரெல்லாம் வாழ்த்தும் திருமால் பதம் போற்றி
செந்தாமரை வாழுந் திருமகள் பூந்தாள் போற்றி
கலியாண வாழ்த்து களிப்பாக யான் மொழிவேன்.

முடிவு:

வண்டனைய மொழியாட்கும் கண்டனைய மொழியாட்கும்
பைந்தமிழ்க் குபகாரன் முப்பார் மகிழ் சுகுமாரன்
சிந்தை களிக்கவரு சேயான் சூரனுக்கும்
செம்மலர் குழலாட்டு நறுமலர்க் கழலாட்கு(மங்)களம்
மந்திர வசனன் சத்ய வாக்கிய மிகுந்தயோகன்
......னை ்பனைய சுகந்.....தனுக்கும்
கற்புடைய....பொற்குண...மங்களம்.

கேறிமல்லன் பட்டி கணக்கு புதுப்பட்டியிலிருக்கும் சங்கரலிங்கம் பிள்ளை மகன் பாட கலிங்கமம் பிள்ளை அருமைக் குமாரன் சுப்பிரமணியன் எழுதின கலியாண வாழ்த்து.

## 3/8. 865/ - a - கட்டபொம்மன் பாட்டு

பொருள்: நாட்டுப்புறப்பாடல்
இதழ்கள்: 12
அளவு: 35 x 2.5
செய்யுள் எண்ணிக்கை:- 121 அடிகள்
நிலை: சிறு சிதைவு, குறை.
குறிப்பு:

சுதந்திரப் போராட்ட வீரன் பாஞ்சாலங்குறிச்சி வீரப்பாண்டி யக் கட்டபொம்மன் பற்றியது. வரலாற்றுக்குத் துணை புரியும். அடுத்து 11 இதழ்களில் சிதைவு காரணமாய் இன்னதென அறிய இயலாத செய்திகள் அமைந்துள்ளன.

தொடக்கம்:

சீர்கொண்ட சந்தவரைமேல் சுந்தரவல்லி தேவி குஞ்சரிபாகனே -க-
சிவசுப்பிரமணியக் குமரேசனைப் பரமென்று சிந்தைதனிலே நினைந்து -உ
தேவி மாயீ சக தேவி யபிராமி பொற்சிலம் படிதனைப் பணிந்து -ங
தென்பதந் தாபுரிக் கயிலாச நாதரைத் தேவியானந்த உமையை -ச
திருவடிச் சரணார விந்தத்தை யன்புடன் சிந்தைதனிலே நினைத்து -ரு
செங்கோல் நடத்தி மனுநீதி சக்கிராபதி திசரத குமாரஸ்ரீ ன் -சா
சிங்க(ர)ர சனாதிபதி மனுபதி கெசபதிதீர் ரெகுபதி அசுபதி -எ
திரைசேரன் சொன்ன் பாண்டிய குலாதிபதி செயவிசைய ராசபதி-அ
தென்மதுரை நெல்வேலி யதிகார பத்தியக தீர மகராச ரெல்லாம்
செம்பொனிது யானையிது வரசியிது யென்றவர்கள் தின்மும் நீதிதந்து பணிய -ய-

முடிவு:

பாண்டியர் செகவீர பாண்டிய நரேந்திரருள் பாலென் வந்த
பாண்டிய பகிரதனெனுஞ் சின்ன பொம்மு ராசேந்திரனைப் பகருசிறு தந்தையென

பேர்தனைப்போல் குமாரசுவாமி சகோதரர் பதுமாசனப்
பாண்டிய பதுமவித சிக்கமல
அட்டலட்சுமி மேவு பாண்டிய ரதிகயோக பாவாணர்
கொண்டாடும் மார்க்கண்ட ரென்னவே
பாரெங்குமே து..க பகர் வீர பாண்டியர்க் கட்டபொம்மேந்திரர்
பரராசர் கிரீடபதியே.

## 319. 2970 - a- கொக்கோகம்(கொக்குக சாஸ்திரம்)

**பொருள்:** *சாஸ்திரம்* **இதழ்கள்:** *20*
**நிலை:** *சிதைவு, குறை* **செய்யுள் எண்ணிக்கை:** - விரவியது

**குறிப்பு:**

ஆடவர், பெண்டிர் அங்கப் பொருத்த விபரங்களும், பொருந்தா . அங்க முறைப் பெயர்களும் தெளிவுறுத்தப் பெற்றுள்ளன. அதிவீரராம பாண்டியர் இயற்றியது.

**தொடக்கம்:**

திருமலி கரும்புவென்றிச் சிலையினா லுலகமூன்றும்
பொருது செங்கோல் நடத்திப் புகழ்புனை யேகவீரன்
விரிகடற் பிறந்ததிங்கள் வெண்குடை நிழலில் வைக்கும்
மருமலி மலர்க்கை வாழி மைந்தனைச் சிந்தை செய்வாம்.

**முடிவு:**

யோனிப்பொருத்தம்

புருசருட யோனியும், பெண்ணிட யோனியும் இன்ன யோனி யென்றறிந்து பகையானால் ஆகாது, உறவானால் நன்று. அதில் விவரம். ஆனைக்கும் மனிதருக்கும் பகை. குதிரைக்கும் பசுவுக்கும் பகை. எருமைக்கு(ம்)மானுக்கும் பகை. கிடாவுக்கும் புலிக்கும் பகை எலிக்கும் பூனைக்கும் பகை. இப்படிச் சொன்ன பகையொழிய மற்றவையெல்லாம் நன்று. ஆண் பெண்ணாகில், பெண் ஆணாகிலும் நன்று. ஆண் ஆணாகில் ,பெண் பெண்ணாகில் நன்று. இருவர் யோனியும் பெண்ணாகிலும்.........

## 320. 9104 - C- கெர்ப்பக் கோள் சூத்திரம்

பொருள்: மருத்துவம் இதழ்கள்: 6
அளவு: 25.7 x 2.8 செய்யுள் எண்ணிக்கை: - 16
நிலை: நன்று, முழுமை.

குறிப்பு:

கர்ப்பம் தரிக்கக் கையாளும் முறைகள் கூறப்பட்டுள்ளன.

தொடக்கம்:

பாரப்பா பெண்மலடாங் கெர்ப்பக் கோளின்
பக்குவத்தைச் சொல்லுகிறோம் பண்பாய்த் தானே
ஆரப்பா ஆண்மலடே யாகு மல்லால்
பெண்மலடு யாது மில்லை
நேரப்பா தவசிருந்து பொருளை யீந்தும்
நேர்ந்ததில்லை யறுசூலை யாலே தானும்
வேரப்பா தேவதையா லேலாங் கர்ப்பம்
விரித்துநன்றாய்ப் புகலுகிறேன் விரும்பிக் கேளே.

முடிவு:

ம்துவாகுங் குளிர்ந்த செலங் கிட்ட வாகா
மைந்தனே கெதிதண்ணீர் மிகவு மாகுஞ்
சதுவாகும் வேதமுறை நான்கண்டு சொன்னோஞ்
சத்தியந்தா னிந்த நூல் சாந்து பாரு
அதுவாகு மிதுவாகு மென்றுண்ணி
அலைந்தலைந்து திரியாம லருளை நோக்கிப்
பொதுவாகும் நினைவுகொண்டு யிருப்போ ராகிற்
புத்திசித்தி முத்திமுதல் புனித மாமே.

-ய

கெர்ப்பக்கோள் முற்றும். ளஎயரு.

## 321. 4083 - கணக்திகாரம்

பொருள்: கணிதம் இதழ்கள்: 49
அளவு: 38.2 x 3.5 செய்யுள் எண்ணிக்கை:- உரைநடை
நிலை: நன்று, குறை.

குறிப்பு:

பக்கத்துக்கு 5 முதல் 7 வரிகள். பள்ளிக் குழந்தைகளுக்கு உதவுகின்ற பல கணக்கு முறைகளும், கதை வடிவில் கணக்றியும் முறைகளும் இயம்பப்பட்டுள்ளன. எந்தெந்த வகையான கணக்குகள் என்ற அட்டவணையும் முன்புறம் தரப்பட்டுள்ளது.

தொடக்கம்:

பகாபனாள்ளுலசாஉக க [illegible]விபரம்

முடிவு:

எவது தேவிக்கு -உரு-உசா உயஎ-உஅ கூமுத்துஅ[illegible] [illegible] [illegible]டட்ட உசாய. [illegible] - [illegible] - [illegible] கூமுத்து அ[illegible] ட்ட பங்கிட்டுக் கொடுத்தான். எ-ச [illegible] ஒரு செக்கன் [illegible] அ ய [illegible] எள்ளுக் கொண்டு போகையில் எருது துள்ளிப் போட்டு.

## 322. 5683 - கணக்கதிகாரம்

பொருள்: கணிதம் இதழ்கள்: 52

அளவு: 36.9 x 2.6 செய்யுள் எண்ணிக்கை:- உரைநடை

நிலை: சிறுசிதைவு, குறை.

குறிப்பு:

பக்கத்துக்கு 4 வரிகள். 8 இதழ்களின் கீழ் நடுப்பாகத்தில் 7 செ.மீ. நீளத்துக்குச் சிதைந்துள்ளது. பயனுள்ள பல செய்திகள் கொண்டது.பழைய கணக்களவு முறைகளை அறிய உதவியாக இருக்கும். இறுதியில் கதை வடிவில் கணக்குகள் உள்ளன. இடையில் சில பாவடிவிலும் உள்ளன.

தொடக்கம்:

சித்தி வினாயகன்றன் சேவடியைப் போற்றி செய்யப்
பத்திவரும் புத்திவரும் பாடல்வரும்
நித்தம் நித்தம் சேர்கனக நல்ல சிறப்புடனே
யுற்ற நாவா கணங்க னாண்டா மகிழ்ந்து.

முடிவு:

ஒரு ராசாவுக்கு ஒரு சேவகனுண்டு. அவனுக்கு நாளொன்றுக்குச் சம்பளம் ஒரு விராகன். அந்த ராசா -அவனுக்குச் சம்பளம் பண

மாகக் குடாமல் மோதிரமா குடுக்க வேணுமென்று ஸ்ரீ கரு[illegible]ய விராகனிலே பத்து மோதிரம் பண்ணிக் கையிலே போட்டுக் கொண்டிருந்தார். அந்தச் சேவுகன் ஒரு நாளைக்குச் சேவித்தாலும் மோதிரங் குடுக்க வேணும். ரெண்டுனாள் சேவித்தாலும் மோதிரங் குடுக்க வேணும். இந்தப் படி சேவிச்ச நாளை எல்லாம் மோதிரங் குடுக்க வேணுமென்றால் மோதிரமாக குடுக்கலாமென்பது வகை - கரு மோதிரம் - க- [illegible]ண் - உரு மோதிரம்.

## 323. 6203 - b - கருவூர்ச் சித்தர் பலதிரட்டு

பொருள்: மருத்துவம்
அளவு: 35.6 x 2.8
நிலை: நன்று, குறை.
இதழ்கள்: 15
செய்யுள் எண்ணிக்கை: - 90

குறிப்பு:

பக்கத்துக்கு 7 வரிகள். மருத்துவத்துடன் இரசவாதம், மந்திரம், பூஜாவிதிகள், கற்ப முறைகள் ஆகியனவும் திரட்டிக் கூறப் பட்டுள்ளன. அச்சானது. பாட வேறுபாடுகளும் உள்ளன.

தொடக்கம்:

பாடுகின்றேன் பலதிரட்டு முடிவை யெலலாம்
  பதறாமல் சிதறாமல் பண்பாய் மக்காள்
பாடுகிறேன் சாத்திர சூத்திரமு மற்ற
  பாசை யெல்லாம் பிறக்கியொரு மாலையாக
பாடுகிறேன் கருக்கிடையுங் குருக்கிடையு மொன்றாய்ப்
  பருவமுடன் ஒருமித்துப் பாரு பாரு
பாடுகிறேன் வேதாந்த முடிவை யெல்லாம்
  பராபரை யாளுங் கிணேசன் காப்புத் தானே

முடிவு:

பெலி கொடுத்து ஆணிவேர் பிடுங்கிக் கொண்டு
  பிலயாக அரையிலே முன்னே கட்டி
ஒலியெடுத்துப் போகாது விந்து தானு
  முற்பணமாய் சிரசிலே வைத்துக் கொள்வாய்

பலியெடுக்குங் கருபூனை வாலு மாகும்
பண்பான கருஞ்சாரை யத்தி யாகும்
வலியெடுத்து தம்பிக்கும் விந்து தானும்
வாங்குமடா மேனோக்கி வாங்குந் தானே.

## *324. 6203 -* a *- கருவூர்ச் சித்தர் பாடல் சூத்திரம்*

**பொருள்:** *மருத்துவம்* **இதழ்கள்:** *17*

**அளவு:** *35.6 x 2.8* **செய்யுள் எண்ணிக்கை:** *- 114*

**நிலை:** நன்று, முழுமை.

**குறிப்பு:**

*பக்கத்துக்கு 7 வரிகள். 5,6-ஆம் இதழ்களைக் காணவில்லை. அச்சான விபரம் தெரியவில்லை.*

**தொடக்கம்:**

சீர்பெருகும் வேதாந்தச் சூத்திரத்தை
தெட்சணா மூர்த்திபதம் தெளிந்து போற்றி
கார்பெருகு மாயியுட பாதம் போத்தி
கயிலாசத் திருமூலர் பதமும் போத்தி
பேர்பெருகு சட்டைமுனி போக நாயன்
பேரின்பக் கோரக்கர் பதம்சலியு மேய்க்க
ஏர் பெருகு நாதாக்கள் பதமும் போ(ற்)றி
யியல்பான அருள்பொருளா மிந்த நூலே.
-க

**முடிவு:**

வரிசையென்ற பிரகுமன்னும் பாசம் விட்டு
மவுனமாம் யோகமுத்து முறைபதியு மிட்டு
உருசையென்ற நேசமாம் விஷப்பம் விட்டு
ஊடாடும் நிராகாரத் துணர்வு மிட்டுக்
கரிசையென்ற....கலாத் தள்ளிக்
காசமுறும் கண்போலே பொருளை நோக்கிப்
பிரிசையென்ற வுறைப்பு வந்தால் சித்தி முத்தி
பிலக்குமட(ர)சூத்திரந்தா நந்த முத்தே.
௱யஉ

கருவூரார் சூத்திர முற்றும்.

## 325. 6299 - கருவூரார் பலதிரட்டு

பொருள்: மருத்துவம் இதழ்கள்: 29
அளவு: 32 x3 செய்யுள் எண்ணிக்கை:- 200
நிலை: நன்று, குறை.

குறிப்பு:

பக்கத்துக்கு 8 வரிகள். இது 6203 - - கருவூர்ச் சித்தர் பலதிரட்டு என்ற பிரதியைப் போன்றதே.

ஓதிடா நீலகண்டி விசைய விசைய
வுயர் அதிகுல கடகு வென்று
வாதடா வேவித்து ஆலம்பாலி லாட்டி
மைந்தனே துவாலை யிட வெட்டறாது
மாதடா விரையரைத்துப் பாலில் கொள்ள
மைந்தனே சுக்குல தம்பனமு மாகும்
போதடா பறட்டை தனைச் சமூலம் வாங்கப்
புகழான மந்திரத்தை வுரைக்கி றேனே.

என்ற பாடலுடன் முடிவுறுகின்றது.

## 326. 7933 - கருவூரார் பலதிரட்டு

பொருள்: மருத்துவம் இதழ்கள்: 38
அளவு: 30.8 x 3.2 செய்யுள் எண்ணிக்கை:- 166
நிலை: சிறு சிதைவு, குறை.

குறிப்பு:

பக்கத்துக்கு 6 வரிகள். முதல் 10 இதழ்களில் வலது மேற்புறமாக முறிவுகள் காணப்படுகின்றன. 6299, 6203 -b கருவூரார் பல திரட்டு என்பனவற்றின் பிரதிபோன்றதே.

.........................................

கண்டிலே னென்றகுரு வாற்றை கேட்டுக்
கன்னியரை மூவுலகுந் தேடிக் கரணோ
மண்டிலோ மண்டகத்தில் சிலைதா னொன்று
அழகு மெய்த்த யழையென்று கொங்கணர்தான் சொன்னார்

என்ற பாடல் வரை உள்ளது.

## *327. 7938 - கருவூரார் பூசாவிதி*

பொருள்: *வேதாந்தம்* | இதழ்கள்: *14*

அளவு: *28.8 x 4* | செய்யுள் எண்ணிக்கை:- *31*

நிலை: *நன்று, முழுமை.*

குறிப்பு:

*பக்கத்துக்கு 2 அல்லது 3 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு 12 முதல் 18 வரிகள் எழுதப்பட்டுள்ளன. அச்சான விபரம் தெரியவில்லை.*

தொடக்கம்:

தெளிவுதனில் தேவுதரும் அருளும் காணும்
  செணத்திலே சிவமையம் சேரத் தோணும்
வளியதனில் நல்லவழி ஞான மாகுமே
  மகத்தான வேதாந்தம் சித்தி கிட்டும்
ஒளிவுதனில் ஒளிவு தரும் உறுதி சொல்வோம்
  உற்பனத்தில் உற்பனமாய் உறுதி தோன்றும்

முடிவு:

தெளிவதற்கு சூட்சமிது தெளிந்து கூடு
  சிவனிருந்து விளையாடும் தெருவைப் பாரு
மொழிவதற்கு இன்னூலைவிடவேற ஒருநூலில்லை
  முன் ஆதி அந்தமொடு நடுவும் சொன்னோம்
சுழிப்பதற்குள் சுழி இருந்த சூட்சம் சொன்னோம்
  சொல்லாத மவுனமுதல் கருவும் சொன்னோம்
ஒளி(ப்பதற்)கும் உறுதி சொன்னோம்
உற்பனமாய்ப் பார்த்தவர்கள் சித்தர் தானே.

௲௰௫ *(கி.பி.1839)* கார்த்திகை ௴ ௨௰௨ *(2 ·ந் தேதி).*

## *328. 7942 - கருவூரார் பூசாவிதி*

பொருள்: *வேதாந்தம்* | இதழ்கள்: *14*

அளவு: *34.8 x 3.7* | செய்யுள் எண்ணிக்கை:- *31*

நிலை: *சிறுசிதைவு, முழுமை.*

குறிப்பு:

பக்கத்துக்கு 2 அல்லது 3 பகுதிகளாக 10 முதல் 19 வரிகள். 7938 - கருவூரார் பூசாவிதி என்பதன் பிரதியே. முன்னுல் 3 இதழ்களில் கட்டங்கள், சூலங்கள், படங்கள், புள்ளிகளால் வரையப் பட்டுள்ளன. ஸ்ரீ [illegible] (கி.பி.1872) சித்திரை ௴ ௰௨ ௳ (12-ந்தேதி) சுக்கிரவாரம் அசுவதியில் எழுத்த துவங்கியதாகத் தலை இதழில் குறிக்கப் பட்டுள்ளது.

''அத்தாள நல்லுர் கோவில் வைத்(து) ஸம்பூர்ணம்
ஆதிமூலமத்தில் [illegible] கரூர் பூசை எனவும்
ஸம்பூர்ணம் முன் இதழில் சுலோகம் ஒன்று உள்ளது.

## 329. 3871 - கூர்ம புராணம்

பொருள்: புராணம்
இதழ்கள்: 268
அளவு: 31.5 x 4.5
செய்யுள் எண்ணிக்கை: - 3675
நிலை: சிறுசிதைவு, முழுமை.

குறிப்பு:

பக்கத்துக்கு 13 முதல் 15 வரிகள். 216,217-ஆம் இதழ்களைக் காணவில்லை. அச்சானது. ஆசிரியர் வரகுணபாண்டியன்.

தொடக்கம்:

சீர்பூத்த குழவிமதியமு துறைப்பக்கங்கை செழுந்திவலை தூற்ற
வார்பூத்த பொம்மன் முலைக் கவுரியிரு கண்களிப்ப
வானோர்போற்ற
வேர்பூத்த மணிமன்றத் தானந்த நடம்புரியு மெண்டோன் முக்கட்
கார்பூத்த கறைமிடற்றோன் கமலமலர்ச் சேவடியெம் கருத்தில்
வைப்பாம்.

முடிவு:

எதிர்மலைத் தேற்ற வெஞ்சமத் தரசரிடுதிறை கடையளந் தறியா
மதுரையும் புகாரும் வஞ்சியும் புரக்குமான்
வேல்வழுதியாபெருமான்
அதிரபொலங் கழற்கா லடலதி வீரனாற்பறத் தெரிந்து
நன்கிசைத்த்
முதுதமிழ்க் கூர்ம புராண முற்றுணர்ந்தோர் முத்தி வீட்டினிது
வீற்றிருப்பார்.

௲௭௱௮௰௬ (கி.பி.1786)அற்பசி மாதம் உயஅ டெகுருவாரம் சதைய நட்செத்திரச் சுபதினத்தில் கூர்ம புராணம் எழுதி முகிந்தேன் செல்வ் மருதூ ரிலிருக்கும் நல்ல சிவன் வாத்தியார் மகன் செண்ணுப்பிள்ளை.

## *330. / 1433 - கௌசிக நூல் (திகிரி ரேகை)*

பொருள்: *சாமுத்திரிகாலக்ஷணம்* இதழ்கள்: *18*
அளவு: *27 x 3.3* செய்யுள் எண்ணிக்கை: *- 54 (1 3 +41)*
நிலை: *நன்று, முழுமை.*

குறிப்பு:

*பக்கத்துக்கு 6 வரிகள். கைரேகை சாஸ்திரம். ஆசிரியர்கள் கமலமுனி, கௌசிக முனி. அச்சான விபரம் தெரியவில்லை.*

தொடக்கம்:

அரிமருக னெனக் குரைத்த சாமுத்திரீ
 அறையக்கே ளின்னமொரு ரேகை மார்க்கங்
குறிப்பாக அவனிதனி லொருவன் கையில்
 குறிப்பாகத் திகிரிவறை யிடை தொடுத்துப்
பிரிவாகி திகிரி மூல சடாக்ஷரத்தின்
 பிராகாமிய உடுக்கு பந்தனம் புள்ளி நான்கு
தெரியவே கண்டறிந்தால் பிரம கோத்திரஞ்
 செப்புவேன் நிறஞ்சிகப்பி லச்சம் வளர்த்தி.
-க

முடிவு:

ஆகியே குடில முறை அச்சரங்கள், அறிவாகத் துதி செய்தும் விர்த்தியாகி
வாகன தெய்வமுமே சாணித்தியமாகி வாயினால் பேசும் போல் கனவினால் சொல்லி
நாகரிக மாகவே நிற்கலர்கும் நண்ணிடுவன் அந்தமட்டுங் குறைவராது
பாகமாய்க் கவுசிகனூல் விலகிடாது பண்பான கவுரியுரை மெய்யே முற்று.

## 331, 9176 - a - கூப சாஸ்திரம்

பொருள்: சாஸ்திரம் இதழ்கள்: 7
அளவு: 29.8 x 2.3 செய்யுள் எண்ணிக்கை:—
நிலை: மிகு சிதைவு, குறை.

குறிப்பு:

கிணறு சாஸ்திரம். 8202 - கூபசாஸ்திரத்தினின்றும் வேறான தாகத் தெரியவில்லை. பிறவிபரங்கள் தெரியவில்லை. சிதைவு காரண மாய்த் தொடக்கம் முடிவு எழுத இயலவில்லை.

## 332. 8202 - கூப சாஸ்திரம்

பொருள்: சாஸ்திரம் இதழ்கள்: 21
அளவு: 28.5 x 2.8 செய்யுள் எண்ணிக்கை:- 74
நிலை: சிறுசிதைவு, குறை

குறிப்பு:

கிணறு சாஸ்திரம் பற்றியது. ஐவகை நிலத்தியல்பு அறிந்து கிணறு தோண்ட, நீர் கிட்டும் முறைமைகள் இயம்பப்பட்டுள்ளன. 1980 -ல் டாக்டர்.ச.வே.சுப்பிரமணியன் அவர்களால் கூப நூல் என்ற நூலில் (உலகத்தமிழராய்ச்சி நிறுவன வெளியீடு) பதிப்பிக்கப்பட்டுள்ளது.

தொடக்கம்:

இந்து ரவிசூழ் ஆழி இயல்புவியில் யானும்
பந்.....பதினெண் ரிஷிகள் பாதபயன் பார்த்து
சிந்துபுவி கெங்கைதனை சிறந்த பலன்தான் உரைக்க
தந்த முகத்து ஐங்கரன் தாள் காப்பு.

பார்க்கும் இந்த நிலம் தனக்கு பாலைமுல்லை பகருமே குறிஞ்சி
நெய்தல் மார்க்கமாய் மருதுசேர்ந்த மகிமையால் நிலங்கள்
எல்லாம்
ஆர்க்குமேல் நிலங்கள்தன்னில் அருளுடன் கருவும் தேர்ந்து
பார்க்கவே பூமிதன்னில் பரிசனம் பார்த்துச் சொல்வோம்.

முடிவு:

இல்லை காலில் பெருந்துடைகள் இயல்பாய் குய்யஞ் சத்துடனே
முல்லை பார்கள் நீருடனே முலைகள் ரெண்டும் தானாகும்
தொல்லை ஆகும் கீழ்நீரும் துளையே வெட்டாம் எளிதில்லை
கொல்லை கூபம் கீழ்நீரும் குணமாய் ஒருவன் குறியிதுவே.

## *333. 8893 - a - கௌசிக மாமுனி குழம்பு*

பொருள்: *மருத்துவம்* இதழ்கள்: *8*
அளவு: *24 x 3* செய்யுள் எண்ணிக்கை:- உரை விரவியது
நிலை: *சிறுசிதைவு, முழுமை.*

குறிப்பு:

*மருந்துக் குழம்பு செய் விபரங்களும், தீரும் நோய் விபரங்களும் உரைக்கப்பட்டுள்ளன. அச்சானதாகத் தெரியவில்லை. இதற்கு முன்னர் கவுசிகர் மை(6)ஆக்கிராணம் புகை(5), வீரபற்பம் (8)பரங்கி. ...ரணம்(4)வீழ்பேதிக்கு மருந்து(2) ரசபற்பம்(4) என மொத்தம் 29 இதழ்களில் மருத்துவச் செய்திகள் அடங்கியுள்ளன. சிதைவு காரணமாய்ப் பிற விபரங்கள் அறியக் கூடவில்லை.*

தொடக்கம்:

நாய்க்கடுகு விந்துப்பு நற்பெருங் காயம்
நல்ல வெங்காரம் மேய்ப்புள்ள
மேவு மனோசிலை திப்பிலி தாரஞ் சீரகத்துடனே
ஒப்புடன் கடுகு ரோகணி னாபி...பருந்துமிது
பனிரெண்டு யிப்படி நேர்வாளம்இது சமனிடையாய்

முடிவு:

.... .... ன்று சொக்கிய மாட்டுக்கு வேலை(யிலைச்) சாத்தில்
விராகனிடையுடன் சேர்த்துக்(கொடுக்)கத் தீர்ந்திடு முடனே.
உண்மையாய்ச் சொன்ன உரைமொழி யதனால்
நன்மையா...ழம் பதனா லுரைத்தபடி
குருவரு ளாலே குறியே மிகுந்து
வரமிகு மாமுனி வாத...கு கவுசிக
மாமுனி கிடா க்ஷித்தாரே.

முற்றிற்று முற்றும்.

## 334. 3915 - b- கெவுளி நூல்

பொருள்: சோதிடம் இதழ்கள்: 7

அளவு: 32 x3.6 செய்யுள் எண்ணிக்கை: - 46

நிலை: சிறுசிதைவு, முழுமை.

குறிப்பு:

சிவன் உமாதேவிக்குக் கூறப்பட்ட பெருமை உடையதாக இந்நூல் குறிப்பிடப்படுகின்றது. இதனைப் பாடியவர் பால்வீரரிரு ராசன் என்ற மன்னன் எனத் தெரிகிறது. இதனை அடுத்து 2 ஏடுகளில் சிதைவு காரணமாய் இன்னதென அறிய இயலாத செய்திகள் உள்ளன.

தொடக்கம்:

வல்லி யுமைகேட்க மகிழ்ந்தரனார் தாமுரைத்த
சொல்லை யடையத் தொகுத்துரைத்த - பல்லிநூல்
பாறிற் பலரறியப் பாடினேன் பாற்கரன்பால்
வீர ரிருர(ாச)தான் வேந்து.

முடிவு:

குமரன்...மருக்கன் முதல்.
கூறியது மழகாக ... முடன்
குலவிய பல்லி மூஞ்சூறு ஆரி .. யவிசாகர்
சொன்ன படியிதுவே
குருபாதமே கெதி

சிதைவு காரணமாய் முடிவு தெளிவுறவில்லை.

## 335. 6348 - c- கல்லாடம்

பொருள்: இலக்கியம் இதழ்கள்: 215

அளவு: 35 x 2 செய்யுள் எண்ணிக்கை: - 44 நூற்பாக்கள்

நிலை: நன்று, குறை.

குறிப்பு:

பக்கத்துக்கு 6 வரிகள். அச்சானது. இதன் பின்னர் 2 ஏடுகளில் 6 பாடல்கள் கருத்தரித்தல் என்ற விபரத்தை தாய் வயிற்றிலுள்ள கருவின் வளர்ச்சியைக் கூறுகின்றது.

## 336.4073 - a - காசிக் காண்டம்

பொருள்: புராணம் இதழ்கள்: 169
அளவு: 14 x 2 செய்யுள் எண்ணிக்கை:- சுமார் 3050 வரிகள்
நிலை: நன்று, முழுமை.
குறிப்பு:

பக்கத்துக்கு 9 வரிகள். அதிவீரராம பாண்டியர் இயற்றியது. அச்சானது. 100 அத்தியாயங்கள் உள்ளன. 'நூறாவது சேவிக்கிற முறைமை யுரைத்தது' என்பதுடன் சுவடி முடிவடைகின்றது.

தொடக்கம்:

சீர்பூத்த எழுந்தரங்கத் தீன்புனல்மந் தாகினித்தண்
  டேனார் கொன்றைத்
தார்பூத்த செஞ்சடையில் அணிந்து மதன்
  மேல் விழைவு கணியானாகிக்
கார்பூத்த விருவிசும்பிற் கங்கை நதிசூழ்
  கிடந்த காசிவாழும்
ஏர்பூத்த தனிமுத(லி)னிணையடிப்பூங்
  கமலமல ரேத்து வாமே.

முடிவு:

அருமறை முனிவர் வாழ்க வானினம் வாழ்கத்தெண்ணீர்
விரிதலை யுலகங்காக்கும் விறல்கெழு வேந்தன் வாழ்க
மருவிய திங்கள் தோறு மழைவளஞ் சுரக்க எங்கோன்
பொருவற மொழிந்த விந்நூல் பொற்பொடும் பொலிக மாதோ
நூறாவதுசேவிக்கிறமுறைமையத்தியாயமுற்றும்.
விச்சுவேசுராய நம. விசாலாட்சி நாதன் வாழ்க.

## 337.3901 - b - கூர்ம புராணம்

பொருள்: புராணம் இதழ்கள்: 186
அளவு: 36 x 3 செய்யுள் எண்ணிக்கை:- சுமார் 5580 வரிகள்
நிலை: நன்று, முழுமை.

குறிப்பு:

பக்கத்துக்கு 15 வரிகள். அதிவீரராம பாண்டியர் இயற்றியது. அச்சானது.

தொடக்கம்:

சீர் பூத்த குழவிமதி மழுதிறைஞ்சக் கங்கைசெழுந்
திவலை தூற்ற
வார் பூத்த பொம்மன்முலைக் கவுரியிரு கண்களிப்ப
வானோர் போற்ற
வேர்பூத்த மணிமன்றத் தானந்த நடம்புரியும்
எண்டோள் முக்கட்
கார்பூத்த கறைமிடற்றான் கமலமலர்ச்
செஞ்சரணங் கருத்துள் வைப்பாம்.

முடிவு:

எதிர்மலைந் தேற்ற வெஞ்சமத்தரச
ரிடுதிறை கடையறிந் தறியா
மதுரையும் புகாரும் வஞ்சியும் புரக்கும்
மானவேல் வழுதியர் பெருமான்
எதிர்பொலங் கழற்கா லடலதிவீர
னரிலறத் தெரிந்து நன்கிசைத்த
முதுதமிழ்க் கூர்ம புராண முற்றுணர்ந்தோர்
முத்திவீட் டி னிது வீற்றிருப்பார்.

சிவ கடாட்சத்தினாலே கூர்ம புராணம் எழுதி முகித்தேன். சங்கர நாயனார்கோவிலிலிருக்கும் அரசப்பப்பிள்ளை குமாரன் கொட்டா குளத்திலிருக்கும் தெய்வங்கள் பெருமாள் பிள்ளையவர்கள் குமாரன் பிச்சப் பிள்ளையவர்களுக்கு திருச்சிற்றம்பலம்.

## 338. 6391 - காசிக் காண்டம்

பொருள்: புராணம் இதழ்கள்: 37
அளவு: 28 x 3 செய்யுள் எண்ணிக்கை: - சுமார் 750 வரிகள்
நிலை: நன்று, குறை.

குறிப்பு:

பக்கத்துக்கு 10 வரிகள். 4073 -a- காசிக்காண்டம் என்ற பிரதியைப் போன்றதே. முதல் 134 இதழ்கள் இல்லை. 43-ஆவது அத்தி யாயத்துடன் தொடங்கி, 97-ஆம் அத்தியாயத்துடன்.முற்றுப் பெறாமலுள்ளது. ஆசிரியர் அதிவீரராமபாண்டியர். அச்சானது.

## 339. 11584 - c- கருவை வெண்பா

பொருள்: துதி
அளவு: 22 x 3
நிலை: நன்று

இதழ்கள்: 14
செய்யுள் எண்ணிக்கை: - 100

குறிப்பு:

பக்கத்துக்கு 8 வரிகள். இந்நூல் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள கரிவலம் வந்த நல்லூர் இறைவன் பால்வண்ணநாதர் துதியாகப் பாடப்பெற்றது அந்தாதியாக அமைந்துள்ளது. ஆசிரியர் வரதுங்க ராமபாண்டியர். அச்சானது. பல பாடபேதங்களுள்ளன.

தொடக்கம்:

சீரான தென்கருவைச் செல்வனே ஒப்பனையான்
வாரணிந்த கொங்கை மணந்தோனே - காரணிந்த
கண்டனே நின்பொற் கழலல்லாற் காதலித்த
தொண்டனேற் குண்டோ துணை.

முடிவு:

மோன விரத முனிவர் விழித்துறங்கும்
ஞானதுதியமுதம் நண்ணுவோ - மானந்தத்
துள்ளுவதுந் தன்னைமறந் தொன்றுவதும் பால்வண்ணா
தெள்ளுவதும் நின்மலர்தாள் சீர்.

## 340. 8663 - e- கதிர்காம வேலன் மாலை

பொருள்: துதி
அளவு: 35 x 3
நிலை: நன்று, முழுமை.

இதழ்கள்: 8
செய்யுள் எண்ணிக்கை:- 30

குறிப்பு:

பக்கத்துக்கு 4 வரிகள். ஈழநாட்டில் கதிர்காமத்தில் கோயில் கொண்டுள்ள முருகன் மீது பாடப்பட்டுள்ளது. ஆசிரியர் பெயர், அச்சான விவரம் தெரியவில்லை. பாடல்கள் செம்பாகமாக உள்ளன. எழுதியவர் செய்த பிழைகளும் உண்டு.

8ஆம் பாடலில் 'மாணிக்கங் கங்கையையும்', 9ஆம் பாடலில் 'கண்டி வ்ளநாட னென்றும்' 13 ஆம் பாடலில் 'இலங்கை நாட்டா ரறிய' எனவும் வருகின்றது. செந்திற் கதிர்காமம் எனவும் குறிக்கப் பெறுகின்றது.

தொடக்கம்:

நித்த முனைத்துதிக்க நீணிலத்தோர் கொண்டாட
பத்துலட்சங் கோடிதமிழ்ப் பாடவர மேயருள்வாய்
அத்தன் அருள்குமரா ஆயன் மருகோனே
கந்தனே யெங்கள் கதிர்காம வேலோனே.

முடிவு:

மன்னீர்மை யாக மனதுவைத்த நாள்முதலாய்
சொன்னீ ரதைமறந்து தோகைதனைக் குற்றானீர்
பன்னீர் தனக்குப் பலனீர் நிகராமோ
கன்னியர்கள் தொட்டீர் கதிர்காம வேலோனே. (ருடய)

## 341. 9163 - b - சித்தர் வெண்பா

பொருள்: மருத்துவம் இதழ்கள்: 10
அளவு: 37 x 3.3 செய்யுள் எண்ணிக்கை: - 84
நிலை: சிறு சிதைவு, குறை.

குறிப்பு:

பக்கத்துக்கு 6 வரிகள். தலைவலி, பீனிசம், இருமல், பேதி, அதி சாரம், கல்லடைப்பு, நீரடைப்பு, வீக்கம், எலிகடி விஷம் போன்ற பல்வேறு நோய்களுக்கும், விஷகடிக்கும், மருந்து முறை களும், பத்தியங்களும் வெண்பாவடிவில் விளக்கப்பட்டு ள்ளன. முதல்ஏட்டின் நடுப்பகுதி மிகுந்த சிதைவுக்காளகியுள்ளது. அச்சான தாகத் தெரிய வில்லை.

தொடக்கம்:

வாவெனவே சேற்றுமத்தில் வந்தபிணி கிரந்தி
போவெனவே நாவி(லிடப்)பேர்ய்விடுமே....
வாக்கான பீனிசமு மாற்றுஞ் சளிதீர
ஆக்கிரான....தீதையாம்

முடிவு:

ஓடு குன்மங்கள் உழலுகின்ற மங்கையரைத்
தேடு குப்பைமேனிச் செருப்படியு - நாடுதனில்

கைய்யாந்த கரைகதிய பொடியாக்கி
மெய்யாகத் தேனில் விரும்பு.

- அச.

## *342. 3220 - சட்டைமுனி நிகண்டு*

பொருள்: *இரசவாதம்* இதழ்கள்: *113*
அளவு: *33.5 x 3.3* செய்யுள் எண்ணிக்கை:- *1224*
நிலை: *சிதைவு, முழுமை.*

குறிப்பு:

*பக்கத்துக்கு 8 முதல் 10 வரிகள். இரசவாதத்தில் வழலை மார்க்கத்தைப் பரிபாஷையாகக் கூறி மறைத்துக் கொடுத்தனர். அதற்கு,தான் வெளிப்படையான விளக்கத்துடன் நிகண்டாக உரைப்பதாகப் பாடற் குறிப்புள்ளது. ஏடுகளின் இடதுபுறம் முறிவுக்காளாகியுள்ளது. அச்சானதாகத் தெரியவில்லை.*

தொடக்கம்:

ஆதியந்த மில்லாத பூரணத்தை நோக்கி
யடுக்க்நின்ற ஒன்மனைத்தாய் பதத்தைப் போத்தி
பாதியந்த மாகநின்ற வுமையாள் சொல்லப்
பாங்கான சின்மயத்தின் கருணையாலே
ஓதியந்த மாகநின்ற நூலுக் கெல்லாம்
முயரவைத்த நாகமணிக் கிரீடம் போல
சாதியந்தக் குணத்தோடே நிகண்டு சொன்னேன்
சச்சுதா னந்தவெளிக் காப்புத் தானே.

முடிவு:

நாட்டினேன் செயவீரம் வராக...
வுப்பினுட வுறுதி சொன்னேன்
பூட்டினேன் வாதத்திற் பூரஞ் சொன்னேன்
புகழாக இருபத்து அஞ்சு வங்கம்
லில்லை யில்லை
ஆச்சரியம் நிகண்டினுட துகையைக் கேளு
நீட்டினேன் ஆயிரத் திருநூற்றின் மேல்
.....முற்றே உளஉயச.

*சட்டை முனி.அய்யா வாகட நிகண்டு முகிர்ந்தது முற்றும்.*

## 343. 6214 - b - சுரநிதானம்

பொருள்: மருத்துவம் இதழ்கள்: 11
அளவு: 20.3 x 3.5 செய்யுள் எண்ணிக்கை:- 28
நிலை: நன்று, குறை.

குறிப்பு:

பக்கத்துக்கு 6 முதல் 7 வரிகள். வாத, பித்த, சிலேற்பன சுரங்கள், அவற்றின் குணங்கள், பூத ,அத்தி, தொந்த சுரங்களும், அவற்றின் குணங்களும் விவரிக்கப்பட்டுள்ளன. இது 8140 -c- சுரநூல் என்பதினின்று வேறுபட்டது. இந்நூலின் ஆசிரியர் அகத்தியர். அச்சானதாகத் தெரியவில்லை.

தொடக்கம்:

கூறும் வாதசுரந் தன்குணமே சொல்லில் முகங் குறுகும்
மீறும் உதடு உலந்திருக்கும் உட்டிண மிகுந்து உலந்து வரும்
மாறு மயிர்கூச் சிடுகை உண்டாம்
மலமே கருகி தாகிக்கை தானே.
-க-

முடிவு:

முத்திடு மூளைதன்னில் முயன்றேழு சுரமே தாக்கி
பத்திடும் பொழுதி லங்கே பல்லோடு நாடி கோட்டி
நத்திடுங் கேங்......கொண்டு நால்முறை சுரமே காயும்
சத்தியந் திங்களாறில் சதுரதிகம் தீருந் தானே.
-உயஅ.

## 344. 2886 - g - சிவபோக சாரம்

பொருள்: சமயம் இதழ்கள்: 9
அளவு: 29.5 x 3.2 செய்யுள் எண்ணிக்கை:- 100
நிலை: நன்று, முழுமை.

குறிப்பு:

பக்கத்துக்கு 9 வரிகள். சிவபோக சார வெண்பாக்கள் அடங்கியது. அச்சானது.

தொடக்கம்:

சித்திதரு நாதன் றென்கமலை வாழ்நாதன்
பத்திதரு நாதன் பரநாதன் - முத்திப்
பெருநாதன் ஞானப் பிரகாச னுண்மை
குருநாதன் சற்குரு நாதன்.

முடிவு:

ஐந்தறிவாற் கண்டாலு மாரேனுஞ் சொன்னாலு
மெந்தவி ருப்பு வெறு...பேய்ந்தாலும் - சிந்தையே
பாரவி சாரத்தைப் பண்ணாதே யேதேனுந்
தீரவி சாரித்துச் செய்.

- ௱

தில்லைவ னங்காசி திருவாரூர் மாயூர
முல்லைவ னங்கூடல் முதுகுன்றம் - நெல்லைவனங்
காஞ்சி கழுக்குன்ற மறைக்காடரு ணைக்காளத்தி
வாஞ்சி.மெனமுத்தி வரும்.

சிவபோக சார வெண்பா முற்றும்.

குருவே துணை.

## 345. 2886- h- சிவவாக்கியம்

பொருள்: சமயம்(சைவம்) இதழ்கள்: 32
அளவு: 29.5 x3.2 செய்யுள் எண்ணிக்கை:- 290
நிலை: நன்று, முழுமை.

குறிப்பு:

பக்கத்துக்கு 9 வரிகள். சிவவாக்கியம் முந்தி பஞ்சாட்சரம்(100 பாக்கள்)சிவ வாக்கிய பராபரச் சித்தாந்தம்,முத்தி நெறி(102) சிவவாக்கியம் சிவானந்தக் களிப்பு(88)என்ற மூன்று பகுதிகளாக அமைந்துள்ளது. அச்சானது.

தொடக்கம்:

உலகெலா நிறைந்தவொரு பெருஞ்சுடரா யொப்பிலாப்
பேரொளி வடிவா
யிலகிய சோதிப் பரம வாகாய மெட்டரும் வேறு வெளிப்
பரப்பா

நலமிகு சோதி மறைகளின் முடிவாய் நாதநாதாந்த முங்கடந்த
வலகிலாச் சோதி பாராபரன் கமல வடியிணைத் தொழுது
வாழ்ந்திருப்பாம்

முடிவு:

எல்லாம் பராபரமே யெல்லாம் பரப்பிரமம்
எல்லாம் பராபரத்தி னெட்டாத வாகாசம்
எல்லாம் பராபரத்தி னெட்டாத பேரொளியை
எல்லாம் பராபரமென் றேத்தமுத்தி தந்திடுமே.
-அஅ.

*சிவவாக்கியம் பராபரச் சித்தாந்தம் சர ஒச்சியம் அக்கிய முத்தி சாதினை முகிந்தது முற்றும்.*

## *346. 6235 - b- சிவஞான சித்தியார் பரபட்சம்*

பொருள்: சைவவேதாந்தம்
இதழ்கள்: *25*
அளவு: *17.5 x5.3*
செய்யுள் எண்ணிக்கை:- *300*
நிலை: நன்று, முழுமை.

குறிப்பு:

*பக்கத்துக்கு 17 முதல் 19 வரிகள். ஆசிரியர் அருணந்தி சிவாசாரியார். அச்சானது.*

தொடக்கம்:

ஒருகோட்ட னிருசெவியன் மும்மதத்த னால்வா யைங்கரத்த
னாறு
தருகோட்டம் பிறையிதழித் தாழ்சடையான் றருமொரு
வார்ணத்தின் றாழ்கள்
உருகோட் டன்போடும் வணங்கி யோவாதே யிரவுபகு
லுணர்வோர் சிந்தைத்
திருகோட்டு மயன்றிருமால் செல்வமு மொன்றோ வென்னச்
செய்யுந் தேனே.

முடிவு:

இப்படி பிருகுசாபத் தீரைந்து பிறப்பின் வீழ்ந்து
மெய்யப்படி துயரமுற்று வருபவன் விமலனல்லன்

எப்படி யானுஞ் சொன்னே னிறைய ரில்ல னென்றே
மைப்படி கண்டனண்டன் மலரடி வணங்கி டாயே.

பஞ்சாரத்திரி மத முற்றும். ஆக சிவஞான சித்தியார் புரபட்ச முற்றும். திருச்சிற்றம்பலம்.

## 347. 11379 - h - சில தலப்பன்

**பொருள்:** *சமயம்(சைவம்)* **இதழ்கள்:** *65*
**அளவு:** *22.7 x 2.9* **செய்யுள் எண்ணிக்கை:** - *சுமார் 780 வரிகள்*
**நிலை:** *நன்று, குறை.*
**குறிப்பு:**

*பக்கத்துக்கு 6 வரிகள். சைவத் திருமுறையான தேவாரத் திலுள்ள பாக்கள் இடம்பெற்றுள்ளன. அச்சானவை.*

**தொடக்கம்:**

பிணக்கிலாப் பெருந்துறைப் பெருமானு நாமங்கள் பேசுவார்க்
கிணக்கி லாததோ ரின்பமேவரு துன்பமேதுடைத் தெம்பிரான்
உணக்கி லாததோர் வித்துமேல்வினை யாமலென் வினை
யொத்தபின்
கணக்கிலாத் திருக்கோலம் நீவந்து காட்டினாய் கழுக்குன்றிலே.

**முடிவு:**

ஊழிதோ றூழிமுற்று முயர்பொன் னொடித்தான் மலையைச்
சுழிகையின் கரும்பின் சுவை நாவல்லூரன் சொன்ன
வேழிசையின் றமிழா லிசைந்தேத்திய பத்தினையு
மாழி கடலரையா வஞ்சையப்பர்க் கறிவிப்பதே.

## 348. 8140 - C - சுரநூல்

**பொருள்:** *மருத்துவம்* **இதழ்கள்:** *3*
**அளவு:** *19.3 x 3.3* **செய்யுள் எண்ணிக்கை:** - *13*
**நிலை:** *நன்று, முழுமை.*

**குறிப்பு:**

*பக்கத்துக்கு 9 வரிகள். 15 பாடல்களில் 9,10-ம் பாக்கள் எழுதப் படவில்லை. ரோகணி, மிருகசீரிடம், மூலநாள் போன்ற 27 நட்சத்திர நாட்களில் வரும் சுரத்தின் தன்மை, நீங்க ஆகும் நாட்கள்*

ஆகியன விவரிக்கப்பட்டுள்ளன. அச்சானதாகத் தெரியவில்லை. இதனை அடுத்து, கண்ணீறு, நாவீறுக்கு மந்திரமும், பூரான், தேள் கடிக்கு மருந்து, அம்மி தூக்க, தேங்காய் உடைக்க, ஒரு மாதம் பசியாதிருக்க, வயிற்றில் உரல் வைத்து அவலிடிக்க, சோறு வேகாதிருக்க, புடவையில் தண்ணீர்கட்ட, நீர்வார்த்து விளக் கெரிக்க, முலை சுருங்க, எழும்ப என்ற இவற்றுக்கு மூலிகைகள், பிராணிகள் பயன்படும் முறைகள் விளக்கப் பட்டுள்ளன.

தொடக்கம்:

ஆமப்பா சுரதோஷத் தாண்மை யெல்லா
மறிந்திட்டேன் முன்பேதா னடக்கம் விட்டு
ஓமப்பா நச்செத்திர மவத்தை தேர்ந்த
முத்தனாள் புலத்தியனே மச்சமுனி நீகேள்
வேமப்பா அசுபதினாள் வந்தசுரம்
விட்டுப்போ மெட்டானாள் பாணி னாளில்
போமப்பா வந்தசுரங் கொல்லா தாகில்

முடிவு:

வாரப்பா யிவைகளெல்லாம் வகைவிபரம் சொன்னேன்
தூரப்பா நோய்(க)ளெல்லா முரைத்திட்டோ முறுதியாக
பாரப்பா யிந்தநூலை பண்டிதன் வேண்டித் தானால்
சேரப்பா விரித்து நன்றாய் சேர்த்திடில் சித்தனாமே
-பரு

குருவே துணை.

## 349. 6235 -c- சிவஞான சித்தியார் சுபட்சம்

பொருள்: சைவவேதாந்தம் இதழ்கள்: 27
அளவு: 18 x 5.4 செய்யுள் எண்ணிக்கை:- 327
நிலை: நன்று, முழுமை.

குறிப்பு:

பக்கத்துக்கு 17 முதல் 19 வரிகள். ஆசிரியர் அருணந்தி சிவாசாரியார். அச்சானது.

தொடக்கம்:

அறுவகைச் சமையத்தார்க்கு மவ்வா பொருளாய் வேறுங்
குறியது உடைத்தாய் வேதா கமங்களின் குறியிறந்தங்
கறிவினி லருளான் மன்னி யம்மையோ டொப்பனாகிச்
செறிவொழி யாதுநின்ற சிவனடி சென்னி வைப்பாம்.

முடிவு:

மான்றருஞ்சீர் நிலையெல்லா மிவனே யென்று
மருட்குருவை வழிபடவே யவனி வன்றான்
ஆகிய யிரங்கிய வாரண மாமை
மீனண்டஞ் சினையை யியல்பி னோடும்
பரிசித்து நினைந்தும் பார்த்தும் பரிந்திவை
தாமாக்கு மாபொற் சிவமே யாக்கும்
பரிசித்துஞ் சிந்தித்தும் பாரித்துந் தானே
பன்னிரண்டாஞ் சூத்திர முற்றும்.

திருச்சிற்றம்பலம்.

## *350. 85/5 - சூரபத்மன் கதை*

பொருள்: *கதை* இதழ்கள்: *114*
அளவு: *42.4 x 3.2* செய்யுள் எண்ணிக்கை: *விரவியது*
நிலை: *சிறு சிதைவு, குறை.*

குறிப்பு:

*பக்கத்துக்கு 6 வரிகள். கந்தபுராணத்தில் இடம்பெறும் சூரபத்மன் வதம் கதையாக விளக்கப்பட்டுள்ளது. முதல் 24 ஏடுகள் இல்லை. முடிவும் இல்லை. முதல் பகுதி ஏடுகளின் வலப்புறம் முறிவு களுள்ளன. அச்சான விபரம் தெரியவில்லை. தமிழ் உரைநடை வளர்ச்சி பற்றிய ஆய்வுக்குத் துணை புரியும்.*

தொடக்கம்:

*அழியாத வரமாக நமக்குப் பிரதிக்கிணையாக யிருக்க வேணு மென்று மனதிலே யெண்ணித் தவசு நிற்கிறா...மிவனுக்கு முன்னின்றால் நம்முடைய அதிகாரங்களெல்லாம் ெ...டுக்க வேணுமென்று மகாதேவர் முன்நிற்கவில்...அதின் பிறகு சூரணா கிறவன் மனதிலே கிலேசித்து யித்தனை காலமாகியு(ம்) மகாதேவர் நமக்குப் பிரதிட்ஷமாக வராமலிரு(க்கி)ற தென்னவென்று...*

முடிவு:

அப்போது பானுகோபன் சீக்கிரத்திலே வெளிப் பிறப்பிட்டு தேரிலே ஏறி.....டாவிக் கொண்டு தன்னுடைய தகப்பனாகிய சூரபற்ப மாவின(ண்)டையிலே வந்து தெண்டம் பண்ணி, சுவாமிஅடியேனை அழைத்த காரியமே தென்று விண்ணபஞ் செய்தான். அப்போது சூரபற்பமா சொன்ன விருத்தம்

சுந்தரம் பானுகோபா தோத்திய பு.........

.........................................

## 351. 6682 - சிறுத்தொண்ட சித்தர் மகிமை

பொருள்: மருத்துவம் இதழ்கள்: 60
அளவு: 24 x4.6 செய்யுள் எண்ணிக்கை: 311
நிலை: நன்று, குறை.

குறிப்பு:

பக்கத்துக்கு 11 முதல் 13 வரிகள். பல்வேறு மருத்துச் சரக்கு வைப்பு முறைகள், வசியம், யோகம் விளக்கப்பட்டுள்ளன. பெரியபுராணச் சிறுத்தொண்டருக்கும், இந்நூற் சித்தருக்கும் என்ன தொடர்பு எனத் தெரியவில்லை. முதல் 687 பாக்கள் இல்லை. அச்சாகவில்லை. இதனை அடுத்து 4 இதழ்களில் மந்திர எழுத்துகளும், எந்திரங்களும் உள்ளன.

தொடக்கம்:

பாரடா காவியனூல் தன்னைப் பாரு
பரிபூரணந் தன்னையே பத்திப் பாரு
வீரடா கொண்டதொரு சித்தர் மார்க்கம்
விபரமுடன் கற்பமுறை நன்றாய்ச் சொல்லும்
.................................

முடிவு:

சோதியெடை ஆயிரத்தை எடுத்து...யந்த
சுகமாக மடிமீதில் வய்த்துக் கொண்டு

நீதமுடன் மவுனமதாய் பார்த்து வந்து
நிலையறிந்து கருக்குருவாய் நின்றோ...வாம்
வாதம்பரும் ஞான(ம்)வரும் வசியமாகு(ம்)
மகத்தான பூரணமே மறிவியேறும்
நாதமுட னாதமதால் ஒடுங்கு கின்ற
நாதாந்த சிவயோகம் பாத முத்தே.

சுப்பானாயக்கன் எழுதின பொஷ்தகம்.
(கி.பி.1850)நவம்பர் ௴௨

மூணாந்தேதி மே ஜீனில் எழுதினது.

## 352. 10292 - ஸ்ரீராம கதை

பொருள்: கதை இதழ்கள்: 243
அளவு: 39.7 x3.6 செய்யுள் எண்ணிக்கை: உரைநடை
நிலை: சிறு சிதைவு, முழுமை.

குறிப்பு:
பக்கத்துக்கு 8 முதல் 9 வரிகள். இராமபிரானின் கதை பேச்சுவழக்குடன் கூடிய எளிய உரைநடையில் எழுதப்பட்டுள்ளது. தசரதச் சக்கரவர்த்தி ஆட்சிச் சிறப்பிலிருந்து லவனுக்கு முடிசூட்டி, ராமாவதாரம் முடித்து வைகுண்டத்தில் திரும்ப நாராயண மூர்த்தியாகி வீற்றிருந்த கதை வரை உள்ளது. இடையில் மயிராவணன் கதையும் அமைந்து உள்ளது. இறுதிக் குறிப்பால் இது கதைப்பிரசங்கமாக இடம்பெற்ற கதை எனத் தெரிகிறது. முதலேடு இல்லை.

தொடக்கம்:
அரசாண்டு கொண்டிருக்கிற காலத்திலே புலியும் புல்வாயுமொரு துறையிலே தண்ணீர் குடிக்கப் பருந்துங் கிள்ளையுமொரு கூட்டிலேயிருந்து வாழு மந்தப் பட்டணத்திலே எளியோர் வலியோரென்றுஞ் சொல்லாமல் எல்லாச் சனங்களு மொன்று போலே யிருக்கும் படியாக நடத்திவிச்சுக்கொண்டு........

முடிவு:
ராமசுவாமி சீதையம்மனென்று திருவுரு உண்டாக்கிப்

பிரதிஷ்டை பண்ணிவிச்சு அஞ்சு காலமும் பூசை நடக்கத் தக்கதாகப் பிராமணரையுங் கட்டளையிட்டு நிலமும் ஊரும் உம்பிளி...டுக் குடுத்துத் தேருந் திருவிழாவு முண்டாக்கி வைத்து ஒருனாளுந் தவறாதபடிக்கு... கட்டளையிட்டுப் போட்டு வெகு மனுநீதியோடுங் கூடியிருந்து அன்பத்தாறு தேசமு மறுபத்தினாலு பட்டணத்திலும் ஆறிலொன்று கடமை வாங்கி அதை....ணியுங்கட்டி வெயிலுங் காத்து மொழிய வேறு விக்கினமில்லாமல் தன்னுயிர் போல மன்னுயிர்க்கிரங்கி ராட்சிய பரிபாலினம் பண்ணி குசலபரென்று பேருங் கீர்த்தியுமோங்க அரசு வீத்திருந்தார்கள்.

## 353. 8/21 - ஸ்ரீராமர் அம்மானை அல்லது ராமர் வனவாசக் கதை

பொருள்: கதை இதழ்கள்: 181
அளவு: 38.4 x 3.4 செய்யுள் எண்ணிக்கை : சுமார் 7240 அடிகள்
நிலை: நன்று, முழுமை.

குறிப்பு:

பக்கத்துக்கு இரு பகுதியாக 20 வரிகள் வரை உள்ளன. ஸ்ரீராமரின் வனவாசத்திலிருந்து மீண்டு, அயோத்தி வந்து, முடி சூட்டி ஆளல் வரை நாட்டுப்புறப் பாவடிவில் பாடப்பட்டுள்ளது.

தொடக்கம்:

செப்பை வென்ற தனத்தழகி கை(கேசி)தேவியுட மொழிகேட்டு
நற்புடைய திசரதரும் நாரணரை வனத்தேக
அப்பணிந்தோ னருளாலே ஆயிழைசீ ராமருடன்
மற்புயங்கள் வேர்த்தொழுக மரகதஞ்சேர் வனத்தில் வந்தார்.

முடிவு:

வாளியோன் தம்பிமாரு மற்றுள் சுற்றத்தாரும்
ஊழியோ டூழிகாலம் உயர்பெற வாழிதானே
நாரதன் பாட்டைக் கேட்டு நலம்பெறக் கம்பநாடன்
தாரதில் மீதிலன்று சாத்தினான் தமிழினாலே

காரதில் முகில்பேர் லின்று கதைமுக மாகச் சொன்னோர்
பாரதில் மீதில்நன்றாய்ப் பரிவுற வாழிதானே.

ராமர் கதை முகிந்தது முற்றும். [illegible]

*கி.பி.1801 ரவுத்திரி*

*௵தைய் ௴௨௰௭ ௳(27-ந் தேதி) சுக்கிர வாரமும் விசாக நட்செத்திரமுங் கூடின சுபதினத்தில் ராமலிங்கஞ் செட்டியார் குமாரர் தீத்தாரப்பபுரம் முத்துசுவாமி வாத்தியார் ராமர் நாடகம் எழுதி முகிந்தது. சரசோதி நீடூழி காலம் உண்டாக வேண்டியது.* குருவே துணை.

## *354. 11553 - சுந்தரி கலியாணக் கும்மி*

பொருள்: *கும்மி* இதழ்கள்: *40*
அளவு: *25.3 x 2.7* செய்யுள் எண்ணிக்கை: *- சுமார் 560 அடிகள்*
நிலை: *சிறு சிதைவு, குறை.*

குறிப்பு:

*பக்கத்துக்கு 5 முதல் 7 வரிகள். பாரதத்துள் இடம்பெறும் அபிமன்யு(அபீமன், அபீமனர் என இக்கும்மியில் குறிப் பிடப் படுகிறார்) சுந்தரி கல்யாணம் நாட்டுப்புறக் கும்மிப் பாடல் வடிவில் பாடப்பட்டுள்ளது. அச்சானதாகத் தெரியவில்லை.*

தொடக்கம்:

சீருயர் சுந்தரி கலியாணந் தன்னையே
சிங்காரக் கும்மித் தமிழ் பாட
தாரணி யோர்புகழ்....தேனும்
தந்தி முகன் பாதங் காப்பாமே.

முடிவு:

மார னபீமனு மங்கி லியந்தனை
மாது கழுத்திலே தான் பூட்டி
வாரண கும்பத் தனத்தாளுந் தானு
மா(ய்)வந்து மிதித்தார்க ளம்மியிலே
(அம்மிமி)தித்துஅருந்ததி கண்டா

னந்தப் பிறத்தே மணவறையில்
.....கவே அபீமனனும் புகழ்
நங்கையாள் சுந்தரி பங்கிளியும்
..........................

## 355. 8832 - ஹிரண்ய நாடகம் அல்லது பிரகலாதன் கதை

பொருள்: நாடகம் இதழ்கள்: 168
அளவு: 44 x 3.2 செய்யுள் எண்ணிக்கை: விரவியது
நிலை: நன்று, குறை.

குறிப்பு:

பக்கத்துக்கு 6 முதல் 7 வரிகள். பாகவதத்துள் இடம்பெறும் இரணியன் கதை இசை நாடக வடிவில் இயற்றப்பட்டுள்ளது. வசனங்களும், பாடல்கள் ராக, தாள வகைகளோடும் அமைந்துள்ளன. இரணியனை வதைத்தபின், நரசிம்ம மூர்த்தியைப் பிரகலாதன் போற்றித் துதித்தல் வரை உள்ளது. அச்சான விபரம் தெரியவில்லை. ''இவை வினை தீத்தா பிள்ளையினுடைய இரணிய நாடகச் சுவடி. விப[illegible]கார்த்திகை மீ[illegible]எழுதப்பட்டது. இஃது சாமு உபாத்தியாயருக்குச் சொந்தமானது'' என்ற குறிப்புகள் சுவடி முதல் இதழில் உள்ளன.

தொடக்கம்:

வினாயகர் துதி. விருத்தம்

திருவளரும் மணிமார்பன் செங்கமலப் பாதமதை சிரசில் சூடும்
அருவுரு(வாய்ப்) பெருவழியாய் அகண்டபரி பூரண
ஆனந்தமான
கருமுகில்போல் மதம்பொழியும் மும்மத வாரணன் கடவுள்
காற்ப தாமே.

முடிவு:

அப்பனே அய்யனேஉன் அந்தரங் கத்தைப் போலே
இப்பதி தனிலே தீரன் யெவர்களுங்காண்கிலேனே
செப்புவா யுனக்கு வேண்டும் திறமையாய் வரங்க ளெல்லாம்
இப்போது தருவேனப்பா எனதுகண் மணியே கண்ணே.

## 356. 10337 - ஸ்ரீராமரம்மானை

பொருள்: அம்மானை
அளவு: 32.2 x 3 செய்யுள் எண்ணிக்கை: தொடர்பாடல்
நிலை: சிதைவு, முழுமை.

குறிப்பு:

பக்கத்துக்கு இரு பகுதியாக 18 முதல் 20 வரிகள். ராமகாதை அம்மானை வடிவில் பாடப்பட்டுள்ளது. 8121 - ஸ்ரீராமர் அம்மானை என்பதினின்றுவேறானது. ஏடுகளின் இடதுபுறம் ஓரச் சொரிவுகள் மிகுதி.பக்கமுறிவுகளும் மிகுதி. முதலில் 10 பாக்கள் ராம மகிமை இயம்புவன. அடுத்து அமையும் விநாயகர் துதியைத் தொடர்ந்து தசாவதாரச் சிறப்பும் அயோத்தியில் இராமராக அவதரிப்பும் என அம்மானையாகக் கதை தொடர்கிறது. சீதையை மீட்டு அயோத்தி வந்து,முடிசூட்டி ஆளலோடு முடிகிறது.

தொடக்கம்:

அத்தன் திருமகனே ஆனைமுக வேதியனே
சத்தி கணபதியே தையல்நல்லாள் புத்திரனே
சித்த மகிழ்ந்தருளுந் திருநகரம் பாடுதற்கு
வித்தகனைப் பாடவினை பத்தறுங்கா ணம்மானை.

முடிவு:

தந்தை மிக வாழி தாரணியுள்ளோர் வாழியதே
பாட்டு படித்த கம்பர் பவிராயர் வாழியதே
கேட்டு மிருந்தவர்கள் கிருபையுடன் வாழியதே
சீராம ரம்மானை முகிந்தது முத்து(ம்) நன்றாக
குருவே துணை.

## 357. 8825 - d - சுப்பிரமணியர் முவரசன் பேரில் வண்ணங்கள்

பொருள்: துதி இதழ்கள்: 22
அளவு: 29.6 x 3.2 செய்யுள் எண்ணிக்கை: - சுமார் 270 வரிகள்
நிலை: குறை, நன்று.

குறிப்பு:

பக்கத்துக்கு 6 வரிகள். வண்ணமென்னும் இசைப்பாடலின்

தொகுப்பே இப்பிரதி. வண்ணப்பாடல்கள் 8, 16, 32, 64 கலைகளைக் கொண்டு அகத்துறையில் ஒவ்வொரு கலையிலும் தொங்கல் கொண்டமைந்திருக்கும். சுப்பிரமணிய மூவரையன் என்பவர் பேரில் பாடப்பெற்ற இவ்வண்ணப்பாடல்களின் ஆசிரியர், அச்சானது முதலிய விவரங்கள் தெரியவில்லை.

தொடக்கம்:

ஊழிமுற் பொறிப்பிறப்பின் ஊமையைத் திருத்திருக்கிற
பூனையைப் படிக்க வைத்து மீனவர்க் குதித்தபுத்தி
ஒருத்தர் முகங்க ளெதிர் விளிக்கவு மோஞ்சு
பரிமுகத்தை வசந்தமென நிவித்தி செயுங் கருணை

முடிவு:

சவாது பரிமளம் வீச மணிகுவாள்
சலாப விதமயில் பூரைத் தொழிலினாள்
விவாக மணமென லீலைக் குணருவாள்
விசால முயமத பீடைத் தணைகுவாள்.

## 358. /044/ -C- ஸ்ரீவில்லிபுத்தூர் மஹாத்மியம்

பொருள்: மகாத்மியம் இதழ்கள்: 8
அளவு: 46.5 x 3.6 செய்யுள் எண்ணிக்கை:- உரைநடை
நிலை: நன்று, குறை.

குறிப்பு:

பக்கத்துக்கு 6 முதல் 8 வரிகள். ஸ்ரீவில்லிபுத்தூர்த் தலவரலாறு கூறுவது. கிரந்த லிபிக் கலப்புள்ளது.

தொடக்கம்:

ஸ்ரீவில்லிப்புத்தூர் [illegible] வாணதிருப்பாற்கடல் நாதன் சன்னதியிலே பூமிப் பிராட்டி தம்முடைய இடறிலுமண்டாகிய [illegible] ... [illegible] களையெடுத்து துன்பப்படுகிறதை நீங்கி தோஷத்தை அடையும் படிக்கி ஒரு உபாயமருளிச்செய்ய வேணுமென்று கேள்க அப்போது..........................

முடிவு:

பெரிய பெருமாள் திருக்கலியாணஞ் செய்தருளுகிறதுக்கு [illegible] .... — [illegible]த்தோடே எழுந்த ருளுகு [illegible] னாச்சியார் தமக்கு விடாயயி றதென்று சொல்லயி[illegible]றதென்று சொல்ல தப்போது ஸ்ரீவில்லிப்புத்தூருக்கு தற்போது ஸ்ரீவில்லிபுத்தூருக்கு வழிக்கு வட பிறமாக பெரியதீவ்டி நயினார் திருத்தோள் விட்டு....

## 359. 8415 - சதமுக ராமயணம்

பொருள்: கதை
இதழ்கள்: 195
அளவு: 45.6 x 3.2
செய்யுள் எண்ணிக்கை:- உரைநடை
நிலை: சிறுசிதைவு, குறை
குறிப்பு:

பக்கத்துக்கு 6 முதல் 11 வரிகள். முன், இறுதி இதழ்களில் பல இடங்களில் ஓரம் முறிந்துள்ளது. சதமுக இராவணனைக் குறித்த கதை.மகா பிலக்கிரம சாலியாக அக்கினியாபுரி பட்டணத்தை யாண்டு கொண்டு யிருக்கிறான் அந்த சதமுக ராவணனானவன் ....பாதாள லோகத்திலே.... க்கிறமட்டுக்கு மா....ட சதாளுடைய உபத்திர மடங்காது அந்த பிரதான ராட்சதாயில்

முடிவு:

உயித்தங்களாகப் பிரளைய கால வயிரவனைப் போலே...வினை போலே மூணு நாள் ராப்பகலென்றும் பாராமல் உயிற்றங்கள் பண்ணுகையிலப்போ சதமுக னானவன் கோபாயக்......

## 360. 6347 - j - சமாதியுத்தி நூல்

பொருள்: மருத்துவம்
இதழ்கள்: 6
அளவு: 44 x 3.7
செய்யுள் எண்ணிக்கை:- 50
நிலை: நன்று., முழுமை.

குறிப்பு:

பக்கத்துக்கு 7 வரிகள். முப்பூ விபரங்கள் அடங்கியுள்ளன. சாவா மருந்தாம் இக்கற்பத்தால் சமாதியுத்தி பெறும் நிலை

விளக்கப்பட்டுள்ளது. அச்சான விவரம் தெரியவில்லை. ஆசிரியர் தெட்சணா மூர்த்தி நாயனார்.

**தொடக்கம்:**

தானா சமாதியஞ்சின் குணத்தைக் கேளு
தத்துவலய சமாதியொன்று சாத்தி றேனான்
கானான தத்துவங்கள் முப்பத் தாறுங்
கலந்துலப்ப வுதிகத்தைச் சூட்ச மத்தி
...லடக்கினான் சூச்சமத்தை யணிந்து நன்றாய்
நலம்பெரிய வாதினைபோ லாக்கி மைந்தா
வானான காரணமானா சரீரத்தி லடக்கி
மருவியிதைப் பிரகிருதியில் மருவப் பண்ணே

**முடிவு:**

காலான வயித்தியத்தை யுறுதி யாகக்
கைமுறையள் தப்பாமல் கருவாய்ச் செய்தால்
பாலான நிறமுடைய பரம னாவான்
பாரிலே வாழ்வதற்குக் குருவு மாவான்
சேலான திருவுடைய செல்வ னாவான்
சிந்தையிலே களங்கமற்ற சீசனாவான்
நாலான மணி போற்றும் பிரமாச் சொன்ன
நலமுடைய முனிவன் மொழி நாட்டில் முற்றே

தெட்சணாமூர்த்தி அருளிச் செய்த முப்பூ அன்பது முற்றும்.

## *361. 6277 - b - சொரூபசாரம்*

**பொருள்:** வேதாந்தம் **இதழ்கள்:** *8*
**அளவு:** *24.3 x 3.6* **செய்யுள் எண்ணிக்கை:** *- 63*
**நிலை:** நன்று, குறை.

**குறிப்பு:**

*பக்கத்துக்கு 10 வரிகள். முதல் 5 இதழ்கள் இல்லை. முதல் 36 பாக்களும் இல்லை.*

''பருவசா ரத்தாற் பலிக்குமனு பூதிச்
சொருபசா ரத்தில் சுபையை - யிருசெவியா

லுண்டிருக்க வல்லா ருலகமெல்லாந் தாமாகக்
கண்டிருக்க வல்லார்கள் காண்''

என்ற பாடலோடு முடிவுறுகிறது.

## 362. 9/00 - b - சிந்தாமணி நாதர் பதிகம்

பொருள்: துதி
அளவு: 24.4 x 3
நிலை: நன்று, முழுமை.

இதழ்கள்: 3
செய்யுள் எண்ணிக்கை: - 10

குறிப்பு:

பக்கத்துக்கு 8 வரிகள். தேவை நகர் (வாசுதேவநல்லூர்) சிந்தாமணி நாதர் மீது பாடப்பட்டுள்ளது.

இடப்பாக மிமயவல்லிக் கீய்ந்த செல்வ னிணையடிக்கே
வயித்தியலிங்க மிறைஞ்சி சாத்துந்............

என்ற வரிகளில் பாடிய ஆசிரியர் வயித்தியலிங்கம் என உணர முடிகின்றது. அச்சானதாகத் தெரியவில்லை.

தொடக்கம்:

பொன்னவிர்பூங் கடுக்கை தும்பை யறுகுவேய்ந்த
புரிசடையுங் குறுமுருவல் பூத்த வாயு
மின்னனைய மதிமுகமும் விளிகண் மூன்றும்
மேருவை வில்வளைத்த கையும் விண்ணோர்தேடி
இன்னமுங் காணாவடியும் பணிந்து போற்ற
யெளியோர்க்கு வுணர்வளித்த யிறைவா போற்றி
மன்னர்புகழ் தேவைநகர் மேவுஞ் சிந்தா
மணிவிளக்கே வல்லி பங்கில் வளர்கோ மானே.

முடிவு:

நாரணனார் நன்பரவும் பரமே போற்றி
நான்மறை முக்கொழுந்தே மெஞ்ஞானா போற்றி
வாரணகே தனன்புகழுந் தேவே சிந்தாமணி
விளக்கே வல்லிபங்கில் வளர்கோ மானே.

## 363. / / 389 - ஸ்திரீ சாதகம்

பொருள்: சோதிடம் இதழ்கள்: 303
அளவு: 22.5 x 3 செய்யுள் எண்ணிக்கை: - விரவியது
நிலை: சிறுசிதைவு, குறை.

குறிப்பு:

பக்கத்துக்கு 6 முதல் 11 வரிகள். ஸ்திரீசாதகத்துடன் திரிசாதகம், நாட்பொருத்தம், யோனிப்பொருத்தம், நட்சத்திரங்களறிய கிரகசமயம், அட்டவர்க்கம், கால சக்கரதிசை, சமயபலன். தாம்பூல லட்சணம், இரட்டைப்பிள்ளை பிறக்க, ராசயோகம், என்ற பல்வேறு சோதிடக் குறிப்புகளின் தொகுப்பாக உள்ளது. சர்வத்த சிந்தாமணி, உள்ளமுடையான் சூடாமணி என்ற சோதிட நூற்பகுதிகளும் அடங்கியுள்ளன. ஆசிரியர், அச்சான விவரம் தெரியவில்லை.

## 364. 9237 - C- சிவ வாக்கியர் ஞானம்

பொருள்: வேதாந்தம் இதழ்கள்: 20
அளவு; 19.2 x 2.5 செய்யுள் எண்ணிக்கை: - 67
நிலை: சிறுசிதைவு, குறை.

குறிப்பு:

பக்கத்துக்கு 5 முதல் 6 வரிகள். 16 ஆம் இதழ் இரண்டாக முறிந்துள்ளது. இதனை அடுத்த இரு ஏடுகளில் ''அரியது கேளாய் கதிர் நெடுவேலாய்'' என்ற ஔவையின் சுப்பிரமணியர் பாடல் உள்ளது. அச்சானது.

தொடக்கம்:

அரியதோர் நமசிவாய மாதியந்த மானதும்
ஆறுநூறு கோடிதேவ ராண்டுரைத்த மந்திரம்
பெரிய பேர்கள் சிறிய பேர்கட் கன்றுணர்ந்த பேர்களும்
பேதைநாதன் ஓதுகின்ற பிழைபொறுக்க வேணுமே.

முடிவு:

சாத்திரங்க ளோதுகின்ற சட்டனாத பட்டரே
வேத்துறக்கம் வந்தபோது வேதம்வந் துணருமோ

கட்டிவைத்த சாத்திரங்க....லவதா யுதவுமோ
போட்டதா யிருக்குதென்று னான்மறைக.... சுதே

## 365. 2232 - சாத்தா பாட்டு

பொருள்: துதி இதழ்கள்: 18
அளவு: 28.5 x 3.2 செய்யுள் எண்ணிக்கை: - சுமார் 250 வரிகள்
நிலை: நன்று, குறை.

குறிப்பு:

பக்கத்துக்கு 6 முதல் 7 வரிகள். முதல் 9 இதழ்கள் இல்லை. ஐயப்ப சுவாமியாகிய சாஸ்தா எனும் சாத்தன் மீது பாடப் பட்டுள்ளது. ஆசிரியர், அச்சான விவரம் தெரியவில்லை.

தொடக்கம்:

....வருகிற பவனி பாரீர்
சேர்ந்த வரமருளும் தீரவீர சேவுகன்
அனந்த மோகினி பாலன்
அகில மெங்கும் கொண்டாட மந்தன்
கச்சை கட்டி அரையில் கைதநிலை வாள்பிடித்து

முடிவு:

பூசை செயிவேன் பூதனாதா
அந்தயதாம் வெளி தேச்வரியீனாடும் அல்புதனே
பூதனாதா மத்தியமாவதி சுவாமி சந்திபிய்யனு
செயமங்களம் தரணி ஆள மெய்யனுரு
சுபமங்களம் னாமென்ற ராசனு....... ன்னின்.
..............................

## 366. 8248 - சீவக அம்மானை

பொருள்: நாட்டுப்புறக் கதைப்பாடல் இதழ்கள்: 178
அளவு: 49.6x2.7 செய்யுள்எண்ணிக்கை: - சுமார் 2500 வரிகள்
நிலை: சிதைவு, குறை.
குறிப்பு:

பக்கத்துக்கு 6 முதல் 8 வரிகள். ஓர முறிவுகளும், ஏடு முறிவுகளும் மிகுதி. சீவகசிந்தாமணிக் காவிய நாயகன் சீவகனின் கதை அம்மானையாகப் பாடப்பட்டுள்ளது. குணமாலை திருமண

முடிப்பு வரை உள்ளது. கணபதி சண்முகன், மாலுக்கிளையோள் காப்பினை அடுத்து கதை துவங்குகிறது.

தொடக்கம்:

இரசநவ கண்டத் திமையபரு பதத்தில் மின்னு
சரசுபே ராறுவருந் தன்போக்கி லங்கிருந்த
மாங்கதமா மெங்கின்ற வல்லவள னாட்டில்
எங்கியொன்னா ரென்னுமி ராசமா வப்புரத்தில்
மும்மாரி பெய்து முழுச் செல்வமு மோங்க

முடிவு:

தந்தை யதுகேட்டுத் தன்மகனார் சேதியெல்லாம்
கந்துகண்ணன் றனக்குக் கட்டுரைத்துக் காரியமாய்
சலியாத சீவகர்க்குந் தையல்குண மாலையர்க்கும்
கலியாணமு முகித்தார் கைமேலே யம்மானை.

## 367. 8680 - a - ஜீயர் அந்தாதி

பொருள்: *சமயம் (வைணவம்)* இதழ்கள்: *3*
அளவு: *40.5 x 3* செய்யுள் எண்ணிக்கை: *- 11*
நிலை: *சிறுசிதைவு, குறை.*

குறிப்பு:

*பக்கத்துக்கு 6 வரிகள்.*

தொடக்கம்:

வாழிய ராமா னுசமுனிவன் மாமலர்த்தாள்
வாழியவன் கருணை மானோக்கம் - வாழியே
எந்தைமண வாளமுனி யின்னருளால் ம(ா)றனுரைச்
செந்தமிழைத் தேர்ந்துரைக்குஞ் சீர்.

முடிவு:

மன்னிய செஞ்சொல் மணவாள மாமுனி வன்புகழே
யுன்னிய கொண்டலி ராமா நுசமுனி வொண்பதங்கள் •
தன்னி லென்னெஞ் சிற்றரிக்க வல்லாரவர் தம்பதத்தை
சென்னியிற் சூடவல்லார் விண்ணுளாருஞ் சீரியரே.

## 368. 8031 - a - சோழன் பசுக் கதை

பொருள்: *கதை* இதழ்கள்: *11*
அளவு: *37.3 x3* செய்யுள் எண்ணிக்கை: *- சுமார் 300 வரிகள்*
நிலை: *சிறுசிதைவு, முழுமை.*

குறிப்பு:

பக்கத்துக்கு இரு பகுதிகளாக 14 வரிகள்.

தொடக்கம்:

சீராரும் அய்யோத்தி தசரதனார் பட்டணத்தில்
பாராளுஞ் சோழன் பசுக்கதையைப் பாடுதற்கு
வாதாடும் பூங்குழலாள் மாதுமையா ளீன்றெடுத்த
காரானை மேனி கணபதியே காப்பாமே.

முடிவு:

இந்தக் கதையை யெழுதிப் படித்தோர்கள் கேட்டோர்
கிளைதழைக்க கிருபையுடன் தான்வாழி
இந்தக் கதையை யெழுதினவர் தான்வாழி
ஆல்போல வேதழைத்து அருகுபோல் வேரூணி
மூங்கில்போ லன்னசுத்தம் முசியாமல் வாழியதே.

பசுக்கள் கதை முற்றிற்று. இராமர் ஜெயம். தேனீர் குளம் மா. பெருமாள் கோன் நவநீத கிருஷ்ணன் துணை.

## 369. 8825 - b - சீவக அம்மானை

பொருள்: நாட்டுப்புறப்பாடல் இதழ்கள்: 18
அளவு: 29 x 3.2 செய்யுள் எண்ணிக்கை: - 100
நிலை: நன்று, குறை.

குறிப்பு:

பக்கத்துக்கு 6 வரிகள். 5 ஆம் இதழைக் காணவில்லை. அண்மையில் தஞ்சை சரசுவதி மகால் நூல் நிலையத்தாரால் பதிப்பிக்கப் பெற் றுள்ளது. சீவகசிந்தாமணி அம்மானை நூலும் இதுவும் ஒன்றா என்று ஒப்பிட வேண்டும்.

தொடக்கம்:

பூமக ளிலங்குஞ் செம்பொன் புவிமக ளிலங்கு முன்னூல்
கோமக ளிலங்கு காதை குலமகள் விளங்கச் செய்த
பார்மக ளிலங்கத் தந்த பனுவலா ளன்பி னாலே
நாமக ளிலம்ப கத்தை நாவினால் கூறு வோமே.

முடிவு:

கன்னிகுண மரலைமின்னுங் காமகனி யென்ன
மன்னனதை யுண்ணவரு மந்தியது போல

மின்னிரச மானதை விரும்புயுண வங்கே
வன்னவரி வண்டுண்ணு மலரென மயந்தாள். -

ரா.

## 370. / / 447 - a - சிவசயிலத் தல புராணம்

பொருள்: புராணம் இதழ்கள்: 77
அளவு: 20.3 x 3.8 செய்யுள் எண்ணிக்கை: - 635
நிலை: நன்று, முழுமை.

குறிப்பு:

பக்கத்துக்கு 9 முதல் 12 வரிகள். சிவசைலமானது குற்றாலம், அம்பாசமுத்திரம் வழியில் உள்ள ஒருதலம். ஆசிரியர், அச்சான விவரம் தெரியவில்லை.

தொடக்கம்:

ஒருகோடு மிருபதமு மும்மதமு நால்வாயுங் கரமோ ரைந்து
முருகோடுங் கடம்பனறு முகனோடும் பிறந்த தந்திமுக
வன்றன்னை
அருகோடும் பொது முத்த மிடவளைப்ப நிருத்தமிடு
மண்ணலேழில்
வருகோடி பிறப்பகற்றுஞ் சயிலகணபதி மலர்த்தாள் வணக்கஞ்
செய்வாம்

முடிவு:

சிவசயிலப் பதியருமைத் திருமேனி தனைத்தீண்டுந்
தவமறையோர் வாழி பரிசனர் வாழி தமிழ் வாழி
பவமகல விறைவர்திருப் பணிசெய் யடியவர்வாழி
யவனிதனிற் சிறந்திருக்கு மன்போரும் வாழியரே

௲௭௱௵ (கி.பி.1800) மாசி ௴ (மாதம்). ௳௩ (3-ந்தேதி) புந்தி வாரமும் உத்திர நட்செத்திரமுங் கூடின சுபதினத்தில் இந்த தலத்திலிருக்கும் ஸ்ரீ (ஈ)சுர மூர்த்தி ஓதுவான் கையெழுத்து.

## 371. / / 311 / - சோழன் பசுக்கதை

பொருள்: கதை இதழ்கள்: 15
அளவு: 38.2 x 2.7 செய்யுள் எண்ணிக்கை: - சுமார் 350 வரிகள்
நிலை: சிதைவு, குறை.

குறிப்பு:

*பக்கத்துக்கு 10 முதல் 12 வரிகள். ஏட்டின் இடது புறம் சிதைவும், முறிவும் நிகழ்ந்துள்ளன. இறுதி இதழின் இடப்புறம் 7.5 செ.மீ அளவுக்கு முறிந்துள்ளது. இறுதியில் ஒரு இதழ் இல்லை எனத் தோன்றுகிறது. 9249, 9268 - சோழன் பசுக் கதையை ஒத்ததே.*

''....னே அரனார் திருமகனே
....தியே தையலுமை பாலகனே
....மத்த கணபதியே முன்னடவாய்
....யிந்திரனார் பசுக்கதையைப் பாடுதற்கு
(சரசு)பதி லட்(சுமி)தையலே முன்னடவாய்
ஸ்ரீராம ரய்யோத்தியிலே த்சரதனார் பட்டணத்தில்
நந்தகோ னென்று நாமமுள்ள பேரிடையன்
நன்மையே செய்வான் நடுக்கேடு செய்தறியான்
கன்னிய தானங் கருதி முகித்து வைப்பான் ''

*எனத் துவங்குகிறது.*

## *372. 9268 - சோழன் பசுக்கதை*

பொருள்*: கதை* இதழ்கள்*: 10*
அளவு*: 39.7 x 2.5* செய்யுள் எண்ணிக்கை*:- சுமார் 160 வரிகள்*
நிலை*: சிறுசிதைவு, குறை.*

குறிப்பு:

*பக்கத்துக்கு இரு பகுதிகளாக 8 வரிகள். இறுதிப்பகுதி பூச்சி யரிப்பால் பாதிக்கப்பட்டுள்ளது. 9249 - சோழன் பசுக்கதை என்பதன் பிரதியே.*

''சீறிக் சினந்துமிக கொம்பு சிலுப்பாதே
என்னிலையுஞ் சற்றே உயர்ந்ததிக் காரருடன்
சீறிச் சினந்து மிக வேட்டுக்குச் செல்லாதே
பத்தினியாள் தன் முகத்தைப் பாராதே யென்மகனே
பின்னத்தை விட்டுநீயும் பிணங்கிப் பிரியாதே
காடுவழி போகாதே கள்ளர் தனைப் பாராதே''

*என்பது வரை உள்ளது.*

## 373. 1465 - b - சிதம்பர அகவல்

பொருள்: சமயம்(சைவம்) இதழ்கள்: 3
அளவு: 20.6 x 3.8 செய்யுள் எண்ணிக்கை: - சுமார் 60 வரிகள்
நிலை: நன்று, முழுமை.

குறிப்பு:

பக்கத்துக்கு 10 வரிகள். பஞ்ச பூதக்ஷேத்திரங்களில் ஒன்றாகிய ஆகாச க்ஷேத்திரமாகிய சிதம்பரத்தின் சிறப்பு கூறப்பெற்றுள்ளது. அச்சான விவரம் தெரியவில்லை.

தொடக்கம்:

விதந்தொறும் புலிமுனி பதஞ்சலி போற்றிய
சிதம்பர விலாச விதந்தனை மொழிந்திட
கரமலர் நான்கொடுத் தரமுக மாகிய
நரமுக கணபதி திருவடி பணிவாம்.

முடிவு:

சிதம்பர மென்றசொற் செவியினிற் கேள்பினும்
இறைவினைக் கொடுக்கும் பிறவி சாகரக்
கருவடிவ.....த்துத் திருவடித்தாமரை வாழ்வது நிச்செயந் தானே
சிதம்பரவகவல் எழுதி முற்றும்.
திருச்சிற்றம்பலம்.

## 374. 3946 - o - சன்மார்க்க சித்தியார்

பொருள்: சமயம் இதழ்: 1
அளவு: 24.8 x 5 செய்யுள் எண்ணிக்கை: - 28
நிலை: சிறுசிதைவு, முழுமை.

குறிப்பு:

பக்கத்துக்கு 21 வரிகள். 28-ஆம்பாடல் எழுத இயலா வண்ணம் மிகச் சிதைந்துள்ளது.

தொடக்கம்:

சிறியே னறியாமை தீர்ப்பதற்குப் புத்தி
யறியே னெனினு மருளி-னெறியே

முறைத்தார் கண்ணீர்மை முதிர வினாவுற்றே
னளித்தா னமச்சி வாயா.

முடிவு:

கன்மார்க்க நற்குரவோர் நாட்டுமரு னூனோக்கிச்
சன்மார்க்க சித்தியென...னுரைத்தேன்
புன்மார்க்க மற்றார்தன் னெஞ்சத்த முத...
செகமோர்க்கம் பெற்றார்க் கிதுபேசு மாம்.

-உஎ-

## 375. 1147I - C- சிவஞான போதவுரை

பொருள்: சைவவேதாந்தம் இதழ்கள்: 33
அளவு: 26.5 x 3.7 செய்யுள் எண்ணிக்கை:- உரைநடை
நிலை: சிறுசிதைவு, குறை.
குறிப்பு:

பக்கத்துக்கு 10 வரிகள். ஆசிரியர், திருவெண்ணெய் நல்லூரைச் சார்ந்த மெய்கண்டார். இவர் சைவசித்தாந்த மரபின் ஆதிகுரு ஆவார்.அச்சானது.

தொடக்கம்:

கல்லா நிழன்மலை வில்லா ரருளிய
பொல்லா ரிணைமலர் நல்லார் புனைவரே.

கல்லான் நிழல் எது கல்லாலின் கீழே யெழுந்தருளி யிருந்து அகத்தியர் புலத்தியர் சனகர் சனக குமரரிவர்கள் நால்வர்க்குந் தன்மார்த்த கர்ம மோட்சங்களை யருளிச் செய்து மலைவில்லார். எ.து. மகா மேருவை வில்லாக வளைத்து துட்ட நிக்கிரகஞ் சிட்ட பரிபாலனம்.............

முடிவு:

நந்திகேசுர தம்பிரானருளிச் செய்த ஞானநூலாகிய சிவஞான
போதக் கிரந்தத்தைச் சிந்தை செய்து தானுரைத்தான் மெய்கண்ட
தேவனென்னுந் திரு நாமத்தையுடையோன் தாரணியோர்
தாமுணர பூதலத்திலேயுள்ள யரற் மாக்களறிய
எ.து...ட்டாந்தத்தாலின்று ஏதுக் களாலுந்
திருட்டாந்தத்தாலுமிப் பொழு தென்றவாறு.
பன்னிரண்டாஞ் சூத்திர முற்றும்.

(அம்)பலவாணன்.திருவடி வாழ்க. ஸ்ரீ ஹரிஸ்து
(சுபமஸ்து) கணபதி துணை. முருகன் துணை.

## 376. 9249 - சோழன் பசுக்கதை

பொருள்: கதை இதழ்கள்: 17
அளவு: 42.5 x 2.3 செய்யுள் எண்ணிக்கை:- சுமார் 300 வரிகள்
நிலை: நன்று, முழுமை.

குறிப்பு:

பக்கத்துக்கு இரு பகுதிகளாக 8 முதல் 10 வரிகள். பிறவிப்பகை உடைய பசு-புலியின் வாக்கு நேர்மையை விளக்கல் மூலம் நாட்டு மன்னனின் நீதிச் சிறப்பை நிலைநாட்டும் கதை. 10-ஆம் இதழ் வலப் புறமாகப் பாதி முறிந்து விட்டது.

தொடக்கம்:

பாராளும் சோழன் பசுக்கதையைப் பாடுதற்கு
காரானை மாமுகத்தோன் காற்பு.
ஸ்ரீ று செயு
அத்தி மகனே யரனார் திருமகனே
சத்திக் கணபதியே தாயேநீ முன்னடவாய்
பாராளு மிந்திரனார் பசுக்கதையைப் பாடுதற்கு
சரசுபதி லெட்சுமியே தய்யலே முன்னடவாய்.

முடிவு:

என்றே புலியுரைக்க யேகாந்தக் காடுதன்னில்
பசுவும் புலியும் பண்பாகத் தேரேறி
தீர்க்கமுடன் நன்றாய்ச் சிவலோகம் சேர்ந்ததுவே.
பசுக்கதையை நன்றாய்ப் படித்தவருங் கேட்டவரும்
முசிவு வரைக்கு முக்கியமாய்க் கேட்டவரும்
என்று கயிலாசம் யிருப்பார்க ளிப்புவியில்
படித்தவருங் கேட்டவரும் பண்பாக வாழியதே.
மேலப்பாளையத்திலிருக்கும் தெட்சணாமூர்த்தி குருக்களய்யர் அவர்கள் குமாரன் கணபதி குருக்களய்யர் அவர்கள் ஏடு.

## 377. 9237 - b - சூரிய அகவல்

பொருள்: துதி இதழ்கள்: 6
அளவு: 16.5 x 3.2 செய்யுள் எண்ணிக்கை:-
நிலை: நன்று, முழுமை. சுமார் 75 வரிகள்

குறிப்பு:

பக்கத்துக்கு 6 வரிகள். சூரிய பகவானைத் துதித்துப் பாடும் அகவற்பா. அச்சானதாகத் தெரியவில்லை.

தொடக்கம்:

சீரணி கமலத் திருமக ளொருத்தியுங்
காரணப் பொருள்சேர் கலைமக ளொருத்தியும்
மதகரி முகத்து வானவ னொருவனும்
யென்ணெண் கலையும் வண்ணனத் தேரும்

முடிவு:

பாத மிரண்டும் படைத்தில னாகினும்
காத நூறாயிரங் கடிகை நடத்தி
நன்னருந் தேர்மேல் நலமிகத் தோன்றி
என்னிடர் தீர எழுந்தரு ளினனே.

அகவல் முற்றும். சுவாமி சிவ சூரிய நாராயணன் முன்னிற்க.

## 378. 10467 - ஸ்ரீரங்க மஹாத்மியம்

பொருள்: மகாத்மியம் இதழ்கள்: 22
அளவு: 40.5 x 2.6 செய்யுள் எண்ணிக்கை:- உரைநடை
நிலை: சிறுசிதைவு, குறை.

குறிப்பு:

பக்கத்துக்கு 5 முதல் 7 வரிகள். 3,4,7 ஆம் இதழ்களைக் காணவில்லை.

தொடக்கம்:

ஒரத்தப் பத்தியாக கின்னரி தூக்கி யம்பற் ருத்திற்றம்பலதம் நிறத்த சிம்மாசன ராச மனோகரத் தீநரி பூமிபாலர்த் துரத்து பிரகலாதர் நாரதர் பராசரர் புண்டரிகர் வியாசர் அம்பரிஷர் சுகர் சவுனகர் விஷ்ண மாதரலப்பியர் ருக்கு மாங்கதர்.

முடிவு:

நம்மை சிவன் திருவாரதனம் பண்ணப் போறான் தெந்தாதன புரத்திலே நம்மை விஸ்வகர்மம் திருவாரதனம் பண்ண போறான் அஸ்வதி நஸ்சத்தினாலே அஸ்வினி வேதைகளும் சீக்கிறத்தீ... விதமென்கிற திருப்....

## 379. 2891 -C- சிவதத்துவம்

பொருள்: சமயம் இதழ்கள்: 13
அளவு: 20.7 x 2.9 செய்யுள் எண்ணிக்கை:- உரைநடை
நிலை: நன்று, குறை.

குறிப்பு:

பக்கத்துக்கு 5 வரிகள்.

தொடக்கம்:

சிவனுக்கு உருவமா(வது) (ஆ)னந்தமே வடிவாம். சுருப மாவது யிச்சா ஞான கிறிகள் கூடியதாம். சுபாவமாவது அசைவற நிற்கும் முறைமை. விசேடமாவது புதுமையாகத் தோற்றுவது ....ஆற்று யிருக்கை விர்த்தியாவது யெவ்வடமும் நிறைந்து நிற்கை.

முடிவு:

மேலான தன்மை யிடமாக நின்று ஆத்மாவை தொழிற்படுத்தி விஷய போகத்தை பொசிக்கும் போது ஆத...விலே (ஆத்மாவிலே) கலந்து நின்று ஆ விஷய ஞானங்களை யறியும்படி ஞனேந்தி ரியங்கள் வழியாய் ஆத... வானவன் பொருந்தி யோகம் பொசிக்கும் படி பண்ணிவிக்கிற திருவருளை விட்டு நீங்காமலறிதல்.

## 380. 11471 - a- சடத்துவர் மார்க்கம்

பொருள்: சைவவேதாந்தம் இதழ்கள்: 53
அளவு: 26.5 x 3.7 செய்யுள் எண்ணிக்கை:- உரைநடை
நிலை: சிறுசிதைவு, குறை.

குறிப்பு:

பக்கத்துக்கு 10 முதல் 12 வரிகள். முதல் 6 இதழ்களின் இடப்புற ஓரம் முறிவுபட்டுள்ளது.

தொடக்கம்:

(தே)வரியார் மகாதேவரைச் சடத்துவர் மார்க்கத்தை நன்றாக விசாரித்துத் திருவுளம் பற்ற வேணுமென்று விண்ணப்பஞ் செய்ய, மகாதேவர் சாதகர்க்கு நன்மையின் பொருட்டாக வருளிச் செய்கின்றார். சிறீகண்ட நாதனுடைய வேவுலாலே பிரமாண்டத்தி னடியி லோட்டின் மேலே யெழுந்தருளிப்பார்.

முடிவு:

அந்த மாயைக்கு மந்த நாளிலே நூறு பராத்தஞ் செல்லுகிற பொழு தீசுரன் நமக்குக் கீழாயிருக்கிறதெல்லாஞ் சங்கரித்து மீளவு மிராத் திரி முகிவிலே சிருட்டிப்பர். அந்த வீசுரனுடைய வருடத்திலே நூறு நூறு பராத்தஞ் செல்லுகிற பொழுது சதாசிவர்க் கொருபகல்.......

## 381. 10448 - ஸ்ரீரங்க மஹாத்மியம்

பொருள்: மகாத்மியம் இதழ்கள்: 77
அளவு: 34.5 x 3.3 செய்யுள் எண்ணிக்கை:- உரைநடை
நிலை: நன்று, முழுமை.

குறிப்பு:

பக்கத்துக்கு 6 வரிகள். 10467 - ஸ்ரீரங்க மஹான்மியம் என்பதனை ஒத்ததே. 9 அத்தியாயங்கள் அடங்கியுள்ளன.

''மனுஷாளாகையினாலே திருவாராதனங் கொண்ட.ருளிக்
கொண்டு பகவானானவர் சுகமாக காவேரி தீரத்திலே வாஸம்
பண்ணுகிறாரென்று நாரத மகா முனிக்குச் சொல்லுகிறார்
திருநேத்ரத்தான் பரமேஸ்வரர் திருவுளம்பத்தினாரென்றவாறு.''

என்பதனோடு முடிவு பெறுகின்றது.

இந்த ஏடு எழுதினவன் (ராமய்யன்) என்ற குறிப்பும் காணப் படுகிறது.

## 382. 6347 - e - சித்தர் வெண்பா

பொருள்: மருத்துவம் இதழ்கள்: 12
அளவு: 44 x 3.7 செய்யுள் எண்ணிக்கை:- 207
நிலை: நன்று, முழுமை.

குறிப்பு:

பக்கத்துக்கு 8 முதல் 10 வரிகள். சித்தர்களின் மருத்துவக் கருத்துக்கள் வெண்பா வடிவில் தொகுத்துரைக்கப் பெற்றுள்ளன.

தொடக்கம்:

இரத சமுத்தி ராசியமூன் றுண்டா
முரமதுணர் வாற்கெளிதாம் யோகந்- திரமா

மணிமந் திரமருத்து வாய்க்குமு கமூன்றி
லணிகலையில் மூன்றுரச மாம்.

முடிவு:

தாமதவெந் தோன்றி தழலூட்டும் பற்பத்தை
மாமுகமாங் குன்றியொரு மண்டலங்கொள் கூமூன்
பசியேழ்கு மண்டலங்கொள் பரிந்திமையோர் போற்றுங்
கசியுஞ்சு கலந்திங்கள் காண்.

-உளஎ

வீரபத்திர சுவாமி துணை. வெங்கடாசலபதி துணை.

## 383. 3945 -a -சிவ்புராணம்

பொருள்: சமயம் இதழ்கள்: 65
அளவு: 32 x 3.3 செய்யுள் எண்ணிக்கை: - விரவியது
நிலை: நன்று, குறை.

குறிப்பு:

பக்கத்துக்கு 6 முதல் 8 வரிகள். அச்சானது. பாடபேதத் துக்குதவும்.

தொடக்கம்:

நால்வகை யோனிகளுள் ஒரு யோனி வாய்ப்பட்டுப் பிறப்பவை யாவை? அவையெல்லாம் பசுக்கள். அப்படிப் பிறத்தலில்லாது யாது? அது பதிப்பொருள் என்னும் இது ஒன்றே எளிதில் அவ் விரண்டுக்கும் தமருள் வேற்றுமை அறியும் வண்ணம் நிற்பது.

முடிவு:

வருணநெறி யாச்சிரம நெறிவழுவா தெஞ்ஞான்று மகிழ்ந்து வாழும்
பொருவிலவன் யாவரிலு முயர்ந்தபாத் திரனென்றே புகலுநூல்க
ளொருமையுடன் பாத்திரத்தை யுற்றுணர்ந்தே யின்னவருக் குதவினாரேற்
றருமமுத லாதியெலா மடைந்துபர மாயகதி தன்னைச் சார்வார்.

## *384. 82/9 -* b *- ஸ்ரீவசன பூஷணம்*

பொருள்: *சமயம்* இதழ்கள்: *42*

அளவு: *39.5 x 4* செய்யுள் எண்ணிக்கை:- உரைநடை

நிலை: *நன்று, முழுமை.*

குறிப்பு:

*கி.பி.1875* இல் எழுதப்புட்ட பிரதி.

தொடக்கம்:

[illegible]

[illegible] . . . . . . . . . . . . .

முடிவு:

[illegible] மாக்கும்.

வாழி யுலகாசரியன் வாழியவன் மன்னு குலம் வாழி முடும்பை
யென்று மானகரம் வாழி மனஞ் சூந்த பேரின்ப மலுகு மிகு
நால்லாரின் சூழ்ந்திருக்கு மிருப்பு/ஜீயர்.

## *385. 5954 -* k *- சங்கராசாரியார் ஞான உலா*

பொருள்: வேதாந்தம் இதழ்கள்: *6*

அளவு: *31.5 x 3.6* செய்யுள் எண்ணிக்கை:- தொடர் செய்யுள்

நிலை: *நன்று, முழுமை.*

தொடக்கம்:

ஐந்து கரத்தானே ஆனை முகத்தானே
இந்து மிளம்பிறை போலு மெயிற்றனை
நந்தி முகத்தனை ஞானக் கொழுந்தனை
புந்தியில் வைத்தடி போற்றி நின்றோமே.
காற்பு முற்றும்.

சீரான காசிச் சிதம்பரத்தி லெருடியாய்ப்
பேறான நெஞ்சகமே பேசக்கேள் - ஆரா(ய்)ந்து
யுன்னை யுண்ர்ந்தபடி யுலகத்தில் ஞானஉலாத்
தன்னை யறிவால் தான்பாடப் பின்னையிகல்.

முடிவு:

கண்டு வணங்குநெஞ்சே கட்சிக் கனிபறித்து
உண்டு கனியதுவே உண்மையாய் - கொண்டசிவ
சங்கரா சாரியார்த் தமிழனால் உரைத்தஉலா
இங்காருங் கற்று இயம்பவே.
கங்காளர் ................
பாதம் பெ...வார் படியி(லு)காள்வார்
வேதம் பெறுவார் மெஞ்ஞானம்-யோதுஞ்
குருவாயனைத்தினுக்குங் குணமுடையா ராகித்
தருவாரிருப்பரெனச் சாற்றும்.

சற்குருபாதம் துணை.

## 386.5659-ஸ்ரீகிருஷ்ண அம்மானை

பொருள்: நாட்டுப்புறக்கதைப்பாடல் இதழ்கள்:162
அளவு: 33.5 x3.3 செய்யுள் எண்ணிக்கை:-
நிலை: சிறுசிதைவு,குறை தொடர் செய்யுள்

குறிப்பு:

ஸ்ரீகிருஷ்ணன் கதை அம்மானையாகப் பாடப்பட்டுள்ளது. முதல் ஓலையில் ஐங்கரன் காப்பு உள்ளது. இறுதி ஓலை மிகுந்த சிதைவுக் குள்ளாகி உள்ளது. அச்சான விவரம் தெரியவில்லை.

தொடக்கம்:

சீர்மடந்தை கேள்வன் றிருவுந்தியோன் படைத்த
பார்மடந்தை வாழ்வுதரும் பல்லுயிரெல் லாந்தழைக்க
தன்மம் பெருக்கத் தவஞ்செய்வோ ருண்டாக்க
குன்மங் கருக்கதலி பிறஞ்சாய
யெம்மாதந் தோறு(ம்)மெழிலி வளம்பெருக.

முடிவு:

பற்றி மலைந்து பலபோர் பொருகையிலே
வெற்றி மலையு மிகுகாசி ராச னென்பான்
சித்திர ரோக்கித் திருமாலி ரேகமெல்லாம்
அஷ்திர மாரி யழு(த்)தினன்...
செவ்வாறு மணிவண்ண...
இவ்வாயு தத்தா லிவன்...

## *387.5449-e-ஸ்ரீகிருஷ்ண பகவான் கும்மிப்பாட்டு*

பொருள்: *நாட்டுப்புறப்பாடல்*
அளவு: *41 x 3*
நிலை: *நன்று, குறை.*
இதழ்கள்: *3*
செய்யுள் எண்ணிக்கை: *-* தொடர் செய்யுள்

குறிப்பு:

*ஆசிரியர், அச்சான விபரங்கள் தெரியவில்லை. இதனை அடுத்து ஒரு ஏட்டில் தேங்காய் சகுனம் உள்ளது.*

தொடக்கம்:

வட்ட வட்டப் பொட்டலிலே-நம்மள்
வாலிபப் பெண்களுந் தட்டாட
தட்டு மரித்திட கிருஷ்ணனைப் பற்றி
தகுந்த கும்மி யடிப்பமடி
காலோடே காலு உரசிடாமல்-நம்மள்
காலுச்சிலம்பு கழந்திடாமல்
மேலோடே மேலு உரசிடாமல்-நம்மள்
வேருகைத் தண்ணீரு சிந்திடாமல்
கும்மியடிங்கடி கும்மியடி-நம்மள்
கோப(ா)ல நாதரைப் போற்றியடி.

முடிவு:

அம்மா ளசோதை அங்கிருக்க குழந்தை
ஆசாரத் தொட்டிலில் தூங்கையிலே
தூங்கி முழிக்கிற பாலனைப் பற்றி
திமிர்ந்த கும்மியடிப்பமடி
ஆசை காலத்தி லுள்ளமட்டும்
அமர்ந்த கும்மி யடிப்பமடி.

## *388.8661 -a- சிறுத்தொண்டர் கதை*

பொருள்: *கதை*
அளவு: *28.2 x3.6*
நிலை: *சிறுசிதைவு, முழுமை.*
இதழ்கள்: *16*
செய்யுள் எண்ணிக்கை: *-* தொடர்ப்பாடல்

குறிப்பு:

பெரியபுராணச் சிறுத்தொண்டர் கதை கும்மி வடிவில் பாடப் பட்டுள்ளது. *4*-ஆம் ஓலை இரண்டாக ஒடிந்துள்ளது.

தொடக்கம்:

திருவரு ளுலகுதன்னில் சிறுத்தொண்டன் கதையை நன்றாய்
குருவரு ளாலேகும்மி குவலையந் தன்னில் பாட
இருவிழி சிவக்கவேதான் இரணியன் தனைச் செயிற்து
கருமுகில் முருகனான கணபதி காற்ப தாமே.

முடிவு:

நாற்பத் தெண்ணாயிரங் கோடி ரிசிகளு
நாக லோகப் பெருந்தீவில் வந்து
தேவாதி தேவர்கள் காட்சி கொடுக்க
சிறுத்தொண்டருங் கண்டுமிக மகிழ்ந்து
தேவர்கள் காட்சி மிகக் கொடுத்து
தெய்வ லோகங்களிலே வீரன் வீத்திருந்தார்.

சிறுத்தொண்டன் கதை முகிந்தது முற்றும். ஆருயகளு *(கி.பி.1876)* ஆவணி பூருஉ. *(5-ந் தேதி)*....பிடா....ங் கிராமத்திலிருக்கும் சாதிகம்ம....தம்பி சூரப்ப சாமிஞர் சிறுத் தொண்டன் கும்மிப்பாட்டு யிந்தயேட்டை நன்றாய்க் கும்மி படித்துக் கொண்டு யெழுத்துப் பிழை திருத்தி யென்னு டைய வீட்டுலே யென்னுடைய அசையிலே வய்த்து விட்டுப் போகவும். ஸ்ரீ செயம் ஸ்ரீ ரெங்கநாயகர் திருவடிக்கே சரணம்.

## *389. 9287 - a- சின்னப் போற்றி மாலை*

பொருள்: *துதி* இதழ்கள்: *7*

அளவு: *41.2 x 2.4* செய்யுள் எண்ணிக்கை: *- தொடர் பாடல்*

நிலை: *சிறுசிதைவு, முழுமை.*

குறிப்பு:

*அச்சான விபரம் தெரியவில்லை. 4-ஆம் இதழ் பாதி முறிந்து விட்டது.*

தொடக்கம்:

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
யிந்து யிளம்பிறை போலு மெயித்தனை

நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தனை
புந்தியில் வைத்தடி போற்று கின் றேனே.

*தெச்சணாமூர்த்தி அய்யர் அவர்கள் குமாரன் திருமலை சங்கு படி...த்து வருகிற சின்னப் போற்றி மாலை நீடுழிகாலம் வாழ்க. அண்ணாமலையார் துணை.*

முடிவு:

இரவொடு பகலனே னாளும்
யேற்றுவார் வினைகள் தீர்க்கும்
பருமானா ரரு(ளிச்)செய்த
பரமனை பிள்ளையாய் போற்றி.

*ஆனிடயஅ௵ (கி.பி.1853)பங்கூனி மீயக௨(11-ந்தேதி)மங்கள வாரத்தன்று சின்னப் போற்றிய மாலை படித்து முகிந்தது முற்றும்.*

## *390.8026 - i - சண்முக மாலை*

பொருள்: *துதி* | இதழ்கள்: *9*
அளவு: *38 x 3* | செய்யுள் எண்ணிக்கை: *- 32*
நிலை: *நன்று, முழுமை.*

குறிப்பு:

*திருச்செந்தூர் முருகன் மீது பாடப்பட்டுள்ளது. ஆசிரியர், அச்சான விவரங்கள் தெரியவில்லை.*

தொடக்கம்:

மின்னொளியே செந்தூர் வேலய்யா உன்மீதில்
சண்முக மாலையாகச் சாற்றுதற்கு - பொன்னொளிசேர்
சங்கரனார் மைந்தர் தந்தி முகத்தோனே
கண்ணனுட தன்மருகா காப்பு.

முடிவு:

ஊரா ருறன் முறையார் உற்றார்பெற் றாருடனே
ஏறாத வார்த்தைதன்னை யேசாம லேசியேதான்
சீரான வாழ்வுசெல்வந் திருப்பாதஞ் சேர்வைமுதல்
தாரா யிதுசமையஞ் சண்முக சிகாமணியே

*சண்முக மாலை முற்றுப் பெற்றது.*
*குருவே துணை. வேலுண்டு வினையில்லை.*
*மயிலுண்டு பயமில்லை.*

## 391. 8026 - j - சரஸ்பதி மாலை

பொருள்: துதி
இதழ்கள்: 8
அளவு: 38 x 3
செய்யுள் எண்ணிக்கை:- 31
நிலை: நன்று, முழுமை.

குறிப்பு:

சரஸ்வதியைத் துதித்துப் பாடும் பாடற் தொகுப்பு.

தொடக்கம்:

தண்டமிழைத் தேர்ந்துசர சோதிமாலை பனுவல்
மண்டலத்தில் பாடி வருத்தவே - கொன்றைதும்பை
வைக்குஞ்ச ரச்சடிலம் வாழ்வுபெற்ற வெற்றிமத
கைக்குஞ்ச ரச்சடிலங் காப்பு.

முடிவு:

சூழும் பனுவல் சதுவேத வாழ்த்துத் துலங்குபுவி
ஏழுந் தழைத்திட இப்படிக் கேள்பவ றென்றைக்குமே
ஊழும் புகழும் மிக்காங்கதி தேடுவ ருண்மைபேர்
வாழுஞ் சரஸ்வதி கல்யாண மாதுக்கு மங்களமே.

சரஸ்வதி மாலை முற்றும்.

## 392. 8026 - k - சங்கர சதாசிவ மாலை

பொருள்: துதி
இதழ்கள்: 13
அளவு: 38 x 3
செய்யுள் எண்ணிக்கை:- 49
நிலை: நன்று, முழுமை.

தொடக்கம்:

பொங்கரா வேணிப் புனிதசிவ சங்கரர்மேல்
சங்கர சதாசிவமாலை சாற்றவே - மங்களஞ்சேர்
யாவுடையா ளீன்றெடுத்த ஐங்கரத்தோ னாதிமலர்
காவடியாள் சேவடியே காப்பு.

பாரெங்கும் நின்று படைப்பு முதல் காத்தழித்து
நீரெங்குந் தானாய் நிறைந்தாய் பராபரனே
சீரெங்கு மேதழைக்க சீராசை யூர்வாழும்
சாரங்க பாணிதொழுஞ் சங்கர சதாசிவமே.

முடிவு:

அத்தி முகவன்வாழி அந்தணர்கள் தான்வாழி
முத்திதரும் மெய்நூல் மொழிவோர் பதம்வாழி
சித்தியொரு பத்தியுறுஞ் சீராசை யூர்வாழும்
சத்தியுமை யாவுடையாள் சங்கரனார் வாழியதே.

*சங்க்ர சதாசிவ மாலை முற்றிற்று.*

## *393. 8026 - e - சனியீசுர பகவான் தோத்திரம்*

பொருள்: *துதி* இதழ்கள்: *3*
அளவு: *38 x 3* செய்யுள் எண்ணிக்கை:- தொடர் பாடல்
நிலை: *நன்று, முழுமை.*

குறிப்பு:

*சனிபகவான் மீது பாடப்பட்டுள்ளது. ஆசிரியர், அச்சான விவரம் தெரியவில்லை.*

தொடக்கம்:

அத்தணிந்தான் அயனு முண்டான் நாவினாலே
அயனுமொரு சிரசிழந்தான் அஞ்சினாலே
சுக்கிரனுங் கண்ணிழந்தான் நாவினாலே
சோமனும்போ யுடலிழந்தான் ஆருனாலே
தேர்க்கண்ணனும் பதியிழந்தான் ஐந்துநாலே
சீதைபோய்ச் சிறையிருந்தான் சென்மத்தாலே
.....ர்க்காமல் காடுறைந்தார்.

-யஉ

முடிவு:

சென்மந்தனில் வந்தாலுஞ் சீரழியாம லடியேனை
கன்மவினைகள் அருள்தீர்த்து கருணையிரங்கி அருள்புரிவாய்
தாமம்உனக் குண்டுமய்யா சனியனே (காக) மேறும்
தம்பிரானே

ஸ்ரீ ஞ ய உ ஞு *(கி.பி.1917)* கார்த்திகை மீ உ ய ஞ உ *(29 ந் தேதி)* புதன்கிழமை முகிந்தது. முற்றிற்றும்.

## 394. 8026 - b- சரஸ்வதி தோத்திரம்

பொருள்: துதி இதழ்கள்: 3
அளவு: 38 x 3 செய்யுள் எண்ணிக்கை:- தொடர் பாடல்
நிலை: நன்று, முழுமை.

குறிப்பு:

சரஸ்வதியைக் குறித்த துதிப்பாடல்கள் அடங்கியுள்ளன.

தொடக்கம்:

வெள்ளைக் கலையுடுத்தி வெள்ளைப் பணிபூண்டு
வெள்ளைக் கமலத்தில் வீத்திருப்பாள் - வெள்ளைக் கமலம்
அரியா சனத்தில் அரசரோ டென்னை
சரியாச னம்வைத்(த)தாய்.

முடிவு:

பக்தி யுடனே னின்னடியேன்
பத்தா வென்றும் பணிவோர்க்கு
சித்தி யுடனே வித்தையெல்லாம்
தெளிவா யெனக்குத் தருவாயே.

சரஸ்பதி தோத்திரம் முற்றிற்று. குருவே துணை.

## 395. 8878 - d - சாத்திய நாமப் பேர்வழி

பொருள்: சோதிடம் இதழ்கள்:11
அளவு: 22.8 x 3.7 செய்யுள் எண்ணிக்கை:- உரைநடை
நிலை: நன்று, குறை.

குறிப்பு:

இன்னது நடக்குமா எனக் கேட்டவன் பெயர் அன்றைய கிழமைப்பெயர் கூட்டிக் கணக்கிடல் மூலம் பலன் அறியும் முறைகள் விளக்கப்பட்டுள்ளன. இதனைத் தொடர்ந்து தங்கபற்பம் செய்யும் முறை ,சூலைக் கட்டுக்கு மருந்து ஆகியன இரு இதழ்களில் கூறப்பட்டுள்ளன.

தொடக்கம்:

சாத்திய நாமப் பேர்வழிக்கு யெழுத்துமேல் கூட்டிப் பார்க்கப்பட்ட சாத்திரம்.

அ-க, ஆ-க, இ-க, ஈ-க, உ-க, ஊ-க, எ-ய, ஓ-ய, ஐ-உய, ஓ-யஉ, ஔ-யஉ கூ-ய்க, க-உய.

முடிவு:

ஆவது பின்னாலே சுருபீயாவானோ ஆக மாட்டானோ வென்று கேட்டால் கேட்டவன் பேரும் அந்தனாள் பேரும் கணக்குக் கூட்டி கழித்து க- மிஞ்சினால் சுருபியாவான். உ-மிஞ்சினால் மதுவு குடிப்பான். ங மிஞ்சினால் வெளிப...ட பசிக்காவா யென்றறியவும் ஆவது.

புதன் கிழமைக்கு கலியாணம் செயிது குடுக்கப் போறான். அது ஆகுமோ ஆகாதோ வென்று கேட்டால், கேட்டவன் பேரும் அந்தக் கிழமை பேரும் கணக்குக் கூட்டிச- ல் கழித்து க-மிஞ்சினால் நல்லதல்ல. (2) மிஞ்சினால் நல்லது. ங-மிஞ்சினால் பிரிஞ்சு போம். ச-மிஞ்சினால் மரணமாகுமென்றவாறு.

குருபாதமே துணை.

## 396. 8/34 - சவுந்திரிய லகிரி

பொருள்: துதி
இதழ்கள்: 124
அளவு: 28.6 x 2.8
செய்யுள் எண்ணிக்கை:- 204. உரை விரவியது
நிலை: சிதைவு, முழுமை.
குறிப்பு:

பாக்களும், விளக்கமாக உள்ளது. இறுதி 9 இதழ்கள் இடது மேல்புறமாகச் சிதைந்துள்ளன. ஆசிரியர் வீரை கவிராச பண்டிதர். அச்சானது. இதனை அடுத்து 6 இதழ்களில் சண்முக சிகாமணி எழுத்தாறுமே என்று முடியும் முருகஸ்தோத்திரம் போன்றது காணப்படுகின்றது.

தொடக்கம்:

மொழிந்தமறை நூலியற்று முகபடா மணிந்துமுது ஞானதானம்
பொழிந்துதன் தினமணியென் றிருசுரும் புனைகளித்தைப்
போற்றல் செய்வோம்
வழிந்து பெரும்புனல் பரந்து வடவனாற் யிற்றுலகேழு மேழும்.
ஒக்க
வழிந்திடினு மழியாத அபிராமி பாடல் வளமளிக்க வென்றே

என்றது இக்கவி முதலாறு கவியும் பாயிரங் கூறப்பட்டன.

முடிவு:

பிறைபுனைந் தருளுஞ் சிவன்றனது வகைப் பெருக்கென் வடமொழி முனிவன் கை சவுந்தரிய லகிரியைத் தமிழாலருள் கவிராச பண்டிதன்றன் னிறைமனங் கருதித் தாழைமான் கரினிலை பெற வாள் கவியெல்ல னிறையின் வெளிறுந் தவறிலா துரை தெரிந்தெந்தின் னிருள் விளக்கெனவே. உ ௱ ௯. சவுந்தர லகிரி முத்தும்.

## 397. 3966 - சவுந்தரிய லகிரி

பொருள்: துதி
இதழ்கள்: 27
அளவு: 23 x 3.5
செய்யுள் எண்ணிக்கை:- 104
நிலை: நன்று, முழுமை.

குறிப்பு:

இது 8878 - b, 8511 -a - சவுந்தரிய லகிரி என்பவற்றின் பிரதியே.

## 398. 6357 - சவுந்தரிய லகிரி

பொருள்: துதி
இதழ்கள்: 63
அளவு: 37 x 3.2
செய்யுள் எண்ணிக்கை:- 103. உரை விரவியது
நிலை: சிறு சிதைவு, முழுமை.

குறிப்பு:

பாடலும், உரையுமாக உள்ளது. முதல் இதழ் இல்லை (காப்புப் பாடல் இல்லை). அனைத்து இதழ்களின் இடது மேற்புறமும் சிதைந்துள்ளன.

தொடக்கம்:

..கவி முதலாறு கவியும் பாயிரங் கூறப்பட்டன. தொகுத்தல் விரித்தல் தொகைவிரி பொழிபெயர்ப்பெனத்தகுநூல் யாப்ப ரிரண்டெடன்ப- என்பது கொண்டு தேவியுடைய சரித்திரத்தையும் அவையவத்தையும் எடுத்து வடமொழியினால் முற்காலத்துச் சொல்லப்பட்ட பனுவலை மொழிபெயர்த்துத் தமிழ் மொழியி லிறக்கிச் சொல்லப்படும் பனுவலிதுவாக லானும் தமிழ்வழங்கு மெல்லை யளவு மிது நடத்தலானும், கற்போர் நாவிற்கினிய மொழிபடச்செய்த லானும்இகபரமிரண்டினும்(நல்) வழிப்படுத்து மென்பத னானும்.

முடிவு:

இதனுள் நின் கவியாலுன்னைப் பாடுவதென் முன்னென்று துடங்கியவதனை வேறு வேறாக மூன்றுவகைப் பொருளெடுத்துக் கூறியவதனால் வேற்றுப்பொருள் வைப்பென்னு மலங்காரங் காண்க. இவ்விரண்டு கவியும் பனுவலை யேற்பிக்கும் வண்ணங் கூறினார். முற்றும். சிவமயம். பரிபூரணம். (இதனை அடுத்து ஒரு பா உள்ளது)

............................

அம்மனே யுமையவளே பார்வதியே கௌரி
யாரணங்கே பூரணியே யாசை மீறும்
அம்மனே திரோதாயி நீலி சூலி
களங்கி மாயிந்திர சாலந் தாயே.

தேவி சகாயம். சற்குரு கிடாட்ச முன்னிற்க வேணும்.

## *399.85I / சவுந்தரிய லகிரி*

பொருள்: *துதி* | இதழ்கள்: *32*
அளவு: *11.2 x 3.5* | செய்யுள் எண்ணிக்கை: *- 104*
நிலை: *சிதைவு, முழுமை.*

குறிப்பு:

*3966, 8878- - சவுந்தரிய லகிரி என்பனவற்றின் பிரதியே. ஆயின் அவற்றிலில்லாத கணபதி காப்புச் செய்யுள் ஒன்றுள்ளது.*

கணபதி யென்றிடக் கலங்கும் வல்வினை
கணபதி யென்றிடக் காலனுங் கைதொழுங்
கணபதி யென்றிடக் கரும மாதலாற்
கணபதி யல்லதோக் கரும மில்லையே.
தேவி சகாயம்.

முடிவு:

*சவுந்தர்ய லகிரி எழுதி நிறைந்தது. முற்றும். தேவி சகாயம். சற்குரு கிடாட்ச முன்னிற்க வேணும்.*

*௯௱௭௰௨௵ (கி.பி.1797) ஆவணி ௴ ௩௰௨ ஆதிவாரமு உத்திராட நட்சத்தி ரமும் கொண்டு எழுதின சுவடி நன்றாக ராம செயம்.*

## 400. 8878 - - சவுந்தரிய லகிரி

பொருள்: துதி இதழ்கள்: 56
அளவு: 22.8 x 3.7 செ ய்யுள் எண்ணிக்கை: - 104
நிலை: நன்று, முழுமை.

குறிப்பு:

மந்திர எழுத்துகள், படங்களுடனும் விளக்கப்பட்டுள்ளன. அச்சானது. ஆசிரியர் வீரைக் கவிராச பண்டிதர்.

தொடக்கம்:

திருவாக்கும் உண்டாம் செய்கருமங் கைகூடும் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் - உருவாக்கும்
ஆதலால் வரனோரு மானை முகத்தானை
காதலால் கூப்புவர் தங்கை.

ஆறு முகவனை நாறு மலர் கொடு
கூறு மடியவர் பேறு பெறுவரே.

வேலு மயிலுந் துணை. சவுந்தரலகிரி.

திருச்சித்தம்பலம்.

முடிவு:

வேத னுண்பொரு ளாதிசுந்தரி வீறடங்கலு மோதவே
ஈதயர்ந்துவி டாய்சொல்லுங்கவி ராசபண்டித வீரையான்
ஆதரஞ்சகி தாள்பெறுந்திரு நாமமொன்பது நூறுமே
ஓதினன்பல போகமுஞ்சிவ லோகமும்பெறு வார்களே.

- ளஉ

இதற்குப் பொருளுடனே விளங்கும். குரு பாதமே துணை. விசைய புரத்திலிருக்கும் திருச்சித்தம்பலம் தெயிவராய சுவாமியள் குமாரன் துரைசாமி பிள்ளை சாஷ்திரம். சவுந்தர லகிரி யென்றறியவும்.

## 401. 3791 -C- ஸ்ரீராமதேவர் சூத்திரம்

பொருள்: மருத்துவம் இதழ்கள்: 29
அளவு: 30.3 x3.2 செய்யுள் எண்ணிக்கை: –
நிலை: நன்று, குறை.

தொடக்கம்:

மூலமுத லாதார பொருளை யுன்னி
முச்சுடரும் பரம்பொருளை முனிந்து போற்றி
காருலவு நாற்கோணத்த மலந்தான் வெள்ளை
கலைச்சிதன்னை அரிச்சித்து கருணை கூர்ந்து
பாருல கெல்லா றரைந்து வாணி
பரமபத்தி முத்திசித்தி வுடன்மனத்தி லுன்னி
சீருலவுஞ் செந்தில்நகர் வள்ளி பங்கன்
சிற்பாதம்.நாவில்வைத்து செப்பி றேனே.

- க.

முடிவு:

எழுநாங்கு வுள்மாந்தை சுரமாந்தை யோடு
யெலிகடி தொண்ணூத்தாறு யிரைச்ச லோடு
கழிச்சல்புழு வெண்கடுப்பு பிளவைநூற்
றிருபதுடன் விப்புரிதி பத்து
அண்ணா உண்ணாக்குபுண் கெந்த...
அஞ்சுகண்ட மாலையோடு கன்னாக்குப் பருப்படுவன
முப்பத்தி ரெண்டு கரப்பன் கிரந்திறந்தி வகை
நாலெட்டு .... .....

## *402. 62/ / -d- சன்னி நிதானம்*

**பொருள்:** *மருத்துவம்*
**இதழ்கள்:** *5*
**அளவு:** *18.3 x 3.3*
**செய்யுள் எண்ணிக்கை:** *- 11*
**நிலை:** *நன்று, குறை.*

குறிப்பு:

*சன்னிக்குரிய அறிகுறிகள், அடையாள விபரங்கள் தெளிவுறுத் தப்பட்டுள்ளன. அச்சான விபரம் போன்றவை தெரியவில்லை.*

தொடக்கம்:

சீத்தமுள்ள தாந்திரிகன் சிம்ம சித்த
விற்பிரமம் பிரலாபங் காணி யாசம்
சாத்தியதோர் சந்திகனும் சாத்திய மாம்
சரசமுள்ள அவினி யாச மருத்தாக

மேத்த முள்ள கடைகுச் சனந்தகன்
சீதாங்களுஞ் சொல்லு மியல்புக்கு
நேத்திரமா மாத்தோடு விசாத்தி லெழுவகையும்
சாத்தியமாஞ் சகலகுண வயித்தியர்முன் சாத்திகாணே.

முடிவு:

அந்தகன் குணத்தைக் கேளாய் ஆயிமயிலே சொல்வேன்
முந்தவே தாகம்தாபம் முகமுடன் தல்லயு மாட்டும்
மந்தமே கால்கை தானும் வருசுரம் வாந்திவிக்கல்
இந்தநல் லிருமலீளை யிதுசாத்தியம் நாளும் பத்தே.
- யக.

சீதாபர்ண உடல்குளிந்து வேர்வை யாகும்
சியல்மூர்ச்சை வயிறொழுகு வாந்தி விக்கல்
........................

## 403. 4/10 - d- சேத்திரக் கோவை

பொருள்: சமயம்
அளவு: 15.3 x 3.7
நிலை: நன்று
இதழ்கள்: 18
செய்யுள் எண்ணிக்கை: –

குறிப்பு:
7 ஆம் திருமுறையிலுள்ள சுந்தரர் தேவாரம்.

தொடக்கம்:
கோயில் திருவேட்கள் நெல்வாயில் கழிப்பாலை
குலவு பெருமண மயேந்திரப் பள்ளி முல்லை
வாயில் கலிக்கா முரசாய்க் காடுதிருப் பல்லவ னீச்சுரம்
வெண்காடு வளர்திருக் காட்டுப் பள்ளி

முடிவு:

அண்ட வாணனைச் சீங்கடியப் பண்ணுக்க
வன்றொண்டனார் வத்தா லுரைத்த

தண்டமிழ் மலர்பத்தும் வல்லார்கள்
சாதலும் பிறப்பும் மறுப்பாரே.
- ய.

முற்றிற்று. திருச்சித்தம்பலம்.

## 404. 4/10 - e - சிவபுராணம்

பொருள்: *சமயம்* இதழ்கள்: *128*
அளவு: *15.3 x 3.7* செய்யுள் எண்ணிக்கை: *1052*
நிலை: *நன்று, முழுமை.*

குறிப்பு:

*திருவாசகம். இறுதி இரு இதழ்களில் அட்டவணை அமைந்துள்ளது. அச்சானது.*

தொடக்கம்:

விக்கினேசுரர் சகாயம், நீடுழி காலம் வாழ்க.

நமச்சிவாய வாழ்க நாதன் றாழ்வாழ்க
இமைப்பொழுது மென்னெஞ்சி னீங்காதான் றாழ்வாழ்க
கோகழி யாண்ட குருமணிதன் றாழ்வாழ்க
வாகம மாகிநின் றண்ணிப்பான் றாழ்வாழ்க.

முடிவு:

பன்னுநான் மறைகளேழு படையாச்சி யெட்டே யீகுந்
துன்னருங் கழல்களேழு சொல்லிடி லச்சோ வென்பான்
பன்னுசெந் தமிழோர் போர்த்த பகர்ந்திடுங் கோவை யோடே
சொன்னதா யிரத்தன்பத் திரண்டெனச் சொல்லு மாதோ.
- எ.

திருச்சிற்றம்பலம். முகவரை விருத்த முற்றும்.

## 405. 1/277 - சாமுத்திரிகா லக்ஷணம்

பொருள்: *சாஸ்திரம்* இதழ்கள்: *11*
அளவு: *30.7 x 3.3* செய்யுள் எண்ணிக்கை: *—*
நிலை: *நன்று, குறை.*

குறிப்பு:

மிகச் சிறு எழுத்துகளால் இணைத்திணைத்து எழுதப்பட்டுள்ளது. வாசித்தறிவது மிக அருமையாக உள்ளது. எனவே விபரங்கள் அறிய இயலவில்லை.

## 406. 4/10 - b - சிவநாமப் ப.:றொடை

பொருள்: சமயம் இதழ்கள்: 24
அளவு: 15.3 x 3.7 செய்யுள் எண்ணிக்கை: –
நிலை: நன்று, முழுமை.

குறிப்பு:

அச்சானது.

தொடக்கம்:

காவேரிக்கு வடகரை பதி ௬௰ தென்கரையில் உயஎ.

ஈழநாட்டில் உ பாண்டியில் யள மலைநாட்டில் (திருவஞ்சைக் களம்) - க - கொங்கில் எ; நடுநாட்டில் உய௨. தொண்டை நாட்டில் ௩யஉ - துளுவ தேசத்தில் - க வடக்குப் பருப்பதம் - ரு ஆக உளஎய ௯ சிவமயம். குமரன் துணை.

நன்மை மிகுந்தசிவ நாமப் ப*ஃ*றொடையைச்
சொன்மொழியி னாலே துதிப்பதற்குப் - பன்மைத்
திருப்பதிக டோறுந் திகழ்களிற்றின் பூளை
விருப்பதிக மாகநெஞ்சே வேண்டு.

முடிவு:

சரணமென்றுன் றாழ்மலரைச் சாருமடி யேற்குன்
அருளையன்றி வேறுமா ருண்டோ - கரணங்
கடந்தபர மானந்தக் கண்ணுதலே யன்போ
அடைந்த சொற்பா மாலையுங் கொண்டாள்.

சேத்திர சிவநாமப் ப*ஃ*றொடை முற்றும்.

## 407. 5935 - b - சிவபுராணம்

பொருள்: சமயம் இதழ்கள்: 4
அளவு: 30 x 3.7 செய்யுள்எண்ணிக்கை: –
நிலை: நன்று, குறை.

குறிப்பு:

சிவபுராணத்தின் தெரிவுப்பாக்கள் இடம்பெற்றுள்ளன. இதனைத் தொடர்ந்து திருவாசகப் பாக்கள் உள்ளன.

தொல்லை யிரும்பிறவி சூழுந் தளைநீக்கி
அல்ல (லறு)த் தானந்த மாக்கியதே - யெல்லை
மருவா நெறியளிக்கும் லாதவூ ரெங்கோன்
திருவாசக மென்னுந் தேன்.

முடிவு:

அல்லற் பிறவி யறுப்பானே யோவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்
சொல்லிய ப்ாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தி னுள்ளோர் சிவனடிக்கீழ்
பல்லோரு மெத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம். சிவமயம். சிவபுராண முற்றும்.

## *408. 9/28 - a-சித்திரபுத்திரன் கதை*

பொருள்: *கதை* இதழ்கள்: *96*
அளவு: *40 x 3* செய்யுள் எண்ணிக்கை: *—*
நிலை: *சிறு சிதைவு, முழுமை.*

குறிப்பு:

*7962 - a, 8249 -a* சித்திரபுத்திரர் கதை என்பனவற்றின் பிரதியே. முதல் *3* ஓலைகள் மட்டும் சிதைந்துள்ளன. தொடக்கத்தில் காப்புச் செய்யுளான விநாயகர் துதியை அடுத்து, ''குமர... இந்தக் கதை எழுத நாள் ௲ ய ௱ ௪ (கி.பி. *1844*) ஆனி மாதம் யஎ (*17*-ந் தேதி) வியாழக்கிழமையும், துதிகையும் புனர்பூச நட்செத்திர... சுபதினத்தில் சித்திரபுத்திர நயினார் கதை எழுதத் துடங்கினது. மீனாட்சி துணை. சொக்கலிங்க.... சிறீராம அவுதார பாதார விந்தமே கெதி. மோச்சம் தரும் கிஷ்டணன் துணை'' என்று குறிப்புள்ளது.

## *409. 3/62 - b-சந்திர காவியம்*

பொருள்: *காவியம்* இதழ்கள்: *14*
அளவு: *40.6 x 3* செய்யுள் எண்ணிக்கை: *—*
நிலை: *சிறுசிதைவு, முழுமை.*

குறிப்பு:

அனைத்து இதழ்களின் மேற்புறமும் சிதைவுக்காளாகியுள்ளன. தொடக்கம் எழுத இயலவில்லை. இறுதியில்,."சந்திர காவிய முற்றும். இந்த சந்திர காவியம் ௲ ௲ யரு ௵ ரவுத்திரி ௵ சித்திரை மாதம் யங தேதி கார்த்திகை. நட்செத்திரத்தில் அன்று பகல் ௲ ௵ யிலகங் காலிங்க எழுதி முகிந்தது. குமரன் துணை. கோமதி சகாயம். நித்திய கலியாணி சகாயம். சங்கரோரெட்ச ௸. என உள்ளது.

இதனை அடுத்து 14 இதழ்களில் நஷ்ட ஜாதகாத்தியாயம் கிரந்த எழுத்தில் அமைந்துள்ளது.

## 4/0. 5448 - a - சித்திரபுத்திர நயினார் கதை

பொருள்: கதைப்பாடல் இதழ்கள்: 15
அளவு: 40.5 x 3 செய்யுள் எண்ணிக்கை: - தொடர் பாடல்
நிலை: நன்று, குறை.

குறிப்பு:

7962 -a- சித்திரபுத்திரர் கதை என்பதனுடன் பெரிதும் ஒப்புமை கொண்டது. ஏட்டின் முதல் 15 இதழ்களைக் காணவில்லை. முன் இரு இதழ்களில் தொடர்பில்லாத, எதிலிருந்தோ விடுபட்ட செய்திகள் எழுதப்பட்டுள்ளன.

தொடக்கம்:

பொன்னின்யெழுத் தாணியுடன் பொஸ்தகமு(ம்) பூணுலும்
காணிக்கை யாகவைத்துக் கைதொழுதார் செட்டியர்கள்
பொய்க்கு படிபோட்டு பொன்போலே நிறுத்திடுவோம்
வில்லாச் சரக்கை விலைச்சரக்காய் வித்திடுவோம்
செல்லாப் பணத்தைச் செலுத்திடுவோம் ஆண்டவரே
ஏட்டிலே யெழுதாதே பொஸ்தகத்தில் சேராதே
அட்டைக் குளத்தில் அமுக்காதே புண்ணியரே.

முடிவு:

மற்றுமொரு யேடெடுத்து வாசிக்கு மன்னேரம்
அமராபதி யேடு அகப்பட்டது அவர்கையில்
சித்திரபுத்திர நயினார் கதை முற்றுப்பெற்றது.
குருவே துணை.

இந்த யேடு யெழுதினது கா. பெருமாள்கோன் மாசானக்கோன் குமாரர் தேனீர்குளம் நவநீத கிருஷ்ண சுவாமி கோயில் தெரு தச்சநல்லூர்.

இந்த ஏட்டில் ஏதாவது எழுத்தில் பிசகு இருந்த போதிலும் வாசிக்கப்பட்ட புண்ணியவான்கள் என்பேரில் தயவு செய்து மேற்படி பிசகைத் திருத்தி வாசிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

இப்படிக்கு
பெருமாள்கோன்

## *411. 7962 - a- சித்திரபுத்திரர் கதை*

பொருள்: *கதை* இதழ்கள்: *67*
அளவு: *40.7 x 3.2* செய்யுள் எண்ணிக்கை: *-தொடர் பாடல்*
நிலை: *நன்று , முழுமை.*

குறிப்பு:

*8249 -a சித்திரபுத்திரன் கதை என்பதனுடன் பெரிதும் ஒப்புமை உடையுது. நடைப்போக்கில் மாறுதலும் உள்ளது.*

தொடக்கம்:

சீர்கொண்ட பூதலத்தில் சித்திரபுத்திரர் கதையைப்
பார்கொண்ட செந்தமிழால் பாட - ஏர்கொண்ட
வார்பூத்த கோலமுலை மாதுஸ்மயா ளீனிவெளி
கார்பூத்த குஞ்சரமே காப்பு

திருப்பொலிந்து வாழுமியல் சித்திரபுத்திரர் கதையை
விருப்பமுட னுரைக்க வினாயகனே முன்னடவாய்

முடிவு:

கன்னியிளந் தாதியர்கள் கட்டியங்கள் கூறிவர
நாட்டியங்க ளாட நல்லசின்னந் தான்முழங்க
சிவலோக வாசலிலே சென்றுகொண்டு வாருமென்றார்
அவ்வேடு போட்டு அவர்களுக்குப் புத்திசொல்லி
மற்றுமொரு யேடெடுத்து வாசிக்கு மன்னேரம்

அமரா பதியேடு யகப்பட்ட தவர்கையில்
சித்திர புத்திர நயினார் திருக்கதை முகிந்தது. முற்றும்.

## 412. 8249 - a - சித்திரபுத்திரன் கதை

பொருள்: கதைப்பாடல் இதழ்கள்: 73
அளவு: 34.5 x 2.7 செய்யுள் எண்ணிக்கை: — தொடர்பாடல்
நிலை: நன்று, முழுமை.

குறிப்பு:

8411 - a - சித்திரபுத்திர நயினார் கதையுடன் ஒப்புமை உடையது. 3-ஆம் ஓலையைக் காணவில்லை.

தொடக்கம்:

சீர்கொண்ட பூதலத்தில் சித்திரபுத்திரர் கதையைப்
பார் கொண்ட செந்தமிழால் பாடவே - யேர் கொண்ட
வாயிற்தே வாரணனுல் மயேசுரரை கூடிந்து
காமமசு வாரணனே காப்பு.

முடிவு:

ஆல்போல் தழைத்து அறுகதுபோல் வேரூன்றி
மூங்கில் போ லன்னசுத்த முசியாமல் வாழியதே.

சித்திர புத்திர நயினார் கதை எழுதி நிறை வேத்தித்து வீரலெக்ஷ்மி பாதாரவிந்தமேகெதி. ௲௮௱௬௰௨ ஆம் வைகாசி ௴ ௰௯ ௨ (19-ந்தேதி) சோமவாரமும்பூர்வ பக்ஷத்து நவமியும் உத்திர நட்செத்திரமும் கூடின கற்கடக லெக் கனத்தில் எழுதி முற்றுப்பெற்றது.

## 413. 8411 - a - சித்திரபுத்திர நயினார்கதை

பொருள்: கதைப்பாடல் இதழ்கள்: 62
அளவு: 30.2 x 3.5 செய்யுள் எண்ணிக்கை: - தொடர்பாடல்
நிலை: நன்று, முழுமை.

குறிப்பு:

ஆன்மாக்களின் பாவ புண்ணியங்களைக் கணக்கெழுதி வைக்கும் சித்திரபுத்திரரின் வரலாறு உரைக்கிறது. அச்சான விபரம் தெரியவில்லை.

௲௮௱௭௰௭ (கி.பி. 1877) பங்குனி ௴ ௧௯ ௳ (19-ந் தேதி) சுக்கிரவாரத்தன்று சித்திரை நட்செத்திரத்தி லெழுதி முகித்தேன் நயினார் செட்டியார் புளியங்குடி சுடலைமுத்து நாடான் மகன் ஆறுமுக நாடானுக்கு யிந்த சுவடி நீடுழிகாலம் வாழ்க வேணுங் குரு கிடாக்ஷம். சிவமயம்.

## *414. 8859 - c - சவுந்தரி(ய) லகிரி*

**பொருள்:** *துதி* | **இதழ்கள்:** *8*
**அளவு:** *22.3 x 3.1* | **செய்யுள் எண்ணிக்கை:-** *17*
**நிலை:** *நன்று, குறை.*

**குறிப்பு:**

*ஆதிசங்கரர் அருளிய சமஸ்கிருதச் சவுந்தரிய லகரிக்கு வீரைக் கவிராச பண்டிதர் செய்த தமிழாக்கமாகும் இந்நூல். அச்சானது.*

**தொடக்கம்:**

பிறைதழுவு மெயிற்றென்ற பிறங்குகதிர் வெண்கோட்டாற்
செறிகதிர்செய் தடங்குடுமி செம்பொன்மால் வரைவாய்ப்ப
மரைதழுவுஞ் சவுந்தரியை லகிரிஎன வகுத்தெழுது
மவரென் பீரால்
விரைகெழு மூவேழ்முகன் விரைமலர்த்தா
ளிணைத்தொழுவாம்.

**முடிவு:**

கொந்தவிழ் விரிதவள மலர்மங்கை முக்கமல
கோலரி ம... கவிதை யார
செந்தமுழின் வடகலையின் முதுமொழி காவியத்
தெளிபாடல் செய்யு மவரே.
ஓம் சவுந்தரா னந்தி சரஸ்பதி நமஸ்து.
பாலன்னம் நெவேதனம்.

-யஎ-

## *415. 8492 - a- சூடாமணி நிகண்டு*

**பொருள்:** *நிகண்டு* | **இதழ்கள்:** *13*
**அளவு:** *37.3 x 2.8* | **செய்யுள் எண்ணிக்கை:-** *72*
**நிலை:** *நன்று, குறை.*

**தொடக்கம்:**

பொன்னுநன் மணியுமுத்தும் புனைந்தமுக் குடைநிழற்ற
மின்னு பூம் பிண்டிநீழல் வீற்றிருந் தவனைவாழ்த்தி
மன்னிய நிகண்டுசூடா மணியென வொன்றுசொல்வன்
இனிந்நிலந் தன்னின் மிக்கோர் யாவரு மினிதுகேண்மின்
-க-

**முடிவு:**

பங்குனி கடையில்வந்து பற்றிய சநியினோடு
செங்கதிர் பிறந்தநாளுஞ் சிறந்தவுத் திரமென்றாகுந்
தங்குகா மரமேயங்கி சார்ந்தநாள் கௌத்துவத்தோர்
தங்கைமின் களிறுநவ்வி யைவிர லத்த மேழ்பேர்
- எயஉ

அளக்குநெய்ப் பயறுமீனே யறுவையே யாடைதூசு
துளக்கிலா நடுநாட்சென்று வட்டநாள் சித்திரைப்பேர்.

## *4/6. 865/ - b - சுப்பிரமணியர் பேரில் ஆசிரிய விருத்தம்*

**பொருள்:** *துதி* **இதழ்கள்:** *15*
**அளவு:** *35 x 2.5* **செய்யுள் எண்ணிக்கை:** *- தொடர் பாடல்*
**நிலை:** *சிதைவு, குறை.*

**குறிப்பு:**

*திருச்செந்தூர் முருகனைத் துதித்துப் பாடிய பாடல்களுள்ளன. அனைத்து இதழ்களின் வலதுபுற ஓரங்கள் சிதைவுக்காளாகி யுள்ளன.*

**தொடக்கம்:**

ஆதிவளர் செந்தில்நகர் தன்னிலே
நீதியா யன்புபெற வீற்றிருந்து
அந்தணர் புரந்தரர்கள் வேதவேதாதியள்
அன்புடன் போற்றி நிற்க

**முடிவு:**

சீலனே அனுகூலனே திகழ்குழுவை யூரனே திரவிய
குபேரனே தீரனே ரணசூ(ரனே) புகழ்பரவு

சித்திரபுத்திர துரையுதவு சேயனே அனபாயனே
சிந்தாமணிப் பூலிகாத்த .............

## 417. 6354 - ழ-சுந்தரானந்தர் சூத்திரம் நூறு

பொருள்: இரசவாதம் இதழ்கள்: 14
அளவு: 8.2 x 2.9 செய்யுள் எண்ணிக்கை:- 110
நிலை: நன்று, முழுமை.

குறிப்பு:

சுந்தரானந்தரின் குரு சட்டைநாதர் என்பதும், இந்நூலில் தான் ஆயிரத்திருநூறு பாடலின் கருத்தைச் சுருக்கி 210-ல் கூறியதாகக் குறிப்புக் காணப்படினும் 110 பாடல்களே இதில் உள்ளன. வாதம், அண்டவித்தை, கற்பம் போன்றன விவரிக்கப்பட்டுள்ளன.

தொடக்கம்:

ஆதியந்த மிகநிறைந்த சட்டை நாதர்க்
கன்பான சேயென்றே பிள்ளை யாகிச்
சோதியந்தத் துள்ளிருக்குஞ் சுடரைப் போற்றிச்
சுந்தர மென்றென் பேருமிட்டார் ரெங்க
நாதாந்தத் திருமூலப் பிண்ணாக் கீசர்
நாதாகத் தீசர்பதம் போற்றி யேதான்
மேதியினி லன்புடனே வாதம் பார்த்தேன்
வேதாந்தச் சிற்பரைதான் காப்ப தாமே.

முடிவு:

தானென்ற மூலமதை யறிய வேணுஞ்
சத்திசிவ மிரண்டையுமே காண வேணுந்
தானென்ற கும்பிடுகல் லறிய வேணுந்
தருவான வண்டவித்தை செய்ய வேணுந்
தானென்ற கற்ப(ம)தை யுண்ண வேணுஞ்
சாத்திரத்தைப் பாற்றாக்காற் செய்ய வேணுந்
தானென்ற தென்னூ லாயிரத் திருநூறு
சாத்திரந்தா னிருநூற்றிப் பற்றில் முத்தே.

-௱ய.

முற்றும்.

## 418. 11252 - சாமுத்திரிகா லக்ஷணம்

பொருள்: சாஸ்திரம் இதழ்கள்: 19

அளவு: 17.8 x 4.8 செய்யுள் எண்ணிக்கை: –

நிலை: நன்று, குறை.

குறிப்பு:

வடமொழியிலமைந்த சாமுத்திகா லக்ஷணம் தாளிப்பனை ஓலையில் தமிழில் எழுதப்பட்டுள்ளது. நெருக்கமாக ஒன்றுடன் ஒன்று இணைந்து எழுதப்பட்ட மிகச் சிறிய எழுத்துகளானதால் வாசிக்க மிக அரிதாக உள்ளது. தொடக்கம், முடிவு எழுத இயலவில்லை.

## 419. 11255 - சாமுத்திரிகா லக்ஷணம்

பொருள்: சாஸ்திரம் இதழ்கள்:19

அளவு: 23.5 x5.3 செய்யுள் எண்ணிக்கை: –

நிலை: நன்று

குறிப்பு:

படித்து விபரம் அறிந்துகொள்ளல் அருமையாக உள்ளது. மிகச் சிறு எழுத்துகள் இணைத்திணைத்து கிறுக்கல்போல் எழுதப் பட்டுள்ளது. ஓலை புதிது. என்ன செய்திகள் உள்ளன என்பது தெளிவுறவில்லை.

தொடக்கம், முடிவு எழுத இயலவில்லை.

## 420. 6243 - b- ஸ்திரீ லக்ஷணம்

பொருள்: சாஸ்திரம் இதழ்கள்: 23

அளவு: 11.5 x 4.3 செய்யுள் எண்ணிக்கை:- 80

நிலை: நன்று, குறை.

குறிப்பு:

மகளிர் அங்க இலக்கணமும் ரேகைக் குறிகளும் அதன் மூலம் அவர் குண இயல்புகள், அடையப்போகும் பலன்கள் ஆகியன இயம்பப் பட்டுள்ளன.

தொடக்கம்:

உள்ளடி வெதும்பில் செல்வம் குளிர்ந்திடில் வறுமை யுண்டாம்
நள்ளரு தோசமிருந்தால் நல்மன சாயிருப்பாள்

விள்ளுமீன் போலிருந்தால் வெகுகாமி யாகவாழ்வாள்
தெள்ளு சக்கரம் போலாகில் நிதிமிகச் சேருந்தானே.

முடிவு:

மன்னுமே லிறை ஒன்றேல் விபசரிப்பள்
வார்த்தை விபகாரி பலவரை யாமாகில்
பன்னு வலஞ்சுழி தேவபக்தி உண்டாம்
பாரிடஞ் சுழியாகில் கீர்த்தி பண்ணும்
நன்னுமது மடிப்பானால் வாக்கு செல்லும்
நடுவிரலின் அடிஒன்று சலிப்புறங்கும்
பன்னுமது பலவானால் நோ(ய்)பற்றும்
பகருநடு யிறைஒன்றே லாறன் பாரே.

## *421. 6243 - a-சாமுத்திரிகா லக்ஷணம்*

பொருள்: *சாஸ்திரம்* இதழ்கள்: *31*
அளவு: *11.5 x 4.3* செய்யுள் எண்ணிக்கை: *-112*
நிலை: *நன்று*

குறிப்பு:

*ஆண்களுக்குரிய அங்க லக்ஷணங்கள், மச்சக்குறிகள் மூலம் அடை யும் நன்மை, தீமைகள் விவரிக்கப்பட்டுள்ளன. வடமொழி சாஸ்திரத்தினின்று தமிழில் இது எழுதப்பட்டுள்ளதாகக் குறிப் புள்ளது.*

தொடக்கம்:

புருஷ லக்ஷணம்

இ(றை)விதனை வணங்கி யெங்க ளிறைவன்
திருவடிகள் சென்னியின்மேல் சேர்த்தி - தெரிவரிய
சாமுத்திரி யந்தான் தமிழால்வி ரித்துரைப்பான்
நாமுத் திரியாய் நவின்று.

தோளோடு நடுவிரல் தொட்டு யிரட்டிசெய்
நீளம் தடியோடு நெத்தி தீண்டில்
காளைதன் னுருவோடு கண்ணுஞ் செய்யவேற்
கோளறு சதாயுவாய் குலாவும் செல்வமே.

முடிவு:

நெத்தியிலே வலத்தில்மறுச் செல்வம் நேரும்
நிலையான நெத்தியிடம் வறுமை னீளும்
குற்றமிலா நடுநெத்தி மறுவே ஆயுள்
குணமான சிரசுமறு பத்தி யோடே
உற்றதொரு சீமானாய் ஓதப் பண்ணும்
உச்சிமுதல் பாதம்வரை உள்ளகுண மதனில்
கற்றதிலே சிறிதுசொன்னோ மினியளந்து பார்த்து
காசினியோர்க் குரைத்தபலங் கருதிக் கேளே.

- யஉ -

கந்தன் துணை.

## 422. 8733 - a - சரமோபாய நிர்ண்யம்

**பொருள்:** வைணவநூல் **இதழ்கள்:** 32
**அளவு:** 39.8 x 3.7 **செய்யுள் எண்ணிக்கை:-** உரைநடை
**நிலை:** நன்று; முழுமை.

குறிப்பு:

கிரந்த எழுத்துகளை மிகுதியும் பெற்ற மணிப்ரவாள நடையிலியன்றது.

தொடக்கம்:

[illegible]

முடிவு:

இராமனுசன் மன்னு மாமலர் தாள்
பொருந்தா னிலையுடைய புன்மையினோர்க் கென்றும்
நன்மை செய்யாப் பெருந் தேவரென் கையாலே
எம் பெருமானார் திருவடிகளில் [illegible]வஸமில்லா
தார்கு யாலரா [illegible]ாவிஸ [illegible]ஸா [illegible] னுவத்திருக்கும்
நயினா ராச்சாம் பிள்ளை திருவடிகளே சரணம்.

[illegible]

## *423. 8088 - g -சுந்தரானந்தர் சூத்திரம் இருபத்தைந்து*

பொருள்: *மருத்துவம்* இதழ்கள்: *3*
அளவு: *30 x 3.4* செய்யுள் எண்ணிக்கை:- சுமார் 50 அடிகள்
*நிலை: நன்று, முழுமை.*

தொடக்கம்:

பூமிநாத மேகமே புனல்சொரிந் துருவதா
மாமடா ரவிமுகத்தி லாயிரந் தவித்தடா
சோமநாத மீறியே சொரூபம்வைத்த சத்தியாம்
ஏமவித்தை பூரண மிருக்கவட்ட சித்தியே.

முடிவு:

ஒதினும்போல் நந்திவந்து வுபதேசமே செப்புவார்
ஆதியான பூரண மறிந்துபாரு சோதியே
சோதியான லிங்கத்தார் சூதநாத ந... சதுரமும்
ஆதியாம் பலத்தினா லறைத்துநாலு சாமமும்
பேதியண்ட மஞ்சளிற் பிலக்குமாங் குமரியில்
வாதியான வன்னியில் மருவவெட்டு முற்றுமே
*- உரு -

*சுத்தரானந்தர் சூத்திரம் இருபத்தைந்து முற்றுப் பெற்றது.*

## *424. 11309 - சித்தராரூட நொண்டிச் சிந்து*

பொருள்: *விஷவைத்தியம்* இதழ்கள்: *26*
அளவு: *28.5 x 3.1* செய்யுள் எண்ணிக்கை:- சுமார் 320 வரிகள்
நிலை: *சிறு சிதைவு, குறை.*
குறிப்பு:

*பக்கத்துக்கு 6 வரிகள். பாம்பு கடி விஷங்களுக்கு மருந்து முறைகள் நாட்டுப்புறப்பாடல் வடிவான சிந்துவில் பாடப் பட்டுள்ளன. மூல ஆசிரியர் பற்றிய விபரம் தெரியவில்லை.*

திரு. பழ. முத்தப்பன் அவர்களால் .சிந்து இலக்கியம் (செப்.- 1983. உலகத் தமிழாராய்ச்சி நிறுவன வெளியீடு) என்ற நூலில் பதிப்பிக்கப் பெற்றுள்ளது.

தொடக்கம்:

அத்திமா முகவன்செய்ய வாயினைக் கமலம் போற்றிச்
சித்தரா ரூடந்தன்னிற் செப்பிய பொருளா ராய்ந்து
சுத்தமா யெவர்க்குந் தோன்றச் சுருக்கமாய் நொண்டிச் சிந்தாய்
வித்தக ரருளினாலே தமிழினால் விளம்ப லுற்றேன்.

முடிவு:

பேயருசுஞ் சமனாகக் கொண்டுவந்து
பேரியருந் தரணியில் துவைத்தெடுத்து
காய்பிஞ்சுறு காராட்டின் நீர்விட்டுக்
கலந்திரவு முழுதுங் கலத்தூறிற்
பகலினில் நிழலுலத்தித் தூட்பண்ணிப்
பலபல யிடத்துக்கும் வெருகடித்தூள்
அகமுள்ள வென்னீரில் கலக்கியே
அருந்திட விடமெல்லாஞ் சுருண்டிடுமே.

## 425. 10430 - சித்தராரூட நொண்டின் சிந்து

பொருள்: மருத்துவம் இதழ்கள்: 28
அளவு: 26 x 2.8 செய்யுள் எண்ணிக்கை: - சுமார் 450 வரிகள்
நிலை: சிறு சிதைவு, முழுமை.
குறிப்பு:

பக்கத்துக்கு 8 வரிகள். இது 11309 - சித்தராரூட நொண்டிச்சிந்து என்பதனுடன் ஒத்தது. இதனை எழுதிய ஆசிரியர் பெயர் கஞ்சற்குளம் ராம சுவாமியாபிள்ளை மகன் செகவீரபாண்டியபுரம் வாத்திமைச் சுடலைமுத்து என ஏட்டிறுதியில் குறிப்பிடப்பட்டுள்ளது. ௲ ௮ ௱ ௫ ௰ ௭ (கி.பி. 1857) பிங்கள ௵ வைகாசி ௴ எஉ (7-ந் தேதி) எழுதப் பட்டதாகவும் குறிப்புள்ளது.

## 426. 8895 - e - சில மருந்துகள்

பொருள்: மருத்துவம் இதழ்கள்: 5
அளவு: 18.5 x 3.1 செய்யுள் எண்ணிக்கை: - உரைநடை
நிலை: சிறு சிதைவு, குறை.

குறிப்பு:

கர்ப்பமுண்டாக எண்ணை, கர்ப்ப சிந்தாமணி எண்ணை, வெட்டைச் சூட்டுக்கு மருந்து, நஞ்சு முறிவு, வாலைரச மெழுகு, லிங்க செந்தூரம், ரசப்புட்டு - செய்முறைகள், பயன், பயன்படுத்தும் விதங்கள் விளக்கப்பட்டுள்ளன.

தொடக்கம்:

நின்ப எண்ணை சுடுதி யெண்ணை சேர்க்க. மூணு நாள் முழுகி நிமிரும்போது சேரவும். எண்ணையில்அவரையிலைச்சாறு சேர்த்து பிழிந்து குடுத்து சம் நாள்அந்தப்படி குடுக்கவும், ரும் நாள் அந்தப் படியே குடுக்கவும். யிந்த மூன்று னாளும் போகிக்கவும். குருனாதன் கிருபையினாலே கெர்ப்பம் தரிக்கும்.... பத்தியமில்லை.

முடிவு:

எட்டிக் கம்பு புரசு ஆசன வாசலிலட்டித்துத் தயிலம் உருகி வரும் போது தேங்காயுடைத்து தீபங் காட்டி உடைத்துக்காயை எறிந்து கம்பை பிடிங்கி, திரும்பிப் பாராமல்கொண்டு வந்து சாதியன் சாரை வாசலில் புதைக்கவும்.புடிக்கும். அப்புறம் எடுக்கலாம். அதற்கு முன்னெடுக்கக் கூடாது. ஒரு புரசான பின் னெடுக்கவும்.

## *427. 8825* - C- *விவேக சிந்தாமணி*

பொருள்: *நீதி* | இதழ்கள்: *38*

அளவு: *29.7 x 3.2* | செய்யுள் எண்ணிக்கை:- *216*

நிலை: *நன்று, குறை.*

குறிப்பு:

*பக்கத்துக்கு 6 முதல் 8 வரிகள். அச்சாகியுள்ளது. 13-ஆம் இதழைக் காணவில்லை.*

தொடக்கம்:

தண்டா மரையி னுடன்பிறந்துந் தண்டே நும்கார மண்டுகம்
வண்டே கானத் திடைபிறந்தும் வந்தேகமல மதுவுண்ணும்
பண்டே பழகி யிருந்தாலும் அறியார் புல்லோர் நல்லோரைக்
கண்டே களித்தங் குறவாடித் தம்மில் கலப்போர் கற்றோரே.

முடிவு:

மதியில்லா மறையோன் மன்னன் மடந்தையை வேட்கையாலே
ருதுவது காலந்தன்னில் தோசம்வா ருரைத்து யாத்தில்
புதுமையாய் விடுத்தபோது பொட்டியில் புலிவா யாலே
அதிருடன் மடிந்துவீழ்ந்த அந்தணன் கதைபோ லொக்கும்.

- உரிய -

## 428. 9068 - b-வில்லி பர்ரதம்

பொருள்: இதிகாசம் இதழ்கள்: 12
அளவு: 37.5 x 3.4 செய்யுள் எண்ணிக்கை:- 97
நிலை: நன்று

குறிப்பு:

பக்கத்துக்கு 6 வரிகள். பதின்மூன்றாம் நாள் போர் இடம்பெற்றுள்ளது. அச்சானது.

தொடக்கம்:

சங்கையிலா வகையேம் படரா லுயிர்தளர பொழுதுற் றருகே
மங்கையர் சூழ விருந்தமுதுள்ள மயக்கி னும்யான் மறவேன்
கங்கையும் நான்மறையுந் துளவுங் கமழ் கழலிணையுந் திருமால்
அங்கையின் மீதொளிர் சங்கமு நேமியு மஞ்சன மேனியுமே.

முடிவு:

காதலி பிடித்து நெறி கண்டே மதுகற்பின்
போதமிது வென்று புருடர்க் கெதிர்குலாவு
மாதர் முகமென்ன வயலுந் தடமு மற்றும்
ஆதவன் முகத்தெதி ரலர்ந்த தரவிந்தம்

- க ள

## 429. 9153 - c-வேதபத்திரிகை

பொருள்: வரலாறு இதழ்கள்: 20
அளவு: 17.6 x 2.5 செய்யுள் எண்ணிக்கை:- உரைநடை
நிலை: சிதைவு, குறை.

குறிப்பு:

பக்கத்துக்கு 6 வரிகள். சிதைவுகளுடன், இதழ் முறிவுகளும் ஏற்பட்டுள்ளன. 4-ஆவது பத்திரிகை வரை உள்ளது. இது 5656, 3984, 11112 - வீரபோக வசந்தராயர் பத்திரிகை என்பனவற்றைப் போன்றதே.

## 430. 10441 - a - வகுளாதேவி மஹாத்மியம்

பொருள்: மகான்மியம் இதழ்கள்: 41
அளவு: 45.5 x 3.7 செய்யுள் எண்ணிக்கை: - உரைநடை
நிலை: சிறு சிதைவு, குறை.

குறிப்பு:

பக்கத்துக்கு 7 வரிகள். ஆங்காங்கு முறிவுகள் நிகழ்ந்துள்ளன. முதல் 4 இதழ்களும், இறுதியும் இல்லை. கிரந்த லிபிக் கலப்புள்ளது. பேச்சு வழக்கோடியைந்த உரைநடை.

தொடக்கம்:

...ந்து கொள்ளுகிறேன், எங்கே வாயுவானவன் தூக்கறது பார்ப்போம் என்று ஆதிசேஷனு னொம்பவும் ஆங்காரத்துடனேயும் கோபத்துடனே... நூறு யோசினை தூரம் வளர்த்துக் கொண்டு தன்னுடைய நூறு படத்திலிருந்து விஷத்தைக் கக்கிக் கொண்டு....

முடிவு:

அவருடைய ஸ்தலம் யெங்கேயிருக்குது யெவ்வளவு வயசுள்ள வராயிருக்கிறார் யிது ய ஊ௹மும் யெனக்காக சொல்ல வேணுமென்று சொன்னவுடனே சொல்லுகிறாள் ராஜ கேள். அவருடைய தாயார் தேவகி. தோப்பனார் வஸுதேவர்

## 431. 7940 - ராவணன் பூசை விதி

பொருள்: ஆகமம் இதழ்கள்: 55
அளவு: 24.5 x 3.5 செய்யுள் எண்ணிக்கை: - 257
நிலை: நன்று, முழுமை.

குறிப்பு:

பக்கத்துக்கு 8 முதல் 10 வரிகள். இராவணன் பூசை செய்த முறைகளும், அதனால் அவன் முக்தி பெற்ற விதமும் விளக்கப்

பட்டுள்ளன. ஆசிரியர், அச்சான விபரம் தெரியவில்லை. நாட்டுப் புறப்பாடல் அமைதி.

**தொடக்கம்:**

வேதரி விளம்பத் தம்பால் மனுக்குறை தீர்க்க வேணும்
மாதரி பிரமே நீங்கா மனுப்புழை புகல்வீ ரென்று
சீதையா லுலக மூன்றும் செலுத்தின வீரம்போயி பாரிவண்
டோதரியு நீயும் நானும் அல்லது மருத்தொன் றில்லை.

**முடிவு:**

அந்தாக்கியே விபரனமுட னரம்பையர் நடனமிட
வெஞ்சாமரை போட வீசரிகள் தான்சுழத்த
பஞ்சவர்ணம் பாவாடை பலதிக்கும் போட்டுவர
தேவர்கள் சூழ்ந்துவர தென்னிலங்கை மன்னனுயிர்
வைகுண்ட வாசலிலே வடகீழ்ப் புறந்தனிலே
ராவணன் வைகுண்டஞ் சேர்ந்தானே.
௲௮௱௯௰௫ *(கி.பி. 1895)* வைகாசி ௫ *(5-ந் தேதி)*

## *432. 3972 - b - ருது லக்ஷணாதி அர்த்தம்*

**பொருள்:** *மருத்துவம்* **இதழ்கள்:** *19*
**அளவு:** *30.3 x 3.6* **செய்யுள்எண்ணிக்கை:** *- விரவியது*
**நிலை:** *சிறு சிதைவு, குறை.*

**குறிப்பு:**

*பக்கத்துக்கு 9 வரிகள். செய்யுள் கிரந்த லிபியிலும் பொருள் தமிழிலுமாக அமைந்துள்ளது. பூச்சி அரிப்புகள் மிகுதி. இறுதிப் பகுதிகளில் தமிழிலும் சில பாக்கள் உண்டு. பல்வேறு நோய் களுக்கான மருந்துகளும், செய்முறை விபரங்களும் விவரிக்கப் பட்டுள்ளன. பூச்சி அரிப்புகள் மிகுதி.*

## *433. 3972 - a- ருது லக்ஷணாதி*

**பொருள்:** *மருத்துவம்* **இதழ்கள்:** *13*
**அளவு:** *30.3 x 3.6* **செய்யுள் எண்ணிக்கை:** *- சுமார் 250 வரிகள்*
**நிலை:** *சிதைவு, குறை.*

குறிப்பு:

பக்கத்துக்கு 8 முதல் 10 வரிகள். பூச்சி அரிப்பால் சிதைவுகள் நேர்ந்துள்ளன. கிரந்த லிபியில் தமிழ் மொழியில் எழுதப்பட்டுள்ளது. ஆங்காங்கு தமிழ்ச் சொற் கலப்புகளும் உள்ளன. பிற விபரங்கள் அறிய இயலவில்லை.

## 434. 6236 -b - விருத்தாசல புராணம்

பொருள்: புராணம்
அளவு: 25.3 x 2.8
நிலை: சிறு சிதைவு, குறை.
இதழ்கள்: 60
செய்யுள் எண்ணிக்கை:- 727

குறிப்பு:

பக்கத்துக்கு 10 வரிகள். இறுதி 5 இதழ்கள் 3 செ.மீ. நீளத்துக்கு இடதுபுறமாக முறிந்துள்ளன. 17-33, 35, 36, 68, 76 - ஆகிய இதழ்களைக் காணவில்லை. அச்சானது.

தொடக்கம்:

திருமாலு நான்முகனுந் தேவர் கோவுந்
தேவர்களும் யாவர்களுஞ் சிந்தை யாலுன்
மருவாய மறையாலு மளவை யாலு
மளப்பரிதா யகண்டிதமாய் நின்ற மூர்த்தி
உருவாய கிரிவடிவா யனந்த கோடி
யொளியுடைய கொடுமுடிக ளாகி நின்ற
பெருவாழ்வைத் திருமுதுகுன் றுடையான் றன்னைப்
பெருங்கருணை யாளனையாம் வணங்க லுற்றாம்.
-க-

முடிவு:

நற்றவத்தோன் றிருவருளா லிறைமகனும் வளம்பெருக நாளும் நாளும்
கற்றிரளிற் பொழிதிண்டோட் காளையா யிளமையெழில் கழியுநாளிற்
பற்றலாதன் றாதையை வென்றிருந் தளையிட்டுடன் கொடும் போ...டி கெட்டேகிச்
செற்றலரைத் தளைப்படுத்தித் தாதைசிறை மீட்டா னன்போர் சிங்க மன்னான்.

## 435. 10448 -b- வாழித் திருநாமம்

பொருள்: சமயம்(வைணவம்) இதழ்கள்: 8
அளவு: 34.2 x 3.5 செய்யுள் எண்ணிக்கை:-
நிலை: நன்று, குறை. சுமார் 120 வரிகள்
குறிப்பு:

பக்கத்துக்கு 6 முதல் 8 வரிகள். ஆழ்வார்கள் இயற்றிய பாசுரங்களைக் கூறி அவர்களை வாழ்த்திப் பாடிய பாடல்கள் உள்ளன. அச்சானது.

தொடக்கம்:

ஆனதிரு விருத்தனூரு மருளினான் வாழியே
ஆசிரிய மெழுபாட்டு மளித்தபிரான் வாழியே
இனமா வந்தாதி எண்பத்தே ழீந்தான் வாழியே
வெகுதிரு வாய்மொழி பாயிரத் தொருனூத்தி ரெண்டுரைத்தான் வாழியே.

முடிவு:

நாராயணன் சமயம் நாட்டினான் வாழியே
நாலூரான் தனக்குமுற்றி நல்கினான் வாழியே
ஏராருந் தய்யிலத்தத்தி லிங்கிவந்தான் வாழியே
எழில் தாழ்வா னிணையடிகள் வாழியே.

## 436. 9237 - a - வால பரமேசுவரி அகவல்

பொருள்: துதி இதழ்கள்: 6
அளவு: 16.5 x 3.2 செய்யுள் எண்ணிக்கை:-
நிலை: சிறு சிதைவு, முழுமை. சுமார் 75 வரிகள்
குறிப்பு:

பக்கத்துக்கு 6 வரிகள். மந்திரங்கள் அடங்கியது. இதனை அடுத்த 5 இதழ்களில் இவ்வகவலே திரும்ப எழுதப்பட்டுள்ளது. அச்சான தாகத் தெரியவில்லை.

தொடக்கம்:

ஓம் அரகர சிவசிவ ஆதி பராபரரை
பராபரப் பொருளே பரம்பரம் உனக்கே
அரிஓம் மென்னும் அட்க்ஷரத் தாதி
சிறிஓம் மென்னுஞ் சிற்பரத் தாளே.

முடிவு:

சவ்வுங் கிலியும் சப்பிறோம் பிறோங்கிஷா
நிறோங்கிஷ நிஷ்கள அரகர சிவசிவா
அரிஅரி ஓம்உம் அய்யும் சுவாக
வாலபரமேசொரி பேரில் அகவல் முற்றும்.
ஆதிமூலமும் பரமகுருவே சரணம்.
செந்திலாதி முன்னிற்க.

## *437. 8680 -* b *- ராமானுஜ நூற்றந்தாதி*

பொருள்: *சமயம்(வைணவம்)* இதழ்கள்: *108*
அளவு: *41 x 3.4* செய்யுள் எண்ணிக்கை: *- 108*
நிலை: நன்று, முழுமை.

குறிப்பு:

*பக்கத்துக்கு 7 வரிகள். அச்சான நம்மாழ்வாரின் நூற்றந்* தாதியே. இறுதியில் திருமலை [illegible] லிகிதம் என்ற குறிப்புள்ளது.

தொடக்கம்:

பூமன்னு மாது பொருந்திய மார்பன் புகழ்மலிந்த
பாமன்னு மாறனடி பணிந்துயந்தவன் பல்கலையோர்
தாமன் னவந்தவி ராமானுசன் காணர விந்த
நாமன்னி வாழ்நெஞ்சே சொல்லு வோமவ நாமங்களே.

முடிவு:

அங்கயல்பாய் வயல்தென் னரங்கநனி யாக மென்னும்
பங்கயமா மலர்ப்பாவயைப் போற்றுதம் பற்றி யெல்லாம்
தங்கியதென் னித்தழைத்து னெஞ்சேனந் தலை மிசையே
பொங்கிய கீர்த்தியீ ராமானுச னடிப்பூ மன்னவே.

அ-

## 438. 3224 - அரிச்சந்திர நாடகம்

பொருள்: கதை இதழ்கள்: 45
அளவு: 30.5 x 2.5 செய்யுள் எண்ணிக்கை:- விரவியது
நிலை: நன்று, குறை.
குறிப்பு:

பக்கத்துக்கு 6 வரிகள். 17, 18, 44-ஆம் இதழ்களைக் காணவில்லை. அரிச்சந்திரனின் கதை நாட்டுப்புறப் பாவடிவில் நாடகமாகப் பாடப்பட்டுள்ளது. வசனமும், பாட்டுகளுமாக அமைந்துள் ளது. பாடல்களுக்கு மெட்டு, தாள வகைகளுமுண்டு.

தொடக்கம்:

விருத்தம்
வடகிரி பாரதம் வரைந்த செல்வனை
படகர மணிந்தவர் பயந்த சோதியை
குடமணி வய(ர்)தனை குமரி பாலனை
கடகரி முகவனைக் கனிந்து போத்துவாம்.

முடிவு:
வசனம். அகோ வாராய் மந்திரி. நம்முடைய சோசியரை வரவழைத்துக் கொண்டு வா. இவள் நான்தான் கொன்றே னென்கிறான். பொருச்சம் கேட்டு அவள் குத்தஞ் செய்திருந்தால் அவர் என்ன பிரா(ய)சித்தம் சொல்வாரோ அப்படியே செய்து கொள்கிறது அழைத்து வாரும் பிள்ளாய் மந்திரி. அப்படியே நல்ல பாக்கியமய்யா சுவாமி.
(வசனம்) யிப்படி ராசா சொன்ன வுடனே விசுவாமித்திரர் தானே சோசியர் வேசம் போட்டுக்கொண்டு வந்து ராசாவை...

## 439. 4106 - b- அரிச்சந்திர நாடகம்

பொருள்: கதை இதழ்கள்: 28
அளவு: 29.3 x3.3 செய்யுள் எண்ணிக்கை:- விரவியது
நிலை: சிறு சிதைவு, குறை.

குறிப்பு:

பக்கத்துக்கு 5 வரிகள். பலவித ராக, தாள வகைகளுடன் இசை நாடக வடிவுடன் பாடல்கள் அமைந்துள்ளன. 10-12, 28-ஆம் இதழ்கள் இல்லை.

தொடக்கம்:

மன்னாநீ ரென்னைவைத்து வனவேட்டை யாடப்போறீர்
மனது சகித்திருக்க மாட்டேன்காண் சாமி
பெண்ணேயென் பின்னேவர ஒண்ணாது மாதரசே
புலிகள் கரடிசிங்கம் போராட்டஞ் செய்யும்
வரவேண்டா மென்றுசொன்ன வனத்தில் கலைபுரிந்த
மான்போலே நின்னடியாள் மயங்கி வாடுவேனே.

முடிவு:

வேதமுனி சூத்தநால் வேதியனார் நம்மை
வாதனை செய்யவும் விஸ்வா மித்ரன் சொல் பிசகாமல் நாடிய
என்செய்வே ன(ச்)சுதே யினிலோகிதனே மன்னவர்
மன்னரையும் பிரிந்து வளர்மதி மைந்தனே உந்தலை
இழந்தேன்.

.........................................

## 440.10397 - ஆமையரசன் அம்மானை

பொருள்: கதை
அளவு: 32.5x3.7
நிலை: சிறுசிதைவு, குறை.
குறிப்பு:

இதழ்கள்: 51
செய்யுள் எண்ணிக்கை: - சுமார் 2000 அடிகள்

பக்கத்துக்கு இருபகுதிகளாக 20 வரிகள். சோழ நாட்டுச் சம்மந்தப்பட்டணத்து மாநதியில் நீராடும்போது இருமாதர்கள் பெண்,ஆண் குழவிகள் தமக்குப் பிறந்தால் சம்பந்திகளாவது என ஈஸ்வரன்னை முன்னிறுத்தி சத்தியம் செய்துகொள்ள, சுந்தரமூர்த்திக் காராளர் பத்தினி அபிராமிக்கு ஆமைப்பிள்ளை பிறக்க, மற்றவள் பெண் தர மறுத்து மற்றோர் இடத்தில் மணம் பேச, ஆமையார் செய்த அதிசயங்கள் நெடுங்கதையாகப் பாடப்பட்டுள்ளது. இராமநாதபுரத்து ஆறுமுகம் என்பார் பாடியது இவ்வம்மானை என்ற குறிப்பும் 2-ஆம் ஏட்டில் இடம்பெற்றுள்ளது. கி.பி.1794ஆம் ஆண்டு விருச்சக மாதம் 9-ஆம் தேதி எழுதப்பட்டதாக மூன்றாம் இதழ்க் குறிப்பால் தெரிகிறது.

தொடக்கம்:

சீர்கொண்ட ஞானச் சிவனார் புத்திரனே
பார் கொண்ட மால்மருகா பரமேஸ் பரியீன்ற
ஐந்து கரத்தோனே அரனார்தன் புத்திரனே
வந்துதமிழ் தந்தருளு மதகரி வேழ முகவா

முடிவு:

அன்னமென வேநடந்து அருவையிரு பேர்களுந்தான்
முன்னே யொருபெண்ணை (முதுகி லெடுத்து வைத்து
தான்சுமந்தாப் போலே தையலிருபேரும்
கோன்சுமந்த நல்லதிருக் கொன்றை மலரதுபோல்
இலைமலரிற் செய்தபிழை இடர்தீர வேணுமென்று
.........................................

## *441. 11574 - ஆறை அழகப்ப முதலியார் விறலிவிடு தூது*

பொருள்: *சிற்றிலக்கியம்(தூது)* இதழ்கள்: *36*
அளவு: *33.8 x 2.8* செய்யுள் எண்ணிக்கை: -
நிலை: *நன்று, குறை.* *சுமார் 500 வரிகள்*
குறிப்பு:

*பக்கத்துக்கு 6 முதல் 8 வரிகள்.*

தொடக்கம்:

பூமாலை வாய்த்த புனையளகைச் செல்விசெங்கைத்
தோமாய வாய்த்த திரு மார்பன் - மாமாலை
வைத்த புவனம் பெருத்தமணி நெடுந்தோண்
மொய்த்த மலர்வாகை முகைத்தாம - னெத்தும்
.........................................

முடிவு:

சாப்பிடா லாரத்தையன் சாற்றுவா ரோகிளவி
கூப்பிடா தேமெள்ளக் கூறென்றாற் - மூப்பிகடைக்
கண்ணிற் புனல்சொரிந்தாள் கைகுவித்தா ளென்பசலைப்
பெண்ணுக்கு வந்த பிழையென்றாள் - மண்ணுலகில்
இந்தப் பிறப்பு யென்க்குண்டோ.

## 442. 341 - பரத நடன விதி

பொருள்: நடனசாஸ்திரம் இதழ்கள்: 35
அளவு: 36 x 4 செய்யுள் எண்ணிக்கை:- பாடலும், உரையும் சுமார் 700 அடிகள்
நிலை: நன்று, குறை.

குறிப்பு:

பக்கத்துக்கு 10 வரிகள். ஆசிரியர், அச்சான விபரம் தெரியவில்லை. பரத நாட்டியம் பற்றிய இலக்கண நூல்(பஞ்ச மரபு?)இசைமரபு, குரல், சங்கு, மாத்திரை, நிருத்த மரபு, பண் இடையீடு, வாக்கிய மரபு, பிண்ட மரபு, எளுது மரபு, மட்ட கேகை, கடகம், தாள மரபு என்ற உட்பிரிவுகளுடன் செய்திகள் விளக்கப்பட்டுள்ளன.

தொடக்கம்:

சாக்கிர மேதுடரு மேலினிச் சத்தம் தயங்குகண்டத்
தாக்குந் துரிதமது சொற் பனமிதை யஞ்சுளுத்தி
வீக்கிடுங் கோலுந்தி தானங் குருவே துரியம்புலித
மாக்கி டதீதமா ருதாரத்தின் விதிக்கா மாறியே.
கருதிய நிலையாறைந்து காலங்க ணான்கு மெய்யிற்
கிரிகையீ ரெட்டுங் காலிற் கிளர்தோளில் நாற்பான் மூன்றங்
குரியகை நாற்பத்தெட்டைன் னுரைவல்லோ ரகமார்க் கத்தை
வருவகை தொகுத்தல் கண்டு வளம்படி விரித்துச் சொல்வாம்

முடிவு:

விந்து விரதி விராமங் கிளர்புள்ளி
பந்த மறுக்குப் படரெற்று -முந்துதுடர்
சொன்னார் காண மாத்திரைக்குச் சொக்கனார் மிக்கதமிழ்
நன்னா வலர்முன் நயந்து.

## 443. 8/79 - அசுவமேதயாகக் கதை

பொருள்: கதை இதழ்கள்: 103
அளவு: 45.8x3.5 செய்யுள் எண்ணிக்கை:- உரைநடை
நிலை: சிறு சிதைவு, குறை.

குறிப்பு:

*பக்கத்துக்கு 7 வரிகள். மகாபாரதத்தில் தருமராசன் அசுவ மேதயாகம் செய்த கதை, எளிய உரைநடை வடிவில் இயம்பப் பட்டுள்ளது. இறுதிப்பகுதி ஏடுகளின் வலப்புற ஓரங்களில் முறிவுகளுள்ளன. 13,64,79-110,134-ஆம் ஏடுகளைக் காணவில்லை.*

தொடக்கம்:

*செனமேசெய மகாரிசியானவர் செனமே செயரா ... பார்த்து பதினெட்டுநாள் பாரத யுயித்தமும் சொல்லிய பிற்பாடு கேளும (காராசா)வேயென்று சராசந்தாதி யசுவமேத யாகத்தின் கதையைச் சொல்லும்படியென்றவாறு, மகாமண்டலீசுபரன் அகண்ட மண்ட லாதி பன் ராசன் ராச பரமேசுரன் ராச மார்த்தாண்டன்*

முடிவு:

(கிருஷ்)ண மூர்த்தியைப் பார்த்து இனிமேல் கால தாமிதஞ்
செய்யத் தேவையில்லை சுதர்மனானவன்பத்தப் பிரியனாச்சே
நாலா... கடந்து கயிலாசற்றையு மொப்புக் கொள்ளுவான்
சந்தேக மில்லை யன்று தேவர்கள் முனிவர்கள் முதலாகச்
சொல்லிப் புஷ்பமாரி 'களிப்படிச் சொல்லிக் கொண்டு,
ஆகாசத்திலே'தேவர்கள் சூழ்ந்து நிற்கத் தேர் நடத்தி வரப்பட்ட
கிருட்டிணனை யிந்தச் சுதர்ம ..............................

## *444. 7954 - அசுவமேத யாகம்*

பொருள்: *கதை* | இதழ்கள்: *200*

அளவு: *39 x3.5* | செய்யுள்எண்ணிக்கை: *- உரைநடை*

நிலை: *நன்று, குறை.*

குறிப்பு:

*பக்கத்துக்கு 9 முதல் 10 வரிகள். கதைப்போக்கு கூறும் முறைகளில் 8179, அசுவமேதயாகக் கதையினின்றும் வேறுபட்ட தாக உள்ளது. ஸ்ரீ ஐ ய அ ௵ (கி.பி.1873)ஆவணி உயக (21-ந் தேதி)புதன் கிழமை யும் உத்திர நட்செத்திரமும் அமுத யோகமுங் கிஷ்கரணமுங் கூடின பூர்வ பச்சமுங் கூடின சுபயோக சுபதினத்தில் கீழப்பாவூரி லிருக்கும் சொரி முத்துக் கோனாரவர்களுடைய குமாரன் சொக்க லிங்க வாத்தியார் எழுதின அசுபமேத யாகக்கதை*

'' என்ற குறிப்புகள் தலையேட்டில் உள்ளன. நூற்றுவரைக் கொன்ற தோஷந்தீர இவ்யாகம் செய்யப் பட்ட செய்தி உள்ளது. பெரும் பான்மை உரைநடை வடிவில் என்றாலும் சிற்சில இடங்களில் பாடல் வடிவு உள்ளது.

தொடக்கம்:

நூற்றுவரை வென்றரசு நூதனமாய்ப் பஞ்சவர்கள்
சாத்தினார் செங்கோல் தழைக்க மணிமகுடம்
அஸ்தினா புரத்தை அரசாளத் தன்மருமே
வெத்தி பெருங்கீர்த்தி மேதினியில் தான்விளங்க
ஆறிலொன்று வாங்கி அசையா மணிதரித்து

முடிவு:

தர்மராசாவானவர் உத்திரகுரு பூமியிலே உள்ள ராசாக்களுக் கெல்லாம் நாலுவகை வரிசையளுங் கொடுத்து வேண்டிய உபசாரத்துடனே யெமனாசூரன் முதல் சந்திரகாசன் வரைக்கும் பட்டாடையும் பணி வகையுங் கொடுத்து மகா ஆதரவுடனே அனுப்பினார். அப்போது ருத்திர குரு பூமியிலுள்ள ராசாக்கள் சகல பேருந் தர்ம ராசனையும் ஸ்ரீமாயவனான கிஷ்டிண மூற்றியு மனுப்பிக் கொண்டு அவரவர் தேசங்களில் போய்ச் சேர்ந்தார்கள். உடனே தர்மராசாவானவர் சகல ரிசிகள் முதலான தபோதனர்கள் சத்தசிரிகள் வேத வியகர் முதலான பேர்களுக்கு அனேக ............
...........................

## *445. 6309 - அசுவ மேத யாகக் கதை*

பொருள்: *கதை* இதழ்கள்: *264*
அளவு: *38.7 x 3.7* செய்யுள்எண்ணிக்கை:- உரைநடை
நிலை: *நன்று, முழுமை.*

குறிப்பு:

*பக்கத்துக்கு 7 முதல் 8 வரிகள். கதைப்போக்கு, கூறும் முறை மையால் 8179, 7954 - அசுவமேதயாகக் கதைகளினின்று வேறு பட்டது.*

தொடக்கம்:

வேத வியாசரைத் தோத்திரம் பண்ணிப் பாரதக் கதை சொல்லு கிறோம். அதெப்படி யென்றால் . பூர்வ காலத்திலே சந்திர வங்கிஷ

இராசாவாகிய செனமே செய ராசா கொலுவாக யிருக்கிற போது அவரண்டைக் கிப்பறம் பாகவத சிகாமணி யாகிய பிள்ளை வேத வியாசர் சீஷராகிய செயமுனியென்கிறவர் வந்தார். அவருக்கு அக்கிய பாத்தியங் கொடுத்துப் பூசைப் பண்ணி ஓய் சுவாமி செயமுனியேந்திரா யெங்கள் பாட்டனார் தர்மராசா அசுவ மேதயாகம் பண்ணி(ன)கதையை யெனக்குத் தெரியச் சொல்ல வேணும் சுவாமி யென்று.....

முடிவு:

செய முனியேந்திரன் செனமே செய மகாராசாவுக்கு அசுவ மேத பருவஞ் சொன்னாரென்று சொல்லிச் சூதர் புராணிகள் சவுனகாதி மகாரிஷிகளுக்கும் சொன்னாரென்றவாறு செயமுனி யேந்திரர் சொன்ன பாரதத்திலே அசுவமேத பருவம் எழுதி முகிந்தது. முற்றும்.

இந்த அசுவமேத பருவம் எழுதி முகிந்தது. ௲ ௮ ௱ ௩ அஞு (கி.பி.1803)பங்கூனி மீ அஉ(8-ந் தேதி)அமரபட்சத்து ஏகாதெசியும் மந்தவாரமும் திருவோண நட்செத்திரமுங் கூடின சுபதினத்தில் எழுதி முகிந்தது.

## 446. 10288 - அசுவமேத யாகக் கதை

பொருள்: கதை இதழ்கள்: 260

அளவு: 43.2 x 3.6 செய்யுள் எண்ணிக்கை: - உரைநடை

நிலை: நன்று, முழுமை.

குறிப்பு:

பக்கத்துக்கு 9 முதல் 12 வரிகள் வரை உள்ளன. 8119, 8179- அசுவமேத யாகக் கதை என்பனவற்றின் பிரதி போன்றதே. நீலத்து சன் கதை, அமுர்த துசன் கதை, சுரதன் கதை, வீபீஷணன் கதை, பெருலீலை பெண் யுத்தம், பற்ப வாகன் கதை, பரிசித்துராசன் கதை, வீரவர்மன் கதை, சந்திரகாசன் கதை, பக்ததாம்ரயரிசி கதை, சிந்து தேசத்தின் கதை, யாகம் வளர்த்த கதை - என உட்பிரிவுகள் அமைந்துள்ளன.

## 447. 7953 - அசுவ மேத யாகம்

பொருள்: கதை இதழ்கள்: 270

அளவு: 37.6 x 3.4 செய்யுள்எண்ணிக்கை:- உரைநடை

நிலை: நன்று, முழுமை.

குறிப்பு:

பக்கத்துக்கு 7 முதல் 8 வரிகள். 7954 - அசுவமேதயாகக் கதை போன்றதே. முதன்மை நோக்க இச்சுவடிக்கு அது படியாகலாம் எனத் தெரிகிறது. ௲சயகளு(கி.பி.1866)ஆடி யஅஉ(18ந் தேதி) சோம வாரத்தன்று எழுதி வருகிறது - எனச் சுவடி எழுதத் தொடங்கின காலம், முதல் ஏட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

முடிவு:

இப்படி அஸ்தினாபுரம் ஆளப்பட்ட தர்ம ராசனானவ னவருடைய மைத்துனனாகிய துவாரகாபுரி ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியான பகவானு டைய கிருபையினாலே சாந்தாதி அசுவமேதயாகம் வளர்த்த கதை முகிந்தது முற்றும்.

[illegible] ௵(கி.பி.1868) மாசி மீ சஉ(4ந்தேதி) வெள்ளிக் கிழமையும் பூர்வ பச்சமும் ரேவதி நட்செத்திரமும் கூடின சுபையோக சுபதினத்தில் சுடலை மாடக் கோனாரீன்றருளிய கறுப்பக்கோன் எழுதின அசுவமேதயாகக் கதை முகிந்தது முற்றும்.

இந்த சாந்தாதி அசுவமேதயாகம் கிஷ்டிண மூர்த்தியுடைய கிருபையினாலேயும் பஞ்சபாண்டவர்களுடைய சகாயத்தினா லேயும் தெச்சணாமூர்த்தியுடைய கிருபையினாலேயும் எழுதினேன் மாடக் கோனார் குமாரன் சுடலைமாடக்கோன் என்று பேர் விளங்கிய குருவக் கோனார் குமாரன் கறுப்பப் கோன் எழுதி னேன். இந்தச் சுவடி எடுத்துப் பார்த்த பேர்கள் கட்டி வைத்துப் போட்டு போவீர்க்ளாகவும். குருபாதமே கெதி.

## 448. 8119 - அசுவமேத யாகக் கதை

பொருள்: கதை இதழ்கள்: 385

அளவு: 44.3 x 3.3 செய்யுள் எண்ணிக்கை:- உரைநடை

நிலை: நன்று, முழுமை.

குறிப்பு:

பக்கத்துக்கு 6 முதல் 9 வரிகள். 8179 - அசுவமேதயாகக் கதை என்பதனைப் போன்றதே. முழுமையாக உள்ள பிரதி.

முடிவு:

விஷ்டுணு ஆலயம் பெருக வேதமுழங்கத் துஷ்டரைச் சங்கரித்துச் சிஷ்டரைப் பரிபாலினம் பண்ணி அஸ்தினாபுரத்திலே

றெற்றின சிங்காசனத்தின் பேரிலே கொலுவிருந்து செங்கோல் வாடாமல் குருநாடு மாண்டு கொண்டிருந்தார்கள் பிள்...சென மேஷராசனே யென்று மகா முனிவர் சொல்லச் செனமேஷராசன் கேட்டு மகா ஆச்சரியப்பட்டு செய முனிவரைச் சாஷ்டாங்கமாக...ப்பாதத்திலே விழுந்து நமஸ்கரித்து மகா சந்தோஷத்தையடைந்தார். துவாரகாபுரி வாசகரான வைகுண்ட மூர்த்தி பாதார விந்தமே கெதி.

## 449. 5655 -b- அமராபதி கதை

பொருள்: கதை
இதழ்கள்: 38
அளவு: 39 x 2.8
செய்யுள் எண்ணிக்கை: - சுமார் 1000 வரிகள்
நிலை: நன்று, முழுமை.
குறிப்பு:

பக்கத்துக்கு இரு பகுதிகளாக 12 முதல் 14 வரிகள். இதனை அடுத்து முப்பதாமாண்டளவில் மூன்றத் தொரு பொருளை என்ற மூதுரைப் பாடல் ஒன்றுள்ளது.

தொடக்கம்:

அன்னம் அமுதுபடி ஆராய்ந்து தான்வருவாள்
எக்கோவி லுக்கும் இலங்கும்விளக் கேத்திடுவாள்
நற்கிணறு வெட்டிவித்தாள் நந்தவனம் போடுவிற்றாள்
பந்தலிட்டு நீர்ச்சாலை பதித்தாள் பெருவழியில்

முடிவு:

எந்தன் பிதாவு மென்கிளையும் வாழியதே
சண்டேசுரர் வாழி தாரகையார் தான் வாழி
கொண்டல் மிக வாழி குவலைமெல்லாம் வாழி
கற்றோர்கள் மிக வாழி கவிவாணர் தான் வாழி
ஏமதன்ம ராசாவு மியல்வாகத் தான் வாழி
சித்திர புத்திரர் கதையை சிறந்தெழுதிப் படித்தவர்கள்
......பெற்றெடுப்பார்.

## 450. 3946 - i - அனுபோக வெண்பாத் தெரிவு

பொருள்: *சமயம்* இதழ்கள்: *4*
அளவு: *24.8 x5* செய்யுள் எண்ணிக்கை: *- சுமார் 150 வரிகள்*
நிலை: *நன்று, குறை.*

குறிப்பு:

*பக்கத்துக்கு 18 முதல் 20 வரிகள். தெரிந்தெடுக்கப்பட்ட பாக்களின் தொகுப்பு.*

தொடக்கம்:

மூன்று மலமு மொழியுங் காற்றீதாகத்
தோன்றுமா னோயாகச் சொல்லுவதா - மேன்றசிவ
புண்ணியமே நன்மருந்தாய்ப் போக்குமென வாங்கதனை
நண்ணியநூ லோதுமதை நாடு

முடிவு:

சரிதைக்குத் தீக்கை சமையமா னிட்டை
வரிசைத் திருவுருமென் மாலாய்த் - தெரியுந்
தொழிலுடன் பட்ட சுந்தரசா லோகம்
வழுவா திருப்பா மகிழ்ந்து.

-எ கூ

திருச்சிற்றம்பலம்.

## 451. 6713 - d - இந்திரன் பழிதீர்த்த படலம்

பொருள்: *புராணம்* இதழ்கள்: *20*
அளவு: *43.2 x 3.2* செய்யுள் எண்ணிக்கை: *- 97*
நிலை: *சிறு சிதைவு, குறை.*

குறிப்பு:

*பக்கத்துக்கு 6 வரிகள். பரஞ்சோதியார் திருவிளையாடற் புராணத்து இந்திரன் பழி தீர்த்த படலம். அச்சானது.*

தொடக்கம்:

மல்குக வேதவேள்வி வழங்குக சுரந்து வானம்
பல்குர வளங்களெங்கும் பரவுக வரங்களின்ப

நல்குக வயிர்கட் கெல்லா நான்மறைச் சைவ மோங்கி
புல்குக வுலமெல்லாம் புரவலன் செங்கோல் வாழ்க
-க-

முடிவு:

வந்தரமங் கையர்கவரி மருங்கு வீச
மந்தார கற்பகப் பூமாரி தூற்ற
வந்தர நாட்ட்வர் முடிக ளடிகள் சூட
வயிராணி முலைத்தடந் தோய்ந் தகலத் திண்டோள்
விந்தமெனச் செம்மாந்து விம்மு காம
வெள்ளத்து ணாட வெள்ளத் தாழ்ந்து
சுந்தர நாயகன் கருணை வெள்ளத் தாழ்ந்து
தொன்முறையின் முறைசெய்தான் துறக்க நாடன்
- சூ எ.

## *452. 3946 - m - உயிருண்மையாதி*

பொருள்: *சமயம்(சைவம்)* இதழ்கள்: *3*
அளவு: *24.8 x 5* செய்யுள் எண்ணிக்கை: *- உரைநடை*
நிலை: *நன்று, முழுமை.*

குறிப்பு:

*பக்கத்துக்கு 18 வரிகள்.*

தொடக்கம்:

*உயிருக்கு எண்ணித் தொகை பண்ணப் படாது. பிறப்புமில்லை யிறப்பு மில்லை. சிவனைப் போலே அழியாம லிருக்கும் எ....மு மாணவ மலத்துடனே கூடியிருக்கும், எப்படிப் போல அரிசிக்குத் தவுடுமி போலவும், செம்புக்குக் களிம்பு போலவும், கடல் நீருக்கு உப்புப் போல வுமிப்படியாயிர முவமை யுண்டு.*

முடிவு:

*சிவபோகம் ஒன்றை மாத்திர மநேக காலமுங் கண்டு கொண்டேயிருப்பன். ஒருக்காலுந் தளர மாட்டானிதற்கு மேலு யிர்க்கு ஊதியமொன்றுமில்லை. உயிருண்மை முற்றும்.*

*திருச்சிற்றம்பலம்.*

## *453. 6352 -* b *- அகராதி நிகண்டு*

பொருள்*: நிகண்டு* இதழ்கள்*: 7*
அளவு*: 37.6 x 3.8* செய்யுள் எண்ணிக்கை*:- சுமார் 550* வரிகள்
நிலை*: சிறு சிதைவு, குறை.*

தொடக்கம்:

*பக்கத்துக்கு 3 பகுதியாக 30 முதல் 39 வரிகள். இகர வரிசை வரையே உள்ளது.*

தொடக்கம்:

அரனென் பதுவே பரமசிவன்பேர்
அம்பிகை யென்பது உமையா ளாகும்
அயனே வேதனா மென்றறிவர்
அம்ப ணத்தியே துர்க்கை யாகும்
அமுத முதிரோன் சந்திர னாகும்

முடிவு:

இராடமே ஒரு தெசமுகங் கழுதையும்
இரகமென்பது பேரெழுஞ் சந்தமும்
இரதனென்பது கண்ணொடு கிளியே
இகுரிய மகரக் கலமும் வழக்கும்
இருசென்பது.....

## *454. 1452 - அகத்தியர் வைத்திய சாஸ்திரம்*

பொருள்*: மருத்துவம்* இதழ்கள்*: 32*
அளவு*: 35.5 x 3* செய்யுள் எண்ணிக்கை*: - சுமார் 380* வரிகள்
நிலை*: சிறு சிதைவு, குறை.*

குறிப்பு:

*பக்கத்துக்கு 6 வரிகள். முதல் 3 இதழ்கள் இல்லை. 13,28,29, 41,43, ஆம் இதழ்களைக் காணவில்லை. 4,23,24,34,46ஆம் இதழ்கள் மிகுதியும் முறிவுப்பட்டுள்ளன. அச்சான விவரம் தெரியவில்லை.*

*இந்த சாஸ்திரம் ...ளையூரிலிருக்கும் உடையினாபிள்ளை குமாரன் முத்துக் கறுப்பணன் சாஷ்திரம் எழுதி முடிந்தது. முற்றும்.*

## 455. 6347 - ஓ - உருக்கினம்

பொருள்: மருத்துவம் இதழ்கள்: 3
அளவு: 44 x 3.7 செய்யுள் எண்ணிக்கை:- 11, உரைவிரவியது
நிலை: நன்று, குறை.
குறிப்பு:

பக்கத்துக்கு 8 வரிகள். ஏதோ ஒரு மருத்துவ நூலினின்று பிரிந்த உதிரிச் செய்திகள் உள்ளன. உருகும் மருந்துச் சரக்குகள் பற்றியவை. அச்சான விவரம் தெரியவில்லை.

தொடக்கம்:

தேடாதே மித்..தச் செப்பக் கேளு
திறமாக வுப்பாசமற் றெதுக்குங் காரம்
நாடாதே னாகமப்பா யிரண்டோ காரம்
நல்சார மூன்றேது படிகை குன்றி
சாடாதே வெண்கருவோ டாகமூன்று
சாற்றினே நாலுவகைச் சார்பு கேளு
ஓடாதே யிந்துப்புச் சாரத் தோடு
உத்தமனே வெள்ளையுடன் மெழுகு தானே.

முடிவு:

ஏத்தியே குப்பிக்குச் சீலை செய்து
எடுப்பாக வாலுகைமே லேற்றிக் கொண்டு
தேற்றியே முத்தீயும் நாளொன் றுக்குள்
திடமாக யெரித்துபின்பு வாங்கி யேதான்
போற்றியே குப்பிதனை உடைத்து வாங்கு
பூப்போன்ற வெள்ளையது கட்டி கட்டி
மாத்தியே வித்தையிது லச்ச வித்தை
மகுத்தான குருவப்பா வாத மின்னே.

## 456. 8434 - இராமாயணம் வில்லுப்பாட்டு

பொருள்: கதை இதழ்கள்: 44
அளவு: 35.5 x 3.1 செய்யுள் எண்ணிக்கை:- சுமார் 1500 வரிகள்
நிலை: நன்று, குறை.

குறிப்பு:

பக்கத்துக்கு இரு பகுதிகளாக 14 முதல் 18 வரிகள். அனுமான் இலங்கை சென்று மீண்ட பகுதி மட்டும் (சுந்தர காண்டப் பகுதி) வில்லுப்பாட்டு வடிவில் பாடப்பட்டுள்ளது.

தொடக்கம்:

அன்பாகவே ராமரிட மாஞ்சிநேயர் விடையும் பெற்று
இன்பமுடன் மயேந்திரகிரி யேறினார் பொன்னனுமான்
ஏறியேதான் தங்கனுமான் எடுத்தானே விஸ்வரூபம்
நேராகவே தேவலோகம் நீதியுடன் தோன்றிடவே
இதுதானே லங்கையென்று யெண்ணியேதா னையப்பட்டு

முடிவு:

நலங்கமழுஞ் சீதையம்மன் நலமுடனே தான்கொடுத்த
சூடா மணியையுமே சுவாமிகையில் தான்கொடுத்தான்
வாடாத கமலக்கைய்யால் வாங்கியேதா னேதுசொல்வார்.

## 457. 8486 - உத்தர கீதை

பொருள்: வேதாந்தம் இதழ்கள்: 27
அளவு: 29.5 x 3.7 செய்யுள் எண்ணிக்கை: - உரைநடை
நிலை: நன்று, முழுமை.

குறிப்பு:

பக்கத்துக்கு 7 முதல் 10 வரிகள். 3 அத்தியாயங்கள் கொண்டது. கிருஷ்ண பகவான் அருளியதைத் தமிழில் சுப்பிரமணிய குரு விரித்தெழுதியது.

தொடக்கம்:

மகாபாரதத்திலே தர்ம க்ஷேத்திரமான குருக்ஷேத்திரத்திலே அர்ச்சுன்ன் கிஷ்டணசலி (சுவாமி) யினாலே கீதை பதினெட்டத் தியாயமும் உபதேசிக்கப்பட்டு, அந்தத் தத்துவ சொரூபத்தை விசைய போகப் பிரபலத்தினாலே மறந்தவனாய், திரும்பவும் அசுவமேதை பருபதத்திலே அந்தத் தத்துவ சொரூபம் நன்றாகத் தெரியத் தக்கதாக கிஷ்டண சுவாமியைக் கேட்க உத்திரகீதை மூன்றத்தியாயத்தினாலே போதிக்கிறார்.

முடிவு:

அவருக்குப் பொன்னு மோடுஞ்சரியென்றுங் கீரையுங் கறி உண்டான அன்னமுஞ் சரிபோக வஸ்துக்கள் வந்ததினாலே சந்தோஷமும் வரவில்லை என்று விசாரமுமில்லை. இப்படிக் கொத்த யோகீசுரனே ஜீவன் முக்தன்
தமிழினாலே விரிச்சு அனுகிரகித்த சுப்பிரமணிய குரு சரணாரவிந்தமே கெதி.

## 458. 6347 - i -அட்டகர்ம மூலிகை

பொருள்: மருத்துவம்
இதழ்கள்: 10
அளவு: 44 x 3.7
செய்யுள் எண்ணிக்கை:- 65
நிலை: நன்று, குறை.

குறிப்பு:

பக்கத்துக்கு 7 முதல் 9 வரிகள். அட்ட கர்மத்துக்குதவும் மூலிகைகளும், அவை ஒவ்வொன்றுக்குமுள்ள மந்திர உச்சரிப்பு களும் விளக்கப் பட்டுள்ளன.

தொடக்கம்:

காணவே அஷ்டகர்ம மூலி சொல்ல
கலந்துநின்ற வசியமுதல் மாரண மெட்டுப்
பூணவே ஒவ்வொன்றுக் கெட்டு மூலி
(போ)க்கோடே வெவ்வேறே பிரித்துக் கேளு
ஊணவே அறுபத்து நாலு மூலி
யுரைக்கிறேன் வசீகர்த்தை யுண்மையாக
தோணவே சீதேவி செங்கிளநீர் வாங்கச்
சூட்டினேன் மந்திரத்தைச் சூட்டி றேனே.

முடிவு:

நொறுக்கிய பாண்டத்துக் குள்ளே யிட்டு
நூதனமாய்ப் பூத்தயிலம் வாங்கிக் கொண்டு
கருக்கியே மந்திரங்கேள் புறகரிவோ மென்று
கரிசுவாகா ஓம்பட் டென்றும் நீயும்
பொருக்கிய மந்திரந்தான் பத்து மோதி
போற்றிநின்று பிரதெச்சனம் பொருந்தச் செய்து

மருக்கியே பன்றியொன்று ஆடு கோழி
வாகான பெலிகொடுத்து சுத்தி பண்ணே.

## 459. 8437 - இசக்கி கதை

பொருள்: கதைப்பாடல் இதழ்கள்: 70
அளவு: 27.6 x 2.6 செய்யுள் எண்ணிக்கை:-
நிலை: சிதைவு, முழுமை. சுமார் 1200 வரிகள்

குறிப்பு:

26 இதழ்கள் வரை இரு பகுதிகளாகப் பக்கத்துக்கு 13 வரிகளும் இறுதி 44 இதழ்களில் பக்கத்துக்கு 6 வரிகளும் என்ற அமைப்பில் எழுதப்பட்டுள்ளன. 8027, 8019 - இசக்கி கதை அல்லது நீலி கதையுடன் ஒப்புமை உடையது. பாடபேதங்களுள்ளன.

தொடக்கம்:

அழகுடைய பழகைநல்லூர் அம்மையப்பர் கோவிலில்
குழகுடைய சங்கீதம் கூத்தாடு முறைக்காரி

பணிவிடை யேமுகிந்து படிகடந்து வெளியில் வந்தாள்
மணியமொடு கோவிலுக்கு வாய்மூப்புக் காரனவன்
விரும்பியந்த கோவில்நம்பி வேசைமக ளருகு வந்தான்
கரும்பின்ரச மொழியாள்மேல் கண்ணோட்டம் போட்டானே.

முடிவு:

என்னுடைய பழியுங் கொண்டே னருவேப்பம் பழியுங்
கொண்டேன்
என்மேலே குத்தமில்லை யீசுபரரே நீர்சாட்சி
மாயவரே நீர்சாட்சி மறையவரே நீர்சாட்சி
அன்று கொன்ற பழியெனக்குக் கொண்டே னீசுரரே
என்றுசொல்லி யிசக்கிகதை யம்மையப்பங்க வீத்திருந்தாள்

௲ ௮௱ ௰ (கி.பி. 1855) தைமீ எஉ (7ந் தேதி) எழுதி முகிந்தது. ஆறுமுகநாடன் ஏட்டை வாசித்துப்போட்டுக் குடுத்து விடவும் இல்லாவிட்டால் அவசத்துக்கு இடம் வரும். செந்திலாதிபன் துணை.

## 460. 3982 - b -ஆத்திச் சூடி

பொருள்: நீதி இதழ்கள்: 1
அளவு: 27.8 x 3 செய்யுள் எண்ணிக்கை: -
நிலை: நன்று, குறை. உரைவிரவியது
குறிப்பு:

ஔவையின் ஆத்திச்சூடியினின்றும் சில பகுதிகள் உள்ளன. ஒவ்வொர் சொல்லுக்கும் பொருள் எழுதப்பட்டுள்ளது. ஒரத் தலைப்பில் தவறாகக் கொன்றைவேந்தன் எனக் குறிப்பிடப் பட்டுள்ளது.

தொடக்கம்:

ஆத்தி சூடி யமர்ந்த தேவனை
ஏத்தி யேத்தித் தொழுவோம் யாமே.

முடிவு:

என்னெழுத் திகழேல்
எண்கணித்த நூலையும்
எழுத்து இலக்கண நூலையும்
இகழேல் நீ.
இகழாமல் கற்றுக் கொள்ளு.

## 461. 3982 - c--அருணாசல புராணம்

பொருள்: புராணம் இதழ்கள்: 18
அளவு: 28.2 x 2.8 செய்யுள் எண்ணிக்கை: - 89
நிலை: நன்று, குறை.

குறிப்பு:

பக்கத்துக்கு 6 வரிகள். பதினான்காவதான சாருவாகனச் சருக்கமும், முப்பத்திரண்டாவதான உலகாயதச் சருக்கமும் உள்ளன. ஆசிரியர் சைவ எல்லப்ப நாவலர். அச்சானது.

தொடக்கம்:

எத்தலங்க ளும்புகுந்து சாருவாகன் படிப்போ ரினந்தற்சூழ
வத்தலங்க டோறுந்தன் வித்தையனைத்து மங்கங்கே நிறுவி
ய வனியெங்குஞ்

சுத்தமுறும் விரதபங்கஞ் சூழ்வித்துத் தாழ்வித்துச் சுருதிநூலைக்
கைத்தசிந்தை மாமோகன் வைகிய வாரணாசியிற் கடிதின்
வந்தான்.

முடிவு:

என்றுமே லனுமான மாதியும் விதியிரண்டு
மென்று சீவனு மிறையு முண்டென்று மொண்டியா
துன்னு போகம் வீடன் றென்னு மவன் வலிதொலைத்து
நின்றதாற் கனமேற் பொற்புத்தர போர்நேர்ந்தார்.

முப்பத்திரண்டாவதுலகாயுதச் சருக்க முற்றும்.

## *462. / / 465 - a - அகஸ்தியர் திரட்டு*

பொருள்: *சமயம்(சைவம்)*
இதழ்கள்: *44*
அளவு: *20.5 x 3.7*
செய்யுள் எண்ணிக்கை: *- 260*
நிலை: *சிறுசிதைவு, குறை.*

குறிப்பு:

*பக்கத்துக்கு 9 முதல் 11 வரிகள். சைவத் திருமுறையான தேவாரப் பதிகங்களின் சில பாடல்களின் தொகுப்பு. திருப்பிரம்ம புரம் பனந்தட்ட பாஷை, திருவதிகை வீரட்டானம் திருவெண்ணை நல்லூர்ப் பதிகங்கள், திருவால திருநீற்றுப் பதிகம், பஞ்சாக்கரப் பதிகம், திருப்பாண்டிக் கொடுமுடி பதிகம், க்ஷேத்திரக் கோவை, க்ஷேத்திரக் கோவைத் திருத்தாண்டகம், திருப்பிரமபுரம், திருவெழு கூற்றிருக்கை, திருக்கூடலூர் மயானம், திருக்கோவில் திருவிருத் தம், திருவாழி கோழிபுத்தூர், திருவதிகை, திருவீரட்டானம், திருவடித் திருத்தாண்டகம், திருப்புன்கூர், திருப்பூந்தராய்ப் பதிகங்கள், திருத்தொண்டத் தொகை போன்றவை இடம் பெற்றுள்ளன. அச்சானது.*

## *463. / , / 55 - அகஸ்தியர் வைத்தியம் ஆயிரத்தைந்நூறு*

பொருள்: *மருத்துவம்*
இதழ்கள்: *51*
அளவு: *30 x 3.5*
செய்யுள் எண்ணிக்கை: *- 408*
நிலை: *சிறு சிதைவு, குறை.*

குறிப்பு:

பக்கத்துக்கு 9 முதல் 11 வரிகள். முன்பகுதி இதழ்களில் ஓர முறிவுகள் உள்ளன. பல்வேறு மருந்து விபரங்களும், நீங்கும் நோய்களும் விவரிக்கப்பட்டுள்ளன. அகத்தியர் புலத்தியருக்குச் சொன்னதாக உள்ளது. அச்சான விவரம் தெரியவில்லை.

தொடக்கம்:

பாகுடன் கிணேசன் பாதம் பணிந்துமுக் குணங்களாய
வாகடச் சுவடி யெல்லாம் வ‍(கயாகத்தொ) குத்துப் பாத்து
ஆகம விதியி னூலா லடர்ந்திடும் நோய்கட் கெல்லாம்
போகநன் மருந்து சொல்வோம் புலத்தியா பொருந்திக் கேளே.

முடிவு:

அறிவு கெட்ட விடத்தாலுஞ் சன்னியாலு
மாங்கார வெறியாலுஞ் சத்தியாகிப்
பரிவுகெட்டுப் பிணம்போலே துரோனை யற்றால்
போடுவாய் கண்ணிலையுங் காது மூக்கிற்
செறியவுநீ முலைப்பாலி லிட்டா யானாற்
செத்தசவம் பிழைத்தெழுந்து திரும்பிப்பேசு
மறுவேது மில்லையப்பா சத்திய மாகும்
மற்றமற்ற வாகடங்க ளிதுக்கொவ் வாதே

-ச ஈஅ.

## 464. 3946 -k - உபதேச வெண்பா

பொருள்: சமயம்(சைவம்)
இதழ்கள்: 2
அளவு: 24.8 x 5
செய்யுள் எண்ணிக்கை: - சுமார் 75 வரிகள்
நிலை: நன்று
குறிப்பு:

பக்கத்துக்கு 19 வரிகள். அம்பலவாணர் செய்ததாகக் குறிப்புள்ளது. அச்சானது.

தொடக்கம்:

இன்னம் பெறுமே யெமக்கிவ் விருசெவியு
மன்னம் பெறுமம் பலவாணன் - பொன்னா

வடுதுறைமேற் செய்த வுபதேச வெண்பாத்
தொடுதுறையைக் கேட்கையினாற் சூழ்ந்து.

முடிவு:
செஞ்சொலால் நின்னுரைகள் சேர்த்தே னறிவுடமை
நெஞ்சடைவ தாக நினைந்தருளாஞ் - செஞ்சடைசேர்
மெய்யா வுபதேச வெண்பாவே நீயாமென்
ஐயா நமச்சி வாயா.

-ச

## 465. 9153 - b -அங்கயற்கண்ணி அகவல்

பொருள்: துதி | இதழ்கள்: 13
அளவு: 18.3 x 3.3 | செய்யுள் எண்ணிக்கை: - சுமார் 190 வரிகள்
நிலை: சிதைவு, முழுமை.
குறிப்பு:

பக்கத்துக்கு 6 முதல் 8 வரிகள். சிதைவுகளுடன், ஏடு முறிவுகளும் நிகழ்ந்துள்ளன. ஆசிரியர் அச்சான விவரம் தெரிய வில்லை. கலிவெண்பா வாலாகியது.

தொடக்கம்:
சீராரும் பூங்கமலத் தெள்ளமுதே சேயிழையே
காராரு மேனிக் கனகுழலே - ஆராயும்
(வேத) முத லாகிநின்ற மெய்ப்பொருளே மின்னொளியே
ஆதி பராபரரையே யம்பிகையே - சோதியே.

முடிவு:
வந்திருந்து புத்திமதி விளைத்துச் சந்ததமு
நீயே துணையாக நின்றாட்சி யங்கயற்கண்
தாயே நின்றாளே சரணம்.
மீனாட்சியம்மன் பாதார விந்தமே கெதி.

## 466. 11408 - அகப்பொருள் விளக்கம்

பொருள்: அகம் | இதழ்கள்: 95
அளவு: 43.5 x 3 | செய்யுள் எண்ணிக்கை: - உரைநடை
நிலை: சிறுசிதைவு, முழுமை.

**குறிப்பு:**

*பக்கத்துக்கு 9 முதல் 13 வரிகள். ஆசிரியர் நாற்கவிராச நம்பி. அச்சானது.*

**தொடக்கம்:**

தமிழ் நுதலிற்றென்றல் தமிழ் நூல் மூன்று வகைப்படும். அவை, இயல்நூலு மிசைநூலு நாடக நூலுமென. அவற்றுள் இயல்நூல் மூன்று வகைப்படும். எழுத்துஞ் சொல்லும் பொருளுமென. என்னை: தமிழ் கூறு நல்லுலகத்து வழக்குஞ் செய்யுளுமாயிரு முதலி னெழுத்துஞ் சொல்லும் பொருளு நாடி என்றாகலின்.

**முடிவு:**

போக்கெல்லாம் பாலை புணர்த நறுங்குறிஞ்சி
ஆக்கஞ்சே ரூட லணிமருதம் - நோக்குங்கால்
இல்லிருத்தல் முல்லை யிரங்கல் நறுநெய்தல்
சொல்விரித்த நூலின் றொகை.

*௲௭௱௯௰௪ (கி.பி. 1794) பிரமாதீச வருஷம் கார்த்திகை மாதம் பூர்வபட்ச் துவாதேசி சுக்கிரவார ரேவதி நட்சத்திரத்தில் திருநகரி ஆழ்வார் சன்னதியிலிருந்து எழுதியது.*

## *467. 11379 -a- அகஸ்தியர் திரட்டு*

| | |
|---|---|
| பொருள்: *சமயம்(சைவம்)* | இதழ்கள்: *58* |
| அளவு: *22.7 x 3* | செய்யுள் எண்ணிக்கை:- *சுமார் 950 வரிகள்* |
| நிலை: *சிறுசிதைவு, குறை.* | |

**குறிப்பு:**

*பக்கத்துக்கு 6 முதல் 10 வரிகள். 11465 -a- அகஸ்தியர் திரட்டு என்பதைப் போன்றதே. மூவர் தேவாரத்தின் பாக்கள் சில திரட்டிக் கூறப்பட்டுள்ளன. தேவார மூவரின் பதிகங்களை அகஸ்தியர் திரட்டிக் கூறியதாக, முன்னால் 6 இதழ்களில் ஒரு வரலாறும் இயம்பப்பட்டுள்ளது. அச்சானது.*

**தொடக்கம்:**

தோடுடைய செவியன் விடையேறி யோர்தூவெண் மதிசூடிக்
காடுடைய சுடலைப்பொடி பூசியேன் னுள்ளங்கவர் கள்வன்

ஏடுடைய மலரான் முன்னாள் பணிந்தேத்த வருள்செய்த
பீடுடைய பிரமாபுர மேவிய பெம்மா னிவனன்றே.

முடிவு:

என்ன னவனா மானடியே யடைந்திட்ட சடையேன்
இசைஞானி காதலன் திருநாவலூர்க்
கொன்ன னவனா மாரூர மடிமைகேட்டு
(உ) கப்பா ராரூரி லம்மானுக் கன்பார் வாரே.

-யக.

## *468. 10377 - அரிச்சந்திர புராணம்*

பொருள்: *புராணம்* இதழ்கள்: *68*
அளவு: *39.6 x 2.7* செய்யுள் எண்ணிக்கை: *- 136*
நிலை: *சிதைவு, குறை.* உரைவிரவியது
குறிப்பு:

*பக்கத்துக்கு இரு பகுதிகளாக 8 முதல் 10 வரிகள். மயான காண்டப் பகுதிப்பாக்களும், உரையுமாக அமைந்துள்ளது. ஆசிரியர் வீரைக்கவிராச பண்டிதர். அச்சானதனின்று வேறானது.*

தொடக்கம்:

பெரும்புகழ் பெறும்படி யருந்துயர் கெடும்படி விரியம்பல
வரும் படியளவும்
விரும்பிய தனம்பெற மிகும்பெறு பதம்பெற விளங்கிய தவம்
செய நெடும்
கரும்பவல் பெரும்பயற் றருங்கனி ரசங்கொடு கவர்ந்த தென
வந்தருள் புரிந்
திருங்கரி முகன்சிறு தங்கையொடு கிண்கிணி யிலங்கிய
பதம்பெறுவனே

முடிவு:

*அந்த மெய்சொல்லுகிற மார்க்கத்தையே விரதமாகக் கொண்ட என்னை நீங்காத நிறை குணம் இவளுக் குண்டாயிருந்தால் இவள் சாவாமையைப் பெறக் கடவது. இவை யெல்லா மில்லை யென்றால் இவள் சாவைப் பெறக்கடவதென்று வாளினைக் கொண்டு வெட்டினான். அப்போது அந்த வெட்டின கூரிய வாளானது மாலையாகிச் சந்திரமதி கழுத்திலே விழுந்தது.*

*எ.று ள*
*மயான காண்ட முற்றிற்று.*

## *469. 9068 - a - அரிச்சந்திர புராணம்*

பொருள்: *புராணம்* இதழ்கள்: *26*

அளவு: *37.5 x3.4* செய்யுள் எண்ணிக்கை:- *175*

நிலை: *நன்று, குறை.*

குறிப்பு:

*பக்கத்துக்கு 6 வரிகள். அரிச்சந்திர புராணத்தின் மயான காண்டப் பாடல்கள் இடம் பெற்றுள்ளன. அச்சானது. 15,24-ஆம் இதழ்களைக் காணவில்லை.*

தொடக்கம்:

வல்லியு மகனுமந்த மறையவன் மனையில் சேர்ந்து
சொல்லிய பணிகளெல்லாஞ் சோர்வறச் செய்தபின்பு
எல்லியோர் சாமமென்ன யெழுந்திருந் தேவல் முற்றி
அல்லிரெண் டேமஞ் சென்றா லளித்தகூ முண்டுறங்கி

முடிவு:

அன்பொடு துழாய் முதல்வ னப்பொழு தழைக்க
முன்தழல் மூழ்கலொழி முனிவிரைவின் வாரா
நின்புதல்வ னோடே....னி புகுத னெறியோ
என்புதல்வ னோடேழை யிறப்பது தவிர்த்தோய்.

## *470. 3982 - a - ஆறெழுத்தந்தாதி*

பொருள்: *அந்தாதி(சிற்றிலக்கியம்)* இதழ்கள்: *19*

அளவு: *28.2 x2.7* செய்யுள் எண்ணிக்கை:- *102*

நிலை: *சிறு சிதைவு, முழுமை.*

குறிப்பு:

*பக்கத்துக்கு 6 வரிகள். முருகப் பெம்மானின் 'சரவணபவ' எனும் ஆறெழுத்து அந்தாதியாகத் துதித்துப் பாடப்பட்டுள்ளது. சென்னை கீழ்த்திசைச் சுவடி நூலகத்தாரால் அச்சிடப்பட்டுள்ளது.*

தொடக்கம்:

ஆனந்த மாறெழுத்தா லைய...ரமென் தங்கமெல்லாந்
தானந்த மாதிமுதற் பொருளாவிசத் தாங்கமும் நீ

மோனாந்த முன்னுள தென்னுள தென்னுள தென்னுளதா
லீனந்தம் போக்கியெனை நீயதாக்கிய யென்குருவே.

முடிவு:

வையஞ் சலமங்கி கால்வான மாதி மலவுயிர்விட்
டெ....முதல் சாரவெல்லா மெம்பிரான் முருகன்
தெய்யேன் யேவநின்றாடச் சிலம்போசைத் திருவிளையாட்(டு)
அய்யனே னனங்கந்தே னனங்க மாய்நின்ற ஆனந்தமே.

ஆறெழுத்தந்தாதி முகிந்தது. முற்றும். ளஉ

*செந்திலாதிபன் துணை.*

## *471. 2771 - f - இராமாநுஜ நூற்றந்தாதி*

பொருள்: *சமயம்(வைணவம்)* இதழ்கள்: *16*
அளவு: *39.7 x 3.8* செய்யுள் எண்ணிக்கை: *- 108*
நிலை: *சிறுசிதைவு, முழுமை.*

குறிப்பு:

*பக்கத்துக்கு 7 வரிகள். பிரதிபதி சுலோக வியாக்யானம். கிரந்த லிபி. அச்சானது.*

தொடக்கம்:



## *472. 8829 - f - அகத்தியர் பிரயோக மூலிகை சூத்திரம் நூறு*

பொருள்: *மருத்துவம்* இதழ்கள்: *14*
அளவு: *35.8 x 3.4* செய்யுள் எண்ணிக்கை: *- 100*
நிலை: *நன்று, முழுமை.*

குறிப்பு:

*மருத்துவம், இரசவாதம், காயகல்பம் என்ற பலவும் இயம்பப் பட்டுள்ளன. ஆயிரத்திருநூறு சூத்திரங்களைச் சுருக்கி இந்த நூறு சூத்திரங்களில் கூறியதாகக் குறிப்புள்ளது.*

**தொடக்கம்:**

பூரணமாஞ் சுழிமுனை நடுக் கமலமீதே
புகழ் பெரியமூல கெணபதி ஓகாப்பு
காரணமாய் எனையீன்... போற்றி
கட்டாக் வயித்தியத்தி லஷ்சங்கரப்பூ
தாரணமாய்ப் பருபாதி குறுகிச் சொன்னேன்
சார்வான ஆயிரத் திருனூறு சூஸ்திரம்
வாரணமாய் குறிக்கி வைத்தேன் சூஸ்திரம் நூறில்
வகைதோணக் கருக்குருவும் வகுத்தேன் பாரே.

**முடிவு:**

மனம்வேறு பூரணமே யென்று பூண்டு
வாழ்வ தல்லால் மற்றொன்றுஞ் செய்யாதேன்
மனம்வேறு தட்டுண்டா லெல்லாம் போச்சு
மாய்கையுற்று திரிந்தலைவான் வாழ்வா னய்யோ
மனம்வேறு சாதகமாய் சாஸ்திரத்தைப் பார்த்து
மனம்பெலக்குங் குருவினுடன் வணங்கி நின்றால்
மனம்வேறு மாறாது சித்தி முத்தி
வாய்க்குமே சூஸ்திரந்தான் நூறு முற்றே.

## *473. 8836 - h - அகத்தீசுவர சுவாமிகள் சூத்திரம் நூற்றிருபது*

**பொருள்:** *மருத்துவம்* **இதழ்கள்:** *17*
**அளவு:** *40.7 x 3.2* **செய்யுள் எண்ணிக்கை:** *- 120*
**நிலை:** *நன்று, முழுமை.*

**குறிப்பு:**

*காயகல்பம், பிராணாயாமம் போன்றவை சிறப்பாகப் பேசப் படுகின்றன. அச்சானதாகத் தெரியவில்லை.*

**தொடக்கம்:**

ஆதிசக்தி சிவமான சோதி காப்பு
அண்டமெனும் பூரணத்தி னறிவே காப்பு

சோதியெனும் வாலைமனோன் மணியின் காப்பு
சோஸடங்கா விண்ணொளியின் சுடரே காப்பு
நீதியுள்ள சற்குருவின் பாதங் காப்பு
நீயென்றும் நானென்றும் நின்றோன் காப்பு
சாதியெனும் சிவசக்தி ரூப மான
தற்பரத்தின் பொருள்காப்புத் தான்காப்பாமே.

முடிவு:

திறந்ததொரு தமர்வாசல் குள்ளே நீயும்
செலுத்தடா வாசிதனை ரவியில் மைந்தா
பரந்ததொரு வாசியது பதிவு மாகும்
பதிவான தீபவொளி கண்ணில் காணும்
கறந்ததொரு பால்போலே அமுர்த மீறும்
கனிவான அமுர்தமதை தினமுங் கொள்ளு
சிறந்ததொரு பூரணத்தைத் தினமுங் கொண்டு
சிவமான மௌனத்தில் சேர முத்தே.

-ஊய.

**சிவமயம். ஹரிஓம். நன்றாக குருவே துணை. அத்திக்கடைத் தெயிவராய சுவாமியின் குமாரன் துரைசாமியா வாலை குருசுவாமியள் துணை.**

## *474. 8836 - g - அகத்திய நாயனார் பூரணம் நூற்றிஐம்பது*

பொருள்: *மருத்துவம்* இதழ்கள்: *15*
அளவு: *40.7 x 3.2* செய்யுள் எண்ணிக்கை: *- 151*
நிலை: *நன்று, முழுமை.*

குறிப்பு:

*சரக்கு வைப்புகள் விளக்கப்பட்டுள்ளன. இதனை அடுத்து 3 பக்கங்களில் சில தொகுப்புச் செய்திகள் இடம்பெற்றுள்ளன.*

தொடக்கம்:

சீரணி கொன்றைசூடும் சிவனிரு பாதம் போற்றி
வாரண முகவன்பாதம் வணங்கிநூத் தன்பதுஞ்சொல்

பூரண் வாலைஞான சரஸ்வதி போற்றி போற்றி
காரண மானசெஞ்சொல் கர்மசூஷ்திரங் காப்பாமே.
-க

முடிவு:

சொன்னது யிதுதான் நூத்தி யன்பதுஞ் சூஷ்சமாகும்
வன்னமே பாருலோக மாரண மதிக சூஷ்சம்
முன்னமே யிந்நூல்தான் மொழிந்தவர் சித்தராகும்
அன்னமே சொன்னநூத்தி யன்பது மறிவீர் முத்தே.
-ளருக-

ஹரிஓம் நன்றாக. குரு வாழ்க. குருவே துணையாக வேணும். மீனாஷ்சி துணையாக வேணும்.

வாத்தியார் துரைசுவாமியா பிள்ளையுடையது. அகஷ்தீஷ்பர சுவாமியளருளிச் செயித சரக்குச் சூத்திரம் - ளயருக. எழுதி நிறைந்தது முற்றும்.

## 475. 8829- e - அகத்தியர் பூரண சூத்திரம்

## இருநூற்றுப் பதினாறு

பொருள்: மருத்துவம் இதழ்கள்: 25
அளவு: 35.8 x 3.4 செய்யுள் எண்ணிக்கை:- 216
நிலை: நன்று, முழுமை.

குறிப்பு:

மருத்துவம், மந்திரம், அட்ட சித்து - போன்ற பலவகையும் விவரிக்கப்பெற்றுள்ளன. அச்சான விபரம் தெரியவில்லை.

தொடக்கம்:

ஓடியதோர் தந்திமுகன் றனைப் பணிந்து
உரைத்திடுவேன் பூரணசூத் திரத்தை யானுந்
தேடியதோர் மந்திர கால ரஷ்ட்டசித்தி
திறமாக வுரைக்கின்றேன் பேர்....
கூடியதோர் கந்தமதைச் சிதம்ப ரத்தில்
குணமாக கற்றதென கூட்டி மூட்டி
ஆடியதோர் ஐம்முலனை மூலத்தாள்ளே
அமைதியிட்ட மூலகணபதி ஓ காப்பே.

முடிவு:

ஆமிந்த யிருநூற்றுப் பதினா றுக்கு
  அடக்கினால் குபேரருளெல்லாம் வெளியாய்ச் சொன்னேன்
ஓமிந்த வுலகத்தி லிந்தநூல் கிட்டினால்
  உலகத்தில் சித்ததிக முண்டாய்ப் போச்சு
தாமிந்த சூஸ்திரத்தை கேணீ யீதீந்தால்
  தலைதெறித்துப் போகுமடா சத்தியம் சொன்னேன்
நாமிந்தப் படிசொன்ன யோகிக் கீய்வாய்
  நலமான பூரண சூத்திரந்தான் முற்றே.

அகத்தியரருளிய பூரண சூத்திரம் உளயசா. முற்றிற்று. வயித்தியர் முத்துச் சுவாமியாபிள்ளை எழுதினது.

## *476.8829* - a- *அகத்தியர் குருநூல் அறுநூறு*

பொருள்: *மருத்துவம்* இதழ்கள்: *79*
அளவு: *35.8 x 3.4* செய்யுள் எண்ணிக்கை:- *624*
நிலை: நன்று, முழுமை.

குறிப்பு:

ஆயிரத்திருநூறு பாடலைச் சுருக்கி அறுநூறுக்குள் கூறியதாகக் குறிப்புள்ளது. ஆயின் 624 பாடல்களுள்ளன. மருத்துவத்துடன் ஞானம், யோகம், இரசவாதம், போன்றனவும்.இடம்பெற்றுள்ளன.

தொடக்கம்:

கருணைதரு மைங்கரனே காப்பு வாணி
கலந்து யிந்த சூத்திரந்தான் கருவாய்ப் பாடத்
திருவுமையாள் மனோமணித்தாய் செப்பக் கேட்டு
தெளிந்தகுரு நூலாகத் திரட்டிப் பாடக்
குருமகிமை சித்தியுண்டாம் ஞானம் வாய்க்கும்
குபேரனென நிதிமருந்துங் கூட்டுங் கூட்டும்
பெருமைமிக்க கீர்த்தியுண்டாம் சித்தர்க் கெல்லாம்
  பெருநூலைக் குறுக்கியிந்த அறுநூற் தானே.

முடிவு:

உண்டா மெழுநூற் வயித்தி லொடுக்குஞ் சூத்திர மெண்பதுண்டு
பண்டாங் குருவே நூத்தன்பது பாருவழலைப் போக்கன்பது

உண்டுவே கூர்ம நூல்களில் போதும் விடாதே நூல்க ளொரு(த்)
தருக்கும்
கண்டா யறுநூர் வெளிவிடாதே கட்சி எழுதி முகிந்ததுவே.
குருவே துணையாக வேணும்.

வாத்தியார் முத்துச்சுவாமியா பிள்ளை ஆதிமூல சுவாமி அறனூர்(று) எழுதி முகிந்தது. முற்றும்.

## 477. 5908 - b - உரோமதேவர் சூத்திரம்

பொருள்: மருத்துவம்
இதழ்கள்: 73
அளவு: 26 x 3.7
செய்யுள் எண்ணிக்கை: - 216, உரை விரவியது
நிலை: நன்று, முழுமை.
குறிப்பு:

பல மருத்துவ விபரங்கள் இயம்பப்பட்டுள்ளன. இதனை அடுதத ஒரு ஓலையில் வஸ்து வித்தை இடம்பெற்றுள்ளது. அச்சானதாகத் தெரியவில்லை.

தொடக்கம்:

ஆதி அந்த மேநிறைந்த சோதி பாதம்
அகண்டபரி பூரணத்தின் அறிவைக் கூடி
பாதியாயி முப்பொருளும் மூன்று மொன்றாய்
பரைவெளி யாயிநின்ற பராபரையின் பாதம்
நீதியாயி வாரணத்தின் முகவன் பாதம்
நிறைந்தமால் வாணிகுறு கந்தன் பாதம்
கோதியாயி நாதாக்கள் பாதம் போத்திச்
சொல்லுவேன் சூஷ்திரத்தின் சொல்லு வேனே
-க-

முடிவு:

எங்கள் சற்குருனான சுவாமியார் சிங்காதி மருக்குது அங்கேவந்து மகாபுத்தியுடனேயுங் கூடி வாங்கி, கண் மூக்கு சிரசு மேல் வைத்து ஆய்த வாரனாள் முதல் தூபதீப சோடச உபசாரத்தோடே வாசிக்கவும். இல்லாதே போனால் துஷ்டத்தின் புத்தினாலே எடுத்துக் கொண்டு போ(னா)ல் அவர்களுக்கு சாபம் பெருவயறு கொண்டு வலதழிந்து யிந்தப் புவி(யி)லே அலைந்து

மதி கெட்டு மேலும் ஆவி கோடி நரகெய்(து)வார். வாசினை யோடவுங் கூடி வாங்கூடி யிருப்பார்க(ளெ)ன்றவாறு.

கிணேசந் துணை.

## 478. l/559 - m - சுந்தரானந்தர் நாயன் இருபத்தைந்து

பொருள்: ஞானம் இதழ்கள்: 5
அளவு: 11 x 2.7 செய்யுள் எண்ணிக்கை:- 25
நிலை: நன்று, முழுமை.

தொடக்கம்:

பூமிநாத மேகமே புனல்சொரிந்த பூவதா
மாமடா ரவிமுகத்தி லாயிருந்த விந்தடா
சோமநாத மேறிய சொரூபமொத்த சோதியை
யேமவித்தை பூரண மிருக்குமட்ட தீட்சையே.
-க-

முடிவு:

வேதைகாணக் கைமுறைகள் வேணுமல்ல தோர்தனக்
காதரவின் னூலடா வறிந்து பாரு வேதயாம்
ஓதிமம்போல் நந்திவந்து உபதேசமே செப்பும்பார்
ஆதியான பூரண மறிந்து பாரு முற்றுமே.
-உரு.

சுந்தரானந்த நாயன் சுருக்கச் சூத்திரமுற்றும்.
ஆரணிய குருவோ நமகா.
சுப்பிரமணியர் துணை.

## 479. 8239 - b - அட்டவர்க்கப் பரல்

பொருள்: சோதிடம் இதழ்கள்: 15
அளவு; 29.7 x 4.4 செய்யுள் எண்ணிக்கை:-
நிலை: நன்று, குறை. உரை விரவியது
தொடக்கம்:

சக்கரத் திலக்கணமுங் கிரகமேழுந் தானெழுதி
கதிர் முதலாய்ப் பரல்போட் டெண்ணிக்

கைக்குள் வருந்துகை கதிரொளி நாற்பத் தெட்டுங் காணும்
 திக்கொன்பதிலே ஒன்றைப் போக்கும்
சிக்கமொடு முப்பதின் மேலொன்பான்
 செவ்வாய் சிறந்தபுதன் அன்பதிலே நாலைச் சேர்ந்த
விக்கினமிலாக் குருவுக் கன்பத்தாறு கூட்டி
 வெள்ளிதனக் கன்பத்தி ரண்டாக
.....................

முடிவு:

கிரகங்கள் யேறிய சுபவர்களைத் தொகையை வச்சு முன் மிச்சத் துகையைக் கொண்டு பெருக்கிய துகையை உய கொண்டு அறிச்சது [illegible] யலும் சாயலும் சாயலும் பெருக்கி அறிச்சது மாதம் நாள் [illegible] ஆக வரும். இப்படி [illegible] போகும். பார்த்து வயது கண்டு சொல்லவும். [illegible] பேர் குடுத்த நாள் [illegible] யை கூட்டியது [illegible] மேல் வந்தால் வயசை தள்ளி போட்டு சிடத்தை வயசாகயெடுத்துக் கொள்ளவும். யிது வர்க்க யோக ஆயுசு.

## 480. 866 / - b - சிறுத்தொண்டன் கதை

பொருள்: கதை  இதழ்கள்: 15
அளவு: 28.2 x 3.6  செய்யுள்.எண்ணிக்கை: - சுமார் 240 வரிகள்
நிலை: நன்று, முழுமை.

குறிப்பு:

பக்கத்துக்கு 8 வரிகள். கும்மி வடிவினது. பெரியபுராணச் சிறுத் தொண்டன் கதையாகும்.

தொடக்கம்:

செண்பக மல்லிகை பூச்சொரியத் திருச்செங் காட்டூரேன் குடி
 வாழ்க
அன்புள்ள மன்னன் சிறுத்தொண்டன்மேல் நல்ல
 ஆனந்தக்கும்மித் தமிழுரைக்க
ஆதியிலே சிறுத் தொண்டன் கதையை அருமையுடன் கும்மிப்
 பாட்டுரைக்க
வீதி மரந்தனி லேயிருக்கும் நல்ல வினாயகன் பொற்பாதங்
 காப்பாமே
சிறுத்தொண்டன் பத்தின கதைப்பயனை யிந்தச் சீமையி

லுள்ளோர் மனமகிழ

அருமையுடன் கும்மிப் பாட்டுரைக்க நல்ல ஆதிசிவன் பாதங் காப்பாமே.

முடிவு:

நாற்பத் தெண்ணாயிரங் கோடி ரிசிகளு
நாக லோகப் பெருந் தீவில் வந்து
தேவாதி தேவர்கள் காட்சி கொடுக்க
சிறுத்தொண்டனுங் கண்டு மிக மகிழ்ந்து
தேவர்கள் காட்சி மிகக் கொடுத்து
தெய்வ லோகங்களிலே வீரன் வீத்திருந்தான்.

சிறுத்தொண்டன் கதை முகிந்தது. முற்றும். ௲௮௱௭௰௬ (கி.பி.1876)ஆவணி ௨௰௫-ந் தேதி ஓட்டப்பிடாரந் தாலுகா கொல்லங் கிராமத்திலிருககும் சாதிகம்மாளர் கி.மு. தம்பி சூரப்ப சாமினாடார் சிறுத்தொண்டன் கும்மிப்பாட்டு.

# சுவடிகளின் அகரவரிசை அட்டவணை

| வரிசை எண் | நூல் வரிசை எண் | சுவடிஎண் | சுவடித் தலைப்பு |
|---|---|---|---|
| 1. | 466 | 11408 | அகப்பொருள் விளக்கம் |
| 2. | 474 | 8836-i | அகத்திய நாயனார்புராணம் நூற்றி ஐம்பது |
| 3. | 272 | 8088-i | அகத்திய முனி அதீத சூத்திரம் |
| 4. | 476 | 8829-a | அகத்தியர் குருநூல் அறுநூறு |
| 5. | 258 | 6211-c | அகத்தியர் கெர்ப்ப சூத்திரம் |
| 6. | 284 | 8500-d | அகத்தியர் சூத்திரம் பதினாறு |
| 7. | 259 | 5454-b | அகத்தியர் திரட்டு |
| 8. | 260 | 2137 | அகத்தியர் திரட்டு |
| 9. | 261 | 5935-a | அகத்தியர் திரட்டு |
| 10. | 263 | 5639-a | அகத்தியர் திரட்டு |
| 11. | 256 | 3791-d | அகத்தியர் நீலகண்டம் ஐம்பது |
| 12. | 472 | 8829-f | அகத்தியர் பிரயோக மூலிகைசூத்திரம் நூறு |
| 13. | 475 | 8829-e | அகத்தியர் பூரண சூத்திரம் இருநூற்றுப் பதினாறு |

| | | | |
|---|---|---|---|
| 14. | 454 | 1452 | அகத்தியர் வைத்திய சாஸ்திரம் |
| 15. | 255 | 8882-a | அகத்தீசர் பஞ்சாக்ஷரப்பத்து |
| 16. | 473 | 8836-h | அகத்தீசுவர சுவாமிகள் சூத்திரம் நூற்றிருபது |
| 17. | 262 | 7946-a | அகத்தீசுவரர் இந்திரசாலம் ஆயிரத்திருநூறு |
| 18. | 453 | 6352-b | அகராதி நிகண்டு |
| 19. | 281 | 8893-e | அகஸ்தியர் அறுநூறுக்குச் சூத்திரம் |
| 20. | 467 | 11379-a | அகஸ்தியர் திரட்டு |
| 21. | 462 | 11465-a | அகஸ்தியர் திரட்டு |
| 22. | 463 | 11155 | அகஸ்தியர் வைத்தியம் ஆயிரத்தைந்நூறு |
| 23. | 465 | 9153-b | அங்கயற்கண்ணி அகவல் |
| 24. | 443 | 8179 | அசுவமேதயாகக் கதை |
| 25. | 445 | 6309 | அசுவமேதயாகக் கதை |
| 26. | 446 | 10288 | அசுவமேதயாகக் கதை |
| 27. | 448 | 8119 | அசுவமேதயாகக் கதை |
| 28. | 447 | 7953 | அசுவமேதயாகம் |
| 29. | 444 | 7954 | அசுவமேதயாகம் |
| 30. | 458 | 6347-i | அட்டகர்ம மூலிகை |
| 31. | 479 | 8239-b | அட்டவர்க்கப்பரல் |

| | | | |
|---|---|---|---|
| 32. | 257 | 3781-a | அட்டவணைச் சருக்கம் |
| 33. | 283 | 8500-c | அடுக்குநிலை ஞானபோதகம் |
| 34. | 275 | 3210-d | அபிராமி அந்தாதி |
| 35. | 264 | 9128-b | அமராபதி கதை |
| 36. | 265 | 5448-b | அமராபதி கதை |
| 37. | 266 | 7962-b | அமராபதி கதை |
| 38. | 267 | 8249-b | அமராபதி கதை |
| 39. | 268 | 8411-b | அமராபதி கதை |
| 40. | 449 | 5655-b | அமராபதி கதை |
| 41. | 250 | 8661-b | அரிச்சந்திரன் கும்மி |
| 42. | 439 | 4106-b | அரிச்சந்திர நாடகம் |
| 43. | 438 | 3224 | அரிச்சந்தர நாடகம் |
| 44. | 468 | 10377 | அரிச்சந்திர புராணம் |
| 45. | 469 | 9068-a | அரிச்சந்திர புராணம் |
| 46. | 276 | 8661-b | அரிச்சந்திரன் கதை |
| 47. | 461 | 3982-c | அருணாசல புராணம் |
| 48 | 450 | 3946-i | அனுபோக வெண்பாத் தெரிவு |

| | | | |
|---|---|---|---|
| 49. | 269 | 8651-c | ஆசிரியவிருத்தம் |
| 50. | 460 | 3982-b | ஆத்திச் சூடி |
| 51. | 440 | 10397 | ஆமையரசன் அம்மானை |
| 52. | 470 | 3982-a | ஆறெழுத்தந்தாதி |
| 53. | 441 | 11574 | ஆறை அழகப்ப முதலியார் விறலிவிடு தூது |
| 54. | 459 | 8437 | இசக்கி கதை |
| 55. | 451 | 6713-d | இந்திரன் பழிதீர்த்த படலம் |
| 56. | 253 | 8026-f | இராசகோபால மாலை |
| 57. | 277 | 10431 | இராமசாமி திருமேனிக்கறுப்பு |
| 58. | 471 | 2771-f | இராமானுஜ நூற்றந்தாதி |
| 59. | 271 | 2970 | இராமாயண காதை |
| 60. | 456 | 8434 | இராமாயணம் வில்லுப்பாட்டு |
| 61. | 457 | 8486 | உத்தர கீதை |
| 62. | 464 | 3946-H | உபதேச வெண்பா |
| 63. | 452 | 3946-m | உயிருண்மை யாதி |
| 64. | 455 | 6347-g | உருக்கினம் |
| 65. | 477 | 5908-b | உரோமதேவர் சூத்திரம் |

| | | | |
|---|---|---|---|
| 66. | 270 | 6354-O | உரோமரிஷி ஞானசூத்திரம் ஐம்பது |
| 67. | 251 | 9287-b | உலகநீதி |
| 68. | 252 | 5654-C | உலகநீதி |
| 69. | 254 | 8026-C | உலகநீதி |
| 70. | 273 | 8660-a | உலகநீதி |
| 71. | 274 | 8663-a | உலகநீதி |
| 72. | 298 | 11514 | உலகம்மன் அந்தாதி |
| 73. | 282 | 11318-C | எண்ணெய்ப்பாட்டு |
| 74. | 279 | 818 | ஐவர் அம்மானை |
| 75. | 280 | 9084 | ஒன்பதூர் விறலி விடுதூது |
| 76. | 296 | 10366-C | கஞ்சன் அம்மானை(கிருட்டிணன் கதை) |
| 77. | 318 | 8651-a | கட்டபொம்மன் பாட்டு |
| 78. | 292 | 6332 | கணக்கதிகாரம் |
| 79. | 321 | 4083 | கணக்கதிகாரம் |
| 80. | 322 | 5683 | கணக்கதிகாரம் |
| 81. | 289 | 10283 | கதாசிந்தாமணி |
| 82. | 313 | 8026-h | கதிர்காம மாலை |

| | | | |
|---|---|---|---|
| 83. | 312 | 9287-c | கதிர்காம மாலை |
| 84. | 340 | 8663-e | கதிர்காம வேலன் மாலை |
| 85. | 290 | 7966 | கந்தபுராணக் கதை |
| 86. | 300 | 3945-b | கந்தபுராணம் |
| 87. | 303 | 11559-h | கயிலாசச் சட்டைமுனி நாயன் சோடச சூத்திரம் |
| 88. | 323 | 6203-b | கருவூர்ச் சித்தர் பலதிரட்டு |
| 89. | 324 | 6203-a | கருவூர்ச் சித்தர் பாடல் சூத்திரம் |
| 90. | 309 | 5908-c | கருவூரார் சூத்திரம் |
| 91. | 325 | 6299 | கருவூரார் பலதிரட்டு |
| 92. | 326 | 7933 | கருவூரார் பலதிரட்டு |
| 93. | 339 | 11584-c | கருவை வெண்பா |
| 94. | 327 | 7938 | கருவூரார் பூசாவிதி |
| 95. | 328 | 7942 | கருவூரார் பூசாவிதி |
| 96. | 335 | 6348-c | கல்லாடம் |
| 97. | 317 | 814 | கல்யாண வாழ்த்து |
| 98. | 306 | 14105 | கவிகள் பேரில் விருத்தம். வண்ணம் |
| 99. | 338 | 6391 | காசிக் காண்டம் |
| 100. | 336 | 4073-a | காசிக் காண்டம் |

| | | | |
|---|---|---|---|
| 101. | 297 | 6694 | காமன் கதை |
| 102. | 301 | 10448-c | கானாமிர்தம் |
| 103. | 316 | 3162-a | கிரக பலம் |
| 104. | 311 | 8239-a | கிருக சமையம் |
| 105. | 307 | 7958 | கிருஷ்ணன் அம்மானை |
| 106. | 286 | 8432 | குத்தால லிங்கர் கொடிப்பாட்டு |
| 107. | 304 | 5954-h | குதிரைப் பாய்ச்சல் அகவல் |
| 108. | 291 | 4103-e | கும்பகருணப்படலம் |
| 109. | 315 | 7296 | குருநாடி |
| 110. | 314 | 8882-b | குருமுனி மயேசுபரி பூசாவிதி |
| 111. | 299 | 8076-a | குலோத்துங்கன் ஐந்திணைக் கோவை |
| 112. | 298 | 9153-a | குற்றாலக் குறவஞ்சி நாடகம் |
| 113. | 331 | 176-a | கூப சாஸ்திரம் |
| 114. | 332 | 8202 | கூப சாஸ்திரம் |
| 115. | 329 | 3871 | கூர்ம புராணம் |
| 116. | 337 | 3901-b | கூர்மபுராணம் |
| 117. | 285 | 8140-b | கெர்ப்பக் கோள் |
| 118. | 320 | 9104-c | கெர்ப்பக்கோள் சூத்திரம் |

| | | | |
|---|---|---|---|
| 119. | 334 | 3915-b | கெவுளி நூல் |
| 120. | 293 | 9124-a | கேதார நாதர் சரித்திரம் |
| 121. | 302 | 6719-b | கைவல்ய நவநீதம் |
| 122. | 295 | 6277-a | கைவல்ய நவநீதம்(மூலம்) |
| 123. | 305 | 5954-e | கைலாச சட்டைமுனி சுவாமி வேதாந்த ஞானம் |
| 124. | 308 | 5908-e | கைலாச மூர்த்தி ஞானம் |
| 125. | 319 | 2970-a | கொக்கோகம்(கொக்குக சாஸ்திரம்) |
| 126. | 310 | 5908-a | கொங்கண சுவாமி சரக்கு வைப்பு |
| 127. | 287 | 6274-a | கொங்கணர் சரக்கு வைப்பு நூறு |
| 128. | 294 | 10316-c | கோயிற் புராணம் |
| 129. | 330 | 11433 | கௌசிக நூல்(திகிரி ரேகை) |
| 130. | 333 | 8893-a | கௌசிக மாமுனி குழம்பு |
| 131. | 1 | 8855 | சகுந்தலை மாலை(சகுந்தலை விலாசம்) |
| 132. | 392 | 8026-k | சங்கர சதாசிவ மாலை |
| 133. | 385 | 5954-k | சங்கராசாரியார் ஞான உலா |
| 134. | 342 | 3220 | சட்டைமுனி நிகண்டு |
| 135. | 380 | 11471-a | சடத்துவர் மார்க்கம் |
| 136. | 390 | 8026-g | சண்முக மாலை |

| | | | |
|---|---|---|---|
| 137. | 249 | 11318-b | சத்தி குன்மம் |
| 138. | 359 | 8415 | சதமுக ராமாயணம் |
| 139. | 409 | 3162-b | சந்திர காவியம் |
| 140. | 44 | 8500-e | சமாதி சகசம் - பிரம சகசம் |
| 141. | 360 | 6347-j | சமாதி யுத்தி நூல் |
| 142. | 422 | 8733-a | சரமோபாய நிர்ணயம் |
| 143. | 391 | 8026-j | சரஸ்பதி மாலை |
| 144. | 394 | 8026-b | சரஸ்வதி தோத்திரம் |
| 145. | 414 | 8859-c | சவுந்தரி(ய)லகிரி |
| 146. | 400 | 8878-b | சவுந்தரிய லகிரி |
| 147. | 399 | 8511-a | சவுந்தரிய லகிரி |
| 148. | 398 | 6357 | சவுந்தரிய லகிரி |
| 149. | 397 | 3966 | சவுந்தரிய லகிரி |
| 150. | 396 | 8134 | சவுந்தரிய லகிரி |
| 151. | 374 | 3946-o | சன்மார்க்க சித்தியார் |
| 152. | 402 | 6211-d | சன்னிநிதானம் |
| 153. | 393 | 8026-e | சனியீசுர பகவான் தோத்திரம் |
| 154. | 365 | 2232 | சர்த்தா பாட்டு |

| | | | |
|---|---|---|---|
| 155. | 395 | 8878-b | சாத்தியநாமப் பேர்வழி |
| 156. | 418 | 11252 | சாமுத்திரிகா லக்ஷணம் |
| 157. | 419 | 11255 | சாமுத்திரிகா லக்ஷணம் |
| 158. | 421 | 6243-a | சாமுத்திரிகா லக்ஷணம் |
| 159. | 405 | 11277 | சாமுத்ரிகா லக்ஷணம் |
| 160. | 382 | 6347-e | சித்தர் வெண்பா |
| 161. | 341 | 9163-b | சித்தர் வெண்பா |
| 162. | 425 | 10430 | சித்தராரூட நொண்டிச்சிந்து |
| 163. | 424 | 11309 | சித்தராரூட நொண்டிச் சிந்து |
| 164. | 413 | 8411-a | சித்திரபுத்திர நயினார் கதை |
| 165. | 411 | 7962-a | சித்திரபுத்திரர் கதை |
| 166. | 412 | 8249-a | சித்திரபுத்திரர் கதை |
| 167. | 410 | 5448-a | சித்திரபுத்திர நயினார் கதை |
| 168. | 408 | 9128-a | சித்திரபுத்திரன் கதை |
| 169. | 373 | 11465-b | சிதம்பர அகவல் |
| 170. | 46 | 3975-b | சிந்தாமணி |
| 171. | 362 | 9100-b | சிந்தாமணிநாதர் பதிகம் |
| 172. | 347 | 11379-h | சில தலப்பண் |

| | | | |
|---|---|---|---|
| 173. | 426 | 8895-e | சில மருந்துகள் |
| 174. | 370 | 11447-a | சிவ சயிலத் தலபுராணம் |
| 175. | 349 | 6235-c | சிவஞானசித்தியார் சுபட்சம் |
| 176. | 346 | 6235-b | சிவஞானசித்தியார் பரபட்சம் |
| 177. | 375 | 11471-c | சிவஞான போதவுரை |
| 178. | 379 | 2891-c | சிவதத்துவம் |
| 179. | 383 | 3945-a | சிவபுராணம் |
| 180. | 404 | 4110-e | சிவபுராணம் |
| 181. | 407 | 5935-b | சிவபுராணம் |
| 182. | 344 | 2886-g | சிவபோக சாரம் |
| 183. | 406 | 4110-b | சிவநாமப் பஃறொடை |
| 184. | 364 | 9237-c | சிவவாக்கியர் ஞானம் |
| 185. | 345 | 2886-h | சிவவாக்கியம் |
| 186. | 351 | 6682 | சிறுத்தொண்ட சித்தர் மகிமை |
| 187. | 388 | 8661-a | சிறுத்தொண்டர் கதை |
| 188. | 480 | 8661-b | சிறுத்தொண்டன் கதை |
| 189. | 389 | 9287-a | சின்னப் போற்றி மாலை |
| 190. | 366 | 8248 | சீவக அம்மானை |

| | | | |
|---|---|---|---|
| 191. | 369 | 8825-b | சீவக அம்மானை |
| 192. | 40 | 11606 | சீவக சிந்தாமணி |
| 193. | 39 | 6353 | சீவக சிந்தாமணி |
| 194. | 41 | 11599 | சீவக சிந்தாமணி |
| 195. | 42 | 6348-a | சீவக சிந்தாமணிச் சுருக்கம் |
| 196. | 423 | 8088-g | சுந்தரானந்தர் சூத்திரம் இருபத்தைந்து |
| 197. | 417 | 6354-q | சுந்தரானந்தர் சூத்திரம் நூறு |
| 198. | 478 | 11559-m | சுந்தரானந்தர் நாயன் இருபத்தைந்து |
| 199. | 354 | 11553 | சுந்தரி கலியாணக் கும்மி |
| 200. | 416 | 8651-b | சுப்பிரமணியர் பேரில் ஆசிரிய விருத்தம் |
| 201. | 357 | 8825-d | சுப்பிரமணியர் மூவரசன் பேரில் வண்ணங்கள் |
| 202. | 343 | 6214-b | சுரநிதானம் |
| 203. | 348 | 8140-c | சுரநூல் |
| 204. | 415 | 8492-a | சூடாமணி நிகண்டு |
| 205. | 350 | 8515 | சூரபத்மன் கதை |
| 206. | 377 | 9237-b | சூரிய அகவல் |
| 207. | 403 | 4110-d | சேத்திரக் கோவை |
| 208. | 45 | 3884-b | சைவ பூஷணம் |

| | | | |
|---|---|---|---|
| 209. | 361 | 6277-b | சொரூப சாரம் |
| 210. | 368 | 8031-a | சோழன் பசுக்கதை |
| 211. | 371 | 11311 | சோழன் பசுக்கதை |
| 212. | 372 | 9268 | சோழன் பசுக்கதை |
| 213. | 376 | 9249 | சோழன் பசுக்கதை |
| 214. | 49 | 7969-a | ஞானக் கும்மி |
| 215. | 50 | 8039-a | ஞானக் கும்மி |
| 216. | 47 | 8500-b | ஞானத் தாழிசை |
| 217. | 51 | 7963-a | ஞானப்பாட்டு |
| 218. | 52 | 8159-c | ஞான மருந்து |
| 219. | 48 | 8500-f | ஞான வெண்பா |
| 220. | 60 | 6368-a | தண்டியலங்காரம் |
| 221. | 92 | 11142 | தத்துவத்ரயம் ஆதிய நூல்கள் |
| 222. | 58 | 6719-a | தத்துவ விளக்கம் |
| 223. | 75 | 8448-b | தத்வத்ரய வியாக்யானம் |
| 224. | 87 | 3928 | தமிழறி மடந்தை கதை |
| 225. | 93 | 8159-b | தழுவன் பாடல் |

| | | | |
|---|---|---|---|
| 226. | 54 | 6214-a | தக்ஷிணாமூர்த்திக்கும் சட்டைமுனிக்கும் தர்க்கம் |
| 227. | 53 | 3217-a | தக்ஷிணாமூர்த்தி சூத்திரம் |
| 228. | 77 | 8829-d | தன்வந்திரி பகவான் கலைக்கியானம் ஐந்நூறு |
| 229. | 95 | 4106-a | தாயுமானவர் பாடல் |
| 230. | 102 | 3974-d | தாயுமானார் பாயப்புலி |
| 231. | 88 | 3249 | திரிகாண்ட ஜோசியம் |
| 232. | 66 | 9261-a | திருக்கயிலாய மான்மியம் |
| 233. | 59 | 6383-c | திருக்குறள் |
| 234. | 91 | 6348-b | திருக்கோவையார் |
| 235. | 69 | 11465-d | திருக்கோவையார் |
| 236. | 85 | 7946-b | திருச்சிற்றம்பலம் திருவாசகம் |
| 237. | 104 | 6376 | திருப்பதிக் கோவை |
| 238. | 81 | 8026-g | திருப்பரங்குன்ற மாலை |
| 239. | 105 | 9018-c | திருப்பரங்குன்ற மாலை |
| 240. | 106 | 9049 | திருப்பரங்குன்ற மாலை |
| 241. | 107 | 8663-d | திருப்பரங்குன்ற மாலை |
| 242. | 108 | 8660-e | திருப்பரங்குன்ற மாலை |
| 243. | 109 | 8653-f | திருப்பரங்குன்ற மாலை |

| | | | |
|---|---|---|---|
| 244. | 55 | 11389-f | திருப்பல்லாண்டு |
| 245. | 78 | 5449-d | திருப்பள்ளியெழுச்சி |
| 246. | 80 | 5449-a | திருப்பாவை |
| 247. | 98 | 11299 | திருப்புகழ் |
| 248. | 99 | 5760 | திருப்புகழ் |
| 249. | 100 | 5641 | திருப்புகழ் |
| 250. | 101 | 11475 | திருப்புகழ் |
| 251. | 79 | 5449-c | திருமாலை |
| 252. | 76 | 8825-a | திருமேனிக் கறுப்பு |
| 253. | 103 | 4073-b | திருவண்ணாமலைப் புராணம் |
| 254. | 73 | 11283-b | திருவள்ளுவ மாலை |
| 255. | 64 | 11283-a | திருவள்ளுவர் சரித்திரம் |
| 256. | 63 | 6383-b | திருவள்ளுவர் சரித்திரம் |
| 257. | 94 | 10320-c | திருவாசகம் |
| 258. | 83 | 5454-a | திருவாசகம் |
| 259. | 84 | 5639-b | திருவாசகம் |
| 260. | 74 | 11465-c | திருவாசகம் |

| | | | |
|---|---|---|---|
| 261. | 68 | 11379-b | திருவாசகம் |
| 262. | 67 | 8680-c | திருவாய்மொழி நூற்றந்தாதி |
| 263. | 62 | 11380 | திருவாய்மொழி வியாக்கியானம் |
| 264. | 72 | 4331 | திருவாய்மொழி வியாக்கியானம் |
| 265. | 89 | 14103-d | திருவாலவாயப்பன் காந்தாரம் |
| 266. | 82 | 5639-c | திருவிசைப்பா |
| 267. | 71 | 11379-e | திருவிசைப்பா |
| 268. | 96 | 3923-b | திருவேங்கட மாலை |
| 269. | 97 | 4409-a | திவ்விய பிரபந்தம் திருச்சந்த விருத்தம் |
| 270. | 57 | 10349 | துருபத மஹாராஜா கதை |
| 271. | 65 | 2886-f | தெளிந்த முப்பது |
| 272. | 90 | 7931-a | தெக்ஷிணாமூர்த்தி சூத்திரம் பன்னிரண்டு |
| 273. | 61 | 8854 | தேவரணங்கு மாறும் வகை (சல்லிய நூல்) |
| 274. | 70 | 4103-a | தேவாரம் |
| 275. | 86 | 6368-b | தொல்காப்பிய நன்னூற் சூத்திரங்கள் |
| 276. | 129 | 8239-c | நட்சத்திர தசை |
| 277. | 127 | 8829-c | நந்தீசுவரர் கருக்கிடை முந்நூறு |
| 278. | 110 | 3946-l | நமசிவாய மாலை |

| | | | |
|---|---|---|---|
| 279. | 111 | 3946-m | நமசிவாய மாலை |
| 280. | 135 | 8867 | நயனவிதி |
| 281. | 151 | 10405-a | நல்வழி |
| 282. | 149 | 11503-b | நல்வழி |
| 283. | 131 | 8866-j | நவகிரக கக்கிச சக்கரம் |
| 284. | 133 | 6354-b | நவசங்கையர் விவேகம் |
| 285. | 1[illegible] | 5646-b | நளவெண்பா |
| 286. | 146 | 10320-a | நளவெண்பா |
| 287. | 145 | 3923-b | நளன் கதை (நைடதம்) |
| 288. | 143 | 9122 | நளன் கதை |
| 289. | 126 | 11512 | நளன் கதை |
| 290. | 125 | 8635 | நளன் கதை (நைடதம்) |
| 291. | 124 | 7985 | நளன் கதை (நைடதம்) |
| 292. | 123 | 3923-a | நளன் கதை (நைடதம்) |
| 293. | 141 | 10294 | நளன் கதை |
| 294. | 142 | 10373 | நளன் கதை |
| 295. | 140 | 7956 | நளன் கதை |

| | | | |
|---|---|---|---|
| 296 | 139 | 10434 | நளன் கதை |
| 297. | 150 | 11503- c | நன்னெறி |
| 298. | 147 | 11117 | நன்றோ தீதோ |
| 299. | 138 | 10406 | நாசிகேது புராணம் |
| 300. | 118 | 2886-i | நாதாந்த சர்ரம் |
| 301. | 288 | 6274-b | நாடி சாஸ்திரம் |
| 302. | 112 | 8198-b | நாடி சாஸ்திரம் |
| 303. | 134 | 3268 | நாடி சாஸ்திரம் |
| 304. | 136 | 3240 | நாடி நிதானம் |
| 305. | 114 | 6383-a | நாலடியார் |
| 306. | 137 | 8442 | நாலு மந்திரிக் கும்மி |
| 307. | 130 | 8661-c | நாலு மந்திரி கதை |
| 308. | 148 | 3884-a | நித்ய கர்ம கதை |
| 309. | 113 | 8027 | நீலி கதை |
| 310. | 117 | 11530 | நெல்லிடு தூது |
| 311. | 132 | 6369-c | நேமிநாதம் |
| 312. | 115 | 6368-e | நேமிநாதம் (தெரிவு) |

| | | | |
|---|---|---|---|
| 313. | 116 | 6361-a | நேமிநாதம் (மூலமும், உரையும்) |
| 314. | 119 | 5918 | நைடதம் |
| 315. | 120 | 8123 | நைடதம் |
| 316. | 121 | 8132 | நைடதம் |
| 317. | 122 | 9141 | நைடதம் |
| 318. | 154 | 3898 | நைடதம் |
| 319. | 176 | 11199 | பக்த சரித்திரம் |
| 320. | 156 | 8068-a | பஞ்ச தசப் பிரகரணம் |
| 321. | 173 | 8809 | பஞ்ச தந்திரக் கதை |
| 322. | 172 | 7961 | பஞ்ச தந்திரக் கதை |
| 323. | 171 | 4103-b | பஞ்ச தந்திரக் கதை |
| 324. | 170 | 8069 | பஞ்ச தந்திரக் கதை |
| 325. | 169. | 8818 | பஞ்ச தந்திரக் கதை |
| 326. | 207 | 11544-a | பஞ்ச ரத்னத் திருப்புகழ் |
| 327. | 157 | 2315-b | பத்துப் பாட்டு |
| 328. | 442 | 341 | பரத நடனவிதி |
| 329. | 193 | 14103-a | பரதம் |

| | | | |
|---|---|---|---|
| 330. | 191 | 6354-f | பரப்பிரம சாதனம் |
| 331. | 208 | 3974-b | பராசக்தி அனுபூதி |
| 332. | 209 | 3974-a | பராபரக் கண்ணி |
| 333. | 182 | 8889-a | பரிபாஷை (3, 4, 5-ஆம் காண்டங்கள்) |
| 334. | 183 | 3791-e | பரி பூரண சூத்திரம் |
| 335. | 155 | 8140-a | பல்லி நூல் |
| 336. | 187 | 8087 | பல பிணிகளுக்கு மருந்து |
| 337. | 153 | 6226 | பல பிணி மருந்து |
| 338. | 190 | 6257-d | பல பிணி மருந்து |
| 339. | 188 | 8891 | பல பிணி மருந்து |
| 340. | 189 | 6264 | பல பிணி மருந்து |
| 341. | 201 | 7931-c | பல வித மருந்துகள் |
| 342. | 152 | 3217-b | பல பிணி மருந்து |
| 343. | 186 | 6730 | பழமொழி விளக்கம் |
| 344. | 194 | 10404 | பழனியந்தாதி |
| 345. | 214 | 3839 | பழனியாண்டவன் ஆனந்தக் களிப்பு |
| 346. | 212 | 3798 | பள்ளிப் பிள்ளையார் துதி |
| 347. | 211 | 8066 | பன்னிரு பாட்டியல் |

| | | | |
|---|---|---|---|
| 348. | 213 | 1080 | பன்னூற்றிரட்டு |
| 349. | 175 | 5776 | பஸ்ம சிந்தூர வகைகள் |
| 350. | 205 | 8159 | பாகவதக் கும்மி (ராசக்ரீடை) |
| 351. | 203 | 611 | பாகவதம் |
| 352. | 202 | 9024 | பாகவதம் |
| 353. | 163 | 9593 | பாச விலாசன் கதை |
| 354. | 200 | 8224 | பாசுரப்படி உபன்யாசம் |
| 355. | 174 | 5452 | பாண்டவர் அசுவமேத யாகம் |
| 356. | 165 | 5641-C | பாண்டவர் வனவாசம் |
| 357. | 166 | 5762 | பாண்டவர் வனவாசம் |
| 358. | 167 | 9067 | பாண்டவர் வனவாசம் |
| 359. | 195 | 8085 | பாண்டவர் வனவாசம் |
| 360. | 210 | 5641 | பாண்டவர் வனவாசம் |
| 361. | 204 | 3837 | பாபநாசத் தலபுராணம் |
| 362. | 164 | 6809 | பாம்புகடி மருந்து |
| 363. | 185 | 11403 | பாவபலன் |
| 364. | 196 | 5760 | பிரச்ன பலன் |

| | | | |
|---|---|---|---|
| 365. | 206 | 5719 | பிரச்ன பலன் நூற்றியெட்டு (நன்றோ தீதோ) |
| 366. | 198 | 14103 | பிரசாதம் |
| 367. | 184 | 4110-a | பிரமபத்திர காண்டம் |
| 368. | 179 | 5854-j | பிரமமுனி நூல் |
| 369. | 198 | 3909 | பிரமோத்திர காண்டம் |
| 370. | 199 | 6168 | பிரமோத்திர காண்டம் |
| 371. | 197 | 9060 | பிரமோத்திர காண்டம் |
| 372. | 181 | 8026-a | பிள்ளையார் சிந்து |
| 373. | 158 | 3946-j | பூசைக் கொத்து |
| 374. | 180 | 5449-b | பெருமாள் திருமொழி |
| 375. | 168 | 11379-g | பெரியபுரா்ணச் செய்யுட்டிரட்டு |
| 376. | 192 | 8088-l | போக நயினார் சூத்திரம் பதின்மூன்று |
| 377. | 161 | 6347-a | போக நயினார் சூத்திரம் பதின்மூன்று |
| 378. | 162 | 6347-d | போக நாதர் கொடை முறை |
| 379. | 160 | 6347-b | போக நாதர் சோடச சூத்திரம் |
| 380. | 159 | 6347-c | போகநாதர் பூசா விதி |
| 381. | 178 | 11559-b | போகர் நாயன் சூத்திரம்(முப்பூ) |
| 382. | 177 | 11559-e | போகர் நாயன் சூத்திரம் ஐம்பது |

| | | | |
|---|---|---|---|
| 383. | 244 | 3975-a | மகம்மதிய வேதம் |
| 384. | 220 | 6322 | மகாபாரதக் கதை |
| 385. | 223 | 7967 | மகாபாரத நாடகம் |
| 386. | 235 | 8088-h | மச்சமுனி சூத்திரம் |
| 387. | 228 | 11559-j | மச்சமுனி நாயன் சூத்திரம் எண்பது |
| 388. | 230 | 5908-d | மச்சமுனிவர் வாகட சாத்திரம் |
| 389. | 243 | 11607 | மதன காமராஜன் கதை |
| 390. | 225 | 6199 | மதனநூல் |
| 391. | 240 | 7943 | மதனநூல் ஈட்டு வகை |
| 392. | 241 | 6429-b | மதன வித்தார மாலை |
| 393. | 242 | 6404 | மதன வித்தார மாலை |
| 394. | 224 | 3216 | மதுரை வீரன் கதை |
| 395. | 232 | 3791-b | மருந்துசெய் முறைகள் சில |
| 396. | 234 | 11403-b | மலடுக்கு மருந்து |
| 397. | 237 | 8893-b | மன்மத சிந்தாமணி |
| 398. | 239 | 8888 | மன்மத நூல் |
| 399. | 236 | 8893-d | மன்மத மருந்து |

| | | | |
|---|---|---|---|
| 400. | 229 | 5920 | மனை அலங்காரம் |
| 401. | 233 | 11403-d | மனை நூல் |
| 402. | 222 | 8433 | மார்க்கண்டன் கதை |
| 403. | 221 | 5655-a | மார்க்கண்டன் கதை அல்லது சித்திரபுத்திர நயினார் கதை |
| 404. | 216 | 2611 | மார்க்கண்டன் சரித்திரம் |
| 405. | 217 | 9108 | மார்க்கண்ட நாடகம் |
| 406. | 218 | 8854 | மார்க்கண்ட நாடகம் |
| 407. | 219 | 8253 | மார்க்கண்ட நாடகம் |
| 408. | 226 | 5641-b | மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் |
| 409. | 215 | 9163-a | முக்கூடற்பள்ளு |
| 410. | 238 | 11318 | முத்தணைந்த முதலியார் கும்மிப்பாட்டு |
| 411. | 227 | 2315-c | முளைப்பாட்டு |
| 412. | 231 | 8026-d | மூதுரை |
| 413. | 245 | 8660-b | மூதுரை |
| 414. | 249 | 8653-a | மூதுரை |
| 415. | 247 | 8663-b | மூதுரை |
| 416. | 248 | 11548-b | மூதுரை |

| | | | |
|---|---|---|---|
| 417. | 2 | 8836-j | யூகமுனி நாடி |
| 418. | 437 | 8680-b | ரா்மானுஜ நூற்றந்தாதி |
| 419. | 431 | 7940 | ராவணன் பூசைவிதி |
| 420. | 21 | 7931-b | ரோமரிஷி சூத்திரம் பதினெட்டு |
| 421. | 11 | 6354-e | ரோமரிஷி வைத்தியம் பத்தொன்பது |
| 422. | 7 | 8895-d | ருது சாந்தி சாத்திரம் |
| 423. | 5 | 8878-a | ருது சாந்தி சாஸ்திரம் |
| 424. | 6 | 8882-c | ருது நாள் பலன் |
| 425. | 433 | 3972-a | ருது லஷணாதி |
| 426. | 432 | 3972-b | ருது லக்ஷணாதி அர்த்தம் |
| 427. | 430 | 10441-a | வகுளாதேவி மஹாத்மியம் |
| 428. | 13 | 11112 | வசந்தராயர் பத்திரிகை |
| 429. | 4 | 8878-c | வசியேந்திரம் |
| 430. | 3 | 8511-b | வயிராக்கிய சதகம் |
| 431. | 436 | 9237-a | வாலபரமேசுவரி அகவல் |
| 432. | 38 | 11503-a | வாக்குண்டாம் |
| 433. | 14 | 9100-a | வாசுதேவ நல்லூர்த் தலபுராணம் |

| | | | |
|---|---|---|---|
| 434. | 20 | 6156 | வாலைப்பாட்டு |
| 435. | 8 | 8895-c | வாலைப்பாட்டு |
| 436. | 19 | 8893-c | வாலை ரசம் |
| 437. | 435 | 10448-b | வாழித்திருநாமம் |
| 438. | 37 | 11544-b | விநாயகர் அகவல் |
| 439. | 434. | 6236-b | விருத்தாசல புராணம் |
| 440. | 428 | 9068-b | வில்லிபாரதம் |
| 441. | 427 | 8825-c | விவேக சிந்தாமணி |
| 442. | 10 | 8492-b | விஷ வைத்தியம் |
| 443. | 9 | 3242 | விஷ வைத்திய மந்திரங்கள் |
| 444. | 15 | 9005 | வீரகுமாரன் கதை |
| 445. | 16 | 5656 | வீரபோக வசந்தராயர் பத்திரிகை |
| 446. | 17 | 3984 | வீரபோக வசந்தராயர் பத்திரிகை |
| 447. | 429 | 9153-c | வேத பத்திரிகை |
| 448. | 12 | 8853-c | வேதாந்தப் பாடல்கள் |
| 449. | 18 | 10302 | வைகுண்ட அம்மானை |
| 450. | 22 | 5453 | வைகுண்ட அம்மானை |

| | | | |
|---|---|---|---|
| 451. | 23 | 7959 | வைகுண்ட அம்மானை |
| 452. | 34 | 6673 | வைகுண்ட அம்மானை |
| 453. | 25 | 11278 | வைகுண்ட அம்மானை |
| 454. | 26 | 10354 | வைகுண்ட அம்மானை |
| 455. | 27 | 10369 | வைகுண்ட அம்மானை |
| 456. | 28 | 10333 | வைகுண்ட அம்மானை |
| 457. | 29 | 10370 | வைகுண்ட அம்மானை |
| 458. | 30 | 11621 | வைகுண்ட அம்மானை |
| 459. | 31 | 9236 | வைகுண்ட அம்மானை |
| 460. | 32 | 8503 | வைகுண்ட அம்மானை |
| 461. | 33 | 9063 | வைகுண்ட அம்மானை |
| 462. | 35 | 3214 | வைகுண்ட அம்மானை |
| 463. | 36 | 7955 | வைகுண்ட அம்மானை |
| 464. | 367 | 8680 | ஜீயர் அந்தாதி |
| 465. | 386 | 5659 | ஸ்ரீகிருஷ்ண அம்மானை |
| 466. | 387 | 5449-e | ஸ்ரீகிருஷ்ண பகவான் கும்மிப்பாட்டு |
| 467. | 128 | 5954-c | ஸ்ரீநந்திகேசுபரர் பரம ஞானம் |

| | | | |
|---|---|---|---|
| 468. | 43 | 8117 | ஸ்ரீமத் பாகவதம் |
| 469. | 378 | 10467 | ஸ்ரீரங்க மஹான்மியம் |
| 470. | 381 | 10448-a | ஸ்ரீரங்க மஹான்மியம் |
| 471. | 352 | 10292 | ஸ்ரீராம கதை |
| 472. | 401 | 3791-c | ஸ்ரீராமதேவர் சூத்திரம் |
| 473. | 353 | 8121 | ஸ்ரீராமர் அம்மானை அல்லது ராமர் வனவாசக் கதை |
| 474. | 356 | 10337 | ஸ்ரீராமரம்மானை |
| 475. | 384 | 8219-b | ஸ்ரீவசன பூஷணம் |
| 476. | 358 | 10441-c | ஸ்ரீவில்லிபுத்தூர் மஹாத்மியம் |
| 477. | 363 | 11389 | ஸ்திரீ சாத்தகம் |
| 478. | 420 | 6243-b | ஸ்திரீ லக்ஷணம் |
| 479. | 355 | 8832 | ஹிரண்ய நாடகம் அல்லது பிரகலாதன் கதை |

★★★

# சுவடிகளின் பொருளடைவு அகராதி

## 1. சமயம்

| வரிசை எண். | நூல் வரிசை எண். | சுவடி எண் | சுவடித்தலைப்பு |
|---|---|---|---|
| 1 | 45 | 3884-b | சைவ பூஷணம் |
| 2. | 48 | 8500-f | ஞான வெண்பா (இஸ்லாம்) |
| 3 | 55 | 11389-f | திருப்பல்லாண்டு (சைவம்) |
| 4 | 62 | 11380 | திருவாய்மொழி வியாக்யானம் |
| 5. | 65 | 2886-f | தெளிந்த முப்பது(சைவம்) |
| 6. | 67 | 8680-c | திருவாய்மொழி நூற்றந்தாதி |
| 7. | 68 | 11379-b | திருவாசகம் |
| 8. | 69 | 11465-d | திருக்கோவையார் |
| 9. | 70 | 4103-a | தேவாரம் |
| 10. | 71 | 11379-e | திருவிசைப்பா |

| | | | |
|---|---|---|---|
| 11. | 72 | 4331 | திருவாய்மொழி வியாக்யானம் |
| 12. | 74 | 11465-c | திருவாசகம் |
| 13. | 75 | 8448-b | தத்வத்ரய வியாக்யானம்(வைணவம்) |
| 14. | 78 | 5449-d | திருப்பள்ளியெழுச்சி |
| 15. | 79 | 5449-c | திருமாலை |
| 16. | 80 | 5449-a | திருப்பாவை |
| 17. | 82 | 5639-c | திருவிசைப்பா |
| 18. | 83 | 5454-a | திருவாசகம் |
| 19. | 84 | 5639-b | திருவாசகம் |
| 20. | 85 | 7946-b | திருச்சிற்றம்பலம் திருவாசகம் சிவபுராணம் |
| 21. | 89 | 14103-d | திருவாலவாயப்பன் காந்தாரம் |
| 22. | 91 | 6348-b | திருக்கோவையார் |
| 23. | 92 | 11142 | தத்துவத்ரயம் ஆதிய நூல்கள்(வைணவம்) |
| 24. | 93 | 8159-b | தழுவன்பாடல்(வைணவம்) |
| 25. | 94 | 10320-c | திருவாசகம் |
| 26. | 97 | 4409-a | திவ்விய பிரபந்தம் திருச்சந்த விருத்தம் |
| 27. | 98 | 11299 | திருப்புகழ் |

| | | | |
|---|---|---|---|
| 28. | 99 | 5760 | திருப்புகழ் |
| 29. | 100 | 5641 | திருப்புகழ் |
| 30. | 101 | 11475 | திருப்புகழ் |
| 31. | 110 | 3946-l | நமசிவாய மாலை |
| 32. | 118 | 2886 | நாதாந்த சாரம்(சைவம்) |
| 33 | 148 | 3884-a | நித்ய கர்ம விதி |
| 34. | 158 | 3946-f | பூசைக்கொத்து(சைவம்) |
| 35. | 169 | 11379-g | பெரியபுராணச் செய்யுட்டிரட்டு |
| 36. | 180 | 5449-b | பெருமாள் திருமொழி |
| 37. | 184 | 4110-a | பிரமபத்திர காண்டம்(சைவம்) |
| 38. | 198 | 14103 | பிரசாதம் |
| 39. | 200 | 8224 | பாசுரப்படி உபன்யாசம்(வைணவநூல்) |
| 40. | 207 | 11544-a | பஞ்சரத்னத் திருப்புகழ் |
| 41. | 209 | 3974-a | பராபரக் கண்ணி |
| 42. | 244 | 3975-a | மகம்மதிய வேதம்(இஸ்லாம்) |
| 43. | 259 | 5454-b | அகத்தியர் திரட்டு(சைவம்) |
| 44. | 260 | 2137 | அகத்தியர் திரட்டு(சைவம்) |

| | | | |
|---|---|---|---|
| 45. | 261 | 5935-a | அகத்தியர் திரட்டு(சைவம்) |
| 46. | 263 | 5639-a | அகத்தியர் திரட்டு(சைவம்) |
| 47. | 301 | 10448-c | கானாமிர்தம்(வைணவம்) |
| 48. | 344 | 2886-g | சிவபோக சாரம் |
| 49. | 345 | 2886-h | சிவவாக்கியம் |
| 50. | 347 | 11379-h | சில தலப்பண்(சைவம்) |
| 51. | 367 | 8680-a | ஜீயர் அந்தாதி |
| 52. | 373 | 11465-b | சிதம்பர அகவல் |
| 53. | 374 | 3946-o | சன்மார்க்க சித்தியார்(சைவம்) |
| 54. | 379 | 2891-e | சிவதத்துவம் |
| 55. | 383 | 3945-d | சிவபுராணம் |
| 56. | 384 | 8219-b | ஸ்ரீவசன பூஷணம்(வைணவம்) |
| 57. | 403 | 4110-d | சேத்திரக் கோர்வை |
| 58. | 404 | 4110-e | சிவபுராணம் |
| 59. | 406 | 4110-b | சிவநாமப் பஃறொடை |
| 60. | 407 | 5935-b | சிவபுராணம் |
| 61. | 422 | 8733-a | சரமோபாய நிர்ணயம்(வைணவநூல்) |

| | | | |
|---|---|---|---|
| 62. | 435 | 10448-b | வாழித்திருநாமம்(வைணவம்) |
| 63. | 437 | 8680-b | ராமானுஜ நூற்றந்தாதி |
| 64. | 450 | 3946-i | அனுபோக வெண்பாத் தெரிவு |
| 65. | 452 | 3946-m | உயிருண்மை யாதி(சைவம்) |
| 66. | 462 | 11465-a | அகஸ்தியர் திரட்டு |
| 67. | 464 | 3940-k | உபதேச வெண்பா(சைவம்) |
| 68. | 467 | 11379-a | அகஸ்தியர் திரட்டு(சைவம்) |
| 69. | 471 | 2771-f | இராமாநுஜ நூற்றந்தாதி |

**2.மருத்துவம்**

| | | | |
|---|---|---|---|
| 1. | 2 | 8839-j | யூகமுனி நாடி |
| 2. | 10 | 8492-b | விஷ வைத்தியம் |
| 3. | 21 | 7931-b | ரோமரிஷி சூத்திரம் பதினெட்டு(மருத்துவம்) |
| 4. | 53 | 3217-a | தக்ஷிணா மூர்த்தி சூத்திரம் |
| 5. | 54 | 6214-a | தக்ஷிணா மூர்த்திக்கும் சட்டைமுனிக்கும் தர்க்கம் |
| 6. | 77 | 8829 d | தன்வந்திரி பகவான் கலைக்கியானம் ஐந்நூறு |
| 7. | 90 | 7931-a | தெக்ஷிணா மூர்த்தி சூத்திரம் பன்னிரெண்டு |

| | | | |
|---|---|---|---|
| 8. | 112 | 8198-b | நாடி சாஸ்திரம் |
| 9. | 127 | 8829-c | நந்தீசுவரர் கருக்கிடை முந்நூறு |
| 10. | 134 | 3268 | நாடி சாஸ்திரம் |
| 11. | 135 | 8867 | நயன விதி |
| 12. | 136 | 3240 | நாடி நிதானம் |
| 13. | 152 | 3217-b | பல பிணி மருந்து |
| 14. | 153 | 6226 | பல பிணி மருந்து |
| 15. | 160 | 6347-b | போகநாதர் சோடச சூத்திரம் |
| 16. | 161 | 6347-a | போகநாதர் எழுநூற்றறுபது |
| 17. | 162 | 6347-d | போகநாதர் கொடைமுறை |
| 18. | 164 | 6809 | பாம்பு கடி மருந்து |
| 19. | 175 | 5776 | பஸ்ம சிந்தூர வகைகள் |
| 20. | 177 | 11559-e | போகர் நாயன் சூத்திரம் ஐம்பது(கற்பம்) |
| 21. | 178 | 11559-b | போகர் நாயன் சூத்திரம்(முப்பூ) |
| 22. | 182 | 8889-a | பரிபாஷை(மூன்று,நான்கு,ஐந்தாம் காண்டங்கள்) |
| 23. | 183 | 3791-e | பரிபூரண சூத்திரம் |
| 24. | 187 | 8087 | பல பிணிகளுக்கு மருந்து |

| | | | |
|---|---|---|---|
| 25. | 188 | 8891 | பல பிணி மருந்து |
| 26. | 189 | 6264 | பல பிணி மருந்து |
| 27. | 190 | 6257-d | பல பிணி மருந்து |
| 28. | 201 | 7931-c | பல வித மருந்துகள் |
| 29. | 230 | 5908-d | மச்ச முனிவர் வாகட சாத்திரம் |
| 30. | 232 | 3791-b | மருந்துசெய் முறைகள் சில |
| 31. | 234 | 11403-b | மலடுக்கு மருந்து |
| 32. | 235 | 8088-h | மச்சமுனி சூத்திரம் |
| 33. | 236 | 8893-d | மன்மத மருந்து |
| 34. | 237 | 8893-b | மன்மத சிந்தாமணி |
| 35. | 249 | 11318-b | சத்தி குன்மம் |
| 36. | 256 | 3791-d | அகத்தியர் நீலகண்டம் ஐம்பது |
| 37. | 257 | 3791-a | அட்டவணைச் சருக்கம் |
| 38. | 258 | 6211-c | அகத்தியர் கெர்ப்ப சூத்திரம் |
| 39. | 281 | 8893-e | அகஸ்தியர் அறுநூறுக்குச் சூத்திரம் |
| 40. | 284 | 8500-d | அகத்தியர் சூத்திரம் பதினாறு |

| | | | |
|---|---|---|---|
| 41. | 285 | 8140-b | கெர்ப்பக் கோள் |
| 42. | 287- | 6274-a | கொங்கணர் சரக்கு வைப்பு நூறு |
| 43. | 288 | 6274-b | நாடி சாஸ்திரம் |
| 44. | 308 | 5908-e | கைலாச மூர்த்தி ஞானம் |
| 45. | 309 | 5908-c | கருவூரார் சூத்திரம் |
| 46. | 310 | 5908-a | கொங்கண சுவாமி சரக்கு வைப்பு |
| 47. | 315 | 7286 | குருநாடி |
| 48. | 320 | 9104-c | கெர்ப்பக் கோள் சூத்திரம் |
| 49. | 323 | 6203-b | கருவூர்ச் சித்தர் பலதிரட்டு |
| 50. | 324 | 6203-a | கருவூர்ச் சித்தர் பாடல் சூத்திரம் |
| 51. | 325 | 6299 | கருவூரார் பலதிரட்டு |
| 52. | 326 | 7933 | கருவூரார் பலதிரட்டு |
| 53. | 333 | 8893-a | கௌசிக மாமுனி குழம்பு |
| 54. | 341 | 9163-b | சித்தர் வெண்பா |
| 55. | 342 | 3220 | சட்டை முனி நிகண்டு |
| 56. | 343 | 6214-b | சுர நிதானம் |
| 57. | 348 | 8140-c | சுர நூல் |

| | | | |
|---|---|---|---|
| 58. | 351 | 6682 | சிறுத்தொண்ட சித்தர் மகிமை |
| 59. | 382 | 6347-e | சித்தர் வெண்பா |
| 60. | 401 | 3791-c | ஸ்ரீராம தேவர் சூத்திரம் |
| 61. | 402 | 6211-d | சன்னி நிதானம் |
| 62. | 423 | 8088-g | சுந்தரானந்தர் சூத்திரம் இருபத்தைந்து |
| 63. | 424 | 11309 | சித்தராரூட நொண்டிச் சிந்து (விஷ வைத்தியம்) |
| 64. | 425 | 10430 | சித்தராரூட நொண்டிச் சிந்து |
| 65. | 426 | 8895-e | சில மருந்துகள் |
| 66. | 432 | 3972-b | ருது லக்ஷணாதி அர்த்தம் |
| 67. | 433 | 3972-a | ருது லக்ஷணாதி |
| 68. | 454 | 1452 | அகத்தியர் வைத்திய சாஸ்திரம் |
| 69. | 455 | 6347-g | உருக்கினம் |
| 70. | 458 | 6347-i | அட்ட கர்ம மூலிகை |
| 71. | 463 | 11155 | அகஸ்தியர் வைத்தியம் ஆயிரத்தைந்நூறு |
| 72. | 472 | 8829-f | அகத்தியர் பிரயோக மூலிகை சூத்திரம் நூறு |
| 73. | 473 | 8836-h | அகத்தீசுவர சுவாமிகள் சூத்திரம் நூற்றிருபது |
| 74. | 474 | 8836-i | அகத்திய நாயனார் பூரணம் நூற்றி ஐம்பது |

| | | | |
|---|---|---|---|
| 75. | 475 | 8829-c | அகத்தியர் பூரண சூத்திரம் இருநூற்றுப் பதினாறு |
| 76. | 476 | 8829-a | அகத்தியர் குருனூல் அறுநூறு |
| 77. | 477 | 5908-b | உரோமதேவர் சூத்திரம் |

## 3. துதி

| | | | |
|---|---|---|---|
| 1 | 37 | 11544-b | விநாயகர் அகவல் |
| 2. | 96 | 3923-b | திருவேங்கட மாலை |
| 3. | 76 | 8825-a | திருமேனிக் கறுப்பு |
| 4. | 81 | 8026-g | திருப்பரங்குன்ற மாலை |
| 5. | 105 | 9018-c | திருப்பரங்குன்ற மாலை |
| 6. | 106 | 9049 | திருப்பரங்குன்ற மாலை |
| 7. | 107 | 8663-d | திருப்பரங்குன்ற மாலை |
| 8. | 108 | 8660-e | திருப்பரங்குன்ற மாலை |
| 9. | 109 | 8653-f | திருப்பரங்குன்ற மாலை |
| 10. | 111 | 3946-m | நமசிவாய மூர்த்தி தாராட்டு |
| 11. | 157 | 2315-b | பந்துப்பாட்டு |
| 12. | 181 | 8026-a | பிள்ளையார் சிந்து |
| 13 | 208 | 3974-b | பராசக்தி அனுபூதி |

| | | | |
|---|---|---|---|
| 14. | 212 | 3798 | பள்ளிப் பிள்ளையார் துதி |
| 15. | 214 | 3839 | பழனியாண்டவன் ஆனந்தக் களிப்பு |
| 16. | 227 | 2315-c | மூளைப்பாட்டு |
| 17. | 253 | 8026-f | இராசகோபால மாலை |
| 18. | 269 | 8651-c | ஆசிரிய விருத்தம் |
| 19. | 275 | 3210-d | அபிராமி அந்தாதி |
| 20. | 277 | 10431 | இராமசாமி திருமேனிக் கறுப்பு |
| 21. | 282 | 11318-c | எண்ணெய்ப் பாட்டு |
| 22. | 304 | 5954-h | குதிரைப் பாய்ச்சல் அகவல் |
| 23. | 306 | 14105 | கவிகள் பேரில் விருத்தம்,வண்ணம் |
| 24. | 312 | 9287-c | கதிர்காம மாலை |
| 25. | 313 | 8026-h | கதிர்காம மாலை |
| 26. | 339 | 11584-c | கருவை வெண்பா |
| 27. | 340 | 8663-e | கதிர்காம வேலன் மாலை |
| 28. | 357 | 8825-d | சுப்பிரமணியர் மூவரசன் பேரில் வண்ணங்கள் |
| 29. | 362 | 9100-b | சிந்தாமணி நாதர் பதிகம் |
| 30. | 365 | 2232 | சாத்தா பாட்டு |

| | | | |
|---|---|---|---|
| 31. | 377 | 9237-b | சூரிய அகவல் |
| 32. | 389 | 9287-a | சின்னப்போற்றி மாலை |
| 33. | 390 | 8026-g | சண்முக மாலை |
| 34. | 391 | 8026-j | சரஸ்பதி மாலை |
| 35. | 392 | 8026-k | சங்கர சதாசிவ மாலை |
| 36. | 393 | 8026-e | சனியீசுர பகவான் தோத்திரம் |
| 37. | 394 | 8026-b | சரஸ்வதி தோத்திரம் |
| 38. | 396 | 8134 | சவுந்தரிய லகிரி |
| 39. | 397 | 3966 | சவுந்தரிய லகிரி |
| 40. | 398 | 6357 | சவுந்தரிய லகிரி |
| 41. | 399 | 8511-a | சவுந்தரிய லகிரி |
| 42. | 400 | 8878-b | சவுந்தரிய லகிரி |
| 43. | 414 | 8859-c | சவுந்தரிய லகிரி |
| 44. | 416 | 8651-b | சுப்பிரமணியர் பேரில் ஆசிரிய விருத்தம் |
| 45. | 436 | 9237-a | வால பரமேசுவரி அகவல் |
| 46. | 465 | 9153-b | அங்கயற்கண்ணி அகவல் |

## 4.கதை

| | | | |
|---|---|---|---|
| 1. | 15 | 9005 | வீரகுமாரன் கதை |
| 2. | 57 | 10349 | துருபத மஹாராஜா கதை |
| 3. | 87 | 3928 | தமிழறி மடந்தை கதை |
| 4. | 130 | 8661-C | நாலு மந்திரி கதை |
| 5. | 139 | 10434 | நளன் கதை |
| 6. | 140 | 7956 | நளன் கதை |
| 7. | 142 | 10373 | நளன் கதை |
| 8. | 163 | 9593 | பாச விலாசன் கதை |
| 9. | 169 | 8818 | பஞ்ச தந்திரக் கதை |
| 10. | 170 | 8069 | பஞ்ச தந்திரக் கதை |
| 11. | 171 | 4103-b | பஞ்ச தந்திரக் கதை |
| 12. | 172 | 7961 | பஞ்ச தந்திரக் கதை |
| 13. | 173 | 8809 | பஞ்ச தந்திரக் கதை |
| 14. | 174 | 5452 | பாண்டவர் அசுவமேத யாகம் |
| 15. | 176 | 11199 | பக்த சரித்திரம் |
| 16. | 216 | 2611 | மார்க்கண்டன் சரித்திரம் |

| | | | |
|---|---|---|---|
| 17. | 220 | 6322 | மகாபாரதக் கதை |
| 18 | 221 | 5655-a | மார்க்கண்டன் கதை அல்லது சித்திரபுத்திர நயினார்கதை |
| 19. | 222 | 8433 | மார்க்கண்டன் கதை |
| 20. | 243 | 11607 | மதன காமராஜன் கதை |
| 21. | 264 | 9128-b | அமராபதி கதை |
| 22. | 265 | 5448-b | அமராபதி கதை |
| 23. | 266 | 7962-b | அமராபதி கதை |
| 24. | 267 | 8249-b | அமராபதி கதை |
| 25. | 268 | 8411-b | அமராபதி கதை |
| 26 | 271 | 2970 | இராமாயண காதை |
| 27. | 276 | '8661-b | அரிச்சந்திரன் கதை |
| 28. | 289 | 10283 | கதா சிந்தாமணி |
| 29. | 290 | 7966 | கந்தபுராணக் கதை |
| 30. | 293 | 9124-a | கேதார நாதர் சரித்திரம் |
| 31. | 297 | 6694 | காமன் கதை |
| 32. | 350 | 8515 | சூரபத்மன் கதை |

| | | | |
|---|---|---|---|
| 33. | 352 | 10292 | ஸ்ரீராம கதை |
| 34. | 353 | 8121 | ஸ்ரீராமர் அம்மானை அல்லது ராமர் வனவாசக் கதை |
| 35. | 356 | 10337 | ஸ்ரீராமரம்மானை |
| 36. | 359 | 8415 | சதமுக ராமாயணம் |
| 37. | 368 | 8031-a | சோழன் பசுக்கதை |
| 38. | 371 | 11311 | சோழன் பசுக்கதை |
| 39. | 372 | 9268 | சோழன் பசுக்கதை |
| 40. | 376 | 9249 | சோழன் பசுக்கதை |
| 41. | 388 | 8661-a | சிறுத்தொண்டர் கதை |
| 42. | 440 | 10397 | ஆமையரசன் அம்மானை |
| 43. | 443 | 8179 | அசுவமேத யாகக் கதை |
| 44. | 444 | 7954 | அசுவமேத யாகம் |
| 45. | 445 | 6309 | அசுவமேத யாகக் கதை |
| 46. | 446 | 10288 | அச்வமேத யாகக் கதை |
| 47. | 447 | 7953 | அசுவமேத யாகம் |
| 48. | 448 | 8119 | அசுவமேத யாகக் கதை |
| 49. | 449 | 5655-b | அமராபதி கதை |

## 5.கதைப்பாடல்

| | | | |
|---|---|---|---|
| 1. | 18 | 10302 | வைகுண்ட அம்மானை |
| 2. | 22 | 5453 | வைகுண்ட அம்மானை |
| 3. | 23 | 7959 | வைகுண்ட அம்மானை |
| 4. | 34 | 6673 | வைகுண்ட அம்மானை |
| 5. | 25 | 11278 | வைகுண்ட அம்மானை |
| 6. | 26 | 10354 | வைகுண்ட அம்மானை |
| 7. | 27 | 10369 | வைகுண்ட அம்மானை |
| 8. | 28 | 10333 | வைகுண்ட அம்மானை |
| 9. | 29 | 10370 | வைகுண்ட அம்மானை |
| 10. | 30 | 11621 | வைகுண்ட அம்மானை |
| 11. | 31 | 9236 | வைகுண்ட அம்மானை |
| 12. | 32 | 8503 | வைகுண்ட அம்மானை |
| 13. | 33 | 9063 | வைகுண்ட அம்மானை |
| 14. | 35 | 3214 | வைகுண்ட அம்மானை |
| 15. | 36 | 7955 | வைகுண்ட அம்மானை |
| 16. | 113 | 8027 | நீலி கதை |

| | | | |
|---|---|---|---|
| 17. | 137 | 8442 | நாலு மந்திரிக் கும்மி |
| 18. | 141 | 10294 | நளன் கதை |
| 19. | 165 | 5641-c | பாண்டவர் வனவாசம் |
| 20. | 166 | 5762 | பாண்டவர் வனவாசம் |
| 21. | 167 | 9067 | பாண்டவர் வனவாசம் |
| 22. | 195 | 8085 | பாண்டவர் வனவாசம் |
| 23. | 210 | 5641 | பாண்டவர் வனவாசம் |
| 24. | 224 | 3216 | மதுரை வீரன் கதை |
| 25. | 250 | 8661-b | அரிச்சந்திரக் கும்மி |
| 26. | 279 | 8180 | ஐவர் அம்மானை |
| 27. | 296 | 10366-c | கஞ்சன் அம்மானை(கிருட்டிணன் கதை) |
| 28. | 307 | 7958 | கிருஷ்ணன் அம்மானை |
| 29. | 366 | 8248 | சீவக அம்மானை |
| 30. | 369 | 8825-b | சீவக அம்மானை |
| 31. | 386 | 5659 | ஸ்ரீகிருஷ்ண அம்மானை |
| 32. | 408 | 9128-a | சித்திரபுத்திரன் கதை |
| 33. | 410 | 5448-a | சித்திரபுத்திர நயினார் கதை |

| | | | |
|---|---|---|---|
| 34. | 411 | 7962-a | சித்திரபுத்திரர் கதை |
| 35. | 412 | 8249-a | சித்திரபுத்திரர் கதை |
| 36. | 413 | 8411-a | சித்திர புத்திர நயினார் கதை |
| 37. | 456 | 8434 | இராமாயணம் வில்லுப்பாட்டு |
| 38. | 459 | 8437 | இசக்கி கதை |
| 39. | 480 | 8661-b | சிறுத்தொண்டன் கதை |

## 6.புராணம்

| | | | |
|---|---|---|---|
| 1. | 43 | 8117 | ஸ்ரீமத் பாகவதம் |
| 2. | 103 | 4073-b | திருவண்ணாமலைப் புராணம் |
| 3. | 138 | 10406 | நாசிகேதுபுராணம் |
| 4. | 197 | 9060 | பிரமோத்திர காண்டம் |
| 5. | 198 | 3909 | பிரமோத்திர காண்டம் |
| 6. | 199 | 6168 | பிரமோத்திர காண்டம் |
| 7. | 202 | 9024 | பாகவதம் |
| 8. | 203 | 611 | பாகவதம் |
| 9. | 294 | 10316-c | கோயிற்புராணம் |
| 10. | 300 | 3945-b | கந்தபுராணம் |

| | | | |
|---|---|---|---|
| 11. | 329 | 3871 | கூர்மபுராணம் |
| 12. | 336 | 4073-a | காசிக் காண்டம் |
| 13. | 337 | 3901-b | கூர்ம புராணம் |
| 14. | 338 | 6391 | காசிக் காண்டம் |
| 15. | 370 | 11447-a | சிவசயிலத் தலபுராணம் |
| 16. | 434 | 6236-b | விருத்தாசல புராணம் |
| 17. | 451 | 6713-d | இந்திரன் பழிதீர்த்த படலம் |
| 18. | 461 | 3982-c | அருணாசல புராணம் |
| 19. | 468 | 10377 | அரிச்சந்திர புராணம் |
| 20. | 469 | 9068-a | அரிச்சந்திர புராணம் |

## 7.வேதாந்தம்

| | | | |
|---|---|---|---|
| 1. | 3 | 8511-b | வயிராக்கிய சதகம் |
| 2. | 8 | 8895-c | வாலைப் பாட்டு |
| 3. | 12 | 8853-c | வேதாந்தப் பாடல்கள் |
| 4. | 20 | 6156 | வாலைப் பாட்டு |

| | | | |
|---|---|---|---|
| 5. | 47 | 8500-b | ஞானத் தாழிசை |
| 6. | 49 | 7969-a | ஞானக் கும்மி |
| 7. | 50 | 8039-a | ஞானக் கும்மி |
| 8. | 51 | 7963-a | ஞானப்பாட்டு |
| 9. | 52 | 8159-c | ஞான மருந்து |
| 10. | 58 | 6719-a | தத்துவ விளக்கம் |
| 11. | 954 | 106-a | தாயுமானவர் பாடல் |
| 12. | 102 | 3974-d | தாயுமானார் பாயப்புலி |
| 13. | 133 | 6354-b | நவசங்கையர் விவேகம் |
| 14. | 156 | 8068-a | பஞ்சதசப் பிரகரணம் |
| 15. | 272 | 8088-i | அகத்திய முனி அதீத சூத்திரம் |
| 16. | 295 | 6277-a | கைவல்ய நவநீதம் |
| 17. | 302 | 6719-b | கைவல்ய நவநீதம் |
| 18 | 327 | 7938 | கருவூரார் பூசா விதி |
| 19. | 328 | 7942 | கருவூரார் பூசா விதி |
| 20. | 346 | 6235-b | சிவஞான சித்தியார் பரபட்சம் |
| 21 | 349 | 6235-c | சிவஞான சித்தியார் சுபட்சம் |

| | | | |
|---|---|---|---|
| 22. | 361 | 6277-b | சொரூப சாரம் |
| 23 | 364 | 9237-c | சிவவாக்கியர் ஞானம் |
| 24. | 375 | 11471-c | சிவஞான போதவுரை |
| 25. | 380 | 11471-a | சடத்துவர் மார்க்கம் |
| 26. | 385 | 5954-k | சங்கராசாரியார் ஞான உலா |
| 27. | 457 | 8486 | உத்தர கீதை |

## 8. சோதிடம்

| | | | |
|---|---|---|---|
| 1. | 5 | 8878-a | ருது சாஸ்திரம் |
| 2. | 6 | 8882-ய | ருது நாள் பலன் |
| 3. | 7 | 8895-d | ருது சாந்தி சாத்திரம் |
| 4. | 88 | 3249 | திரிகாண்ட ஜோசியம் |
| 5. | 129 | 8239-c | நட்சத்திர தசை |
| 6. | 131 | 8866-j | நவகிரக சக்கிச சக்கரம் |
| 7. | 147 | 11117 | நன்றோ தீதோ |
| 8. | 155 | 8140-a | பல்லிநூல் |
| 9. | 185 | 11403 | பாவ பலன் |
| 10. | 196 | 5760 | பிரச்ன பலன் |

| | | | |
|---|---|---|---|
| 11. | 206 | 5719 | பிரச்ன பலன் நூற்றிமெட்டு(நன்றோ தீதோ) |
| 12. | 311 | 8239-a | கிருக சமையம் |
| 13. | 316 | 3162-a | கிரக பலம் |
| 14. | 334 | 3915-b | கெவுளி நூல் |
| 15. | 363 | 11389 | ஸ்தீரி சாதகம் |
| 16. | 395 | 8878-d | சாத்திய நாமப் பேர்வழி |
| 17. | 479 | 8239-b | அட்ட வர்க்கப் பரல் |

## 9. நீதி

| | | | |
|---|---|---|---|
| 1. | 38 | 11503 | வாக்குண்டாம் |
| 2. | 46 | 3975 | சிந்தாமணி |
| 3. | 59 | 6383-c | திருக்குறள் |
| 4. | 114 | 6383-a | நாலடியார் |
| 5. | 149 | 11503-b | நல்வழி |
| 6. | 150 | 11503-c | நன்னெறி |
| 7. | 151 | 10405-a | நல்வழி |
| 8. | 186 | 6730 | பழமொழி விளக்கம் |

| | | | |
|---|---|---|---|
| 9. | 213 | 1080 | பன்னூற்றிரட்டு |
| 10. | 231 | 8026 | மூதுரை |
| 11. | 245 | 8660-b | மூதுரை |
| 12. | 249 | 8653-a | மூதுரை |
| 13. | 247 | 8663-b | மூதுரை |
| 14. | 248 | 11548-b | மூதுரை |
| 15. | 251 | 9287-b | உலகநீதி |
| 16. | 252 | 5654-c | உலகநீதி |
| 17. | 254 | 8026-c | உலகநீதி |
| 18. | 273 | 8660-a | உலகநீதி |
| 19. | 274 | 8663-a | உலகநீதி |
| 20. | 427 | 8825-c | விவேக சிந்தாமணி |
| 21. | 460 | 3982-b | ஆத்திச்சூடி |

### 10.சாஸ்திரம்

| | | | |
|---|---|---|---|
| 1. | 225 | 6199 | மதன நூல்(காம சாஸ்திரம்) |
| 2. | 229 | 5920 | மனை அலங்காரம்(மனை சாஸ்திரம்) |
| 3. | 233 | 11403-d | மனை நூல் |

| | | | |
|---|---|---|---|
| 4. | 193 | 14193-a | புரதம் |
| 5. | 239 | 8888 | மன்மத நூல் |
| 6. | 240 | 7943 | மதனநூல் ஈட்டுவகை |
| 7. | 319 | 2970-a | கொக்கோகம்(கொக்குக சாஸ்திரம்)(காம சாஸ்திரம்) |
| 8. | 330 | 11433 | கௌசிக நூல் (திகிரி ரேகை) (சாமுத்திரிகா லக்ஷணம்) |
| 9. | 331 | 9176-a | கூப சாஸ்திரம் |
| 1C. | 332 | 8202 | கூப சாஸ்திரம் |
| 11. | 405 | 11277 | சாமுத்ரிகா லக்ஷணம் |
| 12. | 418 | 11252 | சாமுத்ரிகா லக்ஷணம் |
| 13. | 419 | 11255 | சாமுத்திரிகா லக்ஷணம் |
| 14. | 420 | 6243-b | ஸ்திரீ லக்ஷணம் |
| 15. | 421 | 6243-a | சாமுத்திரிகா லக்ஷணம் |
| 16. | 442 | 341 | பரத நடன விதி |

## 11. வரலாறு, தலவரலாறு

| | | | |
|---|---|---|---|
| 1. | 13 | 11112 | வசந்தராயர் பத்திரிகை |
| 2. | 16 | 5656 | வீரபோக வசந்தராயர் பத்திரிகை |

| | | | |
|---|---|---|---|
| 3. | 17 | 3984 | வீரபோக வசந்தராயர் பத்திரிகை |
| 4. | 63 | 6383-b | திருவள்ளுவர் சரித்திரம் |
| 5. | 64 | 11283-a | திருவள்ளுவர் சரித்திரம் |
| 6. | 358 | 10441-c | ஸ்ரீவில்லிபுத்தூர் மஹாத்மியம் |
| 7. | 381 | 10467 | ஸ்ரீரங்க மஹான்மியம் |
| 8. | 384 | 10448-a | ஸ்ரீரங்க மஹான்மியம் |
| 9. | 429 | 9153-e | வேத பத்திரிகை |
| 10. | 430 | 10441-a | வகுளாதேவி மஹாத்மியம் |
| 11. | 14 | 9100 | வாசுதேவநல்லூர்த் தலபுராணம் |
| 12. | 66 | 9261-a | திருக்கயிலாய மான்மியம் |
| 13. | 206 | 3887 | பாபநாசத் தலபுராணம் |

## 12. காவியம்

| | | | |
|---|---|---|---|
| 1. | 39 | 6353 | சீ வகசிந்தாமணி |
| 2. | 40 | 11606 | சீவகசிந்தாமணி |
| 3. | 41 | 11599 | சீவகசிந்தாமணி |
| 4. | 42 | 6348-a | சீவகசிந்தாமணிச் சுருக்கம் |
| 5. | 119 | 5918 | நைடதம் |

| | | | |
|---|---|---|---|
| 6. | 120 | 8123 | நைடதம் |
| 7. | 121 | 8132 | நைடதம் |
| 8. | 122 | 9141 | நைடதம் |
| 9. | 123 | 3923-a | நளன் கதை(நைஷதம்) |
| 10. | 124 | 7985 | நளன் கதை(நைடதம்) |
| 11. | 125 | 8635 | நளன் கதை(நைடதம்) |
| 12. | 126 | 11512 | நளன் கதை |
| 13. | 143 | 9122 | நளன் கதை |
| 14. | 144 | 5646-b | நளவெண்பா |
| 15. | 123 | 3923-a | நளன் கதை(நைடதம்) |
| 16. | 154 | 3898 | நைடதம் |
| 17. | 291 | 4103-e | கும்பகருணப் படலம் |
| 18. | 409 | 3162-b | சந்திர காவியம் |

## 13.இலக்கணம்,நிகண்டு

| | | | |
|---|---|---|---|
| 1. | 60 | 6368-a | தண்டியலங்காரம் |
| 2. | 86 | 6368-b | தொல்காப்பிய நன்னூல் சூத்திரங்கள் |
| 3. | 115 | 6368-c | நேமிநாதம்(தெரிவு) |

| | | | |
|---|---|---|---|
| 4. | 116 | 6361-a | நேமிநாதம்(மூலமும் உரையும்) |
| 5. | 132 | 6368-c | நேமிநாதம்(தெரிவு) |
| 6. | 211 | 8066 | பன்னிரு பாட்டியல் |
| 7. | 415 | 8492-a | சூடாமணி நிகண்டு |
| 8. | 453 | 6352-b | அகராதி நிகண்டு |

### 14.சிற்றிலக்கியம்

| | | | |
|---|---|---|---|
| 1. | 96 | 3923-b | திருவேங்கட மாலை |
| 2. | 104 | 6376 | திருப்பதிக் கோவை |
| 3. | 117 | 11530 | நெல்விடு தூது |
| 4. | 194 | 10404 | பழனியந்தாதி |
| 5. | 215 | 9163-a | முக்கூடற் பள்ளு |
| 6. | 240 | 6429-b | மதன வித்தார மாலை |
| 7. | 242 | 6404 | மதன வித்தார மாலை |
| 8 | 226 | 5641-b | மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் |
| 9 . | 278 | 11514 | உலகம்மன் அந்தாதி |
| 10. | 280 | 9084 | ஒன்பதூர் விறலிவிடு தூது |
| 11. | 299 | 8076-a | குலோத்துங்கன் ஐந்திணைக் கோவை |

| | | | |
|---|---|---|---|
| 2. | 441 | 11574 | ஆறை அழகப்ப முதலியார் விறலிவிடு தூது |
| 3. | 470 | 3982-a | ஆறெழுத்தந்தாதி |

## 15.நாட்டுப்புறப்பாடல்

| | | | |
|---|---|---|---|
| 1. | 205 | 8159 | பாகவதக்கும்மி(ராசக்ரீடை) |
| 2. | 238 | 11318 | முத்தணைந்த முதலியார் கும்மிப்பாட்டு |
| 3. | 286 | 8432 | குத்தால லிங்கர் கொடிப்பாட்டு |
| 4. | 317 | 8144 | கல்யாண வாழ்த்து |
| 5. | 318 | 8651-a | கட்டபொம்மன் பாட்டு |
| 6. | 354 | 11553 | சுந்தரி கலியாணக் கும்மி |
| 7. | 387 | 5449-e | ஸ்ரீகிருஷ்ண பகவான் கும்மிப்பாட்டு |

## 16.நாடகம்

| | | | |
|---|---|---|---|
| 1. | 1 | 8855 | சகுந்தலை மாலை(சகுந்தலை விலாசம்) |
| 2. | 217 | 9108 | மார்க்கண்ட நாடகம் |
| 3. | 218 | 8854 | மார்க்கண்ட நாடகம் |
| 4. | 219 | 8253 | மார்க்கண்ட நாடகம் |
| 5. | 223 | 7967 | மகாபாரத நாடகம் |
| 6. | 298 | 9153-a | குற்றாலக் குறவஞ்சி நாடகம் |

| | | | |
|---|---|---|---|
| 7. | 355 | 8832 | ஹிரண்ய நாடகம் அல்லது பிரகலாதன் கதை |
| 8. | 438 | 3224 | அரிச்சந்திர நாடகம் |
| 9. | 439 | 4106-b | அரிச்சந்திர நாடகம் |

**17.மந்திரம்**

| | | | |
|---|---|---|---|
| 1. | 4 | 8878-c | வசியேந்திரம் |
| 2. | 9 | 3242 | விஷ வைத்திய மந்திரங்கள்(மருத்துவமும், மந்திரமும்) |
| 3. | 61 | 8854 | தேவரணங்கு மாறும் வகை |
| 4 | 179 | 5954-J | பிரமமுனி நூல் |
| 5. | 192 | 8088-l | போக நயினார் சூத்திரம் பதின்மூன்று |
| 6. | 255 | 8882-a | அகத்தீசர் பஞ்சாக்ஷரப் பத்து |
| 7. | 303 | 11559-h | கயிலாசச் சட்டைமுனி நாயன் சோடச சூத்திரம் |

**18.இரசவாதம்**

| | | | |
|---|---|---|---|
| 1. | 11 | 6354-e | ரோமரிஷி வைத்தியம் பத்தொன்பது |
| 2. | 19 | 8893-C | வாலை ரசம் |
| 3. | 417 | 6354-q | சுந்தரானந்தர் சூத்திரம் நூறு |

## 19.கணிதம்

| | | | |
|---|---|---|---|
| 1. | 292 | 6332 | கணக்கதிகாரம் |
| 2. | 321 | 4083 | கணக்கதிகாரம் |
| 3, | 322 | 5683 | கணக்கதிகாரம் |

## 20.பிற

| | | | |
|---|---|---|---|
| 1. | 146 | 10320-a | நளவெண்பா(இலக்கியம்) |
| 2. | 335 | 6348-c | கல்லாடம்(இலக்கியம்) |
| 3. | 159 | 6347-c | போகநாதர் பூசா விதி |
| 4. | 314 | 8882-b | குருமுனி மயேசுபரி பூசாவிதி |
| 5. | 431 | 7940 | ராவணன் பூசைவிதி |
| 6. | 428 | 9068-b | வில்லிபாரதம்(இதிகாசம்) |
| 7. | 466 | 11408 | அகப்பொரும் விளக்கம்(அகம்) |
| 8. | 73 | 11283-b | திருவள்ளுவ மாலை(வாழ்த்து) |
| 9. | 128 | 5954-c | ஸ்ரீநந்திகேசுபரர் பரம ஞானம் |
| 10. | 228 | 11559-f | மச்சமுனி நாயன் சூத்திரம் எண்பது(ஞானம்) |
| 11. | 262 | 7946-a | அகத்தீசுவரர் இந்திர சாலம் ஆயிரத்திருநூறு (ஜாலதந்திரம்) |

Dr. T. P. M. LIBRARY

| | | | |
|---|---|---|---|
| 12. | 270 | 6354-o | உரோமரிஷி ஞானசூத்திரம் ஐம்பது |
| 13 | 44 | 8500-e | சமாதி சகசம் - பிரம சகசம்(யோகம்) |
| 14. | 191 | 6354-f | பரப்பிரம சாதனம்(யோகம்) |
| 15. | 283 | 8500-c | அடுக்குநிலை ஞானபோதகம்(தத்துவம்) |
| 16. | 305 | 5954-e | கைலாச சட்டைமுனி சுவாமி வேதாந்த ஞானம் |
| 17. | 360 | 6347-f | சமாதி யுத்தி நூல் |
| 18. | 478 | 11559-m | சுந்தரானந்தர் நாயன் இருபத்தைந்து (ஞானம்) |

★★★

DR. T. P. M. LIBRARY, MADURAI KAMARAJ UNIVERSITY.
232570
17118

# புதிய வெளியீடுகள்

Mysticism of Love in Saiva Tirumurais — Dr. V. C. Sasivalli ... 50.00
எண்பத்து மூன்றில் தமிழ் பகுதி-2 — முனைவர் அன்னி தாமசு ... 30.00
தொல்காப்பியம்-பொருள்-களவியல் — பேரா. சிவலிங்கனார் ... 85.00

The Contributions of the Tamils to Indian Culture
Vol. I Language and Literature — Dr. K. Subbiah Pillai ... 18.00
Vol. II Art and Architecture — Dr. K. Bhagavathi ... 30.00
Vol. III Socio Cultural Aspects — Dr. M. Valarmathi ... 90.00
Vol. IV Religion and Philosophy — Dr. V. C. Sasivalli ... 80.00

எண்பத்து மூன்றில் தமிழ் பகுதி-I — முனைவர் அன்னி தாமசு ... 47.00
சிவகிரி குமர சதகம் — திரு. மெய். சந்திரசேகரன் ... 39.00
புதுவூர்ச் சக்கரவர்த்தி அம்மானை — திரு. மொ. மருதமுத்து ... 27.00
தேரையர் அந்தாதி — மருத்துவர் மா. புனிதா ... 33.00
குசலவர் சுவாமி கதை — செல்வி இரா. வசுமதி ... 36.00
குணவாகடம் — முனைவர் வே. நெடுஞ்செழியன் ... 40.00
தோட்டுக்காரி கதை — முனைவர் வ. அலமேலு ... 28.00
சங்கத்தமிழரின் மனிதநேய மணிநெறிகள்
முனைவர் சாலினி இளந்திரையன் ... 24.00
உலகத்தமிழ் மாநாட்டுக் கட்டுரைகள் அடைவு
முனைவர் தி. மகாலட்சுமி ... 35.00

Selected Poems of Bharathidasan — Translation:
Tamil to English — Dr. V. Murugan ... 60.00
Tamil to Malayalam — Dr. P. P. Thambi & D. Ramakrishnan ... 60.00
Tamil to Kannada — Mr. V. Pasumalai Arasu ... 60.00
Tamil to Telugu — Dr. C. R. Sarma ... 60.00

Chieftains of the Sangam Age — Dr. K. D. Thirunavukkarasu ... 20.00
பாரெலாம் பரந்த தமிழர் — உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் ... 25.00
காண்டேகரும் கா. ஸ்ரீ. ஸ்ரீ. யும் — முனைவர் மு. வளர்மதி ... 18.00
A Comparative Study of Tamil and Japanese
Dr. Pon. Kothandaraman ... 15.00
தமிழும் பிற துறைகளும் — முனைவர் ந. கடிகாசலம் ... 35.00
பெண்ணியம் — முனைவர் இரா. பிரேமா ... 25.00
விலங்கியலும் தமிழியலும் — முனைவர் ஏ. த. சோதிநாயகம் ... 10.00
தமிழும் தெலுங்கும் — முனைவர் தா. சா. மாணிக்கம் ... 15.00
தமிழ் ஆய்வுக் களங்கள் — முனைவர் ந. கடிகாசலம் ... 70.00
வ.உ.சியும் தமிழும் — முனைவர் அ. சங்கரவள்ளிநாயகம் ... 18.00
தொல்காப்பியத்தில் இசைக்குறிப்புக்கள்
முனைவர் வீ. ப. கா. சுந்தரம் ... 14.00
புதுமைப்பித்தன் கதைகளில் சமுதாய விமரிசனம்
முனைவர் நா. ஆறுமுகம் ... 20.00
கனகாபிஷேக மாலை — திறனாய்வு —
முனைவர் பீ. டாக்டர் நசீம்தீன் ... 16.00
இருபதின் கவிதைகளில் சமூகநீதிக் கோட்பாடு
முனைவர் து. சீனிச்சாமி ... 20.00
பத்தொன்பதாம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கியம்
முனைவர் ச. சிவகாமி ... 60.00
தொல்காப்பியம் — பொருள் — பொருளியல்
பேரா. ஆ. சிவலிங்கனார் ... 32.00